நச்சுப்பொய்கை விலாசம்

A POOL OF POISON





INSTITUTE OF ASIAN STUDIES
Chemmancherry, Chennai - 600 119
INDIA

நச்சுப்பொய்கை விலாசம்
A Pool of Poison

General Editor
G. JOHN SAMUEL

Editors
R. JAYALAKSHMI
K. PANNEER SELVAM

English Rendering
M. BHOOPATHI

INSTITUTE OF ASIAN STUDIES
Chemmancherry, Chennai – 600 119
INDIA

Silver Jubilee Celebration Series - 7

நச்சுப்பொய்கை விலாசம்

A Pool of Poison

First Edition 2006, pp. 224

Publication No. 99

ISBN 81-87892 - 28 - 5

Price Rs. 180 US $ 20

Published with the financial assistance from the **UNESCO** under the **Memory of the World** project

Copies can be had from

Publications Division,
Institute of Asian Studies,
Chemmancherry,
Chennai - 600 119.
India.
Phone: (Off.) 24501851, 24500831, 24502212
(Res.) 24964831
Fax : 91-44-24964831
E-mail: ias@xlweb.com
World Wide Web site : http : // xlweb.com/heritage/asian

Composed by
Institute of Asian Studies, Chennai - 600 119.

Printed at Student Offset Services, Chennai - 1, ✆42052908

Contents

A System of Transliteration of Tamil

VOWELS

Short		Long		Dipthong	
அ	a	ஆ	ā	ஐ	ai
இ	i	ஈ	ī	ஔ	au
உ	u	ஊ	ū		
எ	e	ஏ	ē	ĀYTAM	
ஒ	o	ஓ	ō	ஃ	k̲

CONSONANTS

Hard		Soft		Medial	
க்	k	ங்	ṅ	ய்	y
ச்	c	ஞ்	ñ	ர்	r
ட்	ṭ	ண்	ṇ	ல்	l
த்	t	ந்	n	வ்	v
ப்	p	ம்	m	ழ்	ḻ
ற்	ṟ	ன்	ṉ	ள்	ḷ
ஸ்	s	ஷ்	ṣ	ஹ்	h
		ஜ்	j		

பதிப்புரை

ஓலைச்சுவடிகளில் ஒளிந்து கிடக்கின்ற ஒப்பற்ற கருவூலங்களை உலகுக்கு அளிப்பதில் பல நிறுவனங்கள் போட்டி போடுகின்றன. எனினும், "மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் பேசுவதில் ஓர் மகிமையில்லை ; திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணங்க வேண்டும்" என்னும் பாரதியின் கனவை நனவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது ஆசியவியல் நிறுவனம் மட்டுமே. இந்நிறுவனம், ஓலைச்சுவடிகளிலிருந்து இதுவரை வெளிவராத நூல்களை வெளியிடும் போதே ஆங்கிலத்தில் வெளியிடுகிறது.

பல கதைப்பாடல்கள், சிற்றிலக்கியங்கள், நாடகங்கள், யட்ச கானங்கள் இந்நிறுவனத்தின் வழி வெளிவந்துள்ளன. சிற்றிலக்கிய நாடக வரிசையில் வெளிவருவது **நச்சுப் பொய்கை விலாசம்** என்னும் இந்நூல்.

இந்நூல் மகாபாரதம் வன பருவத்தில் துரியோதனன் பாண்டவர்களை அழிப்பதற்காகக் காளமாமுனி மூலம் யாகம் செய்வதையும், இச்சூழ்ச்சியிலிருந்து கண்ணன் பாண்டவர்களைக் காப்பதையும் விளக்கும் நாடகமாகும்.

பதிப்பு நோக்கம்

நச்சுப் பொய்கை என்னும் பெயரில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் மூன்று நூல்கள் வெளிவந்துள்ளன. ஒன்று **ஸ்ரீமகாபாரதம் ஆரண்ய பருவம் நச்சுப் பொய்கை** என்று தலைப்பிடப் பட்டுள்ளது. சைவ சமய குருபரம்பரை சின்னத்தம்பி சுவாமிகளின் மாணாக்கராகிய வேலூர் நாராயணசாமி பிள்ளையவர்களால் இயற்றப்பட்டு, இரத்தினவேலு முதலியாரவர்களால் பார்வையிடப்பட்டு, சென்னை சூளை தொண்டை மண்டலம் அச்சுயந்திர சாலையில் பதிப்பிக்கப் பட்டுள்ளது. இ∴து இங்கிலாந்து மகாராணி பேரில் வாழ்த்துடனும், அவையடக்கத்துடனும் தொடங்கி ஜாவளி, தரு, அகவல், விருத்தம், கண்ணிகளுடன், இராகம், தாளமும் அமைக்கப்பட்டு ஆங்காங்கே வசனத்துடன் காணப்படுகிறது.

இரண்டாவது **ஸ்ரீமகாபாரத நச்சுப் பொய்கை விலாசம்** என்னும் பெயரில் தஞ்சை ஸ்ரீ அழகப்ப வேங்கடாசல பண்டிதரவர்கள் குமாரர் ஷட்டாவதானம் **வைரக்கண் வேலாயுதம் புலவர்** அவர்களால் இயற்றப்பட்டு ஸ்ரீ ரங்காச்சாரியார் திருவடி சம்பந்தியும், ஸ்ரீ ஆண்டாள் பஜனைமடத் தலைவரும் மேற்படி ஆசாரியரால் இராமாநுஜதாசர் என்று திரு அபிதானம் பெற்றவருமாகிய புதுவை மகாஸ்ரீ மு. ஸ்ரீநிவாசதாசர் அவர்களது பொருளுதவியால் சென்னை வேப்பேரி பாஸ்டன்பீஸில் விக்ரம வருஷம் சித்திரை மாதம் (1850) அச்சிடப்பட்டது. வேங்கடரமண ஐயரின் சாற்று கவி, முத்திருளப்ப பண்டிதரின் சிறப்புப் பாயிரம், பஞ்சரத்ன நிருபமாலை, புகழ்ச்சிப் பதிகம் ஆகியவற்றுடன் கூடியது.

விநாயகர் காப்பு சங்கராபரண ராகத்தில் வெண்பாவாக அமைந்துள்ளது. சென்னை சாலை விநாயகர் தோத்திரம் (எண்சீர் விருத்தம்), திருப் போரூர் முருகன் பேரில் சந்த விருத்தம், கபாலீஸ்வரர் பேரில் அறுசீர் விருத்தம், கற்பகாம்பிகை பேரில் விருத்தம், விஷ்ணு பேரில் சந்த விருத்தம், இலக்குமி பேரில் கலி விருத்தம்,

சரஸ்வதி பேரில் வண்ண விருத்தம், புதுவை மணக்குள விநாயகர் தோத்திரங்களுடன் தொடங்குகிறது 176 பக்கங்கள் உள்ளன.

மூன்றாவது **மகாபாரத விலாசம் பஞ்ச பாண்டவாள் வனவாசமென்று வழங்குகின்ற நச்சுப் பொய்கை** என்ற தலைப்பில் இயலிசை நாடகமென்னும் முத்தமிழ் வல்லவராகிய இராமநல்லூர் இராமச் சந்திரக் கவிராயரால் இயற்றப் பெற்று கோகுலாபுரம் அருணாசல முதலியாரால் பரிசோதிக்கப்பட்டு கரும்பாக்கம் கைலாச முதலியார், திருப்பதி இரத்தின முதலியார் இவர்களது கலைக்கியான முந்திராட்சர சாலையில் 1879ல் பதிப்பிக்கப் பட்டது. விநாயகர், முருகன், சிவன், விஷ்ணு, சரஸ்வதி மீது வாழ்த்துடன் தொடங்குகிறது. தோடயம், விநாயகர் காப்பு, கட்டியங்காரன் வருகை போன்ற நாடக அமைப்புடன் தரு, விருத்தம் ஆகிய 200 க்கு மேற்பட்ட பாடல்களுடன் 56 பக்கத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்ட மூன்று நூல்களைத் தவிர வேறு மகாபாரத நச்சுப் பொய்கை விலாசங்கள் அச்சிடப்பட்டனவா என்பது தெரியவில்லை. இவை மூன்று மட்டுமே கிடைத்தன. இங்கு பதிப்பிக்கப்படும் **நச்சுப் பொய்கை விலாசம்** மேலே கண்ட மூன்றிலிருந்து வேறானது. இதுவரை பதிப்பிக்கப் படாதது. விலாச வரலாற்றில் மேலும் ஒரு விலாசம் கிடைக்கும் என்பதால் பதிப்பிக்கப்படுகிறது.

சுவடி பற்றிய **செய்திகள்**

இந்நூல் உள்ள சுவடி ஆர் 2798 என்ற எண்ணில் சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது. குமாரகுப்பம் கே. சண்முகம் என்பவரிடம் 1951-52ல் வாங்கப்பட்டது. 16 ½" x 1" அளவுள்ள இச்சுவடியில் 90 ஏடுகள் உள்ளன. பாடல்கள் அடி பிரிக்கப்பட்டு எழுதப் பட்டுள்ளன. பக்கத்துக்கு நான்குவரிகள் இருவரிசைகளாக எழுதப்பட்டுள்ளன. பேச்சுவழக்குச் சொற்களும் எழுத்துப் பிழைகளும் காணப்பட்ட போதிலும் கையெழுத்து தெளிவாக உள்ளது. ஏடும் நன்னிலையில் உள்ளது. ஏட்டின் இடது ஓரத்தில் பாடல் தலைப்புகள் காணப்படுகின்றன. ஓலைச்சுவடியில் உள்ள பாடல்கள் காகிதச் சுவடியில் படியெடுக்கப்பட்டு ஆர். எண் 7430 என்று எண்ணிடப்பட்டுள்ளது. எம். ஆர். சிவப்பிரகாசம் பிள்ளை என்பவர் 28.12.58 முதல் 31.12.58 வரை படியெடுத்துள்ளார்.

பதிப்பு முறை

வழக்கம் போல், பாடல், பாடலுக்குப் பொழிப்புரை, அருஞ்சொற்பொருள், ஆங்கில மொழிபெயர்ப்பு என்ற முறையில் அச்சிடப்பட்டுள்ளது. வசனங்கள் பாடலுக்கு முழுமையும் பொழிப்புரையாக வரும் இடங்களில் மட்டும் வேறு பொழிப்புரை எழுதப்படவில்லை. ஏனைய இடங்களில் வசனம் இருப்பினும் பொழிப்புரை தரப்பட்டுள்ளது. பிழைகள் திருத்தப்பட்டுச் சுவடிவடிவம் கீழே தரப்பட்டுள்ளது. நூலுக்கு முன் விலாசம், நாடகம் பற்றிய ஆய்வுரை தரப்பட்டுள்ளது. பாடல் முதற்குறிப்பு, சொல்லடைவு, விலாச இலக்கியங்களின் பட்டியல் ஆகியவை பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன. எல்லா விலாசங்களும் கிடைக்கப் பெறாமையால் விலாசங்களின் பெயர்கள் மட்டுமே தரப்பட்டுள்ளன. ஆசிரியர் அறியப்பட்ட விலாசங்களுக்கு ஆசிரியர் பெயர் தரப்பட்டுள்ளது.

நன்றியுரை

பதிப்பாசிரியர் என்னதான் முயன்று எழுதினாலும் சுவரின்றிச் சித்திரம் தீட்ட இயலாது. பதிப்புப் பணியில் ஈடுபடுத்தி வெளியிட்டு உதவும் கரங்களே சுவர்கள். வேறு எத்தனையோ தொழிலில் ஈடுபட வாய்ப்பிருந்தும், தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் தருவதையே குறிக்கோளாகக் கொண்டு, அதற்கென ஒரு நிறுவனத்தை ஏற்படுத்திப் பல்வேறு இடையூறுகட்கிடையே எங்களுக்கு வாய்ப்பளித்து, ஊக்கமும், ஆக்கமும் உதவும் கரங்களாக விளங்கும் **இயக்குநருக்கு** முதல் நன்றி.

இச்சுவடியைப் பெயர்த்தெழுத ஒப்புதல் அளித்த அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகக் காப்பாளர் முனைவர் **சௌந்தரபாண்டியன்** அவர்களுக்கும், சுவடியை நூலகத்துக்கு அளித்த **கே. சண்முகம்** அவர்களுக்கும் நன்றி. பிற நூல்களை ஒப்பிட உதவிய எழுமூர் ஆவணக் காப்பக நூலகர் அனைவருக்கும் நன்றி. கணினியில் அச்சிட்டு உதவிய திருமதி **ஆர்.கீதா** அவர்களுக்கும் நன்முறையில் அச்சிட்டு உதவிய அச்சகத்தார்க்கும் நன்றி.

ஆர்.ஜயலட்சுமி,

கி. பன்னீர்செல்வம்.

Editor's Note

There are Institutions today which vie with one another in bringing out the great literary treasures of bygone eras, contained in the Palm-leaf scripts.

As Bharati points it 'It's no use merely telling tales about our literary excellence amongst ourselves. If our creative excellence is worthy of recognition, it should command the veneration of the lands abroad", and in this respect it could be justifiably averred that The Institute of Asian studies, Chennai, alone deserves an exclusive mention, where the task of realization of Bharati's vision is concerned. It performs the unique duty of bringing out modern editions of the books in palm leaf scripts in English besides publishing them in their respective languages.

This Institute has brought out several volumes of narrative poems, minor classics, drama and *Yakṣakāṉam*. This editions of dramatized version of the episode of the pool of poison from ***Mahāpāratam*** is brought out in the series of minor literature.

This episode occurs in the "*Vaṉaparva*" in the ***Mahāpāratām.*** **Turiyōtaṉaṉ** plans to destroy the **Pāṇṭavās**, and to achieve this end, he engages **Kāḷamāmuṉi** in performing a *yākñā,* but Lord Krishna sees that **Turiyōtaṉaṉ** fails in his attempt and **Pāṇṭavās** are saved. ***Naccuppoykai Vilācam*** dramatizes the theme.

The purpose of this Edition

There are three versions of the story, dating to 19th century. One of them entitled *Srī Mahāpārata Āraṇya Paruvam* ***Naccuppoykai*** was authored by **Caiva Kuru Paramparā Cinnatampi Svamikal's** disciple, **Vēlūr Nārāyaṇasvāmi Piḷḷai**, It was edited by **Rattiṉavēlu Mutaliyār** and printed at the **Toṇṭai Maṇṭala** printing press, **Cūḷai**, Chennai. It begins with the falicitation to Her majesty, the queen of England, consisting of ***Jāvaḷi, Taru,*** *Akaval, Viruttam* and ***Kaṇṇikal*** set to ***Rākam*** and ***Tāḷam***, interspersed with prose.

The second one entitled *Srī* ***Mahāpārata Naccuppoykai Vilācam*** has been authored by Ṣaṭṭāvatā**ṉam Vairakkaṇṇu Vēlāyutap Pulavar,** son of Tanjore Srī **Alakappa Veṅkaṭācala Paṇṭitar.** The work saw the light of day in the month of ***Cittirai*** of ***Vikkirama*** year (1850) printed at the Boston press, Vēppēri, Chennai, with financial support extended by **Putuvai Mahāsrī** Srīnivācatācar hailed as **Rāmāṉuja Tācar**. He was the disciple of **Srī** Raṅkāccāriyār and was Head of the Bajan Matt. The edition carried a

commanding verse by **Vēṅkaṭaramaṇa Iyer**, a preface by **Muttiruḷappa Paṇṭitar**, a ***Pañcaratiṉa Mālā*** and a celebratory verse.

The invocation to **Vināyakā** is in the raga *Saṅkarāparaṇam* in the *Veṇpā* Genre. This includes an invocation to **Chennai Salai Vināyakā** in eight-footed ***Viruttam***, a ***Canta Viruttam*** in praise of **Tirupōrūr Murukaṉ**, a six - footed ***Viruttam*** in praise of **Kapālīsvarar**, a ***Viruttam*** in praise of **Kaṟpakāmpikai**, a ***Canta Viruttam*** in praise of **Viṣṇu**, a ***Kali Viruttam*** in praise of **Lakṣmi**, a ***Vaṇṇa Viruttam*** in praise of **Carasvati**, and an invocation on **Putuvai Maṇakkuḷa Vināyakar**. It is a work in 176 pages.

The third one has the title of ***Mahāpārata Vilācam Pañca Pāṇṭavāḷ Vaṉavācam*** alias the pool of poison. It was written by the great exponent of Tamil Drama, Prose and Music, **Rāmanallūr Rāmaccantra Kavirāyar** under the supervision of **Kōkulāpuram Aruṇācala Mutaliyār**. **Karumpākkam Kailāca Mutaliyār** and **Tiruppati Rattiṉa Mutaliyār** joinly brought out the edition printed at their **Mutrākṣara Cālā** in 1879.

The work begins with the hymns of invocation to Lord **Vināyakā**, **Murukā**, **Civā**, **Viṣṇu** and Goddess **Carasvati.** It includes such features as ***Tōṭayam***, **Vināyakar** ***Kāppu***, the arrival of chorus. It has more than 200 verses of ***Taru*** and ***Viruttam***, running to 56 pages.

It is not known if any other version of pool of poison episode from ***Mahāpāratā*** than the above these has been edited. But this version presently being edited is a different one from the above three; hitherto unpublished. Thus one more is getting added to the existing ones.

This script

This script is preserved in the No.R2798 in the Government Oriental Manuscript Library, Chennai. It was procured from one **Mr.K.Shanmugam** of **Kumārakuppam** in 1951-52. It has 90 leaves. Each of the size is 16 ½" x 1" stanzas of verses well arranged. The handwriting is quite legible. Though full of colloquialisms and spelling mistakes, the script is in good condition. The leaf is divided into two parts and each part contains four lines. Titles of the verses are given in the margin on the left. A manuscript in paper has been prepared and it is numbered R7430. **Mr. M.Sivaprakasam Piḷḷai** has done the copying, spending time from 28.12.58 to 31.12.58.

The Edition

The Edition carries the verses with a summary of each in prose. The verses which have been summarized already in the original have been left unsummarized. But the verses which have been paraphrased have been

summarized again. Error-correction has been effected, retaining the original textual form. The version consists of a preface and an annexure which list the beginning of each verse and glossary with a list of ***Vilācams*** (dramatized literary episodes) with the names of the respective authors.

Acknowledgement

An edition doesn't become worthy one in the absence of source of help, active support and encouragement in every sense of these terms. Our Director is all these and but for him, the Institute could not have launched itself on such a lofty task of bringing out English editions of great literary works in Tamil. We in the first place owe him our debt of gratitude.

Our thanks are due to **Dr. S. Soundara Pandiyan** Curator of Government Oriental Manuscript Library, and his assistants for having been kind enough to lend us the script for our use. We are thankful to **Mr.K.Shanmugam** for having made a gift of the script to the library, and to the archives librarians of Egmore Archives for having allowed us the benefit of a comparative scrutiny of the text.

We express our gratitude to **Mr. R. Ramaratinam** for the proof-reading work in English. We thank to **Mrs. R. Geetha** for computerising the work and to the press for printing the work excellently.

R.Jayalakshmi

K. Panneerselvam

ஆய்வுரை

பொது ஆய்வு

விலாசமும் பாட்டியலும்

விலாசம் என்பது பிரபந்தம் என்று அழைக்கப்படும் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. பதினாறாம் நூற்றாண்டில் தோன்றிய **பிரபந்த மரபியல்,**

'பிள்ளைக் கவிமுதல் புராணம் ஈறாகத்
தொண்ணூற் றாறெனும் தொகைய தான'[1]

என்று பிரபந்தங்களைத் தொண்ணூற்றாறாக வகைப்படுத்திய போதிலும் பன்னிரு பாட்டியல் முதலாக இன்றுவரை உள்ள பிரபந்த இலக்கண நூல்களுள் கூறப்படும் இலக்கிய வகைகள் அனைத்தையும் கூட்டி உறழ ஏறத்தாழ முந்நூற்று ஐம்பதுக்கு மேற்பட்ட சிற்றிலக்கிய வகைகள் உள்ளன.

சதுரகராதி தொண்ணூற்றாறு வகை இலக்கியங்களை அறிமுகப் படுத்துகிறது. பிரபந்தத் திரட்டிலும் தொண்ணூற்றாறு வகை பிரபந்தகள் கூறப்படுகின்றன. பிரபந்த மரபியலும் தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களைச் சுட்டுகிறது. ஆனால் ஒன்றில் கூறப்படும் பட்டியல் மற்றொன்றில் காணப்பட வில்லை. விலாச இலக்கியம் **பிரபந்தத் திரட்டில்** மட்டுமே குறிக்கப்படுகின்றது. அதுவும் நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டுச் சொல்லப்படுகிறது. அவை **லட்சுமி விலாசம், கற்பனை விலாசம், திருமுக விலாசம், சமூக விலாசம்** என்பன.

லட்சுமி விலாசம்

"பெண்ணை மணங்கூட்டி மாலொடு பொன் வந்ததாப் பாடல்
அணை லட்சுமி விலாசம்"

என்பது பிரபந்தத் திரட்டு[2]. அஃதாவது, இலக்குமியைத் திருமணம் செய்து கொண்டு திருமால் வந்ததாகப் பாடுவது.

கற்பனை விலாசம்

ஆதிமுத லந்தம்வரை பாதாதி கேசத்துக்
கோதிய கற்பனை யுண்டாக்கிக் –கோதை
மறையோர்செய் வேள்வி தனில்வந்த தாய்ப்பா
டறிகற் பனைவிலா சம்.[3]

ஒரு பெண்ணைப் பாதம் முதல் கேசம் வரை வருணித்துப் பாடி அப்பெண் அந்தணர் செய்யும் வேள்வியில் தோன்றியதாக கூறுவது கற்பனை விலாசம் என்று கூறப்படுகிறது.

திருமுக விலாசம்

இது ஒரு புலவன் தன் வறுமையை இறைவனிடம் கூற, இறைவன் நேரில் தோன்றாமல், வேறு ஒரு வள்ளலிடம் செல்லுமாறு கூறி அவ்வள்ளலுக்கு மடல் அளிப்பதாகும்.[4] சிவபெருமான் பாணபத்திரர்க்கு அளித்த **திருமுகப்பாசுரம்** இவ்வகைத்து. **ஏழுநகரத்தார்க்களித்த திருமுகவிலாசமும்** இத்தகையதே. குன்றக்குடி முருகப்பெருமான் தம்மைப் பாடிவந்த புலவர்க் கிரங்கி ஏழுநகரத்தார்க்குத் திருமுகம் அளித்து அனுப்பியதாக பாடப்பட்டது இது.

சமூக விலாசம்

ஒரு தலைவன் வெற்றி பெற்றுச் சபையில் அமர்ந்து புலவர்களால் புகழப்பட்டு, அவனைக் கண்டு மையலுற்ற பெண் ஒருத்தியை மணம் புரிதல் சமூக விலாசம் என்று கூறப்படுகிறது.[5]

விலாசம் – சொற்பொருள்

விலாசம் என்ற சொல்லுக்கு, அழகு, விளையாட்டு, நாணக் குறிப்பு, விநோதம், வேடிக்கை, நாடக நூல், முகவரி, சுகானுபவத்துக்குரிய இடம் எனப் பல பொருள்கள் உண்டு.[6]

இவ்வனைத்து பொருள்களும் பொருந்தும் வண்ணம் விலாச இலக்கியங்கள் அமைந்துள்ளன. அணிநயங்களுடன், அழகாகவும், வேடிக்கை விநோத விளையாட்டுகளுடனும் அமைவதோடு பல விலாசங்கள் நாடக அமைப்பிலும் காணப்படுகின்றன.

பிற சிற்றிலக்கியங்களும் விலாசமும்

விலாச இலக்கியங்களைப் பிற சிற்றிலக்கியங்களுக்குள் அடக்குவாரும் உண்டு. **பூதர விலாசம்** என்னும் நூலின் முன்னுரையில் பொ.மீ. இராமலிங்கக் கவிராயர் "யாப்பிலக்கண விதி வழாது செய்யுளிற் பாடும் பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு வகைப்படும். அவற்றுள் ஒன்றாகிய கோவையில் அமைந்துள்ள பற்பல துறைகளில் தலைவனிடத்து வேட்கை மிகக் கொண்ட தலைவி மருட்சி யெய்தித் தன் முன்னால் உள்ள பொருளை நோக்கித் தன் நிலையைக் கூறுவதாகப் பாடப் பெறுவதே விலாசம்" என்று குறிப்பிடுகிறார். இவ்விலக்கணம் **பூதர விலாசம், சந்திர விலாசம், சமுத்திர விலாசம்** போன்ற சில விலாசங்களுக்கே பொருந்தும். ஏனையவற்றுக்குப் பொருந்தாது.

விலாசங்கள் உலா அமைப்பிலும் காணப்படுகின்றன. வீதி உலா வந்த ஒரு தலைவனைக் கண்டு காதல் கொண்ட தலைவி மருட்சியடைந்து தன் எதிரில் உள்ள பொருளைப் பார்த்துத் தன் மனநிலையைக் கூறுவதாக இவ்விலக்கியங்கள் அமைந்துள்ளன. **சந்திர விலாசம்** என்பது இத்தகையதே. சேலம் ஜில்லா, **வேளுக்குறிச்சி** ஜமீன்தாராகிய **வேலப்பக்கவுண்டர்** பவனி வருவதைக் கண்ட பெண் ஒருத்தி சந்திரனின் தோற்றத்தைப் பார்த்து பொறுக்காமல் பாடுவதாக அமைந்துள்ளது இது. பவனி விலாசம் என்னும் விலாசங்களும் உலா அமைப்பைப் பின்பற்றுபவை.

ஏழு நகரத்தார்க்களித்த **திருமுக விலாசம்** என்னும் நூலின் பதிப்புரையில் "திருமுக விலாசம் என்னும் நூல் தூது வகைப் பிரபந்தகளுள் ஒன்றாகக் கொள்ளப்படும்" என்று அதன் பதிப்பாசிரியராகிய மு. காசிவிசுவநாதன் கூறுகிறார். இது ஒருசில திருமுக விலாசங்களுக்கு மட்டுமே பொருந்தும். இதே போன்று **ஆறாதார விலாசம்** என்னும் நூலில் **குறவஞ்சி** இலக்கியத் தன்மையும் **பஞ்சலட்சணத் திருமுக விலாசம்** என்னும் நூலில் **பள்ளு** இலக்கியச் சாயலும் காணப்படுகின்றன.

மேலே கூறியவாறு பல விலாசங்களில் பல இலக்கியத் தன்மைகள் காணப்பட்ட போதிலும் விலாசம் என்பது அவற்றினின்று வேறுபட்ட ஓர் இலக்கியம் என்பது யாப்பமைதி, பாத்திரப் படைப்பு போன்றவைகளால் உறுதி செய்யப்படும்.

விலாசங்களின் தோற்றமும் வளர்ச்சியும்

ஏழாம் நூற்றாண்டில் மகேந்திரவர்மன் **மத்த விலாசப் பிரகசனம்** என்னும் நாடக நூலை எழுதியுள்ளார். ஆனால் அது தற்போதுள்ள விலாச அமைப்பில் இல்லை. "இப்போது கிடைக்கும் விலாசங்கள் பலவும் 16, 17, 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் தோன்றியவையாகவே காணப்படுகின்றன. 1950 ல் பதிப்பிக்கப்பட்ட **சங்கர விலாசம்** என்ற நூலின் பதிப்புரையில் அது 350 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டதாகக் கூறப்படுகிறது. 16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த **பூகோள விலாசத்தின்** முன்னுரையில் அந்நூல் கூறிய செய்திகளை அதற்கு முன்னர்த் தோன்றிய **அண்டகோள விலாசம்** கூறியதாகக் குறிப்புள்ளது. எனவே அது பதினாறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றியிருத்தல் வேண்டும்" என்கிறார் கரு. நாகராசன்.[7] இக்கருத்து பொருந்துவதாகவே உள்ளது. ஏனெனில் பதினாறாம் நூற்றாண்டுக்கு முன் தோன்றிய பாட்டியல் நூல்களில் விலாசம் பற்றிய குறிப்பில்லை. வடமொழியில் புராண நூலின் மரபு பற்றிப் பயிலும் விலாசம் என்ற பெயரில் அமைந்த தமிழிலக்கியங்கள் தமிழிலும் புராண இதிகாசங்களைத் தழுவியே முதலில் அமைந்தன. காலப்போக்கில் சமுதாயச் செய்திகள் கூறும் விலாசங்களும் எழுந்தன.

இதிகாசத் தொடர்புடைய **இரணிய விலாசம், கிருஷ்ண விலாசம், கீசக விலாசம், குசேல விலாசம், அரிச்சந்திர விலாசம், நள விலாசம், மகாபாரத விலாசங்கள்** தோன்றியமையோடு ஆங்கிலேயர் பர்மாவைப் பிடித்த போது அதனை நியாயப் படுத்தி **அப்பர் பர்மாயுத்த விலாசம்** எழுதப்பட்டது. அமைச்சர்கள் கடமையை விளக்கும் வண்ணம் **நாலுமந்திரி விலாசம்** எழுந்தது. பக்தர்களைப் போற்றும் விதத்தில் **மார்க்கண்டேய விலாசம், சிறுத்தொண்ட விலாசம், ருக்மாங்கத விலாசம், மாணிக்க வாசக சுவாமிகள் விலாசம்** ஆகியவை எழுதப்பட்டன. **பஞ்சலட்சணத் திருமுக விலாசம், குன்றக்குடி முருகன் ஏழுநகரத்தார்க் களித்த திருமுக விலாசம், முத்துப் பாலாண்டித் தேவர் பேரில் திருமுக விலாசம்** போன்ற திருமுக விலாசங்களும் தேன்றின. காதல் வயப்பட்ட தலைவியின் நிலையைக் கூறும் **சமுத்திர விலாசம், சந்திர விலாசம், பூதர விலாசம், பவனி விலாசம், பிரதாப விலாசம்** ஆகியவை தோன்றின. தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னன் சிவாஜியின் விருப்பப்படி **பாண்டிய கேளீ விலாசம், மதன சுந்தர விலாசம்** ஆகியவை எழுதப்பட்டன. இவை தெருக்கூத்து

அமைப்பிலேயே இருந்தன. **ஆதாம் ஏவாள் விலாசம், ஆபிரகாம் சாறாள் விலாசம், பூதத்தம்பி விலாசம், ஞான சௌந்தரி விலாசம்** போன்ற கிறித்தவ மதச்சார்புடைய நாடகங்களும் எழுதப்பட்டன. இவ்வாறு 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் விலாச இலக்கியங்கள் பெருகின.

விலாச இலக்கிய வகைகள்

விலாச இலக்கியங்களை, புராண இதிகாச நிகழ்ச்சிகளைக் கருவாக வுடைய விலாசங்கள், **மாணிக்கவாசகர், ஞானசம்பந்தர்** போன்ற நாயன்மார்களின் பெருமைகளைக் கூறி பக்திச் சுவையூட்டும் விலாசங்கள், சமுதாயச் சீர்கேடுகளைச் சாடும் விலாசங்கள், இறைவன் புகழ்பேசும் விலாசங்கள், தனிமனிதன் புகழ்பாடும் விலாசங்கள், உலகின் தன்மைகள், அமைப்புகள் பற்றிக் கூறும் விலாசங்கள் என, கருத்தின் அடிப்படையிலும், பாடல்களும் வசனங்களும் விரவி நாடகப் பாங்கில் அமைந்த விலாசங்கள், கலிவெண்பாவால் அமைந்த விலாசங்கள், பல வகை யாப்புகளால் அமைந்த விலாசங்கள், சிலேடை, மடக்கு, திரிபு போன்ற அமைப்புடைய விலாசங்கள் என யாப்பின் அடிப்படையிலும் வகைப்படுத்துகிறார் கரு. நாகராசன்[8] சில விலாசங்கள் சுவை குன்றியனவாகவும், கருத்து நலமற்றனவாகவும், தெருக்கூத்து போன்ற அமைப்பிலும் காணப்படுகின்றன.

விலாச இலக்கிய நோக்கங்கள்

பூகோள விலாசத்துக்கு முன்னுரை வழங்கிய வையாபுரிப் பிள்ளை அவர்கள் இலக்கியத்தில் பயிற்சியடைய விரும்புவோர் இவ்வுலக வருணனைகளைத் தெரிந்து கொள்ள வேண்டியது இன்றியமையாதது. எனவேதான் இதுபற்றிய விலாசம் எழுந்தது[9] எனக் கூறுவதிலிருந்து **பூகோள விலாசம், அண்ட கோள விலாசம்,** ஆகியவற்றின் நோக்கம் தெரிகிறது.

மது, மாது என அலையும் தூர்த்தர்களைத் திருத்துவதற்காக எழுதப் பட்டது **பிரதாப சந்திர விலாசம்.**

அப்பர் பர்மாவை ஆங்கிலேயர் பிடித்தது நியாயமல்ல என்ற கருத்து நிலவிய போது அது நியாயம் என்று நிரூபிப்பதற்காக **அப்பர் பர்மாயுத்த விலாசத்தை** எழுதியதாக அதன் ஆசிரியர் ஜே.பிரான்சிஸ் கூறுகிறார்.

வாதவூரடிகள் கீர்த்தியை எழுதினோர், படித்தோர் கேட்டோர் அனைவரும் இம்மையில் செல்வமோங்கி பழுதில்லா இன்பம் துய்த்துப் பரகதி அடைவர் என்று **மாணிக்க வாசகர் விலாசம்** எழுதிய ஆசிரியர் குறிப்பிடுகிறார். இது எல்லாப் புராண ஆசிரியர்களும் கூறுவதுதான்.

ஆனால் மற்ற சில பிரபந்தங்கபைப் போல் தனிமனிதனைப் பற்றியோ, பொருள் தந்த வள்ளலைப் பற்றியோ புகழ்ந்து பாடாமல் சமுதாயத்தைச் சீர்திருத்தும் நோக்கத்தில், சமுதாயத்துக்குத் தேவையான கருத்துக்களைக் கூறுவனவாகவே விலாச இலக்கியங்கள் அமைந்துள்ளன.

இங்குப் பதிப்பிக்கப்படும் நச்சுப்பொய்கை விலாசமும் "கெடுவான் கேடு நினைப்பான்" என்பதையும் பிற அறக்கருத்துகளையும் பரப்பும் நோக்கிலேயே அமைந்துள்ளது.

விலாசங்கள் நாடகங்களா?

சில விலாசங்கள் யமகம், திரிபுகளாக அமைந்த போதிலும், அண்டகோளத்தைப் பற்றிக் கூறும் **பூகோள விலாசம், அண்ட கோள விலாசம்** ஆகியவை இருந்த போதிலும், பாவ ராக தாள அபிநயம் பற்றி இயம்பும் **பாவ, ராக, தாள, சிங்காராதி அபிநய தர்ப்பண விலாசம்** எழுதப்பட்ட போதிலும் விலாசம் என்றாலே நாடகம் தான் நினைவுக்கு வருகிறது. காரணம் **அரிச்சந்திர விலாசம், மோகனாங்கி விலாசம், சித்ராங்கத விலாசம், சாரங்கதார விலாசம், இரணிய விலாசம், கீசக விலாசம், நள விலாசம், மகாபாரத விலாசம், டம்பாச்சாரி விலாசம்** என பல விலாசங்கள் நாடகங்களாக இருப்பது ஒன்று. 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் நாடக சபைகளுக்கே விலாச சபா என்று பெயர் இருந்தமை மற்றொன்று. சுகிர்த விலாச சபை, கணபதி விலாஸ் தியேட்டர் என்ற பல நாடக சபைகள் அக்காலத்தில் நாடகம் நடத்தி வந்ததை அறிகிறோம். "குறிப்பிட்ட ஒரு தலைவன் அல்லது தலைவியின் புகழைச் சிறப்பித்துப் பேசும் **நாடகம்** விலாசம் எனப்பட்டது" என்கிறார் சக்தி பெருமாள்.[10] சில விலாசங்களைப் படைத்த ஆசிரியர்களே தங்கள் விலாசத்தை **நாடகம்** என்று குறிப்பிடுகின்றனர். **பூம்பாவையர் விலாசத்தின்** தொடக்கத்தில் அதன் ஆசிரியர் இவ்வாறு கூறுகிறார்.

> தௌவிமொழி நூன்முறைக ளேதுமுண ராதஒரு சிறியேன் பச்சைக்
> கிளவிமொழிப் பூம்பாவைச் சரிதைதணி கேசனருட் கேண்மை யாலே
> வௌவி மொழி **நாடகமென் றோதினன்**[11]

1857ல் காசி விசுவநாத முதலியாரால் எழுதப்பட்டது **டம்பாச்சாரி விலாசம்** என்னும் சமூக நாடகம். இது 19ஆம் நூற்றாண்டில் அரங்கேறிய நாடகங்களிலேயே தலைசிறந்ததாக் கருதப்பட்டது.

1877 ல் தோன்றிய பிரதாப **சந்திர விலாசம்** என்னும் சமூக நாடகம் கவிதை, உரை நடை கலந்து அங்கம், களப் பிரிவுகளுடன் எழுதப் பட்டது. இதை எழுதியவர் திண்டிவனம் ராமசாமி ராசு.

1883ல் பதிப்பிக்கப் பட்ட **ஆறாதார விலாசம்** நல்ல கட்டுக் கோப்புடைய நாடகமாக அமைந்துள்ளது.

அரிச்சந்திர விலாசம், மோகனாங்கி விலாசம், மகாபாரத விலாசங்கள், பாண்டிய கேளீ விலாசம், ஆதாம் ஏவாள் விலாசம், ஞான சௌந்தரி விலாசம் எனப் பல விலாசங்கள் நாடகமாகவே அமைந்துள்ளமையைக் காண்கிறோம். இவற்றுள் பல

நாடகங்கள் 19 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்திலும் பலமுறை நடிக்கப்பட்டு வந்தமையும் அறிய முடிகிறது.

இங்கு பதிப்பிக்கப்படும் நச்சுப் பொய்கை விலாசமும் நாடகமே. எனவே இங்கு தமிழ் நாட்டில் நாடகத்தின் தோற்றம் வளர்ச்சி பற்றியும் தெரிந்து கொள்வது இன்றியமையாததாகிறது.

நாடகத்தோற்றமும் வளர்ச்சியும்

இருஷி மூலம் நதி மூலம் ஆராய முடியாது என்பர். அதுபோன்றே தமிழ் நாடகத்தின் தோற்றத்தையும் வரையறுக்க இயலவில்லை. **பரிதிமாற் கலைஞர்** தாம் எழுதிய **நாடகவியல்** என்னும் நூலின் முன்னுரையில் " நந்தமிழ் மொழியிலோ நாடக இலக்கணங்கள் யாவும் இறந்தனவாதலின் ஒன்றும் சொல்ல இயலாது" என்கிறார்.[12] "நாடக நூல் என்று சங்க கால இலக்கியத்திலும் சரி ; பிற்பட்ட இலக்கிய காலங்களிலும் சரி. தனிப்பட்ட ஏதும் இருப்பதாக என் சிற்றறிவுக்குப் புலப்படவில்லை" என்று நடிகர் ஒருவர் கூறுகிறார்.[13] ஆனால் சங்க காலத்துக்கு முன்பிருந்தே நாடகங்கள் தொடர்ந்து இருந்து வந்துள்ளன என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. அகத்தியம், பரதம், கூத்தநூல், சயந்தம், முறுவல், குண நூல் ஆகிய நாடக இலக்கண நூல்கள் இருந்தமையை அடியார்க்கு நல்லார் உரையால் அறியலாம்.

"**நாடக வழக்கினும்** உலகியல் வழக்கினும்" என்கிறது தொல்காப்பிய நூற்பா.[14] **வேத்தியல் பொதுவியல்** என மன்னர் முன் ஆடும் கூத்தும் மக்கள் முன் ஆடும் கூத்தும் வகைப்படுத்தப்பட்டு வந்துள்ளன.[15] "நாடக மகளிர் ஆடு களத்து எடுத்த விசி வீங்கு இன்னியம் கடுப்ப" என்னும் தொடர் பெரும்பாணாற்றுப் படையில் வருகிறது.[16] பத்துப் பாட்டில் ஒன்றாகிய மலைபடுகடாம் **கூத்தராற்றுப் படை** என்றே அழைக்கப்படுகிறது. கலித் தொகையில் பல பாடல்கள் நாடக அமைப்பில் உள்ளன. திருக்குறளில் **கூத்தாட்டு அவை** குறிப்பிடப்படுகிறது.[17]

சங்க காலத்தில் கூத்தர், பொருநர், பாணர், விறலியர் இருந்தனர் என்னும் செய்தி பல சங்கப் பாடல்களால் அறியப்படுகின்றது. சங்கர நமச்சிவாயர் "பொருநர் என்பார் மற்றொருவர்போல் வேடங்கொள்ளும் நடிகர்" என்கிறார்.[18] துணங்கைக் கூத்து[19], குரவைக் கூத்து[20] வெறியாட்டு[21], வாடாவள்ளி[22] எனப் பல ஆடல் வகைகள் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படுகின்றன. இவற்றையெல்லாம் நோக்க, சங்க காலத்தில் நாடகம் இருந்தது என்று கூறலாமெனில் "கூத்தும், நாட்டியமும் நாடகம் ஆகாது. ஆகவே சங்க காலத்தில் நாடகம் ஏதுமில்லை" என்கிறார் தெ.பொ.மீ.[23]

இன்றும் தெருக்கூத்து, பாகவதமேளா, யட்சகானம் போன்ற நாடகங்கள் பாடலும் ஆடலுமாகவே உள்ளன. இன்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முற்பட்ட திரைப்படங்கள், நாடகங்கள் பாடலும் ஆடலுமாகவே இருந்திருக்கின்றன. ஐம்பது ஆண்டுகட்கு முன்பே இப்படியென்றால் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முந்தைய நாடகம் இன்று போலவே எவ்வாறு இருந்திருக்க முடியும் ? எனவே "நாடகங்கள் இல்லை

என்று சொல்வதற்கில்லை; வேறு வடிவில் இருந்திருக்க வேண்டும்" என்பதே பொருந்தும்.

சங்கம் மருவிய காலத்தும், நாடகம் இருந்தமைக்குச் சிலப்பதிகாரமே சான்றாக விளங்குகிறது. ஆடலாசிரியன், இளசயாசிரியன் இயல்புகள், திரை அமைப்பு, அரங்க அமைப்பு, கூத்து வகைகள் ஆகிய அனைத்தும் சிலப்பதிகாரத்தில் கூறப்படுவதோடு ஆய்ச்சியர் குரவையின் மூலம் **வாலசரித நாடகம்** என்ற நாடகம் நடைபெற்றதாக அறிகிறோம்.[24]

"நாடகம் சார்ந்தால் பகை பழி தீச்சொல் சாக்காடு ....வரும்" என்னும் ஏலாதிப் பாடலை வைத்துச் சமணர் நாடகத்தை வெறுத்தனர் என்பது ஓரறிஞர் கருத்து.[25] அந்தப் பாடலை எழுதிய ஆசிரியர் கருத்து அதுவாக இருக்கலாம். ஒருவர் கருத்தை ஒரு குழு முழுமைக்கும் ஏற்றிச் சொல்லுதல் பொருந்தாது. அவ்வாறாயின் சிலப்பதிகாரம் சிந்தாமணி போன்ற காப்பியங்கள் இசைக்கும் நாடகத்துக்கும் இடம் கொடுத்திருக்க மாட்டா. "களப்பிரர் காலத்தில் சங்கம் அழிந்தது. இசைத்தமிழும் நாடகத் தமிழும் ஒடுக்கப் பட்டன" என்பதும் அறிஞர் கொள்கை.[26] ஏழாம் நூற்றாண்டில் நடந்த அனல்வாதம் புனல்வாதத்தில் சமணர்கள் கழுவேற்றப் பட்ட செய்தியும், ஏடுகள் அழிக்கப்பட்ட செய்தியும் வரலாற்றுண்மை. களப்பிரரால் ஆதரிக்கப்பட்ட சமண நூல்கள் அழிந்து பட்டிருக்க வேண்டும் என்பதே இதனால் விளங்குகிறது. எனவே சமயக் காழ்ப்புணர்ச்சியால் ஒருவரது இலக்கியங்கள், நாடகங்கள் மற்றொருவரால் அழிக்கப் பட்டிருக்க வேண்டுமேயன்றிச் சமணர் காலத்தில் நாடகமே இல்லை என்று கூற இயலாது. பொருண்மைகள் மாறுபட்டிருக்க வேண்டும் என்பதே உண்மை. சிலப்பதிகாரத்துக்குப் பின் தேவார காலம் வரை நாடக நூல்கள், நாடகம் பற்றிய செய்திகள் இல்லாமைக்குச் சமயச் சண்டைதான் காரணமாய் இருந்திருக்க வேண்டும்.

ஏழாம் நூற்றாண்டில் பல்லவ மன்னனான மகேந்திர பல்லவன் **மத்த விலாசப் பிரகசனம்** என்னும் நாடக நூலை எழுதியதாக அறிகிறோம். "**முத்தமிழும்** நான்மறையும் ஆனான் கண்டாய்" என்கிறார் அப்பர் பெருமான்[27] மாணிக்கவாசகர் காலத்தில் தமிழில் நாடகம் இருந்தது என்பதை **நாடகத்தால் உன்னடியார் போல் நயந்து** என்று அவர் பாடுவதிலிருந்து அறியலாம்.[28] பத்தாம் நூற்றாண்டில் தஞ்சைப் பெரிய கோயிலில் **இராஜராஜேச்சுரம்,**[29] **இராஜராஜன்**[30] ஆகிய நாடகங்கள் நடந்தமைக்குக் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. 11ஆம் நூற்றாண்டிலும் இராஜாதிராஜன் திருவிடை மருதூர்க் கோயிலில் நாடகம் நடத்துவதற்கு நிபந்தம் அளித்த செய்தி தெரிகிறது[31] சீவக சிந்தாமணி **நடன மங்கை,**[32] **நாடகத்திரை,**[33] **நாடக அரங்கேற்றம்**[34] பற்றிய செய்திகளைச் சொல்லுவதோடு சீவகன் ஏமாங்கத நாட்டு மன்னனான பின்பு **சுதஞ்சணனின்** வாழ்க்கையை நாடகமாக நடிக்க ஒரு ஊரையே தானமாகக் கொடுத்த செய்தியையும் சுட்டுகிறது.[35] ராஜராஜேச்சுரம் நாடகம் மராட்டிய மன்னர் காலம் வரை நடத்தப்பட்டு வந்துள்ளது. தமிழகத்தில் விஜயநகர நாயக்க மன்னர் ஆட்சி ஏற்பட்ட பின் தெலுங்கு நாடகங்கள் வளர்ச்சியடைந்து தஞ்சையில் பல தெலுங்கு நாடகங்கள்

நடைபெற்றன. 18 ஆம் நூற்றாண்டில் சீர்காழி அருணாசலக் கவிராயரின் **ராம நாடகமும்,** கோபால கிருஷ்ண பாரதியின் **நந்தனார் நாடகமும்** தோன்றின. **குறவஞ்சி நாடகங்கள், நொண்டி நாடகங்கள்** எனப் பல தோன்றி வளர்ந்தன.

அநீதி நாடகம் 18ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. கதைப் பாடலாக இருந்த **கான்சாகிபின்** வீர வரலாற்றை நாடகமாக்கி நடித்துள்ளனர். நவாபின் கொடுமையான ஆட்சியை எதிர்த்துக் கிளர்ச்சி செய்த வீரன் **கான்சாகிபின்** கதையாக இது உள்ளது. 1867இல் அச்சேறிய **விசுவநாத** முதலியாரின் **டம்பாச்சாரி விலாசத்தை** முதல் சமூக நாடகமாகக் கருதலாம். இது முதன் முதலில் 1857இல் நடிக்கப்பெற்றதாகக் கூறப்படுகிறது. 1868இல் **தாசில்தார்** நாடகமும் அதனையடுத்து **ஆரிய சமாஜன்** நாடகமும் இதே ஆசிரியரால் எழுதப்பட்டன.

19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் **மனோன்மணீயம்** நாடகமும், வேணு கோபாலாச்சாரியாரின் **வெனிஸ் வணிகன்** நாடகமும் ஆங்கில நாடகங்களைத் தழுவி எழுந்தன. பரிதிமாற்கலைஞர் **கலாவதி, ரூபாவதி, மானவிஜயம்** போன்ற நாடகங்களை எழுதியதோடு **நாடக இயல்** என்னும் நாடக இலக்கண நூலையும் எழுதினார். தவத்திரு **சங்கரதாஸ் சுவாமிகள்** அவர்கள் அம்மானை வடிவில் இருந்த பல கதைப்பாடல்களை இசை நாடகங்களாக்கி அவற்றுக்கு உயிர் கொடுத்தார். **பம்மல் சம்பந்த முதலியார்** அவர்கள் இன்பியல், துன்பியல், அங்கதம், புராணம், வரலாறு, மொழி பெயர்ப்பு என பல்வேறு வகையான தொண்ணூறுக்கு மேற்பட்ட நாடகங்களை விளக்கி அவற்றைத் தம் **சுகுண விலாச சபை** மூலம் அரங்கேற்றினார்.

தமிழ் ஷேக்ஸ்பியர் எனவும், நாடகத் தந்தை எனவும் அழைக்கப் பட்ட இவர் நீதிபதியாக விளங்கியவர். ஆங்கில நாடகங்களையும் தமிழ் நாடகங்களையும் மொழிபெயர்த்துப் புதிய உத்திகளோடு மேடையேற்றியவர். **மோலியர்** எழுதிய பிரெஞ்சு நாடகத்தைத் தழுவி **விதிலேக வயித்தியுடு** என்னும் தெலுங்கு நாடகம் ஒன்றையும் இவர் எழுதினார்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ் நாட்டில் ஏராளமான நாடகக் கம்பெனிகள் பல்கிப் பெருகின. சில குழுக்கள் பர்மா, இலங்கை, சிங்கப்பூர், மலேயா எனப் பிறநாடுகளுக்கும், கேரளா, கர்நாடகா, ஆந்திரா எனப் பிற மாநிலங்களுக்கும் சென்று நாடகம் நடத்தின. இந்த நாடக நடிகர்கள் அக்காலத்தில் கூத்தாடிகள் என்று அழைக்கப்பட்டனர். களத்துமேடு, தெருமுனை போன்ற இடங்களில் கீற்றுக் கொட்டகையில் இரவு முழுவதும் நாடகம் நடக்கும். புராண நாடகங்களே நடத்தப்பட்டன. ஒலி பெருக்கி இல்லாத அக்காலத்தே நடிகர்கள் மிகவும் உரத்த குரலில் பாடுவர். பாட்டுக்காகவே பல நாடகங்கள் பெயர்பெற்றன.

பின்னர் புராண நாடகங்கள் தவிர பிற நாடகங்களும் அரங்கேற்றப்பட்டன. **ஜே. ஆர். ரங்கராசு, வடுவூர் துரைசாமி ஐயங்கார்** ஆகியோரின் துப்பறியும் நாவல்களை நாடகமாக்கியவர் **கந்தசாமி முதலியார், பியூ. சின்னப்பா, டி.எஸ். பாலையா,**

டி.கே.எஸ். சகோதரர்கள், எம்.ஜி.ஆர். ஆகியோர் இவரது நடிப்புப் பயிற்சியில் உருவானவர்களே. **சதாவதானம் கிருஷ்ணசாமிப் பாவலர்** அவர்கள் 1920ல் **பால மனோகர சபை** என்ற சபையைத் தோற்றுவித்து **கதரின் வெற்றி, தேசியக் கொடி, தேசிங்குராஜன்** போன்ற நாடகங்களை நடத்தி நாட்டு மக்களிடையே நாட்டுப் பற்றை ஊட்டினார்.

இதே காலகட்டத்தில் கொழும்பு நகரில் **லங்கா சுபோத விலாச சபை** (1913) யாழ்ப்பாணத்தில் **சரஸ்வதி விலாச சபை** (1914) மட்டக் களப்பில் **சுகிர்த விலாச நாடக சபை** (1920) ஆகியவை தொடங்கப் பெற்றன. இவற்றில் சம்பந்த முதலியாரின் பல நாடகங்கள் நடிக்கப் பெற்றன.

இதன் பின்னர் தமிழ் நாட்டில் **நவாப் ராஜ மாணிக்கம் கம்பெனி, கன்னையா நாயுடு கம்பெனி** ஆகியவை மிகவும் புகழ்பெற்று விளங்கின. நவாப் ராஜமாணிக்கம் கம்பெனியில் காட்சி ஜோடனைகள் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். கன்னையா நாயுடுவின் நாடகங்களில் பக்திச்சுவை மிகுதியாக இருக்கும்.

காலப்போக்கில் பக்தி நாடகங்களிலேயே சமூகப் பிரச்சனைகளும் தலைதூக்கத் தொடங்கின. வெள்ளையர் ஆட்சியை எதிர்க்கும் பாடல்கள் பாடப்பட்டன. **விஸ்வநாததாஸ், எஸ்.ஜி. கிட்டப்பா, மதுரை பாஸ்கரதாஸ்** ஆகியோர் நாட்டுப் பற்றூட்டும் பாடல்களைப் பல மேடைகளில் பாடினர். அவ்வாறு பாடிய விஸ்வநாத தாஸ் பலமுறை மேடையிலேயே கைது செய்யப்பட்டுச் சிறை சென்றார். **வெங்கடாசல பாகவதர்** என்பவர் பத்து முதல் பன்னிரண்டு வயதுக்கு உட்பட்ட சிறுவர்களை வைத்து **பாய்ஸ் கம்பெனி** என்ற கம்பெனியைத் தொடங்கினார். இதிலிருந்து தோன்றியதே **ஒரிஜனல் பாய்ஸ் கம்பெனி.**

இதன் பின்னர் **டி.கே.எஸ் சகோதரர்கள் அவ்வையார், இராஜராஜசோழன், சிவகாமியின் சபதம்** போன்ற நாடகங்களை அரங்கேற்றினர். நாடக வரலாற்றில் இவர்களுக்குச் சிறப்பான இடம் உண்டு. பின் **யதார்த்தம் பொன்னுசாமிப் பிள்ளை** அவர்கள் **மங்கள பால கான சபை** என்னும் சபையைத் தோற்றுவித்து **விதவையின் கண்ணீர், இழந்த காதல்** போன்ற சீர்திருத்த நாடகங்களை அரங்கேற்றினார். இந்தச் சபையின் உரிமையை ஒரு காலத்தில் பெற்ற **என்.எஸ். கிருஷ்ணன்** அவர்கள் **நாம் இருவர், பைத்தியக்காரன்** போன்ற நாடகங்களை அரங்கேற்றினார். **திரு. கே. ஆர். இராமசாமி** அவர்கள் அறிஞர் அண்ணாவின் **ஓர் இரவு, வேலைக்காரி,** போன்ற நாடகங்களை நடத்தினார். **கே. என். ரத்தினத்தின் தேவி நாடக சபையும், டி. கே. கிருஷ்ண சாமியின் சக்தி நாடக சபையும்** புகழ் பெற்றவை. **தேவி நாடக சபை** 1947 முதல் 1977 வரை புகழ் பெற்றிருந்தது. திரைப்படமாக வந்த **மந்திரிகுமாரி, பராசக்தி, முதலாளி** ஆகியவை தேவி நாடக சபையளவில் நடிக்கப்பட்ட நாடகங்களே! இதன் பின்னர் **தேவி நாடக சபையை எஸ்.வி. சகஸ்ரநாமம்** அவர்கள் தொடர்ந்து நடத்தினார். **எம்.ஆர். ராதாவின் ரத்தக் கண்ணீர்** நாடகமும் புகழ்பெற்ற சமூக சீர்திருத்த நாடகமாயிருந்து திரைப்படமாக்கப்பட்டதே.

1978 வரை **உடையப்பாவின் அரிச்சந்திர நாடகம்** புகழ்பெற்ற நாடகமாக விளங்கியது. 1954 ல் தொடங்கப் பெற்ற **ஆர்.எஸ். மனோகரின் நேஷனல் தியேட்டர்ஸ் இலங்கேஸ்வரன், நரகாசுரன்** போன்ற புராண வில்லர்களைக் கதா நாயகனாக்கிச் சிறப்பித்ததோடு **சாணக்கியன்** போன்ற வரலாற்று நாடகங்களையும் அறிமுகப்படுத்தியது. இதே போன்று **ஹெரான் ராமசாமியின் சனீஸ்வரனும்** புகழ் பெற்றது.

இதன் பின்னர் பல பொழுது போக்கு நாடகக் கம்பனிகள் தோன்றி, பெண்ணுரிமை, தண்ணீர்த் தட்டுப்பாடு, சாதிக் கலவரம், வேலையில்லாத் திண்டாட்டம், கலப்பு மணம் போன்ற சீர்திருத்தக் கருத்துக்களை மையமாக வைத்து நாடகங்களைப் பெருக்கின. **கோமல் சுவாமிநாதன், சோ, மௌலி, விசு, மெரினா, கே. பாலசந்தர், பூர்ணம் விசுவநாதன், டெல்லி கணேஷ்** ஆகியோர் இத்தகைய நாடகங்களை அரங்கேற்றினர்.

இன்று நகைச்சுவைக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுவன **எஸ்.வி.சேகர், கிரேசி மோகன்** நாடகங்கள். இவை தவிர **பாம்பே கண்ணன், பாம்பே சாணக்யா, பாம்பே ஞானம்** என மும்பையிலிருந்து வந்து நாடகம் போட்டு வெற்றி பெற்றவரும் பலர் உள்ளனர். **அகஸ்டோ, தில்லை ராஜன், காத்தாடி ராமமூர்த்தி, ஒய்.ஜி.மகேந்திரன், கோவை அனுராதா, மணிமோகன், ரயில் பிரியா, கலா நிலையம்** எனப் பல குழுக்கள் சென்னை சபாக்களில் நாடகம் நடத்துகின்றனர். இன்று தொலைக் காட்சியில் இடம் பெறும் நாடகங்களில் நடிப்பவர் பலரும் நாடகத்தில் இடம் பெற்றவர்களே! சென்னையில் **கார்த்திக் பைன் ஆர்ட்ஸ், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்** ஆகியவை ஆண்டு தோறும் கோடை நாடக விழா நடத்திப் பரிசளித்து நாடக நடிகர்களை ஊக்குவிக்கின்றனர். **கோவை முருகேசன் குழு, நெய்வேலி சிவகுமார் குழு** போன்ற வெளியூர் நாடகக் குழுக்களும் இதில் பங்கு பெற்றுப் பரிசு பெற்றுள்ளன. இவை தவிர **ஞானியின்** வித்தியாசமான நாடக அரங்கேற்றமும் அவ்வப்போது நடைபெறுகிறது. **கூத்துப் பட்டறைகளும், வீதி நாடகங்களும்** நாடக வளர்ச்சிக்கு உதவுகின்றன. **மெலட்டூர், சாலிய மங்கலம்** ஆகிய இடங்களில் ஆண்டு தோறும் **'பாகவத மேளா'** நாடகங்கள் நடைபெறுவதோடு இன்றும் கிராமங்களில் தெருக்கூத்துகள் நடைபெறுகின்றன.

திரைப்படம், சின்னத்திரை ஆகியவை மக்களிடையே பெரும் ஆதிக்கம் செலுத்தும் நிலையிலும் நாடகங்கள் நடைபெறத்தான் செய்கின்றன. ஆனால் பட்டி தொட்டிகளிலெல்லாம் சின்னத்திரையின் ஆதிக்கம் பெரும் அளவில் புகுந்து விட்டதால் பெண்கள் பெரும்பாலும் காசு செலவில்லாமல் அலைச்சல் இல்லாமல் வீட்டிலேயே பொழுது போக்கத் தொடங்கி விட்டனர். இந்நிலையில் நாடகத்தின் எதிர்காலம் பற்றி உறுதியாக ஒன்றும் சொல்வதற்கில்லை யாயினும் ஒரேடியாக நாடகக்கலை நசிந்து விடாது என்று நம்பலாம்.

நூலாய்வு

நூல் அமைப்பு

பொதுவாக இசை நாடகங்கள் யாவும் காப்பு, தோடயம், விநாயகர் வருகை, கட்டியங்காரன் வருகை, எச்சரிக்கை, பாத்திர வருகை, நாடக நிகழ்ச்சிகள் என்ற பாங்கிலேயே அமையும், இடையிடையே பொதுக்கவிகள் அல்லது சூத்ரதாரியின் கவி வரும். பெரும்பாலும், தரு, கண்ணி, ஜாவஸி, கீர்த்தனை, திபதை என்ற அமைப்பிலேயே வரும். ஆங்காங்கே வசனங்களும் இடம்பெறும்.

நச்சுப் பொய்கை விலாசமும் இதே அமைப்பில் உள்ளது. விநாயகர் காப்பு, சந்திரசேகரர், திருமால், சுப்பிரமணியர், சரஸ்வதி, அட்டதிக்கு பாலர், தேவர், முனிவர், கந்தருவர் எனப் பல தெய்வங்கள் மீதும் தோத்திரங்களுடன் தொடங்குகிறது. விநாயகர் வருகைக்குப் பின் கவி தான் நச்சுப்பொய்கை நிகழ்ச்சியை விலாசமாகப் பாட அருள் வேண்டுகிறார். பின் கட்டியங்காரன் வந்து துரியோதனன் வருகையை அறிவிக்கிறான். துரியோதனன் மந்திரியிடம் தேச விசாரணை செய்தபின் பாண்டவர்களை வனத்திலேயே அழிக்கத் தன் மாமனிடம் உபாயம் கேட்கிறான். மாமன் சகுனி "காளமா முனியை வரவழைத்து வேள்வி செய்து வேள்வியில் வரும் பூதத்தைக் கொண்டு பாண்டவர்களை அழிக்கலாம்" என்று கூற கர்ணன் யுத்தத்தால் மட்டுமே அழிக்கலாம் என்கிறான். காளமாமுனி வருகை துரியோதனன் வேண்டுதல் எனக் கதை தொடர்கிறது.

யாப்பமைதி

இந்நூலில் 107 விருத்தங்களும், 55 தருக்களும், 4 கொச்சகங்களும் ஒரு கட்டளைக் கலிப்பாவும், ஒரு கட்டளைக் கலித்துறையும், ஒரு வெண்பாவும் இடம் பெற்றுள்ளன. திபதை என்பது தமிழில் உள்ள கண்ணியைப் போலவே இரண்டிரண்டு அடிகளால் வருவது. ஆனால் இந்நூலில் ஆசிரியர் திபதை என்று குறிப்பிடும் பாடல்களும், கவி என்று குறிப்பிடும் பாடல்களும், விருத்தம் என்று குறிப்பிடும் பாடல்களும் விருத்தமாகவே உள்ளன. விளம், மா, மா என்ற அமைப்பில் அமைந்த அறுசீர் விருத்தங்களே மிகுதி. தருக்கள் பெரும்பாலும் சிந்து அமைப்பிலும் கீர்த்தனை அமைப்பிலும் உள்ளன. ஆங்காங்கே வருகின்ற வசனங்கள் பெரும்பாலும் பேச்சு வழக்கிலேயே அமைந்துள்ளன.

கதைச்சுருக்கம்

பாண்டவர் ஐவரும் துரியோதனனுடன் தருமர் ஆடிய சூதினால் திரௌபதியுடன் பன்னிரண்டு ஆண்டுகள் வன வாசமும் ஓராண்டு அஞ்ஞாத வாசமும் அநுபவிக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டுக் காட்டில் இருக்கும்போது பன்னிரண்டு ஆண்டு முடியும் தருவாயில் அது முடியும் முன்னரே துரியோதனன் பாண்டவரைக் கொல்லக் கருதிக் காளமாமுனியை வரவழைத்து யாகம் செய்யச் சொல்கிறான். இந்த யாகம் செய்தால் யாகத்திலிருந்து தோன்றும் பூதம் பாண்டவர்களைத் தின்று விடும். முதலில்

மறுத்த காளமாமுனி துரியோதனனுக்கு அஞ்சித் தலைவிதியை நொந்து யாகத்தை தொடங்குகிறார்.

காட்டில் வனவாசம் செய்த பாண்டவர்கள் வாளமித்திர ரிஷி வனத்திலிருந்து விஷ்ணு சித்த முனி வனத்துக்குப் புறப்படுகிறார்கள். கண்ணனை வணங்குகிறார்கள். கண்ணன் துரியோதனன் செய்யும் வேள்வியை அறிந்து பாண்டவர்களைக் காக்க வேண்டி எமனை அழைக்கிறான். எமனை மானாக மாறிப் பாண்டவர்களை அழைத்துச் சென்று அவர்களைச் சிறிது நேரம் இறக்கும்படி செய்யச் சொல்கிறான்.

எமனும் மானாக வடிவெடுத்துத் திரௌபதிமுன் உலவ இராமாயணச் சீதை போலவே மானைப் பிடித்துத் தரும்படி கணவன்மாரிடம் வேண்டுகிறாள். இராமயணக் கதையைக் காட்டிப் பாண்டவர் மறுக்கத் திரௌபதி உடன்படவில்லை. தருமரும் தம்பிமாரும் மானைத் தொடர்ந்து சென்றனர். மான் அந்தணன் ஒருவனின் பூணூலை அறுத்துக் கொண்டு ஓட அந்தணர்கள் தருமரிடம் முறையிடு கின்றனர். எனவே மானைப்பிடிப்பது தருமருக்கு அவசியமான காரியமாயிற்று. ஆட்டம் காட்டிய மான் காடு, மலை, மேடு, பள்ளம் என அலைக்கழித்து அகப்படாமல் ஓடியது. மானைத் துரத்திக் களைத்த ஐவரும் சோர்வடைந்து தாகம் மிக்கவரானார்கள். தாக விடாய் மேலிட்ட தருமருக்குத் தண்ணீர் கொண்டுவர சகதேவன் செல்கிறான். எமன் ஒரு நச்சுப் பொய்கையை உண்டாக்கி கண்ணுக்குப் புலப்படாமல் அமர்ந்திருந்தான். தண்ணீர் குடிக்க வந்த சகாதேவனைத் தடுத்து அசரீரியாக "நான் கேட்கும் வினாக்களுக்கு விடை தந்தபின் தண்ணீர் குடி இல்லாவிட்டால் இறப்பாய்" என்று கூறியும் கேளாது நீர் குடித்து இறந்தான் சகாதேவன். மற்ற தம்பியர் நால்வரும் இவ்வாறே இறந்தனர். அவர்களைத் தேடிச் சென்ற தருமரும் ஒரு மரத்தின் கீழ் மயங்கி விழுந்தார்.

காளமா முனிவரின் யாகத்தில் தோன்றிய பூதம் என்ன செய்யவேண்டும் என முனிவரைக் கேட்க, முனிவர் பாண்டவரை உண்ணும்படி வேண்டுகிறார். 'பாண்டவர் உயிரோடில்லையெனில் உன்னையே உண்பேன்' என்று கூறிய பூதம் பாண்டவரைத் தேடிச் சென்று அவர்கள் இறந்தமையால் காளமா முனிவரையே தின்றது.

மூர்ச்சை தெளிந்த தருமன் பொய்கைக்குச் சென்று தம்பியரைப் பார்த்து வருந்திப் பின் அசரீரி கேட்ட கேள்விகளுக்கு விடை சொல்கிறான். எமன் உண்மை கூறித் தம்பியரை எழுப்பித்தர மீண்டு வருகிறான்.

கணவன்மாரைக் காணாத திரௌபதி வருத்தமடைந்து திருமாலைத் துதித்து முறையிட்டுப் பின் கணவன்மார் வந்தவுடன் செய்தி அறிகிறாள். அனைவரும் திருமாலைத் துதித்து விஷ்ணு சித்து முனிவனம் செல்கின்றனர்.

நூலின் காலம், ஆசிரியர்

சுவடியில் ஆசிரியர் பெயரோ காலமோ குறிப்பிடப்படவில்லை. ஆனால் 1950ல் சுவடி வாங்கப்பட்டது என்பதால் அதற்குமுன்பே எழுதப் பட்டிருக்க வேண்டும் என்பது

தெரிகிறது. சுவடியின் நிலை மொழிநடையை வைத்து 1800க்கு மேல் 1900க்குள் எழுதப்பட்டிருக்கலாம் என ஊகிக்க முடிகிறது.

நூலின் தன்மை

இந்நூலில் ஓசை நயம், யாப்பமைதி நன்றாக அமைந்திருப்பினும் "தருமத்தை வெல்ல முடியாது" என்பதற்குப் "பலமுள்ள சிங்கத்தைப் பாய்ந்து ஓர் ஆனை கொல்லாது" என்பதும் மான் ஓடி வரும் காட்சிக்குச் "சிரித்துப் புரமெரித்த சிவனும்" ஆகிய இவ்விரண்டு உவமைகள் தவிர வேறு அணியேதும் நூலில் காணப்படவில்லை. எனவே இது படித்துச் சுவைப்பதற்காக எழுதப்படவில்லை. நடிப்பதற்காகவே எழுதப்பட்டது என்பது புலப்படுகின்றது.

மொழிநடை

பத்தொன்பதாம் நூற்றாண்டு என்பதால் பெரும்பாலும் வடசொற்கள் கலந்துள்ளன. **சிருஷ்டித்து** என்பது **சிச்சித்து** என எழுதப்பட்டுள்ளது. **நீர்** என்பது பெரும்பாலும் **சலம்** என்றே குறிக்கப்படுகிறது. வடசொற்கள் தமிழாக்கப் பட்டுள்ளமை இதன் மூலம் தெரிகிறது. துரியோதனன் > திரியோதனன், திரௌபதி > திரோபதா, பாண்டவர் > பாண்டவாள், அவர்கள் > அவாள் என்ற பேச்சு வழக்கு மிகுதியாகக் காணப்படுகிறது.

பிற செய்திகள்

ஒவ்வொரு பாத்திரமும் மேடையில் தோன்றும் போது அவர்களின் அணிகலன்கள், ஆடைகள் விளக்கப்படுகின்றன. சான்றாக, "கட்டியங்காரன் வரும்போது, இரத்தினச் சரிகையாலான தலைப்பாகை தரித்து, நெற்றியில் நாமமுடன், சிந்தூரத் திலகமிட்டு, கச்சையில் கட்டாரியுடன், விழித்துப் பார்த்து, மீசை முறுக்கி வருவதாகக் கூறப்படுகிறது.

துரியோதனன், குடை கவிக்க, மணிமகுடம் விளங்க, பதக்கம் மார்பில் துலங்க, நந்தியாவட்டை மாலையணிந்து வருவதாகவும், தூளமாமுனி, சடையுடன், விபூதியணிந்து, உருத்திராக்கம் கழுத்தினில் இலங்க வருவதாகவும், திரௌபதி, மதிவதனத்துடன், ரதிபோல, தண்டை, கிண்கிணி, சலங்கையணிந்து, அன்னநடையிட்டு வருவதாகவும், எமன், எருமைக்கடாவில் ஏறிக் கையில் சூலம், பாசக் கயிறுடன் வருவதாகவும் கூறப்படுகிறது.

இச்செய்திகள் அவ்வப்பாத்திரத்தின் **ஒப்பனைக்குப்** பயன்படுகின்றன.

துரியோதனன் அவைக்கு வந்தவுடன், "நாட்டில் மாதம் மும்மாரி பொழிகிறதா? அந்தணர் வேள்வி செய்கின்றனரா? குடிமக்கள் அறில் ஒருபங்கு வரி செலுத்துகிறார்களா? புலியும் பசுவும் ஒரு துறையில் நீரருந்துகின்றனவா? சிவன்கோயில்களில் சிறப்பாகப் பூசை நடைபெறுகிறதா? நாட்டு மக்கள் குறையின்றி வாழ்கின்றனரா?" என்று அமைச்சரிடம் கேட்கிறான். எல்லா நாடகங்களிலும் அரசன்

கேட்கும் வழக்கமான கேள்விகள் இவை. இவற்றிலிருந்து 'ஒரு நாடு என்பது எப்படி இருக்க வேண்டும் என்று அக்காலத்தில் வரையறை செய்தனர்' என்பதை அறிய முடிகிறது.

ஒப்பாய்வு

மகாபாரதத்திலும், வியாசபாரதத்திலும் நச்சுப் பொய்கைப் பருவம் எனச் சுருக்கமாக வரும் கதைப்பகுதி நச்சுப் பொய்கை விலாசம் நாடகம் என்பதால் விரிவாக்கப்பட்டுள்ளது.

நச்சுப்பொய்கை விலாசத்தில் மானைப் பிடித்துத் தருமாறு திரௌபதி கேட்பது இராமாயணத்தை வைத்துக் கற்பனையாக எழுதப்பட்ட செய்தி. இச்செய்தி மகாபாரதத்திலும் இல்லை. வியாசபாரதத்திலும் இல்லை. அந்தணன் வேண்டிக் கொண்டதாலேயே பாண்டவர் மானைப் பின் தொடர்ந்தனர்.

வில்லிபாரதத்தில் எமனே அந்தணச் சிறுவனாக வருவதாகவும், மானானது மான் தோலைத் தூக்கிச் செய்வதாகவும் உள்ளது. ஆனால் வியாச பாரத்தில், தீ உண்டாக்கும் அரணிக்கட்டையை மான் தூக்கிச் சென்றதாகவும் அந்தணன் யாகம் வளர்க்க முடியாதே என்று பாண்டவரை அண்டியதாகவும் கூறப்படுகிறது. நச்சுப் பொய்கை விலாசத்தில் மான் அந்தணின் பூணூலை அறுத்துக் கொண்டு அரணிக் கட்டையையும் எடுத்துச் செல்வதாக உள்ளது.

மகாபாரதத்தில் யட்சன் கேட்கும் கேள்விகள் :

1. மனிதன் புத்திமான் ஆவது எதனால்?
   விடை : பெரியோரை அடுத்ததனால்.

2. ஒருவன் பெறும் பேறுகளுள் மிகவும் சிறந்த பேறு எது?
   விடை : புத்தியுள்ள புதல்வன்.

3. வழிப்போக்கனுக்கு உற்றறதுணை எது?
   விடை : கல்வி.

4. நோயாளிக்கு உள்ள துணைவன் யார்?
   விடை : மருத்துவன்.

5. சொர்க்கம் சித்திப்பது எதனால்?
   விடை : சத்தியத்தால்.

6. சுகம் நிலை பெறுவது எதனால்?
   விடை : நல்லொழுக்கத்தால்.

7. மனிதனுக்குத் தெய்வம் கொடுத்துள்ள சிறந்த துணை எது ?
விடை : மனைவி.

8. சிறந்த தர்மம் எது?
விடை : அகிம்சை.

9. குறைவு படாத நட்பு எது?
விடை : பெரியோருடன் ஏற்படும் நட்பு.

10. மற்றவர்களுக்குப் பிரியமானவனாக வேண்டுமானால் ஒருவன் என்ன செய்ய வேண்டும்?
விடை : கர்வத்தை விட்டுப் பணிவுடன் வாழ வேண்டும்.

11. மனிதன் துயரம் அடையாமல் இருக்க வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?
விடை : கோபத்தை விட வேண்டும்.

12. சிறந்த ஸ்நானம் எது ?
விடை : மனத்தின் மாசைப் போக்கிக் கொள்வது.

13. எவனைப் பண்டிதன் எனலாம் ?
விடை : தர்மங்களை அறிந்தவனை.

14. பிராமணியம் என்பது எதனால் ஏற்படுகிறது? ஒழுக்கத்தினாலா? பிறப்பினாலா? சாஸ்திர அறிவினாலா? வேதம் ஓதவதனாலா?
விடை : பிராமணீயத்துக்குக் காரணம் ஒழுக்கமே. நான்கு வேதங்களையும் ஓதி இருந்த போதிலும் தீய ஒழுக்கமுள்ள பிராமணன் சூத்திரனை விட இழிந்தவன் எவன் புலனடக்கம் உடையவனோ அவனே பிராமணன்.

15. எது ஆச்சரியத்திலும் ஆச்சரியம்?
விடை : நாள்தோறும் மனிதர்கள் இறந்து கொண்டிருப்பதைக் காணும் மனிதன் தான் மட்டும் நிலையாக வாழப் போவதாக எண்ணிக் கொண்டிருக்கிறானே அதுதான் ஆச்சரியம்!

16. ஒருவன் பின்பற்றுவதற்குரிய வழி எது?
விடை : வேதங்கள் ஒன்றுடன் ஒன்று மாறுபடுகின்றன. ரிஷிகளும் பல்வேறு கருத்துடையவராயுள்ளனர். எனவே பெரியோர் கடைப் பிடிக்கின்ற வழியே பின்பற்றத்தக்க வழி.

17. மனிதனுக்குத் துணையாய் இருப்பது எது ?
விடை : **தைரியம்.**

18. பூமியைக் காட்டிலும் கனமானது எது ?
விடை : **மக்களை வயிற்றில் தாங்கும் தாய்.**

19. புல்லினும் அற்பமானது எது ?
விடை : **கவலை.**

20. எதை விட்டால் மனிதன் செல்வந்தன் ஆகிறான் ?
விடை : **ஆசையை விட்டால்.**

இவ்வாறு நூற்றுக்கு மேற்பட்ட கேள்விகள் உள்ளன.

நச்சுப்பொய்கை விலாசத்திலும், வில்லிபாரதத்திலும் பத்து கேள்விகளே உள்ளன. அவை இரண்டும் ஒன்றாகவே உள்ளன. மணமுள்ள மலர் எது என்பதில் மட்டும் விடை வேறுபடுகிறது. வில்லிபாரதத்தில் சாதிப்பூ என்றும் நச்சுப்பொய்கை விலாசத்தில் சிறு செண்பகம் என்றும் கூறப்படுகின்றது.

வில்லி பாரதத்தில் தருமர் யமனிடம் சகாதேவனை உயிர்ப்பித்துத்தருமாறு வேண்டுகிறார். வியாச பாரதத்தில் நகுலனை உயிர்ப்பித்துத் தருமாறு வேண்டுகிறார். நச்சுப் பொய்கை விலாசத்தில் யமன், 'யார் வேண்டும்'? என்று கேட்காமலே நால்வரையும் உயிர்ப்பித்துத் தருகின்றார்.

வியாசபாரதத்தில் பாண்டவர் **காமியக வனம்** விட்டுத் **த்வைத வனம்** வருவதாக உள்ளது. நச்சுப் பொய்கை விலாசத்தில் **வாளமித்ர முனிவனம்** விட்டு **விண்டுசித்து முனிவனம்** வருவதாக உள்ளது. முனிவர் வனத்தில் கனியைப் பறித்து விட்டுத் திரும்ப ஒட்ட வைத்த நிகழ்ச்சி வில்லிபாரதத்தில் நச்சுப்பொய்கைக்குப் பின்வருகிறது. விலாசத்தில் ஒட்ட வைத்த பிறகே விண்டுசித்து முனிவனம் வருகின்றனர். இவ்வாறு சில வேறுபாடுகள் இருப்பினும் நாடகம் நடிப்பதற்கேற்ப நன்கு அமைக்கப்பட்டுள்ளது.

அடிக்குறிப்பு

1. பிரபந்த மரபியல் நூற்பா – 1
2. பிரபந்தத் திரட்டு, திரட்டியல் நூற்பா – 8
3. மேற்படி நூல், திரட்டியல் நூற்பா – 70
4. மேற்படி நூல் திரட்டு, ஒழிபியல் நூற்பா – 80
5. மேற்படி நூல், ஒழிபியல் நூற்பா – 82
6. தமிழ்ப் பேரகராதி, தொகு தி 6, ப. 3713

7,8. விலாச இலக்கியங்கள் நோக்கமும் பயனும், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனக் கருத்தரங்கக் கட்டுரை, கரு. நாகராஜன்.

9. பூகோள விலாசம் – முன்னுரை – வையாபுரிப்பிள்ளை, எஸ்.

10. தமிழ் நாடக வரலாறு, பக்.199, டாக்டர் சக்தி பெருமாள்.

11. பூம்பாவையர் விலாசம் – பாயிரம்.

12. நாடகவியல் – முன்னுரை – பரிதிமாற்கலைஞர்.

13. நாடகக்கலையின் வரலாறு – எஸ்.வி. சகஸ்ரநாமம்.

14,15. தொல்காப்பியம் அகத்திணையியல் நூற்பா 53.

16. பெரும்பாணாற்றுப்படை வரி 56

17. திருக்குறள் 332.

18. நன்னூற் சூத்திரம் 208.

19. கலித்தொகை 402, 425,445, குறுந்தொகை 31:2, 364:6, நற்றிணை 50.

20. கலித்தொகை 661

21. குறுந்தொகை 318:3, 53:3, நற்றிணை 47.

22. குறுந்தொகை 216:2

23. Dr.T.P.Meenakshisundaram - 61st Birth day Commemoration Volume - Collected papers (1961).

24. சிலப்பதிகாரம் ஆய்ச்சியர் குரவை கருப்பம்

25. தமிழ் நாடகத் தோற்றமும் வளர்ச்சியும், ப. 8

26. தமிழ் இலக்கிய வரலாறு, 12–ஆம் நூற்றாண்டு, இரண்டாம் பாகம், ப. 521.

27. நாவுக்கரசர் தேவாரம், திருமறைக்காடு, திருத்தாண்டகம், பாடல் 9.

28. திருவாசகம், திருச்சதகம், பாடல் 11.

29. S.I.I. Vol.2, 67.

30. A.R.E. of 1931-32.

31. சோழர் காலத்து ஆடலும் பாடலும் – கட்டுரை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆயிரத்தெட்டாவது வெளியீட்டு விழாமலர் – சென்னை – (1961).

32. சீவக சிந்தாமணி, பாடல் 2601.

33. சீவக சிந்தாமணி, பாடல் 655.

34. சீவக சிந்தாமணி, பாடல் 2573.

35. சீவக சிந்தாமணி, இலக்கணையார் இலம்பகம், பாடல் 196.

36. மகாபாரதம், நச்சுப்பொய்கை, பக்.231–242.

37. வில்லிபாரதம், நச்சுப்பொய்கை, பக்.261–269.

A Critical Review

Vilācams and *Pāttiyals**

Vilācam is one of the minor literature. The minor literature is also called ***Prapantam***. According to ***Prapanta Marapiyal,*** a 16th century classic work, ***Prapantams*** are divided into 96 forms from ***Piḷḷaik Kavi*** to ***Purāṇam***. But the ***Paṉṉiru Pāṭṭiyal*** and other existing grammar works of ***Prapanta,*** list about three hundred and fifty kinds of these minor classics.

"***Caturakarāti***' introduces some 96 kinds of literary works. ***Prapantat Tiraṭṭu*** mentions the variety of 96 ***Prapantās***. So does the ***Prapanta Marapiyal***. The works found in one anthology are not found in the other. The ***Vilācams*** are mentioned only in the ***Prapantat Tiraṭṭu***. And that too they are spoken about as four different kinds. They are ***Lakṣmi Vilācam, Kaṟpaṉai Vilācam, Tirumuka Vilācam*** and ***Camūka Vilācam.***

Lakshmi Vilācam

க.சொ : 1. தீரஷ்தார 2. திறியோதனன் 3. மானிலம் 4. ரத்ன 5. றாழ.

Kaṭṭiyakkāraṉ - Taru

There appears the Chorus –
As the drums beat and the trumpets blow
like the tidal waves of a roaring sea
He appears at the royal entrance of **Turiyōtaṉaṉ**,
blessed by the well-read Brahmins of lasting repute.
With a golden jari-streaked turban on his head
sporting a fine upper clothe of his choice
his forehead being adorned with a thrisan,
he bends low to make his obeisance to his ruler
As he arrives on the scene
a train of Chieftains paying their respects
while his ministers of rank,
their chests wearing garlands
of fresh-gathered blossoms,
accompanying, when the young maidens

welcome singing songs of good omen
The chorus arrives at the entrance of **Turiyōtanan**'s palace,
his dagger tucked in his stays around his hip,
his whiskers twisted sharp, and anklets proudly jingling.

13. கட்டியக்காரன் எச்சரிக்கை

புடவியொரு குடைநிழலில் மருவஅர
சரிமைபுரி மன்னனிதோ வருகிறார் – எச்சரிக்கை

தடமகுட முடியிலகு துரியனதிபதி
யருமை தனையருடன் வருகிறார் – எச்சரிக்கை

கபடமுறு சகுனி [1]கர்ணனு
மிதோ வருகிறார் கனமுடன் – எச்சரிக்கை

சுபமலி கொலுசமே தனாக
வருகிறார் சொகுசாக வே – எச்சரிக்கை

வசனம் : அகோ தெப்படி என்றால் ஏகசக்கராதிபதியாய் அஸ்தினாபுரத்திலிருந்து [2]அரசாட்சி செய்யா நின்ற துரியோதன மகாராசன் தம்பிமாரோடு அனேக மன்னர்கள், சகுனி, கர்ண மகாராசன், கிருபாசாரி, [3]துரோணாசாரி, [4]பீஷ்மாச்சாரி, அசுவத்தாமர் முதலாகிய பெரியோர்கள் புடைசூழத்தக்கதாக கொலுவுக்கு வருகிறார் சபையோர்களே !

எச்சரிக்கை – வருகையை உணர்த்துதல். **புடவி** – பூமி. மகுடம் – தலையில் அணியும் கிரீடம், மணிமுகுடம். **பதி** – அரசன். **தனையர்** – தம்பிமார். **தடம்** – பெருமை. **கபடம்** – வஞ்சனை. **கனம்** – கூட்டம்.

க. சொ : 1. கர்ணன் 2. ஆரசாஷி 3. துறோணாசாரி 4. விஷ்ணுமாச்சாரி.

The announcement of Chorus

Dear spectators!
Here comes the **Turiyōtanan**, the great,
the sole ruler of **Astināpuri**,
along with his brothers, Chieftains countless.
Cakuni, the cherished **Karṇan, Krupāccāriyār, Trōṇāccāriyār,**
Bīṣmāccāriyār - all the elders forming his troupe arrive at his court.

14. துரியோதனன் விருத்தம்

அலகிலா வுலக மெல்லா மரசாளு மாவு தாரன்
இலகிய குடைக விக்க வெழின்மணி மகுட மின்ன

பலவித மான [1]ரத்ன பதக்கமார் பினிற்று லங்க
சொலுமர சர்கணின் றேத்த துரியோதனன் கொலுவில் வந்தான்.

இவ்வுலகத்தை அரசாளும் அருள் குணமுடைய துரியோதன மன்னன் விளங்குகின்ற வெண்கொற்றக் குடையின் கீழ் தலையில் மணிமகுடம் ஒளிவீச, பலவகையான ரத்தின பதக்கங்கள் மார்பில் விளங்க, அரசர்கள் புகழ சபைக்கு வந்தான்.

உதாரன் – அருள்தன்மையுடையவன். **எழின்மணி** – எழில் +மணி. **ரத்தினம்** – நவமணிகள். **துலங்க** – ஒளிசெய்ய. **கொலுவில்** – சபையில்.

சு.சொ : 1. ருத்ந

Turiyōtaṉaṉ - Viruttam

Thus the great ruler **Turiyōtaṉaṉ**
the benevolent warrior-ruler, his gem-decked crown
glittering on his head under the white-decorated parasol,
his chest adorned with diamond-decked medals
arrives to the welcoming chant of the attending kings.

15. தரு

அரசர்க் கரசனான அதிபன் துரியோதனன்
அரசன் கொலுவில் வந்தானே

கிருபாசாரி வீட்டுமன் கிளருந் தம்பிமார் சூழ
பரிவாக தேசதேச பார்த்திப ரடிதாழ (அரசர்)

முத்துவெண் குடைகவிக்க சிரசினில்
முக்கிய மகுடஞ் சொலிக்க

ரத்தினா பரணமார்பில் ஞாயிறு போல்விளங்க
சுத்தநந் தியாவட்டத் தொடையுங் கடதுலங்க

தோகை மார்கள்வெகு நாக ரீகமாய்
ஆகாமல் கவரி வேகமாய் வீச (அரசர்)

மந்திரிமார் மனுபேசவே கொலுவில் காண
வந்த மன்னர் கண் கூசவே

இந்திரனி வனாமென வெல்லோருந் துதிக்கவே
விந்தையர வக்கொடி விளங்கமேல் தழைக்கவே

வேத வேதியர்கள் ஆதர வாகவே
போத வாசிகள் ஓதவே கொலுவினில் (அரசர்)

மங்கல வொலிவழங்க நாதசுரமும் மத்தளத்தோடு முழங்க
எங்கும் புலவர்கவி இசைத்துப் புகழ் படிக்க
மங்குல னையகுழல் மாதர்களும் நடிக்க

மாதவ ரிருடியர் போதர வாக
தீதிலா கொலுச மேதன னாகவே. (அரசர்)

அரசர்க்கு அரசனான துரியோதனன் சபைக்கு வந்தான். கிருபாசாரியார், பீஷ்மர் சூழ, தம்பிமார்கள் மற்றதேசத்தரசர்கள் அடிவணங்க, முத்தாலான வெண்கொற்றக் குடைநிழற்ற, தலையில் மகுடம் ஒளிவீச , ரத்தினாபரணம் மார்பில் சூரியன் போல் விளங்க, நந்தியாவட்ட மாலை விளங்க, பெண்கள் நாகரீகமாய்க் கவரிவீச, மந்திரிமார் நீதி கூற, காண வந்த மன்னர்களின் கண்கள் கூச, இவன் தேவேந்திரன் என்று எல்லோரும் புகழ, அரவக்கொடி விளங்க, வேதியர்கள் ஆதரவாக வாழ்த்தொலி முழங்க, நாதசுரமும் மேளமும் மங்கல இசை முழங்க, கவிஞர்கள் கவிபாடிப் புகழ, மேகம் போன்ற கூந்தலையுடைய பெண்கள் நடனமாட, மிக்க தவத்தையுடைய முனிவர்கள் ஆசி கூற, அரசர்கள் எல்லோரும் புடைசூழ, அரசர்க்கரசனான துரியோதனன் சபைக்கு வந்தான்.

கிருபாசாரியார் – பாண்டவர்க்கும், கௌரவர்க்கும் குரு. **பார்த்திபன்** – அரசன். **குடை** – கொற்றக்குடை. **சிரசு** – தலை. **ஞாயிறு** – சூரியன். **நந்தியாவட்டம்** –வெண்மையான ஒரு மலர். **தொடை** – மாலை. **தோகைமார்** – மயில் போன்ற பெண்கள். **மனு** – மனு நீதி. **அரவக்கொடி** – பாம்புக்கொடி. **வேதியர்** – அந்தணர். **மங்குல்** – மேகம். **குழல்** – கூந்தல். **போதரவு** – ஆறுதல்.

Taru

Turiyōtanaṉ the king of Kings has arrived at his court,
accompanied by **Krupāccāriyār** and **Bīṣmāccāriyār**
and as his brothers and Chieftains bow,
his pearl-decked penumbra over his head, his crown glittering,
the diamond necklace radiant like the beaming rays of the sun,
the garland of *Nantiyāvaṭṭai* adorning his shoulders,
young maidens swaying the fans in their hands
his ministers in attendance the royal invitees' eyes dazzled,
hailed as **Tēvēntrā** by all, his snake-writ standard aloft
to the welcoming chant of vedic scholars
to the notes of good Omen from
the *Nātasvaram* and the beating of the drums,
as the court bands sing his praise

and the cloud-dark, long-haired damsels dance
Turiyōtanan, the king of Kings arrives
as the sages at the court bestow on him their blessings.

16. துரியோதனன் தோத்திரம் – கவி

மறைகணான் கறியொ ணாத வடிவமே ஞான வின்பக்
குறைவிலா கடலே யன்பர் குறித்தடி பரவுந் தேவே
[1]இறையர சுரிமை செங்கோல் [2]இடருறா தளிக்குங் கோவே
பொறைதரு பிர்மா னந்த புனிதனே போற்றி போற்றி.!

வேதங்கள் நான்கினாலும் அறியமுடியாத வடிவமே ! ஞானமும் மகிழ்ச்சியும் குறையாத கடலே ! அன்பர்கள் அடியை வணங்கும் தேவனே ! அரசு உரிமைக்கும் நீதி தவறாத ஆட்சிக்கும் துன்பம் ஏற்படாமல் காக்கும் அரசனே ! பொறுமையைத் தருகின்ற மிக்க ஆனந்த தூய வடிவமான இறைவனே ! போற்றி.

தோத்திரவு – தோற்றரவு என்பதன் பேச்சு வழக்கு – தோற்றம். **மறை** – வேதம். **ஒணாத** – முடியாத. **பரவும்** – துதிக்கும். **இடர்** – துன்பம். **பொறை** – பொறுமை. **பிரம்மானந்தம்** – பேரின்பம். **புனிதன்** – தூயன்.

சு.சொ : 1. இறையர சுறுமை 2. கிடறுறா.

In Praise of Turiyōtanan

You are the one whose stature even the four Vedas know not.
You are the ocean of wisdom and joy!
A worshipper of the feet of the devout.
No harm comes to your authority and rule of justice.
You are the Lord in whom abide bliss, purity and forbearance.
Praise be to you.

17. துரியோதனன் நீதி விசாரணை

திங்கள்மும் மாரியும் பெய்து நம்தேசம்
செழிப்புடையதா மந்திரி ?
துங்க மதிகுலத் திலகனே மாதமும்மாரி
சொரிந்ததிற் சேமமையா.
பூசுரர்கள் யாகாதி [1]கர்மம் நித்தியப்படி
புரிந்து வருகின்றார்களா ?
இராசனே மறையோர்கள் நித்திய கர்மங்கள்
மிக நன்றாய் நடந்துவருகிறதையா.

[2]ஆறிலொரு கடமைகுடி யானபே ரகமகிழ்ந்
தன்பாய்ச் செலுத்துராரா ?
வீறுமனு நீதியுள மன்னனே யவ்விதம்
விரைந்துமே [3]செலுத்துறார்கள்
புலிபசவு மொருதுறையி லொத்து விளையாடிப்
புனலுண்டு வாழ்கின்றதா ?
அலகிலாபுக ழிறைவனே சக்ராக்கினைப்படி
அதுகள் நீருண்டு வருது.
சிவனாலையம் விஷ்ணு வாலையங்கள் பூசை
செவ்வையாய் நடந்துவருதா ?
[4]தவறிலாக் கொடையாளனே [5]இருதலப்பூசை
சம்பிரமாய் நடந்துவருது.
எந்த நாட்டுக் குடிகளுங் குறைவிலாமல்
சுகமெய்தி வாழ்வுற் றனர்களோ ?
மந்தானி தோளனே எந்த நாட்டுள்ளோர்
[6]மாசுபச் சேமமைய்யா.

துரியோ : மந்திரி ! மாதம் மும்மாரி பெய்து நம் நாடு செழிப்பாக உள்ளதா ?

மந்திரி : மேலான சந்திர குலத்துக்குத் திலகம் போன்ற அரசனே ! மாதம் மூன்று மழை பொழிகிறது; நாடு சேமமாக உள்ளதையா !

துரியோ : அந்தணர்கள் யாகம் முதலிய செயல்களை நாள்தோறும் செய்கிறார்களா ?

மந்திரி : அரசே பிராமணர்களின் நித்திய வேலைகள் நன்கு நடைபெறுகிறது.

துரி : குடியானவர்கள் ஆறிலொரு பங்கு வரியை அன்போடு உள்ளம் மகிழ்ந்து செலுத்துகிறார்களா ?

மந்திரி : மனுநீதிப்படி அரசாளும் மன்னனே ! அவ்விதமே விரைவாக வரியைச் செலுத்துகிறார்கள்.

துரி : புலியும் பசுவும் ஒரே துறையில் ஒற்றுமையுடன் விளையாடி நீருண்டு வாழ்கின்றனவா ?

மந்திரி : அளவிலாத புகழையுடைய அரசனே ! உங்கள் நீதி தவறா ஆட்சிச் சக்கர ஆணைப்படி அவைகள் நீருண்டு வாழ்கின்றன.

துரி : சிவன், விஷ்ணு கோயில்களில் ஆறுகாலமும் பூசைகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றனவா ?

மந்திரி : தவறில்லாத கொடையை உடையவனே ! இரண்டு கோயில்களிலும் முறைப்படி பூசைகள் நடைபெறுகின்றன.

துரி : எல்லா நாட்டுக் குடிகளும் குறையாத சுகத்தோடு வாழ்கின்றார்களா?

மந்திரி : வலிமையான தோள்களையுடையவனே ! எல்லா நாட்டுக் குடிமக்களும் மிகச் சுகமாக வாழ்கின்றார்கள்.

திங்கள் – மாதம். **மாரி** – மழை. **மந்திரி** – அமைச்சன், **மதிகுலம்** – சந்திர குலம். **பூசுரர்கள்** – அந்தணர்கள். **யாகாதிகர்மம்** – யாகம் செய்தல். **நித்தியப்படி** – நாள்தோறும். **மறையோர்** – அந்தணர்கள். **கடமை** – வரி. **சக்கராணை** – ஆட்சிச்சக்கர ஆணை. **சம்பிரம்** – செம்மை, சிறப்பு. **மந்தானிதோள்** – வலிமையுடைய தோள்.

சு.சொ. 1. கற்ம்மம் 2. ஆரிலொரு 3. செலுத்துரார்கள் 4. துவரிழாக் 5. நிறுதலப்பூசை 6. மாசுப கேஷமம்.

The enquiry of Turiyōta<u>n</u>a<u>n</u>

Turiyōta<u>n</u>a<u>n</u> : My Cherished ministers!
Does it rain thrice without fail Every month,
And the land is fertile?

Minister : O my King! the pride of the line of Chandra!
It rains thrice without fail indeed,
And the land is luscious.

Turiyōta<u>n</u>a<u>n</u> : Do the Brahmins perform their duties regularly?

Minister : So do the Brahmins.

Turiyōta<u>n</u>a<u>n</u> : Do our farmers pay one-sixth of
their yield as tax willingly?

Minister : Indeed, Sir. They are happy to pay the tax,
knowing that your rule of law abides
by the manu's code.

Turiyōta<u>n</u>a<u>n</u> : What about the tiger and the Cow?
Do they continue drinking water
from the same river spot as friends?

Minister : O glorious ruler of us!
So do they co-exist and share the water.

Turiyōta<u>n</u>a<u>n</u>: Are the poojas in our temples of
Vi ṣṇu and **Civā** performed
in accordance with sastras
six times a day in a proper manner?

Minister : So munificent a ruler you are, my Lord!
Both the temples have their poojas
performed in a fitting manner
as per the dictates of the sastras.

Turiyōta<u>n</u>a<u>n</u>: Do all our people live in peace
and happiness?

Minister : So do they, our Lord,
the brave-shouldered you are!

18. துரியோதனன் – கவி

தந்திர வுபாயு விந்திர சாலங்கள் நன்றாய்த் தேர்ந்த
யெந்தன்மாம னேனா னெண்ணிய [1]தொன்று கேளாய்
அந்தப் பாண்ட வர்களீறாராண் [2]டகன்றக் கியாத
வந்திடு அமையத் திற்கோர் மதிசொல்ல விதிசெய் வோமே.

வசனம்

கேளும் மகா தந்திர வுபாய விந்திர சாலங்கள் கற்றுணர்ந்த, எனக்கு நல்ல மாமனாகிய சகுனிமாமா! நானோரெண்ணம் எண்ணுகிறேன். அதாவது அந்தப் பாண்டவர்கள் பன்னிரெண்டு வருடம் வனவாசஞ் செய்து இனி அக்கியாத வாசம் வருகிற சமையம் இன்னும் நாலைந்து தினம் இருக்கின்றது; ஆகையாலிதற்கு ஒருவகை சொன்னால் அவ்விதஞ் செய்வோம் சகுனிமாமா.

தந்திர உபாயம் – சூழ்ச்சி. **இந்திரசாலம்** – இந்திரசால வித்தை. **எண்ணம்** – ஆலோசனை, கருத்து. **ஈராறாண்டு** – பன்னிரெண்டாண்டு. **அக்கியாத** – அஞ்ஞாத அறியப்படாது, மறைந்து. **அமையம்** – சமையம். **மதி** – அறிவு.

க.சொ : 1. தொண்டு 2. றக்கிறாத

Turiyōta<u>n</u>a<u>n</u> - poem

O my beloved uncle, great Cunning **Caku<u>n</u>i**!
So good andadept at villainy! Please listen.
I have this idea. These **Pāṇṭavā** brothers,

Having completed their twelve-year long exile
in the jungles are about to come back in four days.
give it a thought dear uncle
and scheme something
to meet the situation.

19. சகுனி சொல் – திபதை

தக்க காரியத்தை யெண்ணித் தயவுடன் சொல்ல வந்தாய்
ஒக்கு மப்பாண்டு மைந்த ருள்ளகா னகத்தில் தானே
மக்கிடக் கொல்ல வேண்டும் மாகாள முனியை யிப்போ
திக்கண மழைத்தோர் [1]வேள்வி யியற்றிடச் செய்கு வாயே.

வசனம்

கேளு மென்னாசை மருமகனாகிய துரியோதன மகாராசனே! நீ ஆலோசித்து என்னைக் கேட்ட காரியந் தகும். அது சரிதான. பாண்டு புத்திரர்களாகிய [2]பாண்டவர்களை வனத்திலே [3]யிருக்கும்பொழுதே கொல்ல வேண்டும். அதற்குக் காளமாமுனியை விரைவிலழைப்பித்து ஒரு வேள்வி செய்ய வேண்டும் துரியோதன மகாராசனே.

பாண்டுமைந்தர் – பாண்டு மன்னனுடைய புத்திரர்களாகிய ஐவர். **கானகம்** – வனம், காடு. **மக்கிட** – அழிந்திட. **காளமாமுனி** – தவம்செய்யும் ஒரு உயர்ந்த முனிவர். இப்போது + இ + கணம் – இப்போதிக்கணம். கணம், **க்ஷணம்** – நொடி. **வேள்வி** – யாகம்.

சு. சொ : 1. வேழ்வி யியத்திட் 2. பாண்டவாளை 3. யிருக்கச்சே.

Cakuṉi - *Tipatai*

O my dear **Turiyōtanā**! the great ruler.
It's quite right you ask me
to plan something to do away with them.
They must be finished off,
there in their jungle resort itself.
It requires a *yakña* (sacrifice)
to be performed by **Kāḷamāmuṉi**
whom we should call upon.

20. கர்ணன் – திபதை

மன்னிய பாண்ட வாளை மடித்திட வேண்டு மானால்
துன்னிய படைகள் கொண்டு தொல்லமர் புரிந்து கொல்ல

தன்னியல் வேறோ ரெண்ண மதுகதை யல்லால் வேறு
பின்னதொன் றுண்டோ சொல்லும் புகழ்குரு குலத்து மன்னா.

வசனம்

கேளும் தம்பி துரியோதனா! அந்தப் [1]பாண்டவர்களைக் கொல்ல வேண்டுமானால் நேரேபோய் யுத்தஞ்செய்து வெல்லுவது மாத்திரந்தான். வேறொரு கதை யோசிப்பதெல்லாம் கதையே அல்லது அதில் பிரயோசனமில்லை துரியோதனா.

மருகன் – மருமகன். **மேரு** – ஒரு மலை (பூமிக்கு நாராசம்போலத் தென்துருவமுதல் வடதுருவம்வரையும் உள்ளே வளர்ந்து வடதுருவத்தில் முளைத்திருக்கும் பொன்மயமாகிய மலை). **கீழ்மருங்கு** – கீழ்ப்பாக்கம். **கடுகி** – விரைந்து. **வேள்வி** – யாகம். **மாள** – இறக்க. **மதி** – அறிவு, புத்தி.

சு.சொ : 1. பாண்டவாள்.

Karṇa<u>n</u> - *Tipatai*

My dear brother, **Turiyōtanā**!
To finish those **Pāṇṭavās**, there is no
other way except meeting them on the battle
field and fight them. It's no use
thinking to do something else.

21. சகுனி – திபதை

கேளுமென் மருகா மேரு கீழ்மருங் கினிலே யோக
காளமா முனிவர் தன்னைக் கடுகியே யழைத்தாள் வேள்வி
கோளறச் செய்தாற் பூதஞ் குதித்தெழுந் தோடி ஐவர்
மாளவே செய்யு மந்த மதிசெய்வாய் விதியெ் வாயே.

வசனம்

கேளும்! என்னாசை மருமகனாகிய துரியோதன மகாராசனே! [1]பாண்டவர்களைக் கொல்ல வுபாயஞ் சொல்லுகிறேன் கேளும். மகமேருவின் கீழ்ப்பாலில் தவஞ்செய்கிற தவசிரேட்டராகிய காளமாமுனிவரொருவரிக்கிறார். அவரை அழைப்பித்தால் [2]அவரால் செய்யும் வேள்வியில் ஒரு பூதம் பிறந்து அவர்களைக் [3]கொல்லும் ஆகையால் இந்தவகை செய்வாய்.

மருகன் – மருமகன். **மேரு** – ஒரு மலை (பூமிக்கு நாராசம்போலத் தென்துரவமுதல் வடதுருவம்பரையும் உள்ளே வளர்ந்து வடதுருவத்தில் முளைத்திருக்கும் பொன்மயமாகிய மலை). **கீழ்மருங்கு** – கீழ்ப்பக்கம். **கடுகி** – விரைந்து. **வேள்வி** – யாகம். **மாள** – இறக்க. **மதி**– அறிவு, புத்தி.

ச.சொ : 1. பாண்டவாள் 2. ஆவராற்செய்யும் 3. கொள்ளும்.

Cakuṉi - *Tipatai*

My dear nephew, the Cherished ruler **Turiyōtanā!**
take it from me.
There lives on the eastern side of the Mount ***Mēru***
Kāḷamāmuṉi, a sage of renown
let me invite him to do the ***yakña*** from
which will rise a demon
who will do to death all these **Pāṇṭavā** brothers.
do as I please.

22. கர்ணன் – திபதை

சரியிது மாமன் சொல்லும் தடையின்றி கணத்தில் தானே
விரைவிலம் முனியைக் கொண்டு வேள்வி[1]யொன் றியற்றி யந்த
தருமனா தியரைக் கொன்று தவமெலா மொருங்கு சேர
ஒருகுடை யதனி ழற்கீ முற்றர சியற்று வாயே.

வசனம்

கேளும் தம்பி துரியோதன மகாராசனே! சகுனி மாமன் சொன்னதே சரி. ஆகையால் நீ விரைவில் அந்தக் காளமாமுனியை அழைப்பித்து அவரால் ஒரு வேள்வி செய்து அந்தப் பாண்டவர்களைக் கொன்று நீ இந்தப் பூ மண்டலம் எல்லாம் ஒரு குடையின் கீழ் ஆண்டு கொண்டிருப்பாய் துரியோதன மகாராசனே.

கணத்தில் – விரைவாக. **வேள்வி இயற்றல்** – யாகம் செய்தல். **தருமனாதியர்** – தருமர், பீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன் ஆகிய பாண்டவர் ஐவர். **ஒரு குடை . . . . வாயே** – உலகத்தை ஒரு குடையின் கீழ் ஆள்வாயாக.

சு.சொ : 1. யொன்றியியத்தி.

Karṇaṉ - *Tipatai*

My dear cousin, **Turiyōtaṉā** !
Please listen to **Cakuṉi**, your uncle. He is right.
Call the sage **Kāḷamāmuṉi** and have the yagna done,
which alone will help you to do away with the **Pāṇṭavās**.
You will then bring your Kingdom under your sole rule.

23. துரியோதனன்சொல் – தரு

இந்தஆ லோசனை யெவ்ரெனக் குரைப்பார்காண் சகுனிமாமா
நானெண்ணுங் கருத்தறிந் துன்னிசொல்லு வாரெவர் சகுனிமாமா

உந்தனை யின்றிவே றுற்றதுணை யுண்டோ சகுனிமாமா
உன்னைத் தெய்வமென்று யெண்ணிப் பணிகுவேன் சகுனிமாமா

நெஞ்சிற்கபடம் வைத்தால் பஞ்சவர் பிழைப்பாரோ சகுனிமாமா
நீண்டமகுடம் உன்னால் பூண்டேன் அல்லாலுண்டோ சகுனிமாமா
தஞ்சமுநீ பெற்றதந்தையு நீயேயென் சகுனிமாமா
தரணியிலெவரிந்த தருவெடுத்துச் சொல்லுவார் சகுனிமாமா

முன்னம்பாண்டவரை முழுச்சூதால் வென்றாய் சகுனிமாமா
மூதுலகெங்குநான் நீதிசெய்ய வைத்தாய் சகுனிமாமா
மன்னர்மந்திரிக ளிம்மார்க்கங் கண்டுரைப்பார் சகுனிமாமா
மாய்த்தாலும் நீயென்னைக் காத்தாலும் நீயேயென் சகுனிமாமா.

வசனம்

ஆகோ! கேளும் சகுனிமாமா! உன்னாலிந்தப் பூ மண்டலமெல்லாம் ஒரு குடையின் கீழ் ஆளப்பெற்றேனே யில்லாமல் வேறில்லை சகுனிமாமா. இந்த ஆலோசனையும் நான் நினைக்கின்ற எண்ணங்களையும் எனக்கு எவர் கூறுவார் சகுனிமாமா? உன்னைத்தவிர வேறொரு துணையும் இருக்கிறதா? உன்னைத் தெய்வமென்று நினைத்து வணங்குகிறேன். நீ உள்ளத்தில் வஞ்சனை கொண்டால் பாண்டவர்கள் பிழைப்பார்களோ? நேர்மையான நீண்ட மகுடத்தை நான் அணிவதற்கு உன்னை யின்றி வேறு எவர் இருக்கிறார்கள்? எனக்கு எடுத்துக்கூற உலகில் எவர் உள்ளனர். முன்னாளில் பாண்டவர்களைச் சூதினால் வென்று உலகெங்கும் நியாயத்தை நிலைநாட்ட வைத்தாய், அரசர்களும் அமைச்சர்களும் இந்த வழி கண்டு கூறுவார்களோ? என்னை அழித்தாலும் சரி. அழிவிலிருந்து காத்தாலும் சரி. எல்லாம் நீயே.

உரைத்தல் – கூறுதல். **நெஞ்சு** – உள்ளம். **கபடம்** – வஞ்சனை. **மகுடம்** – அரசமுடி. **பூண்டு** – அணிந்து. **தஞ்சம்** – அடைக்கலம். **தரணி** – உலகம். **சூது** – ஒரு விளையாட்டு. தாயம் விளையாடல், பகடை உருட்டுதல். **மூதுலகு** – முதுமை + உலகு, பழம்பெரும் உலகு. **மார்க்கம்** – வழி.

வசனம்

வாரும் பிள்ளாய் கட்டியக்காரா! தூளமாமுனியை நாம் அழைத்தோமென்று அதிசீக்கிரமத்தில் அழைத்து வாரும் பிள்ளாய் கட்டியக்காரா!

சீக்கிரம் – விரைவு.

Turiyōtan̲an̲ - Taru

Reply of Turiyōtan̲ā :

Hear me, my beloved uncle **Cakun̲i**
I am the exclusive ruler of this huge kingdom, and I owe it to you.
Who else is there to advise me on ideas and plans?
There is no any other better source of help than you.

I'd dote on you as my God.
Could those **Pāṇṭavās** escape the plot of your schemy mind?
I wear this crown on my head, and honestly it is because of you.
You are my refuge, my father.
No one else could give me such an idea.
Once you enabled us to win the game of dice against the **Pāṇṭavās**
and then established the rule of justice in the world.
Are Kings and Ministers capable of this?
Perish or I live on, it's you who are responsible for it, my dear uncle.

Dialogue : O Chorus, go and fetch **Tūḷamāmuṉi** at our behest

24. தூளமாமுனி – கவி

செஞ்சடை துலங்க நெற்றி திரிபுண் டரஞ்சொ லிக்க
பஞ்சவக் கரஞ்செ பித்து பரிவுட னுருத்தி ராட்சம்
ரஞ்சித மாகப் பூண்டு ராசனாந் துரியன் பக்கல்
துஞ்சலி லருந்த வத்து தூளமா முனியும் வாரார்.

தலையிலே சிவந்த சடை விளங்க, நெற்றியில் மூன்று வரியாகப் பூசும் விபூதிப் பூச்சு மின்ன, "நமசிவாய" எனும் ஐந்தெழுத்து மந்திரத்தைச் செபித்து, பக்தியுடன் உருத்திராட்சத்தைப் பொருத்தமாக அணிந்து, அரசனான துரியோ தனன் பக்கத்தில் நிலைபெற்ற அருந்தவத் தூளமாமுனி வருகின்றார்.

செஞ்சடை – சிவந்த சடை. **திரிபுண்டரம்** – மூன்று வரியால் பூசும் விபூதிப் பூச்சு. **பஞ்சவக்கரம்** – பஞ்ச அட்சரம் – ஐந்தெழுத்து நமசிவாய. **துலங்க** – விளங்க. **சொலிக்க** – மின்ன. **செபித்து** – உச்சரித்து. **உருத்திராட்சம்** – தவமுனிவர்கள் அணியும் உருத்திரமணி. **ரஞ்சிதம்** – பொருந்துதல். **பக்கல்** – பக்கம், அருகில். **துஞ்சல் இல்** – அழியாத. **தூளமாமுனி** – ஒரு முனிவர்.

The appearance of Tūḷamāmuṉi

His head sporting well-plaited locks,
His forehead besmeared with three lines of sacred ash,
His lips ever chanting the holy mantra of ***Namacivāyā,***
His neck with the string of ***Rutrākṣā*** around **Tūḷamāmuṉi,**
The sage who is seated always next to **Turiyōtaṉaṉ** presently appears.

25. தரு

அருந்தவத் தூளமாமுனிவந்தார் – மகாதவத்திற் சிறந்த
அருந்துவ மகாமுனி யிதோ வந்தார்

திருந்து செஞ்சடை திகழ்ந்தொளி செய்ய
பொருந்து நெற்றியிற் பூதியொளி துய்ய (அருந்த)

சுருதிக்கலை [1]களறிந்தோர் வெகுசூத்திரா சூத்திரம் தெரிந்தோர்
கருதியோ மாக்கினி புரிபவர் திரிவித காலமெல்லாந் தெரிபவர் (அருந்த)

தவத்தில் சிறந்து விளங்கும் தூளமாமுனி வந்தார். திருத்தமான சிவந்த சடை ஒளி வீச, நெற்றியிலே தூய வெண்மையான திருநீறு விளங்க, நான்கு வேதங்களையும் அறுபத்து நான்கு கலைகளையும் நன்கு அறிந்து, சுபாசுப கர்மங்களைக் குறித்துச் செய்யப்பட்ட விதிகளான போதாயனம் முதல் ஹிரணிய கேசி வரை பதினெட்டு நூல்களையும் தெரிந்தவரும், முக்காலங்களையும் அறிந்து ஓமத்தீயை வளர்ப்பவருமான மகா தூளமாமுனி வந்தார்.

திருந்து – திருத்தமான. **பூதி** – விபூதி, திருநீறு. **துய்ய** – தூய்மையான. **சுருதி** – வேதம். **சூத்திரம்** – சுபாசுப கர்மங்களைக் குறித்துச் செய்யப்பட்ட விதிகள் அடங்கிய நூல். **ஓமாக்கினி** – ஓமத்தீ, ஓமகுண்டம். **திரிவிதகாலம்** – முக்காலம்.

சு.சொ : 1. குழரிந்தோர்.

வசனம்

கேளும் சிரஞ்சீவி துரியோதன மகாராசா! நீ ரெம்மை அழைப்பித்த காரியஞ் சொல்லுந் துரியோதன மகாராசனே.

Taru

The most austere **Tū!amāmuni**,
his plaited purple locks glittering
his forehead three-lined with the sacred ash,
a master of the four **Vēdas** and arts sixty four
and well-read in the eighteen **sāstrās**-right
from the **Potāyanā** to **Hiraṇyakēsi** –
capable of foreseeing all the three time-divides,
and ceaselessly burning *yakña* – fire has arrived.

Dialogue

Tū!amāmuni : O immortal **Turiyōtanā**
Please tell me the reason you have called me.

26. துரியோதனன் – திபதை

[1]திறமுறு ஞான யோக தேவனே சரண மையா
வரமெலாங் கைக்கொண் டோங்கும் மாதவா சரண மையா
பருவதச் சாரற் பாங்கற் பரிவோடு யாகஞ் செய்யும்
தருகாள முனியை யோடிச் சலிதியா லழைத்து வாராய்.

வசனம்

“சரணம், சரணம், ஸ்ரீத்திரம் பொருந்திய ஞானயோகனே சரணம் சுவாமி ! சிவானுக்கிரகமெல்லாங் கைக்கொண்டுயர்ந்த மகாதவசிரேஷ்ட்டரே சரணம்” என்று பரகதச் சாரலில் ஓர் பக்கத்தில் தவஞ் செய்துகொண்டிராநின்ற காளமாமுனியை அதிக விரைவில் ஓடி அழைத்து வாருமையா.

அப்படியே அழைத்து வருகிறேன் ராசனே !

பருவதம் >பரகதம் – மலை

மாதவர் – முனிவர். **பருவதம்** – மலை. **பாங்கர்** – பக்கம். **பரிவோடு** – பக்தியோடு. **சலிதி** – விரைவில்.

ச.சொ : 1. திரமுரு.

Turiyōtanā<u>n</u> - *Tipatai*

I bow to you, bow to you,
Lakṣmi-blest sage of great wisdom.
I bow to you the sageous one,
who brings the blessings of Lord **Civā**.
Please make haste and fetch **Kāḷamāmu<u>n</u>i**,
who has his *Āsram* on the slope
of the mountain, doing his tapasya.

27. காளமாமுனி – கவி

[1]அருமறை யுணர்ந்த நீதி யருந்தவ முனியே பொய்யாய்
வருபெறு மாயை நீத்த மாமுனி யோயே [2]கேளீர்
குருகுலத் தரச னான கோதிலா துரிய னும்மை
விரைவினில் அழைக்கச் சொன்னார் விருப்போடு வருகு வீரே.

நான்கு வேதங்களையும் கற்றறிந்த அருந்தவத்தையுடைய, மாயையை நீக்கிய முனிவரே குருகுலத்து அரசனான குற்றமற்ற துரியோதனன் உம்மை விரைவினில் அழைத்து வரச் சொன்னார். வருவீராக.

அருமறை – நான்கு வேதம். **கேளீர்** – கேட்பீராக. **குருகுலம்** – கௌரவர் குலம். **கோதிலா** – குற்ற மற்ற.

வசனம்

கேளுங் காளமாமுனியே ! உம்மை யாது காரணமோ துரியோதனன் அழைத்துவரச் சொன்னார்; வாருமையா சுவாமி.

க.சொ : 1. அருமரை 2. கேழீர்.

Tūḷamāmuṉi says to Kāḷamāmuṉi

O revered **Kāḷamāmuṉi**!
The one who has mastered all the **Vēdas**,
totally liberated from the temptations of **Māyā!**
King **Turiyōtaṉaṉ** of the blemishless lineage has sent me
to take you to his court without delay.
Please do him the honour, coming along.

28. காளமாமுனி – விருத்தம்

கனமுறு மேருச் சாரல் காளமா முனிவன் [1]தானும்
மனநிலை நீங்கி மன்னன் வரவழைத் தனனென் றெண்ணி
இனிதுடன் வேக மாக யிலகிய சடைக ளாட
வனமது கடந்து [2]காள மாமுனி வருகின் றாரே.

மேருமலையின் அருகில் வாழ்கின்ற காளமாமுனிவர் தவநிலை நீங்கி, துரியோதனன் அழைத்தனன் என்று எண்ணி வேகமாகச் சடைகளாட, காடுகளைக் கடந்து வருகின்றார்.

மேரு – ஒரு மலை. **சாரல்** – பக்கம். **மனநிலை** – தவநிலை. **வனம்** – காடு.

க.சொ : 1. றானும் 2. குாழம.

The appearance of Kāḷamāmuṉi

Kāḷamāmuṉi based in his *Āsram* on the slope of the Mount *Mēru*,
threw getting up from his *tapasyā* state,
in response to the invitation of **Turiyōtaṉaṉ**
His locks of hair swaying,
makes haste through the forests all along.

29. தரு

கதிக்கும் புகழெங்கும்
துதிக்கு மிகுதவ காளமாமுனி வந்தார்.
பதிக்கு ளெவருமே மதிக்கொ ணாவேள்
விதிக்கும் பலகலை வதிக்கு மிகுவேள்வி

வித்தகஞான மதித்தன லறிவினர்
நத்திடு மஷ்டமா சித்தியும் பெற்றவர் (கதிக்கும்)

அண்ட பிரமாண்ட மெண்டிசைகளும் நடுங்கவே அரியவோமம் புரிவோர்
கண்டார் [1]வெருவிட அண்டவொணா யாமளை காரணத்தைத் தருவார்
விண்டு நாவினால் [2]குறை கண்டிதமா யுரைத்தால்
வெட்டவெளியாய்ச் சபிப்போர்
அண்டர் முனிவரிந்த மண்டலத்தோ ரெல்லாம் அவரடியினிற் றுதிப்போர்
துண்டமதி நெற்றியிற் துலங்கும் விபூதி மின்ன
தொங்கிடுஞ் செஞ்சடை சூழ்ந்த தெழிலாய்த் துன்ன
மண்டி [3]ருத்ராட்ச மார்பில் வயங்கனான் [4]மறைபன்ன
வாகை துரியனம்மை வரவழைத்தா னென்ன
மாசிலா சிவ [5]நேசமுற்றவர் தேசுலா விசு வாச முற்றவர் (கதிக்கும்)

ஊரில் (உலகில்) எவரும் செய்யமுடியாத வேள்வியைச் செய்பவரும் பலகலையும் அறிந்தவரும், மிக்க கேள்வியை உடையவரும். அஷ்டமாசித்தியும் பெற்றவருமாகிய காளமாமுனி வந்தார். அண்டங்களும் எட்டுத்திசைகளும் நடுங்க வேள்வி புரிபவரும், கண்டவர்கள் அஞ்சும் வண்ணம், யாராலும் நெருங்கமுடியாத யாமளையின் மூலமாகிய காரணச் சாரீரத்தைத் தருபவரும், தேவர், யாராவது வாய் திறந்து குறை கூறினால் அவர்களைப் பாழாகும்படிச் சபிப்பவரும், தேவர் முனிவர் இப்பூமியிலுள்ளவரெல்லாம் வந்து பாதங்களை வணங்கக் கூடியவருமாகிய காளமாமுனிவர் பிறை போன்ற நெற்றியில் திருநீறு மின்ன, தொங்கும் சடையுடன், மார்பில் ருத்திராட்சம் விளங்க, நான்கு வேதங்களையும் ஓதிக்கொண்டு, வெற்றி பொருந்திய துரியோதனன் நம்மை வரவழைத்தான் என்று சொல்லி குற்றமற்ற சிவபக்தியுடையவராய், அன்போடு வந்தார்.

கதிக்கும் – மிகுதியான, சிறந்த. **துதிக்கும்** – போற்றும். **பதி** – ஊர், நாடு. **ஒணாத** – ஒண்ணாத. **ஓமம்** – வேள்வி. **வெருவிட** – அஞ்சிட. **யாமளை** – காளி, துர்க்கை, பார்வதி. **விண்டு** – திறந்து. **கண்டிதம்** – திட்டம், உறுதி. **அண்டர்** – தேவர். **மண்டலம்** – பூமி. **துண்டமதி** – பிறை. **பன்னுதல்** – ஓதுதல். **மாசு** – குற்றம். **தேசு** – ஒளி. **விசுவாசம்** – அன்பு.

சு.சொ : 1. வெரிவிட 2. குரை 3. ருத்ராஷ்ச 4. முறையன்னா 5. நேசமுத்தவர்.

Taru

Kāḷamāmuṉi, an astute performer of ***yakñas***,
unexcelled by any other sage,
A master of all the eight forms of **Citti**, has arrived.
all the eight directions shiver whenever he performs a ***yakña***.
He could give an original voice,
the origin of **Kāḷi** unapproachable by any body,
capable of cursing the defaulting ones.
His feet are worshipped by Gods, men and the divines.
His crescent-like forehead, besmeared with ***Vibūti***,
his locks hanging, a garland of ***Rutrakṣa*** around his neck,
he arrives chanting hymns from all the four ***Vedas***,
honouring the call of **Turiyōtaṉaṉ** for whom he has affection.
Thus **Kāḷamāmuṉi**, the devotee of **Civā** has come.

30. காளமாமுனி – திபதை

சிறஞ்சீவி பெற்று நாளுஞ் செல்வமேன் மேலுண் டாக
அறம்பொரு ளின்ப வீடென் றறை(ந்)தனூற் பயன்பெற் றுய்ய
[1]புறங்கொடாச் செங்கோல் நீதிப் [2]புரந்திடுங் குருகு லத்தில்
இறைவனே யெம்மை தானிங் கெண்ணிய துரைத்தி டாயே.

எப்போதும் அழியாமல், செல்வம் மேன்மேலும் பெற்று வாழ்வாயாக. அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு பயன்களைப் பெற்று சிறப்பாயாக. பகைவர்க்குத் தோற்காமல், செங்கோல் செலுத்தும் குருகுலத்தலைவனாகிய துரியோதனனே! நீ என்னை எண்ணி அழைத்த காரியத்தைச் சொல்லுவாயாக.

சிறஞ்சீவி < சிரஞ்சீவி – என்றும் அழியாமல் இருத்தல். எதுகை நோக்கி ரகரம் றகரமாகியது. **புறங்கொடாது** – பின்வாங்காமல், பகைவருக்குத் தோற்காமல். **செங்கோல்** – ஆணை நடத்தும் கோல். **குருகுலம்** – கௌரவகுலம். **உரைத்திடாயே** – கூறுவாயே.

சிரஞ்சீவி, [3]துரியோதன மகாராசனே எம்மை அழைப்பித்த காரியஞ் சொல்லுந்துரியோதன மகாராசனே!

சு.சொ : 1. புறங்கொடாற் 2. புறந்திடுங் 3. துரியோனத

Kāḷamāmuṉi to Turiyōtaṉaṉ

Indestructible,
You will ever prosper and live long.

You will attain all the four purushartas,
unbeatable by your enemies,
you will reign supreme, your sceptre upheld.
O **Turiyōtaṉā**, the heir to the line of kurukula.
Tell me please
what has made you require my presence here.

31. துரியோதனன் – கவி

தத்துவப் பொருள தான தன்மையை யுணர்ந்த ஞான
வித்தகப் பொருளே யன்பர் வேண்டுமெய்ப் பொருள ளிக்கும்
சித்துரு வாய்வி ளங்கும் தேசிகோத் தமனே நாயேன்
நத்தியுன் பொற்றா ளான நளினமே சரண மையா.

தத்துவப் பொருளின் தன்மையை உணர்ந்த மேலானவரே! பக்தர் வேண்டும் உண்மையான பொருளை அளிக்கின்ற அறிவுரு வானவரே! நாய் போன்ற நான் உன் தாமரை போன்ற பொற்பாதங்களை விரும்பி வணங்குகிறேன்.

ஞானம் – அறிவு. **வித்தகம்** – ஞானம். **அன்பர்** – பக்தர். **மெய்ப்பொருள்** – உண்மைப்பொருள். **சித்து** – அறிவு. **நத்தி** – விரும்பி. **நளினம்** – தாமரை.

Turiyōtaṉaṉ to Kāḷamāmuṉi

O you exalted seer!
The great giver of whatever is asked.
Here a cur, not of any significance,
I surrender at your lotus feet.

32. தரு

சரணம் சரணமையா முனி[1]நாதரே சரணம் சரணமையா
சரணம் சரணமையா தவமது புரிநீதா
கருணை செய்தினி யென்னைக் காருங் கமலபாதா (சரணம்)

சென்ம வினையகற்றித் திருவருள் புரிந்தருள
கன்ம வினைக் [2]குரியேன் கடைத்தேற தயைபாராய் (சரணம்)

யெண்ணுமென் கருத்தினிற் கிசைந்தவரம் நீ தாராய்
அண்ணலே யெனக்குண்மை அருளிக்கடைக்கண் பாராய் (சரணம்)

பாண்டவர் தம்மை[3]வெல்லும் பாக்கியவரங் கொடுப்பாய்
ஆண்டவனே யெனையின் றாதரித்தே யிருப்பாய் (சரணம்)

தாமரை போன்ற பாதங்களை யுடையவரே! கருணை செய்து என்னைக் காப்பாற்றும். நான் உங்கள் அடைக்கலம் ஐயா! பிறவிப்பயனை அகற்றி அருள்புரியும். கர்மவினைக்கு உரிய நான் பிழைக்க அருள்தாரும். என் கருத்தினில் விரும்பிய வரத்தை நீர் தாரும் அண்ணலே. எனக்கு உம் கடைக்கண் பார்வையைத் தாரும். பாண்டவர்களை வெல்லும் பாக்கியத்தைக் கொடுப்பீர். என்னை ஆதரித்துத் துணை செய்வீர். நான் உன் அடைக்கலம்.

கருணை – அருள். **கமலபாதம்** – தாமரை போன்ற பாதம். **சென்மவினை** – பிறவிப்பயன். **கன்மவினை** – தீயவினை. **கடைத்தேற** – ஈடேற. **பாக்கியவரம்** – செல்வப்பேறு.

வசனம்

சரணம் சரணமையா! காளமாமுனியே! இந்தச் சிம்மாதனத்திலே எழுந்தருளுமையா சுவாமி.

சு.சொ : 1. நூதரை 2. குறியேன் 3. வெள்ளும்.

Turiyōtanan to Kāḷamāmuni

O sage! I bow to your lotus feet.
Be merciful enough to save me.
You are our refuge.
Relieve us of this cycle of birth we beseech your grace
to escape the consequences of Karma
O Saviour! Grant us the boon we pray for.
Please cast on us your benign look.
Give us the power to get rid of the Pāṇṭavās.
We seek your support and help.
We depend on your mercy.

33. காளமாமுனி – திபதை

சரணமே செய்து நின்ற தராதல முழுதுங் காக்கும்
அரசனே யெம்மை தானிங் [1]கழைத்ததெவ் விதத்தி னுக்கோ
தெரிதர வெமக்கு நன்றாய்த் தேர்ந்ததைக் களங்க மின்றி
வுரைதர வேண்டும் பொன்னா லுயர்மணி மகுடத் தோனே.

வசனம்

கேளும் நம்மைச் சரணஞ் செய்தெதிர் நிற்கின்ற உலகம் முழுதுங் காக்கும் துரியோதன மகாராசனே ! யாது காரணம் நம்மை அழைப்பித்தது? அதைச் சொல்லாமல் ஏதேதோ சொல்லுகிறாய். மனக்கலக்கமின்றி சும்மா சொல்லும் துரியோதன மகாராசனே.

தராதலம் – உலகம். **எவ்விதத்திநுக்கோ** – யாது காரணத்துக்கோ. **நன்றாய்** – நல்லபடியாக. **களங்கம்** – மாசு, குற்றம். **உரைதர** – கூற. **உயர்மணி மகுடத்தோனே** – உயர்ந்த மணி மகுடத்தை அணிந்த மகாராசனே.

சு.சொ : 1. களைத்த

பொதுவசனம்

இப்படியாகக் காளமாமுனி துரியோதனனைக் கேட்க அக்கொடியதாகிய காரியத்தைச் சொல்லநாவெழாது சகுனியின் முகத்தைப் பார்க்க சகுனி சொல்லுகிற விதம் எப்படி என்றால்.

Kāḷamāmuṉi to Turiyōtaṉaṉ

Hear me **Turiyōtaṉā**, the protector of the world.
You have made your obeisance well,
You talk so much without telling me the purpose
for which you have wanted me to come to your court
Don't you worry. Speak to me.

(To this **Turiyōtaṉaṉ**, feeling reluctant to speak to the sage himself of the cruel design on his mind, he turns to **Cakuṉi** who speaks then).

34. சகுனி – திபதை

தருமநூ லாதிவேத சாத்திர மாறுந் தேர்ந்த
பெருமைசேர் முனியே மன்னன் பீடடற் பகைவர் தம்மை
பொருதுகொண் டினிது வெல்லும் புகழுரு ளினிது வேண்டி
மருவுலா வியநின் செந்தாள் வணங்கினான் ராச னையா.

வசனம்

கேளும் தருமநூ லாதியாக வேதாகம சாஸ்திரங்களைக் கற்றுணர்ந்த பெருமை பொருந்திய காளமாமுனியே ! இந்த துரியோதன மகாறாசனுடைய சத்திராதிகளை வெல்லும் படியாகிய வரம் வேண்டி உம்மை வணங்கினானையா சுவாமி.

தருமநூல் – தரும சாத்திரம். **வேதம்** – வேதசாத்திரம். **பீடு** பெருமை. **அடல்** – வலிமை. **பொருது** – போர் செய்து. **செந்தாள்** – செம்மையான பாதம். **சத்திராதி** – பகைவர்கள்.

Cakuṉi - *Tipatai*

Please hear me speak, O **Kāḷamāmuṉi**,
well-versed in all the *Vēdakamās*.
He prays for a boon to get rid of the **Pāṇṭavās**.

35. காளமாமுனி – திபதை

கட்டுசா தத்தி லெச்சி கலந்தற உமிழ்ந்த தென்னும்
[1]கட்டுரை யுலகிற் சொல்லும் கதைதனைப் போலு ரைத்தாய்
மட்டவிழ் நந்தி மாலை மார்பனே யெமக்கிப் போது
சட்டமாய்க் களங்க மின்றி தானெடுத் துரைசெய் வாயே.

வசனம்

கேளும் சகுனி! கட்டுசாதத்திலுமிழ்ந்த யெச்சிற்போல வென்று உலகத்தார் சொல்லும் கட்டுரைக் கதைபோலவென்று சொல்லவந்தாய். ஆனாலிருக்கட்டும் பரிஷ்ச்காரமாய் உங்களெண்ணத்தைச் சொல்ல வேணுஞ் சகுனி.

கட்டுசாதத்திலெச்சி கலந்துற உமிழ்தல் – பழமொழி. **எச்சி** – எச்சில். **கட்டுரை** – பழமொழி. **மட்டவிழ்** – தேன்நிறைந்த. **நந்திமாலை** – நந்தியாவட்டைமாலை. **சட்டமாய்** – முறையாக. **களங்கமின்றி** – குற்றமின்றி.

க.சொ : 1. கட்டுறையுளகிர்சொல்லும்

Kāḷamāmuṉi to Turiyōtaṉaṉ

The way you try to talk to me
is like spitting in a lunch-packet as they say.
Be frank with me and speak out your mind,
you, the one whose chest is adorned with blossoms of *Nantiyāvaṭṭai.*

36. கர்ணன் திபதை

சொல்லுவ தென்ன வைவர் சூதினாற் றோத்த பாகம்
வெல்லரும் வசனஞ் சாரம் விட்டுப்பின் னெருங்கிக் [1]கேட்பார்
அல்லல்செய் கொடிய[2]வேள்வி யாலைவர் தம்மைக் கொன்று
மல்லலம் புவிக்கோர் வாக மகுடநீ சூட்டு வாயே.

வசனம்

கேளும் காளமாமுனியே! அந்தப் பாண்டவாள் சூதினால் தோற்ற பாகத்தை அவாளுக்கு நியமித்த பன்னிரண்டு வருடம் வனவாசமுந் தொலைந்து உயிரோடிருந்தால் துரியோதனனை வந்து கேட்பார்கள். ஆகையால் நீரொரு கொடிய யாகஞ் செய்து அவாளைக் கொன்று இந்தப் பூமிக்கோர் ராசனாக துரியோதன மகாராசனுக்கு மகுடஞ் சூட்டி வைக்க வேண்டுமையா காளமாமுனியே.

ஐவர் – பாண்டவர். **வனசஞ்சாரம்** – வனவாசம். **கொடிய வேள்வி** – கடுமையான யாகம். **மல்லல்** – வளமை. **புவிக்கோர்வாக** – பூமிக்கு ஏற்றவனாக. **மகுடம்** – அரசகிரீடம்.

க.சொ : 1. கேழ்ப்பார் 2. வேழ்வி.

Karṇa<u>n</u> - *Tipatai*

Revered **Kāḷamāmu<u>n</u>i!**
Those **Pāṇṭavas** who had lost their part of the Kingdom
in the game of dice, having spent the twelve years in exile,
if alive, may come back and claim their part.
Hence we plead with you to perform a ***yakña***
so that they could be destroyed.
You will see that **Turiyōta<u>n</u>a<u>n</u>** retains his crown
and his rule of the entire Kingdom continues.

37. காளமாமுனி சொல் – திபதை

இக்கொடுஞ் செய்கைக் காக வெனையழைத் துபசா ரங்கள்
மிக்கவே சொல்ல வந்தீர் வினையிலாத் [1]தரும னாதி
தக்கவர் தம்மைக் கொல்ல தகாறம் பொறுக்கா தையோ
விக்கின மெமக்கே நேரும் விடுங்கொளீம் [2]மொழியைத் தானே.

துரியோதனா! இந்தக் கொடுமையான செயலுக்காக என்னை வரவழைத்து உபசாரங்கள் மிகுதியாகவே சொன்னாய். வஞ்சனை யற்றவரும் குற்றமிரல்லாதவருமாகிய தகுதியையுடைய பாண்டவர்களைக் கொல்வது தகாது. அறக்கடவுள் இதைப்பொறுக்க மாட்டார். இதனால் எமக்குத் தீமை நேரும். ஆகையால் இச்சொல்லை விட்டுவிடு.

உபசாரம் – போற்றுதல். **மிக்கவே** – மிகுதியாகவே. **வினை** – வஞ்சனை. **தருமனாதி** – பாண்டவர்கள். **விக்கினம்** – இடையூறு, தீமை. **மொழி** – சொல்.

க.சொ : 1. தறுமநாதி, 2. மொளி.

Kāḷamāmu<u>n</u>i - *Tipatai*

Turiyōtanā! It is for the gruesome act of cruelty
you have summoned me here
and so highly flattered me.
The **Pāṇṭavas** are entirely untreacherous
and unquestionably faultless,
and so to kill them will be a task, totally unworthy.
The God of Dharma would not tolerate such an act.
If I did that I would come to harm.
Therefore give up this idea.

38. காளமாமுனி–தரு

இதற்கோ யென்னை அழைப்பித்தாய் – துரியோதனா
என்னை யிப்படி வஞ்சித்தாய்
பதற்குள் பதரைப் போல பகர்ந்தாயிது தகாதே
[1]மதிக்குளுயர் ஐவரை மாய்க்க வென்னா லாகாதே (இதற்கோ)

மாயன் சகாயம் பெற்றவர் நல்லொழுக்கம்
வாய்த்த சாந்தமு முற்றவர்
ஆய பாண்டவரை யாகஞ்செய்து கொல்ல
நேயமாக யெம்மை நினைத்தாயோ இது சொல்ல (இதற்கோ)

நல்லோருக் கிடர் புரிந்தால் அவர்கள் குலம்
[2]நாசமாமே நீ தெரிந்தாய்
வல்லமை பாண்டவர் மாய்வாரோ ஒருக்காலும்
சொல்லாதே யிந்ததுரோகம் [3]தொடரேனான் முக்காலும் (இதற்கோ)

சும்மாயெனை வெறுக்காதே தெய்வமுந் தர்மம்
சூது வாது பொறுக்காதே
இம்மா நிலத்திலைவர் இருக்கக் குறையுமுண்டோ
அம்மாயி தாச்சரியம் அடுக்கா திதைநீ கொண்டோ (இதற்கோ)

இதற்கோ என்னை அழைத்து யிப்படி வஞ்சனை செய்தாய் துரியோதனா ? பதருக்குள் பதரைப்போல சொல்ல வந்தாய் ! இது தகாது. அறிவு மிகுந்த பாண்டவரை மடித்திட என்னால் ஆகாது. திருமால் துணையும் நல்ல ஒழுக்கமும் அமைதியும் உடைய, கடமை தவறாது இருக்கும் பாண்டவரை யாகஞ் செய்து கொல்லுவதற்கு நேர்மையான என்னை நினைத்து அழைத்தாயோ? நல்லவர்களுக்குத் துன்பம் செய்தால் அவர்களுடைய குலம் அழிந்துபோகும். இதைத் தெரிந்து கொள்வாய். இந்தத் துரோகம் செய்யாதே. வலிமையுடைய பாண்டவர்கள் ஒரு போதும் மடியமாட்டார்கள். எனவே யாகம் செய்ய ஒப்புக்கொள்ள மாட்டேன். என்னை வெறுக்காதே. தெய்வமும் தர்மமும் சூது வாதுகளைப் பொறுக்காது. இப்பூமியில் பாண்டவர்கள் இருந்தால் ஒரு குறையும் இருக்காது. உன்னுடைய செயல், பாண்டவரை அழிக்க நினைக்கும் இச்சொல், மிகவும் வியப்பாக உள்ளது. ஆகவே இது தகாது துரியோதன மகாராசனே.

வஞ்சித்தாய் – வஞ்சனை செய்தாய். **மாய்க்க** – சாகடிக்க. **மதி** – அறிவு. **மாயன்** – திருமால். **சகாயம்** – துணை. **சாந்தம்** – அமைதி. **நேயம்** – அன்பு. **இடர்** – துன்பம். **முக்காலும்** – ஒரு போதும். **வெறுத்தல்** – மறுத்தல். **பொறுத்தல்** – மன்னித்தல்.

வசனம்

கேளும் துரியோதன மகாராசனே ! பல நற்குணங்களும் ஸ்ரீமன் நாராயண மூர்த்தியின் அனுக்கிரகமும் பெற்று விளங்குகின்ற அந்தப் பாண்டவாளைக் கொல்லுதற்கோ என்னை அழைப்பித்தது ? அது என்னால் முடியாதப்பா ! துரியோதன மகாராசனே.

க.சொ : 1. மதிக்குளயரைவர் 2. நாசமாமேனி 3. துடரே.

Kāḷamāmuṉi - Taru

Turiyōtanā! Is it for this kind of a treacherous act
You have got me here?
It is hiding a husk within a husk.
It is not proper.
It should be impossible for me to finish the wise **Pāṇṭavās**.
They enjoy the grace of Lord **Vi ṣṇu**.
They are a disciplined and peace-loving people.
They are dutiful as well.
It is for ending their life you have called upon me
to perform a ***Yakña***.
If you do harm to the good your entire race will perish.
Understand this, Don't think of committing such a foul act.
The **Pāṇṭavās** are too strong to be done away with like that.
So I won't agree to perform this ***Yakña***.
This need not make you hate me.
God and Dharma would not approve of this.
Nothing will go wrong if the **Pāṇṭavās** live on.
I really wonder what has brought you
to this level of thinking of finishing the **Pāṇṭavās**.
Hence it ill becomes you, **Turiyōtaṉā**.

Dialogue

Take counsel from me **Turiyōtaṉā**. The **Pāṇṭavās** are virtuous people, in the care of **Srīmaṉ Nārāyaṇa**, and what a pity that you have invited me to have them killed. I can't do it simply.

39. துரியோதனன் – விருத்தம்

காளமா முனியைப் போற்றிக் கருத்துள்ள [1]ஐவர் தானும்
நீளமாம் வனத்திற் சென்றார் நீரொரு யாகஞ் செய்து
காளகண் டீத னாலே காளையர் தன்னைக் [2]கொன்று
ஆளவே யெந்த னுக்கு அரசளித் திடுவீ ரையா.

நீளம் – நெடுந்தூரமுள்ள. **வனம்** – காடு. **யாகம்** – வேள்வி. **காளகண்டி** – காளகண்டி பூதம். **காளையர்** – பாண்டவர்.

வசனம்

கேளுமையா சுவாமி முனிநாதரே! எனக்குச் சத்துருவாகிய பாண்டவர்கள் கானகத்திலே வனசஞ்சாரம் செய்திருக்கிறார். அவாளை மடிப்பிக்கும் பொருட்டாய் நீரொரு யாகஞ் செய்து அதில் உற்பவித்தியாகிய காளகண்டி பூதத்தை விட்டுப் பாண்டவாளை மடிப்பித்து இந்த ஐம்பத்தாறு தேசத்தையும் நானே அரசு செலுத்தும் படியாக தயவு செய்து ரட்சிக்க வேணுமையா முனிநாதரே.

சத்துரு – பகைவர். **வனசஞ்சாரம்** – காட்டில் அலைதல். **உற்பவித்தி** – தோன்றுதல். **அன்பத்தாறு** – ஐம்பத்தாறு. **ரட்சிக்க** – காப்பாற்ற.

சு.சொ : 1. ஐயவர் 2. கொண்ணு.

Turiyōtanan - *Viruttam*

The **Pāṇṭavās**, have gone in the long forest.
You may please perform the *yakña*
which will bring forth the demon **Kāḷakaṇṭi,**
which will do to death all the **Pāṇṭavās**.
And give the kingdom to me.

40. காளமாமுனி சொல் – திபதை

பலமுள சிங்கந் தன்னைப் பாய்ந்தோ ரானைகொல் லாது
தலமிசை யோங்குந் தர்மம் தன்னைப்பா பம்வெல் லாது
நலமிசை பாண்ட வாளை நான்கொல்வ தருமை கண்டாய்
[1]வலனிலா வார்த்தை தன்னை மகிபநீ விட்டி டாயே.

பலமுள – வலிமையான. **தலமிசை** – பூமிமீது. **நலம்** – உயர்வு, பயன். **வலன்** – வெற்றி. **மகிபன்** – அரசன்.

வசனம்

கேளுந் துரியோதன மகாராசனே ! பலத்தசிங்கத்தை ஒரு யானை கொல்லுமா? மேலும் தருமத்தைப் பாபம் வெல்லுமா, அது போல நான் அந்தப் பாண்டவாளை வஞ்சக ஒமாதிகளால்

கொல்லப் போகிறேனா? அது இல்லை. அதேன் வெற்றியில்லாத வீண் வார்த்தை? விட்டு விடும் [2]துரியோதன மகாராசனே.

சு.சொ : 1. வலநிலா. 2. திரியோதன.

Kāḷamāmuṉi - *Tipatai*

Be counselled **Turiyōtaṉā**.
Could an elephant face the might of a lion?
Could I do away with the **Pāṇṭavās** by foul means,
Raising a ***Yakña***? Impossible!
No amount of useless talking about that
will lead to anysuccess.
Give it up, please.

41. துரியோதனன் கொச்சகக் கலிப்பா

என்செய்வே னின்னையின்றி யிப்பூமியில் யாரெனக் குரைசெய் தருளையனே
என்செய்வே [1]னெம்பிரானே வந்திந்த பெரிய மாதவனே யேனை ஐவரும்
வன்செய் புன்கொலைசெய் வரத்துரோகிகண் மாயவேள்வி [2]வழங்கி மடிதல்
மன்செய்வா யுன்தன் பொற் கழலிணை வணங்கினே னஃதியற்று [3]ரட்சிப்பாயே.

என்ன செய்வேன்? உன்னையன்றி இப்பூமியில் யார் எனக்கு அறிவுரை கூறி அருள் செய்வார்? என்ன செய்வேன் எம்பிரானே? பெரிய மாதவனே! பாண்டவர்கள் ஐவரையும் கொடுமையான யாகம் செய்து இறக்கச் செய்வாய். உன் பொற்கழலினை வணங்குகிறேன்; என்னைக் காத்து அருள் செய்வாய்.

உரை செய்தல் – வியாக்கியானம் பண்ணல். **மாதவனே** – மதுவம்சத்தில் வந்தவனே. **வன்செயல்** – கடுஞ்செயல். **வேள்வி** – யாகம். **பொற்கழல்** – பொன்னாலான கழல் (கழலணிந்த பாதம்). ரட்சிப்பாயே – காத்தருள்வாயே.

சு.சொ : 1. லிப்பிரானேன 2. லழங்கி 3. ரக்ஷிப்பையே.

Turiyōtaṉaṉ - *Koccakam*

What could I do then?
None other than sympathizing with and guiding me.
O sageous one!
You alone can destroy these **Pāṇṭavās** through a ***yakña***.
I fall at your golden feet. Be merciful enough to protect me.

42. துரியோதனன் சொல் – தரு

உன்னை நம்பினேனையா காளமா முனியே
என்னை [1]ரட்சிப்பாய் நீரையா

மன்னும் பரமயோக மாதவ சிரோமணிப்
பொன்னின் கமலமலர் பொற்பாத மேதுணையே (உன்னை)

பாண்டுசுத ரைவரை பங்கப்படவே கொல்வாய்
ஆண்டகையே உன்பாதம் அடைந்தேனென் பகைவெல்வாய் (உன்னை)

[2]ஐம்பத் தாறுதேசம் ஆளவரந் தருவாய்
அம்புவியோர் புகழ யாகமொன்று புரிவாய் (உன்னை)

எப்படி யாகிலுநான் ஈடேறக் கண்பாராய்
ஒப்பில் லாததவ யோகனே அருள்தாராய். (உன்னை)

காளமாமுனியே! உன்னை நம்பினேன். நீ என்னைக் காத்தருள்வாய். நிலைபெற்ற மேலான இவ்வுலகில் தவத்தையுடைய சிரோமணியே! உன் தாமரை மலர் போன்ற பாதம் துணை. ஆடவருள் சிறந்தவரே! பாண்டு மைந்தரைக் கொல்வதற்கு உன்பாதம் பணிந்தேன். என் பகைவரை அழிப்பாய். நானே ஐம்பத்தாறு தேசத்தையும் ஆட்சி செய்வதற்கு வரம் தருவாய். பூமியிலுள்ளோர் புகழ யாகம் செய்வாய். ஒப்பில்லாத தவமுனிவனே எப்படியாவது நான் தேறுவதற்கு உன் கருணையைத் தருவாய்; காத்தருள்வாய்.

ரட்சிப்பாய் – காத்தருள்வாய். **மன்னும்** – நிலைபெற்ற. **சிரோமணி** –முடியில் அணியும் மணி. **பொற்பாதம்** – பொன்னாலான பாதம். **சுதர்** – மைந்தர். **ஆண்டகையே** – ஆடவருள் சிறந்தவரே. **பங்கப்பட** – வெட்கப்பட. **புவியோர்** – தேசத்தோர். **ஈடேறல்** – தேறுதல். **கண்பாராய்** – கருணையைத் தருவாய். **தவயோகனே**– தவமுனிவனே.

சு.சொ : 1. ரக்ஷிப்பாய். 2.அன்பத்தாரு.

வசனம்

கேளுமையா சுவாமி! காளமாமுனியே! எனக்கு உன்னையன்றி வேறு ஆதரவு இல்லை. ஆதலால் எவ்வகையிலாவது உம்மாலந்தப் பாண்டவாளைக் கொன்று எனக்கு இந்தப் பூமி முழுமையும் கிரீடாதிபதியாயிருந்து அரசாட்சி செய்யும்படி கிருபை பாலித்தருள வேண்டுஞ்சாமி.

Turiyōta<u>n</u>a<u>n</u> - *Taru*

O **Kāḷamāmu<u>n</u>i**! I have put my trust in you.
Please come to my rescue.
You are in this world imperishable, a great divine.
Your lotus feet are my refuge.

O **Kā!amāmuni**! I have put my trust in you.
You are extra-ordinary among men.
I surrender at your feet
So as to have the **Pāṇṭavās** killed.
Finish my enemies.
O **Kā!amāmuni**! I have put my trust in you.
Thus confer on me the privilege of ruling
all the fifty six lands.
Perform the ***yakña*** so that the entire world
should appreciate your worth.
O **Kā!amāmuni**! I have put my trust in you.
O you the incomparable Divine!
Be kind enough to make me survive.
Save me. Please.
O **Kā!amāmuni**! I have put my trust in you.

Dialogue:

Hear me tell you, Svāmi **Kā!amāmuni**! There's no other help except you. Find out then some means to get rid of the **Pāṇṭavās** and see that I am the sole ruler of this entire Kingdom. Kindly bless me with the privilege.

43. துரியோதனன் – விருத்தம்

நம்பியே யுன்னை யிங்கே நானழைத் திட்டே னையா
வெம்பியா ரண்ணிய வாச மேவும்பாண் டவரைக் கொன்று
அம்புவிக் கரச னான அணிமுடி யெனக்குச் சூட்டாய்
உம்பர்கள் புகழ்த வத்தோ யுபயதாட் சரணந் தானே.

வெம்பி – வாடி, கலங்கி. **ஆரண்யம்** – காடு. **வாசம்** – வாழ்தல். **முடி** – அரச கிரீடம். **உம்பர்** – தேவர். **உபயம்** – இரண்டு.

வசனம்

கேளுமையா காளமாமுனியே! தேவரீரை மிகவும் நம்பி இவ்விடத்திற் கழைப்பித்தேன். இப்பவும் வெவ்வியதாகிய ஆரண்ய வாசிகளாகிய பாண்டவாளைக் கொன்று இந்த [1]ஐம்பத்தாறு தேசத்திற் கதிபதியாய் அழகுயர மகுடம் எனக்கு நீர் சூட்டி வைத்ததாயிருக்க வேண்டும். தேவர்களாலுந் துதிக்கப்பெற்ற மேலான தவத்தினையுடைய காளமாமுனியே! உமது இரண்டு பாதார விந்தமே துணையன்றி வேறில்லை [2]ஐயனே!

க.சொ : 1. அன்பத்தாரு 2. யையனே.

Turiyōtanan̲ – *Viruttam*

Please comply with my plea.
Relying on you,
I sent for you.
It is for you to have these forest-dwellers
finished and crown me.
O saintly **Kāḷamāmun̲i**!
worthy of worship by Gods above.
There is no other help
except the pair of your Lotus feet
to which I bow.

44. காளமாமுனி – தரு

என்ன விதியோ ஈதென்ன மதியோ நான்
எண்ணாதிங்கே வந்தேன் – சங்கரனே
என்சொல் லினுமவன் தன்சொல்லை வலிவாக
விசைக்கின்றா னென்செய்வேன் – சங்கரனே
மன்னன் துரியோதனன் என்னை வஞ்சகமாக
வரவழைத்தானே [1]அய்யோ – சங்கரனே
வஞ்ச ஓமாதியால் [2]பஞ்சவரைக் கொல்லென்று
மறித்துரைக் கின்றானே – சங்கரனே
தருமம் பொறையுமிக்க சாந்த குணமுமுள்ள
தருமரைக் கொல்லலாமோ – சங்கரனே
தரணியில் பலகோடி தவங்கள் செய்ததெல்லாந்
தாழ்ந்திட காலமோதான் – சங்கரனே
விரத மதிகளெல்லாஞ் சரதமாகச் செய்தேன்
வீணாகுங் காலமதோ – சங்கரனே
வேதா விதித்த திதுவானா லதைத் தடுக்க
[3]வேறுவகை தானுண்டோ – சங்கரனே.

சங்கரனே! என்ன விதியோ? இது என்ன மதியோ? நான் ஆராயாமல் இங்கு வந்தேன். என்ன சொன்னாலும் அவன் தன் சொல்லே மேல் என்று நினைக்கின்றானே. துரியோதன மகாராசன் என்னை வஞ்சனையாக வரவழைத்தானே. கொடுமையான வேள்வித்தீயில் பாண்டவரைக் கொல்லென்று எடுத்துக் கூறுகின்றானே. அறமும், பொறுமையும்,

அமைதியுமுடைய நற்குணமுள்ள பாண்டவரைக் கொல்லலாமோ? இப்பூமிதனில் செய்த பலகோடி தவங்களெல்லாம் அழிந்திடுங் காலமாயிற்றே! நான் கூித்த உண்மையான விரதங்களெல்லாம் வீணாகி விட்டனவே. பிரமன் விதித்த விதி இப்படி யென்றால் அதைத் தடுக்க வேறு வகை இருக்கின்றதா சங்கரனே!

சங்கரனே – சிவனே. **என்செய்வேன்** – என்ன செய்வேன். **வஞ்சகம்** – கபடம். **ஓமாதியால்** – யாகத்தால். **பஞ்சவர்** – ஐவர். **மறித்து உரைத்தல்** – தடுத்துக் கூறல்.

க.சொ : 1.ஐயையோ 2.பஞ்சவரை 3. வேர.

Kāḷamāmuṉi - *Taru*

O Lord **Saṅkarā**!

So ill-fated and so unwise

I find myself now.

O Lord **Saṅkarā**!

Not giving it a serious thought

I came here.

O Lord **Saṅkarā**!

All my counseling has failed

to prevail upon him.

O Lord **Saṅkarā**!

He only insists on his vain course.

This King **Turiyōtaṉā** has

tricked me into coming here.

O Lord **Saṅkarā**!

He wants me to raise a sacrificial fire

and do the **Pāṇṭavās** to death.

O Lord **Saṅkarā**!

The **Pāṇṭavās** are Dharmic,

tolerant and peace-loving men of character.

Would it be right to kill them?

O Lord **Saṅkarā**!

The fruit of my age-long tapasyā

will be lost by this foul act.

O Lord **Saṅkarā**!

Is there a way to escape this situation

Bramma has placed me in?

All the vratas I have observed are bound to go waste.
O Lord **Saṅkarā**!

45. துரியோதனன் – திபதை

பரமனைப் போலே யிங்கு பரிந்துவந் துதையஞ் செய்த
வரமுனி நாதா வுந்தன் மலரடி [1]போற்றி போற்றி!
குரவைசூ முலகினுள்ளே கோதிலா தரவார் சொல்வீர்
பிரியமோ டெந்த ணெண்ணம் பீடுறச் செய்யு மையா.

பரமன் – சிவபிரான். **பரிந்து** – அன்போடு. **உதையம்** – தோற்றம். **வரமுனி** – வரம்தரும் முனிவன் காளமாமுனி. **மலரடி** – மலர் போன்ற பாதம். **குரவை** – கடல். **கோதிலா** – குற்றமற்ற. **பீடுற** – பெருமையுற.

வசனம்

கேளும் பரமசிவனைப் போலே எழுந்தருளி வந்த சிவானுக்கிரகம் பெற்ற காளமாமுனியே! உம்திருச் சரணார விந்தங்கட்கடியேன் சரணம் சரணம். கடலாற் சூழப்பட்ட பூமியின் கண் என் எண்ணத்தை [2]நிறைவேற்றவதற்குக் குற்றமற்ற தவசிரேட்டாள் தேவரீரையன்றி வேறு யார் இருக்கின்றார்கள்? பிரியத்தோடு என் எண்ணத்தை நிறைவேற்றிப் பெருமைபெறச் செய்யுமையா சுவாமி.

சரணார விந்தம் – பாதமாகிய தாமரை (தாமரை போன்ற பாதம்).

க.சொ : 1. போத்தி 2. நிறவேத்து.

Turiyōtaṉaṉ - *Tipatai*

O **Kāḷamāmuṉi**!
You have come as if Lord **Civā** himself had come.
You are a **Civā**-blest one.
I surrender at your lotus feet.
Praise be to you, praise be to you.
Who is there in this sea-girt world other than you
to fulfill my wish? Svāmi ! Be affectionate
Enough to do me the needful.

46. காளமாமுனி – விருத்தம்

என்னசொல் லினுங்கே ளாம லியம்புஞ் சுயோதனனே கேளாய்
இன்னதோர் செய்கை தன்னா லெதுவெய் தினுஞ்ச கிப்போம்
அன்னதோர் வேள்விக் [1]குற்ற யாவையு மனுப்பு மந்த
மன்னிய வரையின் பாங்கர் மாகமா வியற்று வேனே.

இயம்பும் – சொல்லும். **சுயோதனன்** – துரியோதனன். **எய்தினும்** – கிடைத்தாலும். **வேள்வி** – யாகம். **மன்னிய** – நிலைபெற்ற. **வரையின்பாங்கர்** – மலையின் பக்கம். **மாகம்** – வேள்வி.

வசனம்

கேளுந் துரியோதன மகாராசனே! [2]அப்படியே அந்த வேள்வியைச் செய்கிறேன் அதற்குத் தக்க யாகத்துக்குண்டாகிய சாமான்களை அனுப்பிவையும்; நாம் பர்வதச் சாரலுக்குப் [3]போகிறோம் மகாராசனே.

துரியோதனன் வசனம்

அப்படியே யாகத்துக்குண்டாகிய திரவியங்களை அனுப்பி வைக்கிறேன் சுவாமி.

க.சொ : 1. குத்த 2. அப்படிக்கே 3.போகுரோம்.

Kā!amāmuni - *Viruttam*

Well **Turiyōtanā!** I shall do the *yakña* as you like.
Kindly see that all the things needed are sent in time.
I am returning to my hill-side abode.

47. காளமாமுனி – தரு

ஜெகசக்கரபதி துரியோதன் மொழியினால் மகாதேவி – நான்
செய்யும் வேள்வியது கைகூடும் படிக்கருள் மகாதேவி
இகத்தில் சாந்தமும் பொறையெல்லா நற்குணமுள்ளோர் மகாதேவி
எழிலுடை யைவர்க ளெவ்வகை மாய்குவார் மகாதேவி
நாரணன் மலரடி பாராயணஞ் செய்வோர் மகாதேவி
நாமவேற் றிறலைவர் [1]தீமையாற் சாவாரோ மகாதேவி
காரண மறியாமல் காலிட்டுக் கொண்டேனே மகாதேவி
கருதும் யாகத்திற்கோர் உதவிசெய் தாளம்மா மகாதேவி.

துரியோதன மகாராசன் சொல்லியபடி, நான் செய்கின்ற யாகம் நன்மை பயக்கும்படி அருள்வாய் மகாதேவி! இவ்வுலகத்தில் அமைதியும், பொறுமையும், நற்குணமும், வீரமுடைய பாண்டவர்கள் எப்படி அழிவர்? விஷ்ணுவின் அடியினை வணங்கும் அச்சம் தரும் வேலையுடைய ஐவர் இறப்பாரோ? நான் காரணம் தெரியாமல் இங்கு வந்து மாட்டிக் கொண்டேன். நான் செய்யும் யாகத்திற்கு உதவி செய்தருள்வாய் அம்மா மகாதேவி.

செக சக்கரபதி – செகத்தை ஆட்சிபுரியும் அரசன். **மகாதேவி** – பார்வதி. **மொழியினால்** – கட்டளையால். **கைகூடுதல்** – சித்தியாதல், நன்மையாதல். **இகம்** – உலகம். **சாந்தம்** – அமைதி. **பொறை** – பொறுமை. **எழில்** – அழகு, வலிமை. **மாய்குவார்** – மடிந்திடுவார், இறந்திடுவார். **நாரணன்** – விஷ்ணு. **பாராயணம்** – மனத்தில் ஜெபித்தல்.

க.சொ : 1. றீமையா.

Kāḷamāmuṉi - *Taru*

O Goddess **Pārvati**!
I invoke your grace
as I prepare for the conduct
of the *yakña* at **Turiyōtaṉā**'s behest
so that it will do good to all.
How could **Pāṇṭavās**, men of character,
peace-loving and tolerant, known for their powers, perish?
The spear-sporting brave five,
worshippers of the Holy Feet of Lord **Vi ṣṇu** will ever die?
I am caught in this trap unwillingly.
Goddess! Mother! I pray to you to help me in this.

48. பொது - கவி

பனிவரைப் பாங்கர் கள்ளிப் படர்தரு பாலை யாகும்
தனிநிலத் தினிலே யோம சாலைகுண் டமதை யியற்றி
யுனலரும் பிரண வத்தை யுச்சரித்தி யாம ளாவை
மனதினிற் செபித்தே யாகம் வளர்த்தினன் முனிவ னிப்பால்.

இமயமலைப் பக்கத்தில் நெருங்கிய கள்ளிக் காடுகளுடைய பாலைநிலத்திலே யாககுண்டமியற்றி நினைத்தற்கரிய ஓங்கார மந்திரத்தை உச்சரித்து உ!ோதேவியை மனதிலே நினைத்து முனிவன் இப்போது யாகம் வளர்க்கின்றான்.

பனிவரை - இமயமலை. **பாங்கர்** - பக்கம். **கள்ளி** - சப்பாத்திக்கள்ளி. **படர்தரு** - நெருங்கிப் படர்ந்திருத்தல். **பாலை** - பாலைநிலம். **ஓமசாலை** - யாக குண்டம். **பிரணவம்** - ஓம்காரம். **யாமளா** - உமாதேவி. **செபித்தல்** - உருவேற்றல்.

பொது வசனம்

அகோ தெப்படி யென்றால் குருகுல சிரேஷ்ட்டனாகிய துரியோதன மகாராசன் காளமாமுனியைக் கொண்டு யாகஞ்செய்யும்படி திட்டஞ் செய்ய அந்தக் காளமாமுனிவர், அந்த யாகத்துக்குண்டாகிய திரவியங்கள்ள வரவழைத்துக்கொண்டு ஒரு பர்வதச் சாரலில் கள்ளிக்காடுகளுடைய பாலை நிலத்தில் யாககுண்டஞ் செய்து அந்த சிவ சொரூபியாகிய யாமளாதேவியைச் செபித்து அந்தக் குண்டத்தின் தென்பாலுக்ரமாக யாகஞ்செய்து கொண்டிருந்தார். இப்பால் பாண்டவாள் துருபதாதேவி வாளமித்ர ரிஷி வனத்தில் அற்ற நெல்லிக்கனியைப் பொருந்தச் செய்து அம்முனிவனது விடை பெற்றுக் கொண்டு சிந்து முனிவனத்துக்குப் போவோமென்று ஆலோசித்து வருகிற விதம் எப்படி என்றால்.

சு.சொ : 1. படர்தறு 2. மதிபித்தி

Poem of Author

Thus the sage grows the holy fire of *yakña*
on a parched clearing in the **Himālāyās**,
chanting the Mantrā "*Om*", meditating on Goddess **Pārvati**.

Author's Dialogue :

So it happens thus. As **Turiyōtanaṉ**, the exalted one of the **Kuru** line has planned to have a *yakña* performed, **Kāḷamāmuṉi** having got all the condiments for the purpose prepares the *yakña* pit at a site on a Cakti-studded hill-side, invoking the blessings of the Goddess **Pārvati**, and conducts the *yakña* on the southern side. And here at the same time at the hermitage of **Vāḷamitra Riṣi**, the wife of the **Pāṇṭavās**, **Turupatā Dēvi (Traupati)** having restored the fruit of *Nelli* to its branch of the tree, take leave of the **Riṣi**, decides to go the *Āsram* of **Viṣṇu Citta.**

49. பாண்டவர் – திபதை

மதிகுலத் ததிபன் பாண்டு மைந்தர்க ளைந்து பேரும்
துதிமிகு துரப தேயன் தோன்றல்பாஞ் சாலி யோடும்
குதிதரு மாமித் ரன்றன் கனியதைப் பொருந்தச் செய்து
பதிபுகழ் விண்டு சித்து பண்ணவ னடவி வாரார்.

சந்திர வம்சத்து அரசன் பாண்டு மகாராசனின் மைந்தர்கள் ஐந்து பேரும் போற்றுதற்குரிய பாஞ்சால நாட்டு மன்னன் துருபதனின் மகளாகிய பாஞ்சாலியோடும் வாளமித்திர ரிஷி வனத்தில் மரத்திலிருந்து விழுந்த நெல்லிக் கனியை மீண்டும் பொருந்தச் செய்து அம்முனிவனிடம் விடைபெற்றுக் கொண்டு இப்பூமியில் புகழ்ந்து போற்றப்படுகிற விஷ்ணு சித்து முனிவனத்துக்கு வருகிறார்கள்.

மதிகுலம் – சந்திரவம்சம். **ஆதிபன்** – அரசன். **பாண்டு மைந்தர்** – தருமர் முதலான ஐவர். **துதி** – துதித்தல், போற்றுதல். **கதி** – அடைக்கலம், **துருப தேயன்** – பாஞ்சால நாட்டு அரசன். **தோன்றல்** – புதல்வி. **பாஞ்சாலி** – துருபதன் மகள். **விண்டுசித்து** – விஷ்ணு சித்தர். **அடவி** – காடு.

The five sons of **Pāṇṭu**
of Chandra line with their wife,
the daughter of **Turupataṉ**,
the reputed ruler of **Pāñcālam**
after restoring the fruit of *Nelli*
to the tree at the *Āsram* of **Vāḷamitra Riṣi**,
take leave of the **Riṣi**
and arrive at the famous **Viṣṇu Citta**'s hermitage.

50. தரு

ராசாதிபர்கள் புகழ் தேசுலாவிய திகழ்
ராச ரைவரும் வாராரே
        பாசாதி கடும் ஞான பண்ணவர் புடைநேர
        தாசாதி தாசர்களாய் தருமர் பாதிவீர
தம்பிமா ரினிய வின்சொல் லியம்பிட
பம்பு மாரழல் பயந்த வளுடனிதோ (ராசாதி)
        துரியன் வஞ்சகபட சூதாய் தேசங் கைக்கொண்டு
        பிரியச் செய்தா னென்றெண்ணி பிறங்குந் தவமார் விண்டு
பீடுறு சிந்துமா முனிவனம் நாடியே
வாடுநெஞ் சினர்களாய் முனிவ ரோடிதோ (ராசாதி)
        ஆதி மாதவ னெழிலடி யிணையைத் துதித்து – இந்த
        நீதி நமக்கு முன்னம் நேர்ந்த தென்றே மதித்து
நீடுமால் வரை கானாறு கடந்து
பாடுவேண அரும்பாடுகள் பட்டிதோ (ராசாதி)
        மேவுமகத் துன்பத்தை வேதோத்தமர் விலக்க
        தாவிவரும் பாஞ்சாலி தளர்வைக் கண்டு சலிக்க
தருமராதிபர்க ளருமறை யோரும்
மருவி சூழ்தர வாராரிதோ பாரும்
        ராசாதிபர்கள் புகழ் – தேசுலாவிய திகழ்
        ராச ரைவரும் வாராரே.

வீரமும் அழகும் பொருந்திய எல்லா அரசர்களாலும் புகழப்படுகின்ற பாண்டவர் ஐவரும் வருகிறார். பந்த பாசங்களை நீக்கி ஞானத்தைப் பெற்ற முனிவர்கள் புடைசூழ அடியவர்களுக்கடியவராய் மிகுந்த வீரத்தையுடைய தம்பிமார்கள் தருமரிடத்தில் இனிய சொல் கூறிட, கொழுந்து விட்டு எரிகின்ற நெருப்பிலே தோன்றியவளாகிய பாஞ்சாலியுடன் ராசர் ஐவரும் வருகிறார். வஞ்சகத் துரியோதனன் சூதினால் தேசம் முழுமையும் விட்டுப் பிரியச் செய்தான் என்று எண்ணித் தவம் நிறைந்த விண்டு சிந்து முனிவனம் நோக்கிச் சோர்வுடைய உள்ளத்தினராய் முனிவர்களுடன் ராசர் ஐவரும் வாரார். முழுமுதலானவனான திருமாலின் அழகுடைய பாதத்தினை மனத்தில் துதித்து இந்த முறைமை நமக்கு முன்னே நேர்ந்தது என்று எண்ணி, நீண்டு உயர்ந்த மலையையும் ஆறுகளையும் கடந்து கொடுந்துன்பங்களடைந்து ராசர் ஐவரும் வாரார். உண்டாகும் மனத்துன்பத்தை வேதங்களை ஓதுகின்ற பார்ப்பனர்கள் விலக்க விரைந்து வரக்கூடிய பாஞ்சாலியின் சோர்வைக் கண்டு சலித்து தருமரும் தம்பிமாரும் நான்கு வேதங்களைக் கற்றோரும் வருகிறார்கள்.

தேசு – அழகு, பலம், வீரம். **தாசர்** – அடிமை. **பண்ணவர்** – தேவர்கள், முனிவர்கள். **பம்பு** – மேலெழும்பு. **அழல்** – தீக்கொழுந்து. **பிறங்கு** – ஒளிவீசல். **தவமார்** – தவம்நிறைந்த. **பீடு** – பெருமை. **வாடுதல்** – உடல் உலர்தல். **மாதவன்** – விஷ்ணு. **மதித்து** – எண்ணி. **கானாறு** –

காட்டாறு. **வேதோத்தமர்** – வேதம் கற்று உயர்ந்தவர்கள். **தளர்வு** – சோர்வு. **அருமறை** – மேலான வேதம்.

வசனம்

அகோதெப்படி யென்றால் பன்னக சாலையிலிருக்கும் துரௌபதா தேவி வருகிற விதம் யெப்படி என்றால்?

Taru

The brave and handsome five,
celebrated by the Kings the world over arrive.
Accompanied by the wise sages,
free of all bonds and ties,
the humble of the humble,
the four younger ones,
soft-spoken and respectful to **Tarumar** the eldest,
and the fire-born **Pāñcāli**,
their wife – all come along. (The brave)
The thought of having lost their Kingdom
in a tricky game of dice
still engaging their mind,
a bit tired,
the **Pāṇṭavās** have come along on their way
to the ***Āsram*** of **Viṣṇu Cittā.** (The brave)
Meditating on the holy feet of Lord **Viṣṇu**,
the Absolute and the First,
having lived through all the heavy odds,
they have travelled along passing
the high mountains and crossing the rivers and jungles. (The brave)
As Vēdās chanting Brahmins
relieve them of their pain and agony,
a tired-looking **Pāñcāli**
following **Tarumar** and his brothers
arrive in the company of Vedic scholars. (The brave)

51. துரோபதை தேவி – விருத்தம்

மருவுபாஞ் சாலன் செய்யு மகத்தினிற் பிறந்து நல்ல
குருகுலத் தைவ ருக்குக் கோதிலாப் பன்னி யாள்தான்
[1]திருகுறு துரியன் செய்த [2]தீதினால வனத்தில் வாசம்
புரிபவர் பின்பாஞ் சாலன் பூவைதுரோ பதையும் வாறாள்.

பாஞ்சால நாட்டை ஆட்சி புரிகின்ற மன்னன் துருபதன் செய்த யாகத்திலே பிறந்து குருகுலத்து ஐவருக்கும் குற்றமில்லாத மனைவியாகிய துரோபதை வஞ்சனையுடைய துரியோதனன் செய்த சூழ்ச்சியால் கானகத்திலே வாசம் புரியும்படி நேர்ந்த பாண்டவர் பின்னால் வருகிறாள்.

மருவு – பொருந்திய. **மகம்** – வேள்வி. **குருகுலம்** – கௌரவர் பாண்டர்குலம். **கோதிலாள்** – குற்றமற்றவள். **பன்னியாள்** – மனைவியாள். **திருகு** – வஞ்சனை. **தீது** –தீமை. **பூவை** – பெண். **துரோபதை** – பாஞ்சால நாட்டு அரசன் துருபதன் மகள்; பாஞ்சாலி.

க.சொ : 1. திருகுரு 2. தீதுனால்.

Turōpatai - *Viruttam*

Born of the *Yakña*
performed by **Turupata<u>n</u>**
the proud ruler of **Pañcālam**
and wedded to the kurukula brothers of five,
the faultless **Turōpatai**
victimized by the treacherous **Turiyōta<u>n</u>a<u>n</u>**,
and having endured the
misfortune of a life in the jungle
is now back along with them.

52. தரு

மதிவதன சிங்காரி ரதியின் ஒய்யாரி
மாது துரோபதை வந்தாள்
துதிமிகு பாஞ்சாலன் தொடுத்த யாக பத்தினி
கதிதரும் அறமுரு கலந்த ஞான சத்தினி
[1]காரை யொத்த குழலா[2]ரிரு புறம்வர
சீரை யொத்த விழியாள் வழியருள் மிகுதர (மதிவதன)

[3]சுந்தர பஞ்சவர் பாரி மாய
தந்திரனைத் துதிக்கு நல்லிவ காரி
அந்தமிகுந்த வெழிலார்ந்த அன்ன நடையாள்
தந்துவி னடங்கிய தகமைசேர் சித்திடையாள்
தண்டை கிண்கிணி சதங்கைகள் கலீலென
அண்டர் மாதரிவ ளழகினி லுயர்வென (மதிவதன)

சந்திரன் போன்ற முகத்தையுடைய ரதிதேவியை விட மிகுந்த ஒயிலையுடைய துரோபதை வந்தாள். போற்றுதலுக்குரிய மன்னன் பாஞ்சாலன் செய்த யாகத்தில் தோன்றிய பத்தினியும் அறமும், வீரமும் ஒருங்கே சேர்ந்த ஐந்து சத்திகளுள் ஒன்றான ஞான சத்தியுமாகிய துரோபதி, மேகம் போன்ற கூந்தலையுடைய பெண்கள் இருபுறமும் வர மிகுந்த அருள் தரும் அழகிய கண்ணினையுடையவளாய் வந்தாள். அழகிய பாண்டவர்களின் மனைவியும் திருமாலைத் தினமும் வணங்கும் நல்லறிவுடையவளும், ஒழுங்கும், அழகும் நிறைந்த அன்னம் போன்ற நூலினும் மெல்லிய இடையையுடையவளும் ஆகிய துரோபதி தண்டை கிண்கினி சதங்கைகள் ஒலி செய்ய, இவள் அழகினில் உயர்ந்தவள் என வானுலக மாதரும் கூறுமாறு வந்தாள்.

வதனம் – முகம். **சிங்காரம்** – ஒய்யாரம். **அலங்காரம்** – ஆடம்பரம். **தொடுத்தல்** – உருவாக்குதல். **யாகபத்தினி** – துரோபதை. **மறம்** – வீரம். **ஞானசத்தினி** – ஐந்து சத்திகளுள் ஒன்றான ஞான சத்தியைப் பெற்றவள். **கார்** – மேகம். **குழல்** – கூந்தல். **சீர்** – அழகு, சிறப்பு. **சுந்தரம்** – அழகு. **பாரி** – மனைவி. **அந்தம்** – ஒழுங்கு. **தண்டை, கிண்கினி, சதங்கை** – காலணிகள். **மாதவர்** – மிக்க தவத்தையுடையவர். **அண்டர்** – வானோர்.

ச.சொ : 1. காறை 2. ரிருபுரம் 3. றனைதுத்துக்கு.

Taru

Turōpatai, with her moon-like facial charm, endowed with a gait,
fascinating more than that of **Rati**, has arrived.
Born of the yagna raised by the famed king of **Pañcālam**,
a virtuous woman of exemplary character,
and manifestation of one of the Five virtues – namely **Ñāṉacakti**,
arrives accompanied by fair maidens,
gifted with cloud-hued locks of hair.
The beautiful wife of the **Pāṇṭavās**, **(Turōpatai)**
a constant worshipper of Lord **Viṣṇu**,
blessed with the dignity of a Swan,
endowed with a yarn-thin waist, comes along,

her anklets majestically jingling and her eyes exuding grace.
Even the maidens of the heaven above stand wonder-struck.

(Turōpatai)

53. துரோபதை – விருத்தம்

என்னுயிர்க் குயிர தான என்னிட கணவ மாரே
மன்னவ ரைவ ருங்கள் மலரடி [1]போற்றி போற்றி
பன்னக சாலையிலே நானும் பரிவுட னிருக்க யிப்போ
என்னையு மழைத்த சேதி யின்னதென் றுரைசெய் வீரே.

போற்றி – சரணம். **பன்னக சாலை** – முனிவர்வசிக்கும் புல்வீடு. **சேதி** – செய்தி.

துரோபதை வசனம் :

கேளும் என்னுயிர்த் துணைவராகிய கணவமார்களே! உங்களது பாதார விந்தத்திற்கு மடியாள் சரணம். பன்னக சாலையிலிருக்கும் என்னை அழைப்பித்த சேதி யின்னதென்று திருவுளம் பற்ற வேண்டுமையா சுவாமி.

திருவுளம் பற்றுதல் – கூறுதல்.

சு.சொ : 1. போத்தி.

தர்மர் வசனம்

கேளும் பெண்ணே துரோபதா! இதுவரைக்கும் நாம் இந்த மித்திரரிஷி வனத்திலிருந்தோமே. சிந்துமுனி வனத்துக்குப் போக வேண்டும். வாரும் பெண்ணே துரோபதா.

துரோபதை வசனம்

அப்படியே! மகா பாக்கியமையா சுவாமி.

Turōpatai – *Viruttam*

My dear husbands like my soul
I bow the lotus like feet of the five of you.
Please be kind enough to tell me
why you have brought me
while I was in my parlour

Dialogue

Tarumar: Let me tell you, dear **Turopatā**, so far we have stayed at this **Mitrariṣi** hermitage and now we are leaving for **Sintumuṉi** ***Āsram***. Please come along.

Turōpatai : So will I do dear, as it is my good fortune.

54. பாண்டவர் – விருத்தம்

அண்டர்கள் புகழு முண்ட காரண்ணியந் தனைவிட் டைவர்
தண்டகா ரண்ணியம் வந்து தம்பிமார் தைய லோடும்
வண்டணி சோலை பாங்கர் மார்க்கமாய் விதியை மாயன்
எண்டரு முளரித் தாளை யுன்னியே [1]ஐவர் வாரார்.

வானோர்கள் புகழ்கின்ற முண்டக வனத்தை விட்டுத் தம்பிமார்களோடும் துரோபதையோடும் தருமர் தண்டக வனம் வந்தார். வண்டுகள் மொய்க்கின்ற சோலைப் பக்கம் திருமாலின் தாமரை போன்ற திருவடியையும் விதியையும் நினைத்து ஐவரும் வந்தனர்.

அண்டர் – வானோர். **தண்டகாரண்ணியம்** – தண்டகவனம், (தக்கண தேசத்தில் துறவிகள் மிக்க வசித்து வந்த ஒரு வனம்). **தையல்** – பெண். **வண்டணி** –வண்டுகள் மொய்க்கின்ற. **பாங்கர்** – பக்கம். **முளரித்தாளை** – தாமரை போன்ற திருவடிகளை. **உன்னி** – நினைத்து.

க.சொ : 1. யைவர்.

Pāṇṭavar - *Viruttam*

Tarumar along with the other brothers and **Turōpatai**
leaves the God-hailed *Muṇṭakāraṇyam*[1]
and arrives at the *Taṇṭakāraṇyam*[2] bee-humming haven
with their thoughts fixed on the Lotus feet of **Viṣṇu**
and the misfortune they have undergone.

1. *Muṇṭakāraṇyam* – The forsest where there are many lotus flowers.
2. *Taṇṭakāraṇyam* – A forsest in the South India.

55. குருகுலத்து ராச ரைவரும் வனம் வருதல்

நாடியே வாரார் – மருவனத்தைத்
தேடியே வாராரே
நேசமாகவே வீமன் நெறியுள அர்ச்சுன ராசன்
பாசமுடன் நகுலன் பகருஞ் சகாதேவன் சூழ
பத்தினி [1]நலமிகு உத்தமி யாவரும்
நத்திய பணிசெயும் சத்தித் ரோபதையுடன்
துரியன்வஞ் சகத்தினால் சூதாடிச் செல்வமெல்லாம்
பரிவாகவே கொடுத்து [2]பரதேசிகள் போலவே
பாடுவே னதடர் காடதில் பட்டு
நீடுதுய ரதிக மோடெதிர் வனமதில்

ராசன் குருகுலத்து ராசர் ஐவரும் வனம்
நாடியே வாரரே – மருவனத்தைத்
தேடியே வாராரே.

குரு குலத்து ராசர் ஐவரும் மணம் பொருந்திய வனத்தை விரும்பித் தேடி வருகிறார். அன்புடைய வீமனும், நெறி தவறாத அர்ச்சுனராசனும், பரிவுடைய நகுலனும் சோதிடத்தில் சிறந்த சகாதேவனும் சூழ, கற்புடைய பெண்கள், உத்தமிகள் விரும்பிப் பணி செய்யக்கூடிய சத்தியாகிய துரோபதையுடன் வஞ்சகன் துரியோதனன் செய்த சூதினால் செல்வங்கள் அனைத்தும் அன்புடன் கொடுத்து இரப்பவர் போல் அடர்ந்த கானகத்தில் மிக்க துன்பம் அடைந்து ராசர் ஐந்து பேரும் மணமிக்க வனத்தைத் தேடி வருகிறார்.

மருவனம் – மணம் பொருந்திய வனம். **நேசம்** – அன்பு. **பத்தினி** –திரௌபதி, **நத்திய** – விரும்பிய. **வஞ்சகம்** – கபடம், வஞ்சனை. **பரதேசிகள்** – இரப்போர், பிச்சைக்காரர்கள். **பாடு** – துன்பம். **வேனது** – வேண்டிய மட்டும். அடர்காடு – மரங்கள் அடர்ந்த காடு.

சு.சொ : 1. னுலமிகு 2. பறதேசிகள்.

The arrival of Pāṇṭavās

The five of the *Kuru* line come along
in search of a sweet-smelling jungle resort.
Beloved **Vīma<u>n</u>**, straight-forward **Arccu<u>n</u>a<u>n</u>**
affectionate **Nakula<u>n</u>** and the astrologer -brother **Cakātēva<u>n</u>**
make their way followed by a band of Chaste women
faithfully attending on **Turōpatai** all the while,
lamenting over the loss of everything caused by cruel **Turiyōta<u>n</u>a<u>n</u>**.
They look like ones who had given up their assets, and helpless,
having come treading the dark dense jungle path.

56. தர்மர் – திபதை

வாருமென் [1]தம்பி மாரே மருவிநாம் யிவ்வ னத்தில்
நேருட [2]னிருந்து வஞ்ச [3]னியமித்த காலந் தள்ளி
சாருவோம் பின்பு நீங்கள் சந்தோஷ மாக வேதான்
காரிகை யோடு நாமும் கலந்தொரு மித்து நாமே.

வசனம்

ஆகோ! வாருங்கள் தம்பிமார்களே! அந்தக் கபட வஞ்சகனாகிய துரியோதனன், நியமித்த வனவாசம் பன்னிரண்டு வருஷத்தில் இன்னும் சில நாளிருக்கின்றது. அதுவரையில் இந்த விண்டு சிந்து முனிவனத்தில் இருந்து பின்பு அக்கியாத வாசம் போவோம் நீங்கள் மனந்தளர்வை யடையாமல் இருங்கோள் தம்பிமார்களே!

மருவி – பொருந்தி. **நேருடன்** – நேர்மையாக. **வஞ்சன்** – வஞ்சகனாகிய துரியோதனன். **நியமித்த** – கட்டளையிட்ட, வகுத்த. **சாருவோம்** – அடைவோம். **காரிகை** – பெண். **ஒருமித்து** – ஒற்றுமையாக.

க.சொ : 1. தம்பிமாறை 2. திருந்து 3. நியமித்த.

பொதுவசனம்

இப்படியாக அந்தப் பாண்டவாள் அனேகம் பிராமணாள் அனேக முனிவர்கள் சூழத்தக்கதாக இருக்கும் போது பாண்டவாளை ரக்ஷிக்கும் பொருட்டாய் ஸ்ரீகிருஷ்ண மூர்த்தி வருகிற விதம் எப்படியென்றால்.

Tarumar - *Tipatai*

Welcome my dear brothers!
Exiled by that wicked **Turiyōtan̲an̲**
our life in the forest for a period of twelve years
is just coming to a close barring a few days.
We shall sojourn here at the **Viṣṇu Cittā**'s hermitage
for the remaining days.
Please take heart and don't give up.

Voice: Thus the **Pāṇṭavās**, while found in the company of Brahmins and sages, await the arrival of Lord **Kriṣṇa**, their protector.

57. கிருஷ்ண தேவர் – திபதை

சீர்பெறு வைகுந் தத்தில் சிறந்தளித் துலகைக் காக்கும்
[1]தார்பெறு துளப மாயன் சதுர்பெறு நந்தன் பாலன்
ஏர்பெறும் [2]ஐவர் தம்மை யியலுடன் காக்க வேண்டி
கார்பெறு வண்ண கிருஷ்ணன் களிப்பொடு வருகின் றாரே.

சிறப்புப் பொருந்திய வைகுந்தத்தில் சிறப்புடன் உலகைக் காக்கும் துளபமாலையுடைய திருமால், திறமையுடைய நந்த கோபாலன் மகனாகிய கரிய நிறமுடைய கிருஷ்ணன், அழகுடைய பாண்டவர்களை காப்பாற்ற வேண்டி மகிழ்வுடன் வருகின்றார்.

சீர் – சிறப்பு. **வைகுந்தம்** – திருமாலின் இருப்பிடம். **தார்** – மாலை. **துளபம்** – துளசி. **மாயன்** – திருமால். **சதுர்** – திறமை. **நந்தன்** – நந்த கோபாலன். **பாலன்** – மகன். **ஏர்** – அழகு. **கார்** – கருமை.

க.சொ : 1. தார் பெரு 2. மைவர்.

Arrival of Kriṣṇa Tēvar - Tipatai

Very happily here comes
The dark-hued **Kriṣṇā**

Son of **Nantakōpan,**
Who is none but Lord **Viṣṇu** of **Vaikuntā**,
The protector of the Universe.

58. கிருஷ்ணன் – தரு

ஆதிகோபால கிருஷ்ணன் ஐவரைக் காக்கவே
ஆதி துரிசாக வாரான்
ஓதுந் துவாரகை விட்டுஉம்பர் துதிக்க – வெகு
நீதியுட னே[1]அரி நெடிய மாயவனும்
நேர்த்திய தாகவே நாற்றிசை புகழ்ந்திட
போற்றிடும் ஐவரைக் காத்திடவே – யிதோ (ஆதி)
நவமணி மகுடமும் நலமுடனே யிலங்க
பவமகற்றி யசோதை பால கிருஷ்ணனும் – வெகு
பலமணி மகுடமு மிலகிட துவாரகை
தலமது விட்டிதோ நலமது தருகவே
துரியன் செய் வஞ்சகத்தைச் சூதாக்கிப் பஞ்சவரை
பரிவோடினிது பாக்க பாலகிருஷ்ணனும் – எழில்
பாங்குட னைவரைத் [2]தீங்கறக் காக்கவே
ஓங்கிய யருண்மிகு தாங்கிய பரம – னிதோ
மலைகள் வனங்கடந்து வாய்வேக – மாகவே
பலமுள பாண்டவரைப் பாதுகாத் தருள்செய்ய
பண்ணவ ருயர்தரு விண்ண வருந்துதி
நண்ணிய [3]கார்நிற வண்ணனுமே – யிதோ
ஆதி கோபால கிருஷ்ணன் ஐவரைக் காக்கவே
ஆதிதுரு சாக வாரான்.

கோபால கிருஷ்ணன் பாண்டவர்களைக் காக்க விரைவாக வருகிறான். துவாரகையை விட்டுத் தேவர்கள் துதிக்குமாறு நாற்றிசையும் போற்றுகின்ற பாண்டவரைக் காக்க மாயவன் வருகின்றான். நவரத்தின மகுடம் தலையிலே விளங்க பிறவித் துன்பத்தை அகற்றிய யசோதை மகனாகிய பாலகிருஷ்ணன் துவாரகையை விட்டு நலம் தர வருகிறான். துரியோதனன் செய்த வஞ்சகத்தை அழித்துப் பாண்டவர்களை அன்போடு காப்பாற்றுவதற்கு அருளுடைய பரமன் வருகிறான். மலைகளையும், காடுகளையும் கடந்து காற்றைப் போல வேகமாக, பலமுள்ள பாண்டவரைக் காத்தருள் செய்ய, முனிவரும், தேவரும், துதிசெய்யும் கரியநிறத்தையுடைய பாலகிருஷ்ணன் ஐவரைக் காக்க வருகிறான்.

துரிசு – விரைவு. **துவாரகை** – கிருஷ்ணனுடைய இடம். **உம்பர்** – தேவர். **துதிக்க** – போற்ற. **அரி** – திருமால். **நலமணி** – ஒன்பது ரத்தினம். **மகுடம்** – முடி. **இலங்க** – விளங்க. **பவம்** – பிறவித்துன்பம். **தலம்** – பூமி. **பரிவு** – அன்பு. **பாங்கு** –அழகு. **பரமன்** – கடவுள். திருமால். **வாயு** – காற்று. **பண்ணவர்** – முனிவர். **விண்ணவர்** – தேவர். **கார்** – மேகம்.

க.சொ : 1. அறி 2. தீங்கர 3. காற்நிர

பொதுவசனம்

அகோ தெப்படி யென்றால் ஸ்ரீகிருஷ்ண மூர்த்தி எமனை நினைக்க எமன் வருகிறவிதம் எப்படி யென்றால்.

Krisnan - *Taru*

Lord **Gōpālakrisṇā** will be here in no time to take care of **Pāṇṭavās**.
leaving **Tvārakā**, he is coming to save the **Pāṇṭavās**,
Who the gods of all the four directions praise.
The one who wears the gem-decked crown
and dispels the Karma cycle,
The son of **Yasōta**, will be presently here to do good to the **Pāṇṭavās**.
to overcome the wicked design of **Turiyōtanan**,
the all-merciful Lord is coming,
passing all along mountains terrains and jungles.
He is hurrying as fast as the wind in order
to sustain the **Pāṇṭavās** through their crisis,
The Lord whom gods and sages worship.

Speech in prose:

Then it happens, when the Lord **Krisṇā** thinks of **Yamā**, the god of death, **Yamā** gets ready to appear.

59. எமன் – திபதை

கருநிறக் கடாவி லேறி கையினிற் சூல பாசம்
பெருமையோ டேந்தி மாயன் பேசுநன் மொழியே தென்று
திறமொடு கால தூதர் சேவித்து சூழ்ந்து நண்ண
[1]தருமநல் லியமன் தானும் சதிருடன் வருகின் றானே.

கருமை நிறமுடைய எருமைக் கடாவிலேறிக் கையில் சூலமும் பாசக்கயிறும் வைத்துக் கொண்டு மாயன் நம்மை எதற்கு அழைத்தான் என்று எண்ணிக் கொண்டு எமதூதர்கள் வணங்கி சூழ்ந்து வர எமதர்மன் சதுராடிக் கொண்டு வருகிறான்.

கருநிறக்கடா – கருமை நிறமுள்ள எருமைக்கடா. **சூலம்** – சூலாயும். **பாசம்** – கயிறு. **ஏந்தி** – தாங்கி. **காலதூதர்** – எமதூதர், கிங்கரர். **சேவித்து** – வணங்கி. **நண்ண** – நெருங்கிச் சூழ்ந்து வர. **தருமன்** – எமதருமன். **சதிருடன்** – திறமையுடன்.

க.சொ : 1. தறுமனல்

The appearance of Yama<u>n</u> - *Tipatai*

'Why should the Lord summon me?
So brooding **Yama<u>n</u>** getting on the back
of his black buffalo appears there,
accompanied by his troupe, sporting spear and cord.

60. எமதர்மராசன் – தரு

எமதர்மராசன் வாரான் மாயவன் முன்னே
எமதர்மராசன் வாரான் எமதர்மராசன் வாரான் (எமதர்ம)

எருமைக் கடாவி லேறி
அமையுங் காலதூதர் ளாக்ரமித்தே சீறி (எமதர்ம)

கையிற் சூலமும் பாசக் கயிறும் பாலாவுங் கொண்டு
வையக நடுங்க மாயன் மலரடியுங் கண்டு (எமதர்ம)

கால தூதரும் புடைகலந் தடியினிற் [1]றாழ
சாலவே ஐவர்பிழை தடுத்தவ ரென்றுமன் வாழ (எமதர்ம)

[2]நெரித்த விழியுமீசை நெருப்பு வெண்கோரப் பல்லும்
பெருத்த மேனியு மாக பெருமையுடன் மாயன்முன் (எமதர்ம)

எமதர்ம ராசன் எருமைக்கடாவிலேறி, காலதூதர் சூழ, திருமால்முன்னே வருகிறான். கையில் சூலமும், பாசக்கயிறும், கையீட்டியும் கொண்டு உலகம் நடுங்க, திருமாலின் மலர் போன்ற அடியைக் கண்டு எமதர்மராசன் வருகிறான். காலதூதர்கள் பக்கத்தில் சேர்ந்து அடியை வணங்கவும் ஐவர்கள் பிழைத்து மக்கள் என்றும் வாழவும் எமதர்மன் வருகின்றான். அனல் கக்கும் விழியோடு வெண்மையான கோரப்பற்களுடன் பெருத்த உடலுடன் திருமால் முன் எமதர்மன் வந்தான்.

மாயவன் – திருமால். **ஆக்ரமித்து** – சூழ்ந்து. **பாலா** – கையீட்டி. **மலரடி** – மலர் போன்ற பாதம். **சாலவே** – மிகவே. **புடை** – பக்கம். **அடுத்தவர்** – மக்கள். **கோரப்பல்** – வாயின் இரு ஓரமும் நீண்டுள்ள பற்கள். **மேனி** – உடல்.

க.சொ : 1. துடியினிறறாழ 2. நேறித்த

Yamatarmarāca<u>n</u> - *Taru*

Yamā, the god of death riding on his black buffalo
along with his troupe comes,

holding the spear and the cord in his hands,
his posture threatening the worlds,
his searching eyes fixed on the lotus feet of Lord **Viṣṇu.** **(Yamā)**
He bows to feet of the Lord
so that the **Pāṇṭavās** five can survive
and the people live on in peace.
His eyes fire-shedding, his teeth- now terror-striking,
the big –statured **Yamā** appears before the Lord. **(Yamā)**

61. எமன் – திபதை

வந்திடு மெமனு மாயன் மலரடி வணங்கி நின்று
எந்தனை நினைத்த தேதோ இன்னதென் றுரைத்தாற் செய்வேன்
கந்தநற் றிருவின் மாலே கருணையங் கடலே யாவுந்
தந்தவுந் தியனே ஞான தற்பரா னந்த வாழ்வே.

வந்த எமன் திருமாலின் மலர்போன்ற பாதங்களை வணங்கி நின்று, “என்னை நினைத்த காரணம் என்ன? இன்னதென்று சொன்னால் செய்வேன் மனம் பொருந்திய திருமகளின் கணவனே! கருணைக் கடலே! உலகம் யாவையும் படைத்த நான்முகனை ஏந்திய கொப்பூழை உடையவனே! ஞானத்தையும் மேலான ஆனந்தத்தையும் தருபவனே!” (என்றான்.)

கந்தம் – மணம். உந்தி – கொப்பூழ். பரானந்தம் – மேலான ஆனந்தம்.

Yaman̲ - *Tipatai*

Paying his obeisance to the Lord,
Yaman̲ now stands up and speaks:
Lord! The compatible consort of
Goddess **Lakṣmi**!
Please speak to me of the task
I have been called upon for.
I will do as you please,
O the Sea of compassion!
The bearer of the creator, **Brammā** in your Navel.
The giver of wisdom and bliss!
Tell me the task I have been summoned for.
I'll do as you please.

62. கிருஷ்ண தேவர் – திபதை

வந்தவை குந்த நாதன் வாகைசே ரெமனை யுன்ன
முந்திவந் தடிப ணிந்த முரணெமன் [1]தன்னை நோக்கி
குந்திதன் [2]புதல்வர் மாள கொடியனோர் முனியால் வேள்வி
வந்திடும் பூதந் தன்னால் மாய்க்கவே யெண்ணி னானே.

வைகுந்தத்தை இருப்பிடமாகக் கொண்ட திருமால் (கிருஷ்ணன்) வெற்றியுடைய எமனை நினைக்க, முன்னே வந்து அடியை வணங்கிய எமனை நோக்கி, "கொடியோனான ஓர் முனிவன் செய்யும் யாகத்தில் பிறந்திடும் பூதத்தினால் குந்தி மைந்தர் ஐவரையும் மாய்ப்பதற்கு எண்ணினான் துரியோதனன்" என்று கூறினார்.

வைகுந்த நாதன் – வைகுந்தத்தில் வாசம் செய்யக்கூடிய திருமால். **வாகை** –வெற்றி. **முரண்** – வலிமை. **குந்தி** – பாண்டவர்களுடைய தாய். **வேள்வி** – யாகம்.

சு.சொ : 1. றன்னை 2. புதவற்.

Kri ṣṇa Tēvar - *Tipatai*

Lord **Kri** ṣṇā of **Vaikuntā** thought of **Yamā**,
who instantly surrendered himself at the feet of the Lord,
and spoke to him of the evil design of **Turiyōta<u>n</u>a<u>n</u>**
to end the lives of **Kunti**'s five sons
by a demon raised from the *yākā*
performed by a pitiless sage.

63. கிருஷ்ணன் எமன் உரையாடல் – தரு

சீரார் தருமச் செங்கோல் நேராய் நடத்துகின்ற
தீரா வெண்னருகில் வாயெம ராசே
பாரோர் விண்ணோர் பாதலர் பரவித் துதிக்குமலர்
பாத சரணம் அரிகோ விந்தா

தஞ்ச மொருவ ரில்லாப் பஞ்சவர்களைக் காக்கும்
தருண முதவி செய்வா யெமராசே
அஞ்சன [1]வண்ணா வுன்ற னருளா லைவரைக் காக்கும்
அருமை தன்னை யுரையுங் கோவிந்தா

கபடன் [2]துரியனொரு கால முனியால் யாகங்
கருதிச் செய்ய விசைந்தான் எமராசே
தபசியால் யாகஞ் செய்யுந் தன்மையி னுண்மையை
தயவோ டினிது ரைப்பாய் கோவிந்தா

யாகமொன் றியற்றி யதில்வரும் பூதத்தா லைவரை
மாய்க்கவே யெண்ணி னான்யெம ராசே
சகமெச் சிடவேயிந்தத் தகமைக் கென்னநான் செய்வேன்
தந்திர முரைத்தி டுங்கோ விந்தா

சிந்து முனிவனத்தி லந்தண ருடனைவர்
சேர்ந்திருக் கின்றார் பாராயெம ராசே
குந்தி பாலகரைக் கண்டெந்த வகைபுரிவேன்
கோதை யசோதை சுதனே கோவிந்தா

நாடறிய மானாய்நீ யோடிப் பூசுரன் பூணூல்
நற்கொம்பில் மாட்டி யேகாயெம ராசே
தேடரி தான மோனவீ டதனைத் தருநாதா
செய்யா யின்னமும் விடைகோ விந்தா

மறையவன் பொருட்டைவர் மான்பின் வருவார் சோகம்
வாய்க்க அலைதல் செய்வா யெமராசே
குறைவிலப் பணிசிரங் கொண்டே னதன்பின் செய்யுங்
குறியறியச் சொல்லு வாய்கோ விந்தா

கொடிய தாகங் கொண்டைவ ரடவியிற் சலந்தேடி
கொலைத லலைதல் செய்வா யெமராசே
படியோர் புகழுந்தேவா அடியேனிவ் வண்ணம் செய்வேன்
பகருவாய் இன்னமும் விடைகோ விந்தா

நச்சுப்பொய்கை சிச்சித்து அச்சமிலந் நீருண்ண
நலிந்திறக்கச் செய்வா யெமராசே
[3]பச்சைமேனி யாயிந்தப் படிபுரிவே னின்னமும்
[4]பாலிப்பாய் வேணவரங் கோவிந்தா அந்த

வாகத் தெழுந்தபூதம் வேகமாய் வந்துபார்க்க
நலிந்தா ரைவரென் றேகும் எமராசே
யோகமா தவர்ஞான மோனாதீதர் புகழும்
உத்தமனே புகலாய் கோவிந்தா

சீறியே சென்றபூத மீறியே முனிவனைச்
சிதைத்து யாகத்திற் செல்லும் எமராசே
வீறுமட்ட மாதரோ டாதவ மாருடன்
விளையாடும் [5]லீலாவி நோத கோவிந்தா

பாண்டு மைந்தர்க் குயிருமீண்டு வரவருளைப்
பாவித்துக் காத்தருளுவா யெமராசே
ஆண்டவ னேயும தாக்கினைப் படிக்கிறான்
அன்பாய்ப் புரிவே னாளாய் கோவிந்தா.

கிருஷ்ணன் : அறம் தவறாத ஆட்சியை நேர்மையாய் நடத்துகின்ற அழகும் தீரமுமுடைய எமராசனே என்னருகில் வா!

எமன்: உலகத்திலுள்ளோர்களும் தேவர்களும் நரகர்களும் வணங்கிப் போற்றும் மலர்போன்ற பாதத்தையுடைய திருமாலே சரணம்.

கிருஷ் : அடைக்கலமும் துணையுமில்லாத பாண்டவர்களைக் காப்பாற்றுவதற்கு இதுவே நேரம். உதவி செய்வோய் எமதர்ம ராசனே.

எமன் : கருமை நிறம் பொருந்திய திருமாலே! உம் அருளால் ஐவரைக் காப்பாற்றும் மார்க்கத்தைக் கூறுங்கள் சுவாமி கோவிந்தனே.

கிருஷ் : வஞ்சகனாகிய துரியோதனானவன் காளமாமுனியால் ஒரு வேள்வியை வளர்த்துப் பாண்டவர்களைக் கொல்ல எண்ணியிருக்கிறான் எமராசனே.

எமன் : முனிவனால் வேள்வி செய்யும் தன்மையின் முறையை தயவு கூர்ந்து நீ கூறுவாய் அய்யா கோவிந்தனே.

கிருஷ் : சிந்துமா முனிகள் வாசம் பண்ணுகின்ற வனத்தில் அந்தணருடன் பாண்டவர்கள் இருக்கிறார்கள். பார்த்துக்கொள்வாய் எமராசனே.

எமன் : யசோதையின் பாலனே! குந்திதேவியின் மைந்தர்களைக்கண்டு எந்த முறையில் காப்பாற்றுவேன் கோவிந்தனே.

கிருஷ் : எல்லோரும் அறியும் வண்ணம் நீ மானாக உருக்கொண்டு ஓடி அந்தணனுடைய பூணூலைக் கொம்பிலே மாட்டிக் கொண்டு செல்வாய் எமராசனே.

எமன் : தேடுவதற்கு அரிய மோட்சத்தைப் பெற அருளும் நாதனே! எனக்கு விடைதாருமையா கோவிந்தனே.

கிருஷ் : நீ மானாகி ஓடும் பொழுது அந்தணனுக்காகப் பாண்டவர்கள் ஐவரும் உன் பின்னே வருவார்கள். அப்பொழுது சோகமும், துன்பமும் உண்டாகுமாறு அவர்களை அலைக்கழிப்பாய் எமராசனே.

எமன் : குற்றமற்ற இப்பணியைத் தலைமேல் ஏற்றுக்கொண்டேன். மேலும் உள்ள முறைமையைக் கூறுங்கள் கோவிந்தனே.

கிருஷ் : பாண்டவர்களுக்குக் கானகத்தில் கொடுமையான நீர்வேட்கையை உண்டாக்கி நீரைக் கண்டு தேடி அலையும் துன்பத்தை உண்டாக்கி அவர்களைக் கொல்வாய் எமராசனே.

எமன் : உலகோர் புகழும் தேவனே! தாங்கள் கூறியபடி இப்பணியைச் செய்வதற்கு விடைதரவேண்டும் கோவிந்தனே.

கிருஷ் : நஞ்சு நிறைந்த குளத்தை உருவாக்கி, அச்சமில்லாமல் பாண்டவர்கள் அந்த நீரைப் பருகிய பின் இறக்கச் செய்வாய்.

எமன் : பச்சை மேனியுடையவனே! தங்கள் கூறியபடி செய்வேன். இன்னும் செய்ய வேண்டியவை யாவை என்று அருள்புரிய வேண்டும் கோவிந்தா.

கிருஷ் : முனிவன் செய்த யாகத்தே வேகமாக எழுந்த பூதமானது வந்து ஐவரும் அழிந்தார் என்று வருந்திப் போய்விடும்.

எமன் : யோக முனிவரும் ஞானமோனாதீதர்களும் புகழும் உத்தமராசனே. மேலும் சொல்வாய் கோவிந்தனே.

கிருஷ் : கடுங்கோபத்துடன் சீறி எழுந்த பூதம் (பாண்டவர்கள் உயிருடன் இல்லாததைக் கண்டு மீண்டு) முனிவனைக் கொன்று மீண்டும் அக்கினியிற் செல்லும் எமராசனே.

எமன் : வீரமுடைய அட்டமாதராகிய ஊர்வசி, மேனகை, ரம்பை, திலோத்தமை, சமுகி, சுந்தரி, காமினி, காமவர்த்தினி, ஆகியோருடன் யாதவப்பெண்டிருடனும் லீலாவிநோத விளையாட்டைச் செய்யும் கோவிந்தனே.

கிருஷ் : பாண்டு மைந்தர்களின் உயிரை உன் திருவருளால் மீண்டும் கொடுத்துக் காத்தருள்வாய் எமராசனே

எமன் : ஆண்டவனே! உனது கட்டளைப்படி நான் அன்பாய்ப் பணிசெய்வேன் கோவிந்தனே.

தருமச்செங்கோல் – அறம்பிறழா ஆட்சி. **பாரோர்** – உலகத்திலுள்ளோர். **விண்ணோர்** – தேவர். **பாதலர்** – நரகர். **பரவி** – வணங்கி. **அரி** – திருமால். **தஞ்சம்** – அடைக்கலம். **தருணம்** – நேரம். **அஞ்சன வண்ணன்** – கருமைநிறம் பொருந்திய திருமால். **தபசி** – தவத்தோன், முனிவர். **குந்தி** – பாண்டவர்களின் தாய். **யசோதை** –கிருஷ்ணனின் வளர்ப்புத்தாய். **பூசுரர்** – அந்தணர். **சிரங்கொண்டேன்** – தலைமேல் ஏற்றுக்கொண்டேன். **மறையவன்** – அந்தணன். **தாகம்** – நீர்விடாய். **படி** – பூமி. **சிச்சித்து** – உருவாக்கி. **பாலிப்பாய்** – அருள் செய்வாய். **வேணவரம்** – செய்ய வேண்டியவை. **புகலாய்** – சொல்லுவாய். **அட்டமாதர்** – எட்டுவகை மகளிர், ஊர்வசி, மேனகை, ரம்பை, திலோத்தமை, சமுகி, சுந்தரி, காமினி, காமவர்த்தினி. **ஆதவர்** – யாதவர். **ஆள்** – அடிமை.

க.சொ : 1. வண்ணாயுள் 2. றரியனொரு 3. மேனியாய்ந்த 4. பாவிப்பாய் 5. லீலாவித.

The conversation between Kriṣṇaṉ and yamaṉ

Kriṣṇaṉ : **Yamā**! So fair and valiant
come here.

Yamaṉ : Lord! I bow to you whose lotus feet
are worshipped by every being –
the God, men and demons.

Kriṣṇaṉ : It is time that the **Pāṇṭavās**, the helpless and desolate,
were saved. You have to be of help.

Yamaṉ : O the dark-hued **Kōvintā**! Show me the way.
I'll do the needful.

Kriṣṇaṉ : Wicked **Turiyōtaṉaṉ** has planned
to put the **Pāṇṭavās** to death through a ***Yakña***
to be performed by **Kāḷamāmuṉi**.

Yamaṉ: **Kōvintā**! Please tell me what sort of ***Yakña***
the ***muṉi*** is going to perform.

Kriṣṇaṉ : **Yamā**! Take care of the **Pāṇṭavās**
who are now staying along with
brahmins at the ***Āsram*** of **Cintumāmuṉi.**

Yamaṉ : O **Kriṣṇā**! The darling son of **Yacōtā**!
Advise me on how to save **Kunti**'s sons.

Kriṣṇaṉ: Take the form of a deer and go to the place
holding a sacred thread tied to the tip of a pole.

Yamaṉ : **Kriṣṇā**! You are the benevolent giver of
salvation to the deserving.
Let me take leave of you.

Krisṇan: As you start running in the form
of a deer the **Pāṇṭavās** will follow
for the sake of the Brahmins.
You must see that they are taunted
with misery of all sorts throughout.

Yaman : I agree to carry out this blemishless task.
Explain to me further as to
how to fulfill the task, **Kōvintā**.

Krisṇan: Make the **Pāṇṭavās** terribly thirsty for water
and let them run for water here and there,
and see that they die as a result.

Yaman : O **Kōvintā**! You are the one adored
by the entire world.
I'd execute the task as you please.
Let me take leave of you.

Krisṇan : Dig a pool of water poisoned and
make the **Pāṇṭavās** drink from it
and then cause them to die.

Yaman : O Lord, the sapphire-complexioned one!
So will I do. Tell me something more
as to how I must go about it.

Krisṇan: The demon that is to rise from
the sacrificial fire raised
by the muni will find the **Pāṇṭavās** dead,
and sadly return.

Yamān : O **Kōvintā**! Worshipped by saints
and seers! Speak to me further

Krisṇan: Disappointed at the sight of the dead **Pāṇṭavās**,
the demon will fly into a rage and eat up the ***muni***
and return to the fire from which it emerged.

Yaman: **Kōvintā**! You are the one who engages
the dauntless **Ūrvasi, Mēnakā, Rampā,**
Tilōttamā, Sumuki, Suntari, Kāmini,

Kāmavartini and numerous Yātavā maidens at your divine play.

Krisnan : May your grace raise the dead **Pāṇṭu**'s sons restore them to life.

Yaman : O my Lord! As commanded by you I 'll do my duty.

64. கிருஷ்ணன் – திபதை

இந்தநல் லுதவி செய்தே யெழில்பஞ்ச பாண்ட வாளை
சிந்துமா முனிவ னத்திற் சேர்த்துவேண் டியவ ரங்கள்
தந்தருள் புரிந்து நீவாழ் தன்பதிக் கேகிச் செங்கோல்
சுந்தர முடன டத்திச் சுகம்பெற வாழ்கு வாயே.

வசனம்

கேளும் எமதர்மராசனே! இப்போது நான் சொல்லிய வகைப்படிக்குப் பாண்டவாளுக்கு உதவி செய்து விண்டுசித்து முனிவனத்திலிருக்கச் செய்து உன்னாலான வரங்களைக் கொடுத்து பின்பு உன்னுடைய நகரமாகிய எமலோகம் போய் தருமச் செங்கோல் வழாது நடத்திச் சுகமாய் வாழக் கடவாய், போய்வாரும் எமதர்மராசனே.

எழில் – அழகு. **பஞ்ச** – ஐந்து. **வனம்** – காடு. **பதி** – இடம், ஊர். **ஏகி** – சென்று. **சுந்தரம்** – அழகு.

Krisnan - *Tipatai*

Yamā! Carry out successfully
The task entrusted to you.
Save the **Pāṇṭavās** and arrange
for their comfortable stay
at the **Cintumāmuni** hermitage
and grant them all the boons
you are capable of.
You may then get back home
and continue your rule and be happy.

65. எமன் – திபதை

சராசர வுயிர்(கட்) கெல்லாந் தண்ணருள் புரியும் ஞான
பராபரப் பொருளே தேவர் பணித்த[1]வா றியற்றி யுந்த

தராதலத் தரச னான தருமனா தியரைக் காத்து
புராதனப் படியே கானம் புகவிடை தந்து வாரேன்.

வசனம்

சரணம், சரணம், ஸ்ரீலோக ரட்சகா! இவ்வுலகத்திலுண்டாகிய சராசரவுயிர்கட் கெல்லாம் குளிர்ந்த கிருபை பாலிக்கும் ஞான பராபரப் பொருளே! தேவரீர் கட்டளையிட்டபடி செய்து இந்த பாண்டவரைக் காத்து பழையபடி வனத்திற்கு அனுப்பிவிட்டு வருகிறேனையா சுவாமி.

ஸ்ரீலோகம் – திருமகள் வாழும் உலகம். **கிருபை** – அருள். **சராசரம்** – இயங்கும், இயங்கா உயிர்கள். **பராபரம்** – மேலானதுக்கும் மேலான. **தராதலம்** – பூமி. **தருமனாதியர்** – பாண்டவர்கள். **புராதனம்** – பழமை. **கானம்** – காடு, வனம்.

சு.சொ : 1. வாரியற்றி.

Yaman - *Tipatai*

O Lord! The protector of all worlds and life!
The all merciful, the Absolute Bliss!
As commanded by you
I'd ensure the safety of **Pāṇṭavās**
and settle them in this jungle resort and return.

66. மான் – கவி

நமனுமோர் கலைமான் வேடம் நண்ணியே குதித்துத் தாண்டி
யிமவரை வனங்க டந்து யெங்கணுந் தாவிப் பாய்ந்து
அமைவொடு மைவர் தங்கும் அடவியை நோக்கி வேகம்
கமைபெறக் கலைமான் றானுங் கடுகியே வருகு தன்றே.

எமதர்மராசன் ஆண்மானாக வேடம் கொண்டான். எல்லா இடத்தும் தாவிப் பாய்ந்து இமயமலையையும், காடுகளையும் கடந்து அமைதியோடு பாண்டவர்கள் தங்கியிருக்கும் காட்டை நோக்கிப் பொறுமையாய் விரைந்து வருகின்றான்.

கலைமான் – ஆண்மான். **நண்ணி** – அடைந்து. **இமவரை** – இமயமலை. **அமைவு** – அமைதி. **அடவி** – காடு. **கமை** – பொறுமை. **கடுகி** – விரைந்து.

Yaman became a stag

And then **Yamā**, the God of death,
assumes the form of a stag and runs over places,
hopping and leaping over mountains including the **Himālayās**
and through forests all along
and then reaches the jungle resort of the **Pāṇṭavās.**

67. மானின் வருகை – தரு

காலனுங் கலைமா னுருக்கொண்டு கனவரை யடவிகளுங் கடந்து
சாலவே துள்ளித் தாண்டிக் குதித்துத் தாவி – வருகுதே
நெரித்துப் பார்த்துக் குதித்துக் குதித்து நின்றதிசை
யாதென் றுள்ளே மதித்து
சிரித்துப் புரத்தை யெரித்த [1]ருத்ரன் போல் சீறி வருகுதே
விண்ணி லெழுந்து [2]மறைந்து பாய்ந்த வீச்சில் காதம் போயிறங்கியே
மண்ணிற் குதித்துச் சேர்ந்து பாய்ந்து மண்டி வருகுதே – தரை
யந்தணர்குழு கூடி நிற்குந் திசைகளெங்குந் தேடி னோக்கியே
விந்தைய தாய்பல வேடிக்கை காட்டியே விரைந்து வருகுதே.

எமராசன் கலைமான் வேடம் கொண்டு பெரிய மலையையும், காட்டையும், கடந்து, மிகுதியாகத் துள்ளிக் குதித்து. தாண்டி, தாவி, ஆகாயத்தில் திரிந்த மூன்று கோட்டைகளையும் தன் புன்சிரிப்பாலே அழித்த சிவன் போல சீறியும், ஆகாயத்திலே எழுந்து மறைந்தும், பாய்ந்தும் மூவடியால் நாலு காததூரம் போயிறங்கி மண்ணிலே குதித்து சேர்ந்து, பாய்ந்து நெருங்கியும், பாண்டவரும் அந்தணரும் கூடி யிருக்கின்ற திசைகள் எங்கும் தேடி மாயமாய் பல வகையான வேடிக்கை காட்டியே விரைந்து வருகிறான்.

காலன் – எமன். **கனவரை** – பெரியமலை. **அடவி** – காடு. **சால** – மிகுதியாக. மதித்து – எண்ணி. சிரித்து . . . **ருத்ரன்** – ஆகாயத்தில் மூன்று கோட்டைகளை அமைத்து உலகத்தை அழித்துக் கொண்டிருந்த வித்யுன்மாலி தாரகாட்சன், ஆகிய மூன்று அரக்கர்களையும் மூன்று கோட்டைகளையும் தன் புன் சிரிப்பாலேயே அழித்த சிவன். **காதம்** – நாலு கூப்பிடு கொண்ட தூரம். **மண்டி** – நெருங்கி. **சுதர்** – பாண்டவர். **விந்தை** – ஆச்சரியம், வியப்பு.

சு. சொ : 2. ருத்றன் 2. மரைந்து

பொதுவசனம்

இந்தப் பிரகாரம் எமதர்மராசன் பொன்மானாக வந்து வனத்தில் பன்னக சாலையில் இராநின்ற துரோபதை எதிரில் விளையாடிக்கொண்டிருக்கும் போது துரோபதை மானின் மீது விருப்பத்தைக் கொண்டு சொல்லுகிற விதம் எப்படியென்றால்.

Taru

Thus **Yamā**, as a stag traverses the mountains and forests,
frisking and prancing, bounding and leaping
as if he were the Lord **Civā**
who with his smile destroyed the three
floating fortresses in the sky,
hiding and seeking, covering the entire distance
with his three strides, searching for the

Pāṇṭavās with their Brahmin troupe,
performing enroute all the heroics,
and is fast approaching their retreat.

68. துரோபதை விருத்தம்

என்னுயிர்த் துணைவ ரேயிவ் வெழின்மானைப் பிடித்துத் தந்தால்
பன்னக சாலை தன்னில் [1]பரந்தத னோடு கூடி
நன்னய மாக இங்கே நான்விளை யாடிக் கொண்டு
உன்னித மாயி ருப்பேன் உத்தம குணத்தி னாரே.

வசனம்

கேளும் என்னுயிர்த் துணைவர்களே! இதோ யிந்த அழகிய மானை எனக்குப் பிடித்துத் தருவீராகில் இந்தட் பன்னக சாலையில் மனக்களிப்போடு வைத்து நன்மை கூடி விளையாடிக் கொண்டு இருக்கிறேன். அதைப் பிடித்துத் தரவேண்டும் உத்தம சற்குண வான்களே.

துணைவர் – கணவர். **எழில்** – அழகு. **பன்னகசாலை** – துரோபதை தங்கியிருக்கும் புல்லால் வேய்ந்த ஒரு வீடு. **பரந்து** – கலந்து, கூடி. **நன்னயம்** – நன்மை. **உன்னிதம்** – மகிழ்ச்சி, உயர்வு.

க.சொ : 1. பருந்துத.

Turōpatai - *Viruttam*

Turōpatai: My dear husbands! See, here is 'beautiful deer',
get it for me so that I can spend my time
at this hut very happily.
Please you noble ones, do it for me.

69. தருமர் சொல் – திபதை

இந்தமா னேதோ சூதாயிருப்பதா(ய்த்) தோணு திங்கே
வந்தவா ரறியேன் பொல்லா வஞ்சகன் செய்யு மாயை
தந்திர மின்ன தென்று தானறிந் திலனே மிக்க
விந்தைகள் தானோ இந்த விருப்பம தகற்று வாயே.

வசனம்

கேளும் பெண்ணே துரோபதா ! இந்தமானேதோ சூதாக இருக்கிறது. இதை நம்பிப் பிடிக்க வொண்ணாது. வஞ்சகனாகிய துரியோதனன் மாயதந்திரம் போல் தோணுது. இந்த விந்தையான மானின் மேல் விருப்பத்தை விட்டுவிடு பெண்ணே.

வஞ்சகன் – வஞ்சனைக்காரன் துரியோதனன். **பொல்லா** – தீய. **தந்திரம்** – சூழ்ச்சி. **விந்தை** – ஆச்சரியம். **அகற்றுவாய்** – விட்டு விடுவாய்.

Tarumar to Turōpatai - *Tipatai*

Listen my dear woman!
There is something foul about this deer.
It won't be a good thing to catch it.
The wicked **Turiyōtanan** is out to trick us.
Please don't ask for the deer.

70. தர்க்கம் – தரு

சுந்தரப் பொன்மானை யெந்தனுக்குப் பிடித்தெனக்கு
சொகுசாய்த் தருகவேணும் – மன்னர்களே
இந்தமா னேதோவொரு விந்தையைப்போல் தோணுது
இதைப்பிடிப்ப தாகாது பெண்ணமுதே.

[1]பிடித்தாற் குறைதா னென்ன தடுத்துச்சொல் லாமலதைப்
பிரியமுடன் தருவீர் – மன்னர்களே
கடுத்தமாகப் பேசாதே கன்னியர்மொழி [2]கேட்கில்
கலக்கமிக வுண்டாகும் பெண்ணமுதே

கலக்கமுன்னம் பெண்களால் நலக்கம் வந்ததுரையும்
கனபுச பலமுள்ள – மன்னர்களே
இலக்கண ஸ்ரீராமன் சீதைசொல்லால் மானாலே
யிடர்ப்பட்ட [3]தறியாயோ பெண்ணமுதே.

அறியவே அந்தமானை யவனெய்து சிறைமீட்ட
ஆண்மை யவர்க்கில்லையோ – மன்னர்களே
சிறியவர் சொல்போலேதோ சொல்லுகிறா யிப்போது
செப்புவது அழகல்ல பெண்ணமுதே

அழகா யிந்தப் பொன்மான்மே லாசைகொண்டே னென்றுநீ
[4]அறையாமல் தருவீரே – மன்னர்களே
தயவாய் உரைத்தும் பெண்கள் பேதைமை என்பது
சரிதான் வேதஞ் சொல்லுவதும் பெண்ணமுதே

வேதஞ் சொல்லுவ தென்ன காதலா யிந்தமானை
விருப்பமுடன் தருவீர் – மன்னர்களே

வேதனைப் படவேண்டாம் வீரவிளமா னைக்கொண்டு
விளையாடத் தருகிறோம் பெண்ணமுதே.

துரோபதை : அழகிய பொன்மானை எனக்குப் பிடித்துத் தரவேணும் கணவன் மார்களே !

மன்னர்கள் : அமுதுக்கொல்லாம் அமுதாக விளங்கக் கூடிய பெண்ணே துரோபதா! இந்தப் பொன்மான் ஒரு மாயைபோல் தோன்றுகிறது. இதைப் பிடித்துத் தருவது முடியாது.

துரோ : இம்மானைப் பிடித்தால் என்ன தவறு உண்டாகும். மறுத்துச் சொல்லாமல் அன்பாகத் தருவீர்கள் கணவன்மார்களே !

மன் : பெண்ணமுதே! கோபமாகப் பேசக்கூடாது. குமரிப் பெண்களின் சொல் கேட்டால் துன்பம் மிகுதியாக உண்டாகும்.

துரோ : மிகுதியான தோள் வலிமையுடைய மன்னர்களே ! முன்பு பெண்களால் துன்பம் வந்ததைக் கூறுங்கள்.

மன் : அழகின் இலக்கணமாக விளங்கும் ஸ்ரீராமன், சீதையின் சொல்கேட்டு அந்த மானால் பட்ட துன்பத்தை அறியவில்லையா பெண்ணே?

துரோ : அம்மானை அவர் எய்து சீதையைச் சிறைமீட்ட ஆண்மை அவர்க் கில்லையா கணவன்மார்களே?

மன் : சிறியவரைப் போல் ஏதேதோ கூறுகின்றாய். நீ இவ்வாறு சொல்லுவது அழகாகாது பெண்ணே !

துரோ : மன்னர்களே! இந்த அழகான மான்மீது மிகுந்த ஆசை கொண்டுள்ளேன். மறுக்காமல் பிடித்துத்தாருங்கள்.

மன் : இவ்வளவு தாழ்மையுடன் கூறியும் நீ கேட்கவில்லை ; பெண்கள் அறிவு இல்லாதவர்கள் என்று வேதம் கூறுவதும் சரிதான் பெண்ணே!

துரோ : வேதங்கள் கூறினால் என்ன ? அன்பாய் இம்மானை விருப்பமுடன் பிடித்துத் தருவீர்கள் கணவன்மார்களே ?

மன் : துன்பப்பட வேண்டாம். வீரமுடைய இளமையான இம்மானை விளையாடப் பிடித்துத் தருகிறோம் பெண்ணமுதே.

சுந்தரம் – அழகு. **மன்னர்** – அரசர். **கடுத்தம்** – கோபம். **கன்னி** – குமரிப்பெண். **கலக்கம்** – துன்பம். **நலக்கம்** – துன்பம். **உரையும்** – கூறுங்கள். **இலக்கணம்** – அழகு. **இடர்** – துன்பம். **ஆண்மை** – வீரம். வலிமை. **செப்புவது** – சொல்லுவது. **அறையாமல்** – சொல்லாமல். **பேதமை** – அறிவின்மை.

சு.சொ : 1. பிடித்தார் 2. கேழ்க்கில் 3. துரியாயோ 4. ரரையாமல்.

The Argument between Turōpatai and Pāṇṭavās - *Taru*

Turōpatai : O my Kings!
Please let me have that fine golden deer.

Pāṇṭavās: Dear **Turaupati**! The elixir of a divine kind!
This deer looks an optical illusion.
Hence it is impossible to catch hold of it.

Turōpatai: What harm will come to us if you catch the deer!
Don't say no. Please get me that O Kings.

Pāṇṭavās: Dear woman! Don't get angry.
To hear young women's words is a painful experience.

Turōpatai: O my strong-shouldered Lords!
Could you tell me when in the past
women were responsible for the misery suffered by men.

Pāṇṭavās: Think of **Rāmā**, the paragon of extraordinary charm
who responded to Sita's request for a deer,
and the resultant grief!

Turōpatai: But was it not the same **Rāmā**
Who had the opportunity of beating his enemy at the war
And securing the release of Sita from custody,
Thus proving his warriorship.

Pāṇṭavās: Dear woman! You talk like a child.
It is not nice of you!

Turōpatai: O my dear husbands!
I find the beauty of this animal very tempting.
Please get it for me.

Pāṇṭavās : You don't care to listen to benevolent counsels.
Is it true what scriptures say about women? They are stupid.

Turōpatai: Whatever the scriptures say, I want the deer.
Please get me that.

Pāṇṭavās: Don't be unhappy then.
We shall get you that youthful deer.
You can play with it.

71. துரோபதை – விருத்தம்

வீரமில் லாத வார்த்தை விளம்பினீ ரலாம லிந்த
ஏரமர் மானைக் கையால் [1]எட்டியே பிடிக்க மாட்டீர்
பாரினை யபக ரித்த பாவியர் தமைநீ வெல்லும்
தீரமுண் டாமோ யெங்கும் திகழுதல் [1]புகழுளாரே.

துரோபதை வசனம்

கேளும் பிராண நாயகா ! வீரத்தன்மையில்லாத வார்த்தையைச் சொல்லவந்தீர்; இந்த அழகிய மானைக் கையால் பிடிக்க முடியாத நீங்கள் நாளை சத்துருக்களாகிய துரியோதனாதிகளை யெந்த வல்லமையால் (வென்று) உங்களுடைய சபதங்களை நிறைவேற்றப் போறீர்கள் சுவாமி.

விளம்பினீர் – கூறினீர். **ஏர்** – அழகு. **பார்** – உலகம். **அபகரித்த** – கவர்ந்த. **பாவியர்** – தீயோர். **தீரம்** – வீரம்.

சு.சொ : 1. யெட்டியே 2. புகளுளாறே.

Turōpatai - *Viruttam*

The words you speak sound cowardly.
Is not showing you as a warrior.
I wonder how you are going to fight with **Turiyōtanan.**

72. தருமர் திபதை

சொல்லினுங் கேளாய் மாதே தொடர்ந்திந்த மானைக் கையால்
கொல்லுதலில் லாமல் பற்றிக் கொண்டுவந் திங்கே தாரோம்
பல்லவ நிறையு மிந்த பன்னக சாலையி லிருப்பாய்
வல்லமை யாக வேகி வருகிறோம் நொடியிற் றானே.

இவ்வளவு கூறியும் கேட்காமல் இருக்கும் பெண்ணே ! இந்த மானைப் பின் தொடர்ந்து சென்று, கொல்லாமல் பிடித்துக் கொண்டு வந்து தருகிறோம். நீ இலை தளிர்களால் வேயப்பட்ட பன்னகசாலையில் இருப்பாயானால் எங்களின் பலத்தால் நொடிப்பொழுதில் கொண்டு வருகின்றோம்.

வசனம்

கேளும் பெண்ணே துரோபதா ! ஆளாலிந்தப் பன்னக சாலையில் பதனமாய் இந்தத் தபோபத்தினிகளோடு யிருப்பாயானால் அதிக விரைவில் இந்தப் பெண்மானை பிடித்துக் கொண்டு வந்து தருகிறோம் பெண்ணே.

மாது – பெண், துரோபதை. **பற்றி** – பிடித்து. **பல்லவம்** – இலை, தளிர். **வல்லமை** – வலிமை. **ஏகி** – சென்று.

Tarumar - *Tipatai*

My dear woman!
So much and so long I spoke to you.

Yet you haven't caught my point.
We shall give a chase to this deer
and bring it to you.
Go and rest a while at our thatch-roofed hut.
The job is done in a trice.

73. பொது – கவி

மானுமந் தரத்தெ ழுந்து [1]மாநிலந் தனிற்குதித்து
யீனமில் பிர்ம சாரி யிட்டபூ ணுல றுத்து
தானது ஒடக் கண்டு சதுமறை யவர்க ளைவர்
பானடந் தலறி துன்பம் பதறுவர் கதறு வாரே.

மானானது ஆகாயத்திலே எழுந்து பூமிதனில் குதித்து இழிவு இல்லாத அந்தணன் தரித்திருந்த பூணூலை அறுத்துக் கொண்டு ஓடியது. அதைக் கண்டு நான்கு வேதங்களைக் கற்றுணர்ந்த அந்தணர்கள் பாண்டவர்களிடத்தில் சென்று பதறிக் கதறினர்.

அந்தரம் – ஆகாயம். **மாநிலம்** – பூமி. **ஈனம்** – குறை, இழிவு. **பிர்மசாரி** – மணமாகாதவன், அந்தணன், முனிவன். **சதுமறையவர்** – நான்கு வேதம் கற்ற முனிவர். **ஐவர்பால் நடந்து** – பாண்டவரிடத்தில் சென்று. **அலறி** – வேகமாகக் கத்தி. **பதறுவர்** – நடுங்குவர்.

பொதுவசனம்

ஆகோதெப்படி என்றால் அந்த எமனானவன் கலைமானாக வந்து பாண்டவாள் மருங்கில் வசிக்கின்ற ஒரு பிர்மசாரியின் பூணூலை அறுத்துக் கொண்டோட அதைக் கண்ட பிர்மச்சாரிகள் மானைத் துரத்திக் கொண்டோடியும் அகப்படாமல் மனவருத்தத்தோடு பண்டவாளிடத்தில் அபையம் அபையமென்று சொல்லுகிறார்களய்யா !

க.சொ : 1. மானிலம்.

The actions of the Deer

The deer rose in the sky
hopping, came down leaping,
and tearing the spotless sacred-thread
of a Brahmin ran along.
The Brahmins, perturbed
went to the **Pāṇṭavās**
and sobbed out their heart, reporting the event.

74. பிராமணன் – கவி

தருமனன் னெறிவ ழாத தருமனே யபைய மையா
பெருமைசேர் பிர்ம சாரி பூணநூ லதைப்ப றித்து

விரைவோடு செல்ல வோடி மேவினோ மகப்ப டாமல்

துரிதமா யோடு திந்த தோதகத்திற் கென்ன செய்வோம்.

அறம் தவறாத தருமராசனே ! அடைக்கலமையா ! வேதங்களுக்குப் பெருமை சேர்க்கின்ற மணம் ஆகாத அந்தணனுடைய பூணூலை அறுத்துக் கொண்டு இந்த மான் ஓடுகிறது. பின் தொடர்ந்து சென்றோம் அகப்படாமல் விரைவாகப் போகிறது. இந்த வஞ்சனைச் செயலுக்கு என்ன செய்வோம்.

நன்னெறி – நல்வழி, நீதி. **அபயம்** – அடைக்கலம். **பிர்மசாரி** – வேதங்களைப் படிப்போன், திருமணம் ஆகாதவன். **துரிதம்** – விரைவு. **தோதகம்** – வஞ்சகம், வருத்தம்.

Brahmin - *Kavi*

O Lord **Tarumā**! A stickler to **Tarumā**!
You are our refuge. See here a deer snaps
our sacred thread and gets away with it unchecked.
We gave it a chase but in vain.
It is an act of wickedness. We are helpless.

75. பிராமணன் – தரு

அய்யோ பிர்ம சாரியின் பூணூல்
அறுத்துக்கொண் டோடி மறைந்த தையோ
பொய்யோ அதுமெய் யோகலை மானும்
போனவிடந் தன்னைக் காணோ மையா

பன்னு மறையோர்க்குப் பூணூல்
வாய்த்த முதலது மார்க்கமையா
பின்னப் படுமாயின் குலம்
பேதிக்கும் வேதநெறி தனக்கே

தயைசெய் தெந்தன் யக்னோப வீதத்தை
தந்து ரக்ஷித்தருள் சுந்தரனே
நியமாதி கர்மாதிக ளெல்லாம்
நிந்தைப்படா துகந்தா லரசே

மறையோர் குறைதீர்க்க புவி
மன்னர்க் கல்லால் பின்னை யார்க்குண்டையா
குறைதீர யக்னோப வீதத்தை
கொற்றவனே தாரும் நற்றவனே!

ஐயோ! மானானது அந்தணனின் அறுத்துக்கொண்டு ஓடி மறைந்தது உண்மையோ பொய்யோ? அந்த மான் போன இடம் தெரியவில்லை, வேதம் ஓதும் அந்தணர்களுக்கு முதல் நெறியாக சிறந்து விளங்குவது பூணூல். இது அறுக்கப்படுமாயின் எங்களது குலமும் வேத முறையும் வேறுபட்டுப் போகுமைய்யா. அழகுள்ளவனே! தயை கூர்ந்து எந்தன் பூணூலை வாங்கிக் கொடுத்து அருள்வாய், இங்கு நீ விரும்பி உதவினால் நெறிமுறையும் செயல்முறையும் பழிபடாது காப்போம். மேலும் வேதம் ஓதும் அந்தணர்களுக்கு உண்டாகும் குறைகளைத் தீர்க்கப் புவி ஆளும் மன்னர்களாகிய உங்களால் மட்டுமே முடியும். வேறுயாராலும் முடியாது. தவத்தையடைய அரசபெருமானே! குறைகளை அகற்றிப் பூணூலைத் தருவீர்களாக!

மெய் – உண்மை. **பன்னும்** – வேதம் ஓதும். **பின்னம்** – குறை. **பேதிக்கும்** – வேறுபடும். **யக்னோபவீதம்** – பூணூல். **நியமாதி** – நியமம் + ஆதி – **நியமம்** – நெறிமுறை. **கர்மாதி** – கர்மம் + ஆதி – **கர்மம்** – செயல்முறை. **நிந்தை** – பழி. **உகந்தால்** – விரும்பினால். இங்கு நீ விரும்பியுதவினால் என்று பொருள். **மறையோர்** – வேதம் ஓதும் அந்தணர். **கொற்றவன்** – அரசன். **நற்றவன்** – நல்ல தவத்தையுடையவன்.

பிராமணன் வசனம்

அபையம் அபையமையா! தர்ம பூபாலகா! பிர்மசாரியின உப நயனமான யக்னோப வீதத்தை அறுத்துக் கொண்டோடுகையில் நாங்கள் துரத்தியு மகப்படாமல் ஓடுகின்றது. அந்தப் பூணூலை வாங்கித்தந்தால் மந்திரம் பிரமாணிக்கமுண்டு. அந்தப் பூணூலை வாங்கிக் கொடுக்கவேணுந் தர்ம பூபாலகா.

Brahmin - *Taru*

Alas!
The deer has snapped our sacred thread and escaped.
Whether it is a real one or an illusion, we do not know.
The thread is of prime importance to the Vēdā -chanting Brahmins
the loss of it would mean our separation from the path of Vēdās.
O the handsome one! Kindly restore the sacred thread to us.
Please help us in preserving our value-based life and practices.
Only Kings of your stature can redress our grievances.
None else can do. O King, benevolent Lord!
Restore to us our sacred thread.

76. தருமர் – திபதை

அஞ்சலென் றடைந்த வேத அந்தணோத் தமரே நீங்கள்
சஞ்சலப் படவே வேண்டாம் [1]சதிர்பெறக் கலைமான் றன்னை
துஞ்சிட வடித்து மாய்த்து துங்கயக் ஞோப வீதம்
வஞ்சமற் றதனைக் கொண்டு வருகிறோ மஞ்ச வேண்டாம்.

அபயம் என்று என்னை அடைந்த, வேதங்களை ஓதுகின்ற அந்தணர்களுக் கெல்லாம் சிறந்தவரே! நீங்கள் மனக்கவலைப்படவேண்டாம். திறமையான அம்மானை இறக்கச்செய்து உயர்ந்து விளங்கும் பூணூலைக் கபடமில்லாமல் கொண்டு வருகிறோம் அஞ்சாதீர்.

அந்தணோத்தமர் – அந்தணரில் சிறந்தவர். **சஞ்சலம்** – துன்பம், மனக்கவலை. **கதிர்பெற** – திறமையாக. **துஞ்சி** – இறக்க. **துங்க** – உயர்ந்த. **வஞ்சம்** – கபடம்.

வசனம்

வாருமையா சுவாமி! பிராமணாளே! உங்களுடைய பூணூலை நாங்கள் வாங்கித் தருகிறோம்; ஒன்றுக்கும் அஞ்ச வேண்டாம்; இந்த ஆசிரமத்தில் இருமையா சுவாமி.

சு.சொ : 1. சதிர்பெறக்.

Tarumar -*Tipatai*

O you cherished one of the Brahmins!
You have come to me for redressal.
Don't be worried.
We will do away with that skilful deer
And bring back to you sacred thread.
Remain fearless.
Come along. Stay here at this ***Āsram.***
You will get back your thread.

77. தருமர் தம்பிமாருக்குச் சொல்லுதல் – கவி

என்னுயிர்க் குயிர தான என்தம்பி மாரே கேளீர்
பன்னரு மறையோன் பூணூல் பறித்தமான் றனைவ தைத்து
மின்னொளி பூணூல் வாங்கி வேதியர்க்குக் கொடுப்ப தாகச்
சொன்னதாற் படையெ டுத்துத் தொடருவோந் தம்பி மாரே.

வசனம்

வாரும் தம்பிமார்களே! பிராமணாளுடைய பூணூலை ஒரு மான் வந்து பறித்துக் கொண்டு அதோ ஓடுகிறது; அதைத் துரத்தி அந்த மானை வளைத்துப் பூணூலை வாங்கி வரவேணும்; ஆகையால் உங்களுடைய ஆயுதத்தை எடுத்துக் கொண்டு எழுந்திருங்கோள் தம்பிமார்களே.

பன்னரு – சொல்லுதற்கரிய. **வேதியர்** – பார்ப்பார். **படை** – ஆயுதம்.

Tarumar to his brothers

Come along my brothers.
A deer has taken away the sacred thread of the Brahmins.
We must give it a chase and trap it and get hold of the thread.
So get up and come with me, armed.

78. தருமர் – தரு

அதோ போகுது கலைமான் பாருங்கள் ஒ தம்பிமார்களே
அந்தணன் பூணூலை வாங்கி வாருங்கள்
நிதானத் தோடு வில்லை வளைத்து
நெறியுங் கோதற் செடியி லொளித்து (அதோ)

நாலுதிக்கிலும் வளைத்து நில்லுங்கள் ஒன்றாகக் கூடி
நாடி [1]பாணத்தால் வதைத்துக் கொல்லுங்கள்
சாலவே துள்ளித் தாண்டி யோடுது
கோல மால்வரை [2] குவட்டிற் கூடுது (அதோ)

கெந்து பாய்ந்த(ா) காய மேவுதே யிருகாதமப் பால்
கிளம்பி மற்றொரு மலையிற் றாவுதே
எந்தன் தம்பிமாரே யெடுங்கள் கைவில்லை
யிந்த பாணத்தால் மான்இனிமே லுய்வில்லை (அதோ)

தப்பித் தாண்டி புதரில் நுழைந்துதே சுத்தி வளைத்து
தாவியே நிற்க ஆவி குழைந்துதே
கைப்பிடியாகப் பிடிக்க வாச்சுதே
எப்படி யோமானு மேகிப் போச்சுதே. (அதோ)

தம்பிமார்களே! அதோ பாருங்கள் ஆண்மான் ஓடுது. பின் தொடர்ந்து ஓடி அந்தணன் பூணூலை வாங்கி வாருங்கள். அடர்ந்து காணப்படும் செடியினில் மறைந்து பொறுமையாக வில்லை வளைத்து நாலு திக்கிலும் நில்லுங்கள், ஒன்றாய்ச் சேர்ந்து சென்று அம்பால் எய்து கொல்லுங்கள், மிகுதியாகவே துள்ளிக் குதித்து தாண்டி ஓடுகிறது. அழகிய பெரிய மலை உச்சியில் கூடுகிறது. அது எட்டு கூப்பிடு கொண்டி தூரத்திற்கு அப்பால் வளைந்து பாய்ந்து ஓடி மற்றொரு மலையில் தாவுகிறது. என் அருமைத் தம்பிமார்களே! கையில் வில்லை எடுங்கள். இந்த அம்பால் இனிமேலும் மான் பிழைக்காது. புதரைத் தாண்டி நுழைந்த மானைச் சுற்றி வளைத்துத் தாவி நிற்க உயிர் சோர்ந்து கைப்பிடியாகப் பிடிக்கின்ற நேரத்தில் எப்படியோ அந்த மான் ஓடிப்போயிற்று.

நிதானம் – பொறுமை. **திக்கு** – பக்கம். **சால** – மிகுதி. **கோலமால்வரை** – அழகிய பெரியமலை. **குவடு** – உச்சி. **கெந்து** – வளைந்து. **காதம்** – காவதம். **உய்வில்லை** – பிழைக்காது. **ஆவிகுழைதல்** – உயிர் சோர்தல்.

சு.சொ : 1. பானத்தால் 2. குவட்டிர்.

Tarumar - *Taru*

Look there, my brothers!
A male deer is on the run.
Chase it and get back the sacred thread.
Hide yourselves behind the thickly-grown plants
and take aim all together, kill the deer.
It's capable of too much leaping.
It ascends the hill-slope
and covering a distance four times of calling,
and jumps off to the neighbouring top.
My dear brothers! Get ready to draw your bows.
It cannot escape the dart of your arrows.
By the time you pass through the bush and
try to seize hold of it, it slips from the grasp and disappears.

79. தருமர் சொல் – கவி

இடம்படு குன்றங் கான மெங்கனு மிழுத்த லைத்து
புடைமறந் தந்த மானும் போயின தறியோ மையோ
படபடென் றுடம்பு சோர்ந்து பசிதாக மென்மே லாகி
திடமது தளரு தென்ன செய்குவேன் தம்பி மாரே.

விரிந்து காணப்படும் மலைகள் எங்கும் இழுத்து வருத்தி, அந்த மான் போன பக்கத்தை நாம் அறியோமையா. பசியும் தாகமும் அதிகமாகி, உடல் நடுங்கிச் சோர்வடைந்து, வலிமை எல்லாம் போய் விட்டது. இப்போது நான் என்ன செய்வேன் தம்பிமார்களே!

குன்றம் – மலை. புடை – பக்கம். திடம் – வலிமை. தாகம் – நீர்வேட்கை.

Tarumar - *Viruttam*

We traversed these entire hill ranges,
chasing the elusive deer and we lost track of it.
As our hunger and thirst increased,
fatigue-stricken, exhausted
I am helpless, brothers.

80. தருமர் – தரு.

வந்த மானு மிங்கே மாயமாய்ப் போச்சுதே தம்பி மாரே
மானு மறைந்தவகை யென்னமோ யெந்தன் தம்பி மாரே

அந்தணன் பூணூ லறுத்ததினால் நாமும் தம்பி மாரே
அடவியி னாடினாம் ஐவருமே வந்தோமே தம்பி மாரே.
ஐயருக் கென்ன வறைகுவோ நாமினி தம்பி மாரே
ஆர்வஞ்ச மோ[1]அறியே னிதனுண் மையை தம்பி மாரே
எய்துமான் பின்வந்த யிளப்புமே லாச்சுதே தம்பி மாரே
எங்கை யாகிலுந் தேடி யெனக்குச் சலந்தாருந் தம்பி மாரே.

இங்கு வந்த மான் மாயமாய்ப் போனது தம்பிமாரே மானும் மறைந்தவகை என்னவோ தெரியவில்லை, வியப்பாக இருக்கிறது. ஒப்பற்ற அந்தணர்களுடைய பூணூலை அறுத்ததினால் நாம் ஐவரும் கானகத்தை நாடி வந்தோம். பார்ப்பாருக்கு இனி நாம் என்ன சொல்லப்போகிறோம். யார் செய்த கபடமோ இதன் நுட்பத்தை அறியேன். அம்பெய்து மானைத் தொடர்ந்து சென்ற களைப்பு மிகுதியாகி விட்டது. எங்கே யாகிலும் தேடிச் சென்று எனக்குத் தண்ணீர் கொண்டு வந்து தாரும் தம்பி மாரே.

மாயம் – தந்திரம். **அடவி** – காடு. **வஞ்சம்** – கபடம். **நுண்மை** – நுட்பம். **எய்து** – அம்பெய்து. **இளைப்பு** – களைப்பு. **சலம்** – நீர்.

வசனம்

வாருங்கோள் தம்பிமார்களே! நாமிந்தக் கானகத்திலே பொன்மானைத்தேடி வந்தோமே! வந்தவிடத்தில் எனக்குக் கானல் தாகத்தினால் நாவுலர்ந்து போகுது. என்ன செய்வேன் தம்பிமார்களே!

ச.சொ : 1. அரியேனிது நுண்மை.

Tarumar -*Taru*

I am at a loss to understand
as to how this deer disappeared.
It had torn off the sacred thread of the reputed Brahmins.
That's what has brought us to this place.
How could we face them now?
Whose trick is this I do not know.
Running after it has made me extremely tired.
Fetch me some water to drink, my dear brothers.

81. தருமர் சொல் – கொச்சகம்

சொக்குதையோ யென்னாவி சோர்ந்தமிக வென்னுடலும்
அக்கினிபோல் வெய்ய வழலாலென் னாவுலர்ந்தே
விக்கலெடுத் தேதாக மேலிடுதென் காதிரண்டும்
பக்கனவே மூடுதுநீர் பாரு மிளையானே.

இளையவனான சகாதேவனே! என் உடலும் உயிரும் மிகுதியாகவே சோர்ந்து மயக்கமாகிறது. நெருப்புப் போல வீசுகின்ற சூரிய வெப்பத்தினால் நாக்கு உலர்ந்து விக்கல் எடுக்கிறது. கடுமையான தாகத்தினால் காதுகள் இரண்டும் பட்டென்று அடைக்கின்றன. ஆகையால் குடிப்பதற்கு நீர் பார்த்து வாருமைய்யா.

சொக்குது – தளர்கிறது. ஆவி – உயிர். அக்கினி – நெருப்பு. அழல் – வெப்பம்.

Tarumar – *Koccakam*

My dear younger brother, **Cakātēvā**!
I am too tired both in body and spirit.
In the blazing hot son my tongue has become parched.
Thirst has made me deaf in my ears
and I have got hiccups.
Please get me some water.

82. தருமர் சொல் – தரு

எப்படிச் சகிப்பேன் சகாதேவா
தண்ணீ ரெங்கை யாகிலும் பார்த்து நீவா
ஒப்பில்லா தாகத்தினா – லென்னுள்ளமிகவெ தும்பி
கப்புதென் [1]கண்களிரு ளாக்களைக்கு தென்னருமைத் தம்பி (எப்படி)

வஞ்சனையால் வந்ததோ அம்மானும்
அதின்வகை யறியாமல் வந்தே னானும்
தஞ்சமில் லந்தணர்க்காய் சாதிக்க வல்ல ரானோம்
விஞ்ச மிந்த கானலில் விடாய்த்துமே லிடுவ தானோம் (எப்படி)

காதிரண்டையு மடைக்கு தேதோ – மலர்க்
கண்ணனே நின்விளையாட்டின் சூதோ
வாதனைப் பட்டு முலவு மாளுமோ மாளாதுன் னாலே
சீதநீர் தந்தாரல் லாமல் தேறுவேனோ சொல்லென் னாலே (எப்படி)

தாகமுன் மேலாகுதென் விதியோ வஞ்சன்
தன்னா லியற்றியவிச் சதியோ
சோகமிக வாகி மனம் சோருதே நானென்ன செய்வேன்
வேகமாய் ஓடிநீர் கொண்டு விரைந்து வந்தால்நா [2]னுய்வேன் (எப்படி)

எவ்வாறு பொறுப்பேன் சகாதேவா! நீ எங்கேயாகிலும் தண்ணீர் பார்த்துக் கொண்டுவா! ஒப்புமையில்லாத நீர்வேட்கையால் என் உள்ளம் மிகவும் வருத்தி கண்களிரண்டும்

இருள் சூழ்ந்து களைப்பாகிறது. என் அருமைத்தம்பி, அந்த மான் கபடமாக வந்ததோ? நானும் இங்கு அதன் வகை தெரியாமல் வந்தேன் அடைக்கலம் இல்லாத அந்தணர் கூறிய இச்செயலை வெல்லுவதற்குரிய வலிமையிழந்தோம். கடுமையான வெப்பத்தால் மிகுந்த தாகத்துக்கு ஆளானோம். மலர்ப்பாதங்களை உடைய கிருஷ்ணனின் சூதோ என்னவோ? என் காதுகள் இரண்டும் அடைக்கின்றன. துன்பப்பட்டு அலைதல் குறையுமோ, குறையாது நீ குளிர்ச்சி பொருந்திய நீரைக் கொண்டு வந்து கொடுத்தால் உன்னால் நான் குணமாவேன். மேலும் மேலும் நீர்வேட்கை அதிகமாவது விதியோ? கபடன் துரியோதனன் செய்த சூழ்ச்சியோ? எனக்குத் துன்பம் மிகுதியாகி மனம் சோர்வடைகிறது. நான் என்ன செய்வேன்? விரைவாகச் சென்று நீர் கொண்டு வந்து கொடுத்தால் நான் பிழைப்பேனப்பா தம்பி.

சகிப்பு – பொறுமை. **ஒப்பில்லாத** – உவமையில்லாத. **வெதும்பி** – வருந்தி. **கப்புது** – அடைக்கிறது. **தஞ்சம்** – அடைக்கலம். **விஞ்சும்** – மிகுந்த. **கானல்** – வெப்பம். **விடாய்த்து** – தாகமடைந்து. **வாதனை** – வருத்தம். **உழலுதல்** – வருந்துதல். ***சீதநீர்*** – குளிர்ச்சி பொருந்திய நீர். **உய்வேன்** – பிழைப்பேன்.

க. சொ : 1. விருலாக் கலைக்குது 2. நாநுய்வேன்.

Tarumar - *Taru*

Cakātēvā! I can no longer stand it.
Bring some water from somewhere.
I never experienced such a thirst for water.
I am in pain. My eyes have dimmed.
Perhaps that deer came here as a trickster.
I chased it, not knowing its true kind.
We are here helpless, not being able to keep
our word to the Brahmins.
The heat has made us deeply thirsty
O **Krisṇa** , the lotus-footed one!
I wonder if it is a trick played upon by you
I am fast losing my hearing.
It's no use wandering in pain.
If only you could bring me some cold water to drink .
I would be all right.
Perhaps is it my ill-fate?
Or is it the act of wicked **Turiyōtaṉaṉ** ?
I feel more and more exhausted.
What could I do? Make haste and get me
Some water so that I can survive.

83. திபதை

தருமர் சகாதேவனைப் பார்த்துச் சொல்லுதல்

நலமது பிரிய மானை நாடியே தேடி வந்தோம்
[1]பலமது யிழந்து போக பிரமனு [2]மெழுதி னானோ
நிலமது தரியா தாகம் நெஞ்சுதா [3]னுலர்ந்த தையோ
சலமது கொணர்ந்து தந்தால் சகாதேவா பிழைப்பே னப்பா.

தம்பி சகாதேவா! நன்மை செய்வதற்கு மானை நோக்கிப் பின் தொடர்ந்து தேடி வந்தோம். என் வலிமை முழுவதும் இழந்துவிட பிரமதேவன் எழுதினானோ ? இந்தப் பூமியும் பொறுக்கமுடியாத தாகத்தினால் நெஞ்சு உலர்ந்து போகிறது. உடனே நீர் கொண்டு வந்து தந்தால் நான் உயிர் பிழைப்பேனப்பா.

சகாதேவன் – தருமரின் கடைசித் தம்பி. **பலம்** – வலிமை. **சலம்** – நீர்.

வசனம்

கேளுந் தம்பி சகாதேவ மூர்த்தி! எனக்குக் கானல் அக்கினி சுவாலையதினால் நாவுலர்ந்து போகுது. இந்தக் கானகத்திலே நீ போய்ச் சீக்கிரமாகச் சலங்கொண்டு வருவாய் தம்பி.

சு.சொ : 1. பிலம் 2.எழுதி 3.னுலர்ந்து.

Tarumar to Cakātēvan̲ - *Tipatai*

Dear brother **Cakātēvā**!
To do good to the Brahmins
we followed the deer to catch hold of it.
It resulted in the total loss of our energy and strength.
Perhaps the creator has willed it.
This very earth seems to be dried up, its tongue parched.
You can save me if only you get me some water at once.

Dialogue:

Please hurry my brother. The heat waves of this jungle have caused my tongue to go completely dry.Get me some water without delay.

84. சகாதேவன் – திபதை

தணிப்பரி தான தாகத் தழலினான் மெலிந்த யர்ந்து
பிணிப்படு மண்ணா நெஞ்சம் பேதிக்க வேண்டாஞ் செந்தேன்
துணிப்படு தருவின் கானஞ் சூழ்வரை மருங்கி னோடி
கணப்போதிற் தேடித் தண்ணீர் கண்டுநான் கொண்டு வாரேன்.

தணிக்க முடியாத தாகமாகிய தீயினால் மெலிந்து சோர்ந்து வருத்தமுறும் அண்ணனே! மனம் கலங்க வேண்டாம். தேன் துளிர்க்கின்ற பூக்களுடைய மரமும் சோலையும் சூழ்ந்து காணப்படுகிற மலைப்பக்கத்தில் சென்று இமைப்பொழுதில் தேடித் தண்ணீர் கொண்டு வருகிறேன்.

தணிப்பரிதான – தணிக்கமுடியாத. **தாகத்தழல்** – **தாகத்தீ** – தாகமாகிய தீ. **அயர்தல்** – சோர்தல். **பிணிப்படும்** – வருத்தமுறும். **பேதிக்க** – கலங்க. செந்தேன் . . . . . . தரு – தேன் துளிக்கின்ற பூக்களுடைய மரம். **வரை மருங்கு** – மலைப்பக்கம். **கணப்போது** – இமைப்பொழுது.

Cakātēvan̲ - *Tipatai*

O my dear elder brother!
I know that an insatiable thirst
for water is burning you up.
Don't be so agonized.
There is a hillside which abounds in honey-laden
flower-bearing trees and bushes.
I'll get you water from there in no time.

85. சகாதேவன் – தரு

தாகசோகந் தீர சலங்கொண்டு வருகிறேன் – அண்ணாவே
சற்று மனது தளராதிரு மெந்தன் அண்ணாவே
வேகமாகக் கானம் மேவி வருகிறேன் – அண்ணாவே
வேதைப் படாதே இப்போதே வருகிறேன் – அண்ணாவே

சோரு தென்ற வார்த்தை காதில்கேட்க நெஞ்சம் – அண்ணாவே
துடிதுடிக்குதே இக்கடிகைக்குள் நான்வாரேன் – அண்ணாவே
நீரும் நிறைந்தநிலை தடாகங் காணேனே – அண்ணாவே
நீடு மலைப்புடை காடெங்கும் காணேனே – அண்ணாவே

சோலை யடவிகள் சூழ்நிலை பக்கலில் – அண்ணாவே
சுத்தித் [1]திரிந்து சுனைநீர் கொண்டுவாரேன் – அண்ணாவே
காலு மயருது கண்ணு மிருளுது – அண்ணாவே
கடினதா பத்தாலே கனசோப மாகுதே – அண்ணாவே

காட்டுச் சுனைமலை கானாறுக ளெங்குந் தேடினேனே
காணாமலே யெங்கும் கலங்கி மிகமனம் வாடினேனே

வாட்டமுற் றென்னா வரண்டு சலத்தையும் நாடுதே
வந்துபல காத மார்க்கத்தில் பொய்கையுந் தோணுஃத.

தாகச் சோர்வு நீங்குவதற்குத் தண்ணீர் கொண்டு வருகிறேன் சிறிதும் மனம் தளராமல் இருங்கள் அண்ணாவே! சோருதென்ற சொல்லைச் செவியில் கேட்க உள்ளம் பதறுகிறது கானகத்திற்கு விரைந்து சென்று நொடிப்பொழுதில் வருகிறேன். வருத்தப்படாதீர்கள். நீர் நிரம்பிய குளத்தையும் நீண்ட மலையையும் இவ்வனத்தில் எவ்விடத்தும் நான் காணவில்லை. மரங்களும் சோலைகளும் சூழ்ந்திருக்கும் பகுதியில் சுத்தித் திரிந்து பார்த்து சுனைநீர் கொண்டு வருகிறேன். என்று கூறிப் புறப்பட்ட சகாதேவன் தண்ணீரைத் தேடிக் காணாமல் புலம்புகிறான். எனக்குக் காலும் சோர்கிறது. கண்ணும் இருள்கிறது. கடுமையான தாகத்ததாலே அதிக சோகமாகிறது. வனத்திலிருக்கும் மலைகள், ஆறுகள், குளங்கள் எங்கும் தேடிப் பார்த்தேன். காணாமல் உள்ளம் மிக நொந்து வருந்தினேன். என் நாக்கும் உலர்ந்து நீரைத்தேடுகிறது. அதோ வந்த வழியில் நீண்ட தூரத்திற்கு அப்பால் ஒரு குளம் காணப்படுகிறது.

கடிகை – நாழிகை. **தடாகம்** – குளம். **புடை** – பக்கம். **அடவி** – காடு. **தாபம்** – வருத்தம். **சோபம்** – சோகம். **பொய்கை** – குளம்.

சு.சொ : 1. திருந்து.

Cakātēvan̲ - *Taru*

"Don't give up my dear elder brother.
I will bring you water to quench your thirst.
I'd go into the forest and be back in a trice.
I am rudely disturbed to hear your words that smack of fatigue.
I don't see in this place any ponds
with water on any mountain stretch.
My legs ache, my sight dims.
My thirst for water grows.
My search has gone in vain.
My heart aches, My parched tongue longs for some water.
So, there at a distance, very far from here a water place
I am able to sight.

86. சகாதேவன் சொல் – கட்டளைக் கலிப்பா

அண்ண னாரருந் தாகத்திற் சோகமாய்
ஆவி சோரக் கண்ட[1]புனல் நாடியே
எண்ண ருங்கடுங் கானகத் தெய்தினான்
யெங்கும் நாடிட இல்லா தெனநேரதாய்

கண்ணிற் காணக் கிடைத்ததென் பாக்கியம்

கடுகி வரக்கொண் டே[2]னென் றேகியே

நண்ணு நச்சு தடாகத்தி லுற்றுந்த

நாரை நோக்கி நவிலுகின் றானரோ.

அண்ணாவின் கடுமையான தாகத்தால் சோகமாகி உயிர் சோர்வடையக் கண்ட சகாதேவன் நீரை நாடிச் சென்று கொடுமையான வனத்தை அடைந்து எங்கும் நாடி அலைந்து பார்த்தும் காணப்படவில்லை. திடீரென ஒரு பொய்கையைக் கண்டதும், 'கண்ணில் காணக்கிடைத்தது என் பாக்கியம்தான்' என்று நீரை நாடி, விரைந்து கொண்டு வரப் போனான் ஆனால் அந்த நஞ்சுக் குளத்தினுள் இருந்த நாரையைப் பார்த்துக் கூறத் தொடங்கினான்.

ஆவி – உயிர். **நாரை** – கொக்கு. **நவிலுதல்** – சொல்லுதல்.

ச.சொ : 1. புனள் 2. நென்றேகி.

Cakātēvāṉ - *Kaṭṭaḷaikkalippa*

Having witnessed the agonizing thirst of **Tarumar**,
Cakātēvāṉ immediately went into the wild forest
and ran here and there looking for water.
After a desperate search, he was able to find a pool
and hurried to the place to collect some water.
But it was a pool of poisoned water
and then there was a stork at the pool to which he talked.

87. இதுவுமவன் – தரு

என்ன ஆனந்தம் இதிலேதே தானந்தம்
சொர்ண [1]நிறச்சன் சூட்டேயின் சேவல்
அன்னப் [2]பெடையோ டாடித் திரிவதால் (என்ன)

பங்கய வல்லிப் பரிமள வாம்பலுஞ்
செங்கிடையுங் கொண்டு செழித்திருப்பதால் (என்ன)

[3]வாளையுஞ் சேவலும் வரா லுங் கமுகினைப்
பாளையில் மோதியே பாய்ந்து குதிப்பதால் (என்ன)

அண்ணாவுக் கென்று அமைந்திங் கிருந்ததோ
வண்ணப் புனலின் வடிவத்தை என் சொல்வேன். (என்ன)

ஆ! என்ன மகிழ்ச்சி! என்ன இன்பம் ? பொன் நிறத்தாலான நீண்ட இறகுடைய ஆண் அன்னமும், பெண் அன்னமும் ஆடித்திரிவதாலும், தாமரைக் கொடியும், மணம் பொருந்திய அல்லியும், செவ்வாம்பலும் கொண்டு செழித்து இருப்பதாலும், வாளை மீனும், சேவல் மீனும், வரால் மீனும் பாக்கு மரத்தின் பாளையில் ஒன்றோடு ஒன்று மோதித் தாவிக் குதிப்பதாலும் என்ன மகிழ்ச்சி! என்ன இன்பம்! என் அண்ணாருக்கென்று இந்த வண்ணப் புனலின் தோற்றம் அமைந்திருக்கிறது. நான் என்ன சொல்லுவேன்.

சொர்ணம் - பொன். **பெடை** - பெண். **சேவல்** - ஆண் அன்னம். **பங்கயவல்லி** - தாமரைக்கொடி. **பரிமளம்** - மணம் பொருந்திய. **ஆம்பல்** - அல்லி. **செங்கிடை** - செவ்வாம்பல். **வாளை சேவல் வரால்** - மீன் வகைகள். **கமுகு** - பாக்கு.

ச.சொ : 1. நிரச்சன் 2. பிடை 3. வாலை.

Cakātēvān - *Taru*

O what a joy! What a pleasure it is!
The long golden-feathered male *Annam*[1]
together with the female are enjoying themselves
sporting here at this pool, studded with lotus,
lily in their white and red glory in their blooming charm,
Virāl and ***vāḷai*** fish bounding up over the shoots of area,
what a fascinating sight it is here at the pool,
a sight indeed my brother would marvel at.
How could I describe it!

1. Annam - a legendary water bird said to be capable of separating water from the milk before consuming it.
2. Virāl, 3. vāḷai – The name of fishes.

88. இதுவுமவன் - திபதை

கமலப் பாசிலையைக் கொய்து கவின்பெறத் தொன்னை யாக்கி
அமலமு தாக வன்னீ ரங்கையின் தொன்னை கொள்ள
கமைவற முகந்து பின்னர் கடினதன் தாக சோகப்
பமலறக் கரத்திற் கொள்ளப் பகுத்தச ரீரி சொல்வாள்.

வசனம்

அகோதெப்படி என்றால் இப்படியாகச் சகாதேவமூர்த்தி அந்தத் தடாகத்திலிராநின்ற தாமரை இலையைப் பறித்துத் தொன்னையாக்கி அது நிறைய அந்நீரை அண்ணாவின் தாகத்துக்கு மொண்டு கொண்டு, தனக்கு நேர்ந்த கொடிய தாகத்தைக் தணித்துக் கொள்ளும் பொருட்டு, அந்த நீரைக் கையில் அள்ளினான். அப்போது அசரீரி சொல்லுகிற விதம் எப்படி என்றால்,

கமலம் – தாமரை. **பாசிலை** – பச்சிலை. **கவின்** – அழகு. **அமலமதாக** – குற்றமற்றதாக. **கமை** – பொறுமை. **முகர்ந்து** – மொண்டு. **பமல்** – மிகுதி.

Cakātēvan̲ - *Taru*

And now **Cakātēvan̲** got into the pond, plucked a lotus leaf,
twined it into a cup and filled with the water form the pond.
He then took palmful of the water in order to quench his severe thirst
and as he was about to gulp it down,
He heard a voice from the sky above.

89. அசரீரி – கவி சொல்

தொடாதிந்த நச்சு நீரைத் தொட்டருந் திட்டா யானால்
விடாதுனைக் கொல்லும் பிண்பு விபரீத மனேக முண்டு
அடாததைச் சொன்னே னில்லை யறமிலாத நமக்கு ரைக்கப்
படாதுனக் குரைத்தே நன்றாய்ப் பகுத்தறிந் தேகு வாயே.

இந்த நச்சு நீரைத் தொட்டு உண்டு விடாதே! அவ்வாறு உண்டு விட்டால் துன்பம் அதிகமாகி உன்னை விடாது தொடர்ந்து கொல்லும். நான் தகாத வார்த்தை சொல்லவில்லை. அறமில்லாத சொல்லையும் சொல்லக்கூடாது. ஆகவே நானுரைத்ததைத் தெரிந்து கொண்டு நீரைப் பருகாமல் சொல்வாயாக.

நஞ்சுநீர் – விடம் கலந்த தண்ணீர். **விபரீதம்** – துன்பம். **அனேகம்** – அதிகம். **அடாதது** – சொல்லத்தகாதது.

அசரீரி – வசனம்

கேளுஞ் சகாதேவமூர்த்தி! இதுவோ நச்சுப் பொய்கை! இந்தச் சலத்தை நீ சாப்பிட்டால் அகத்தியம் இறந்துபோய் விடுவாய். இந்த நீரைச் சாப்பிடவேண்டாம் அப்பா சகாதேவ மூர்த்தியே!

அகத்தியம் – கட்டாயமாக, உறுதியாக.

Voice

Hear me O **Cakātēvā**!
This one is a pool of poison.
If you drink this water, you will sure die.
Please don't drink this water, my dear **Cakātēvā**.
I never speak improper words. Do realise.

90. சகாதேவன் – திபதை

அந்திரா மியமாய் சொன்ன [1]அரியயம் மொழியைக் கேட்டும்
தந்தாகக் கடினத் தாலே தானதை மதித்தி டாமல்
அந்தநீ ரதனை யள்ளி யாவலா யுண்டான் பின்பு
சிந்தையுங் கலங்கி னஞ்சாற் றேகமு மறந்து சொல்வான்.

வசனம்

அகோதெப்படி என்றால் இந்தப் பிரகாரம் தன் தாகத்தின் கொடுமையால் அசரீரி வாக்கையுங் கடந்து அந்நீரைப் புசித்தான். அது விஷமானதால் அவ்விஷம் தலைக்கேறித் தன்னைத் தான் மறந்தபோது அண்ணாவை நினைத்து வியாகூலப் படுகிறானய்யா!

அந்திராமியம் – உருவமில்லாமல். **மொழி** – சொல். **மதித்து** – எண்ணி. **ஆவல்** – ஆசை. **சிந்தை** – மனம் – புத்தி. **தேகம்** – உடல்.

Cakātēvan̲ - *Tipatai*

But **Cakātēvan̲** felt so thirsty
that he could not help consuming the water from the pool,
despite the voice warning him from the sky.
As a result he started fainting.

91. சகாதேவன் தரு

என்ன காரணம் என்னாவி சோருதே
மன்னு நச்சுநீரை உன்னித மாயுண்ண
என்னிரு கண்களு மிருண்டு சோருதே (என்ன)

நஞ்சென் றறியேனே இதை நானுங் குறியேனே
வஞ்சகன் றூரியன் வகுத்த திதுவோ
நெஞ்சை யடைத்திதோ துஞ்சு தென்னாவி (என்ன)

மார்பை யடைக்குதே மனமயங்கி னுடிக்குதே
[1]ஆரெந்த னண்ணாவுக் கறிவிப் பாரிதை
பாரளந்த அரிபங்கய நேத்திரா (என்ன)

மயக்க மாகுதே உடல் வாடிப் போகுதே
தியக்க முற்றகஞ் சிதைந்தொ டுங்குதே
யியக்க மற்றயென் னங்க மொடுங்குதே (என்ன)

என்ன காரணமோ தெரியவில்லை; என் உயிர் சோர்கிறது. நிலைபெற்ற நச்சுநீரை அருந்தி என் கண்களிரண்டும் இருளுகின்றன. நீரை விடம் என்று நான் அறியவில்லை; இதை நானும் எண்ணவில்லை. கபடன் துரியோதனன் வகுத்தது இதுவோ? என் மார்பை அடைக்கிறது உயிரும் இறக்கிறது. மனம் கலங்கித் துடிக்கிறது; இந்தச் செய்தியை என் அண்ணனிடத்தில் தெரிவிப்பார் யார் உளர்? இவ்வுலகத்தை மூவடியால் அளந்த தாமரை மலரை யொத்த கண்ணினையுடைய திருமாலே! மயக்கம் மிகுதியாகுது உடல் சோர்ந்து போகிறது. தயக்கமிகவுற்று உள்ளம் சிதைந்து ஒடுங்குகிறது. இயக்கமற்று என் உடல் நடுங்குகிறது.

பார் – உலகம். **பங்கயம்** – தாமரை. **நேத்திரம்** – கண். **தியக்கம்** – தயக்கம். **அகம்** – உள்ளம். **அங்கம்** – உடல்.

சு.சொ : 1. ஆறெந்த.

Cakātēvan̲ - *Taru*

It looks as if I am dying. What is the reason?
The poisoned water has caused My eyes to dim.
I did not know that the water is poison.
It did not simply strike me.
Is this the act of that schemy **Turiyōtan̲ā**?
I feel my breath being stifled and my life ebbing out.
My mind is pain-wrought.
Who is there to carry a message to my brother?
O my Lord **Viṣṇu**!
You are one who measured the Universe
with your three strides.
O the Lotus-eyed One!
My breath is grinding to a halt.
Senses are fast getting lost.
My body is ceasing to stir.

92. பொது – திபதை

என்றிந்த துயரு ழுந்தான் யெண்ணினான் தருமன் பாதம்
நன்றுறக் கருதி னான்பின் நண்ணிய [1]உயிரி ழுந்தான்
வன்றிறற் தருமன் தம்பி வரவின்னங் காணோ மென்று
நன்றறி நகுலன் றன்னை நாடியே யீது சொல்வான்.

கருதினான் – எண்ணினான். **நண்ணி** – இருந்து. **நன்றறி** – நல்லறிவுள்ள. **நகுலன்** – தருமரின் மூன்றாம் தம்பி.

பொதுவசனம்

அகோதெப்படி என்றால் சகாதேவ மூர்த்தி அந்த நச்சுநீரையுண்டு இறந்து போனான். இப்பால் தருமராசன் சலங்கொண்டு வருகிறதாய்ப் போன சகாதேவமூர்த்தி இன்னம் வரக்காணோமென்று நகுலனைப்பார்த்து ஏதென்று சொல்லுகிறார்.

க.சொ : 1. வுயிறிழந்தான்.

Author's words - *Tipatai*

So was **Cakātēvan** dead
through the consumption of poisoned water.
Anxiously having awaited his arrival with water,
disappointed **Tarumar** now speaks to **Nakulan.**

93. திபதை

தருமர் நகுலனைப் பார்த்துச் சொல்லுதல்

அறிவுள நகுல ராசே அடவியிற் சுனைநீர் கொண்டு
நெறியோடு [1]வருவ னென்று நிகழ்த்தியே போன தம்பி
மறுபடி வரவுங் காணேன் வாயது முலர்ந்த தப்பா
இறைநொடி தண்ணீர் கொண்டு யிளவலை யழைத்து வாராய்.

அறிவிற் சிறந்து விளங்கும் நகுலராசனே! காட்டின் நடுவில் உள்ள மலைச்சுனை நீரை நேர்மையாய்க் கொண்டு வருவேனென்று சொல்லிவிட்டுப் போன நம் தம்பி இன்னும் வரக்காணவில்லை. என் நாவும் நீர்வேட்கையால் காய்ந்து போய் விட்டது. நொடிப்பொழுதிற் சென்று சிறிதளவு நீர் கொண்டு இளையவனான சகாதேவனை அழைத்து வாராய்.

சுனைநீர் – மலையில் உள்ள நீர். **நிகழ்த்தல்** – சொல்லல். **இறைநொடி** – இமைப்பொழுது, கொஞ்ச நேரம். **இளவல்** – தம்பி.

தருமர் வசனம்

கேளுந்தம்பி நகுலராசனே! தாகத்துக்குச் சலங்கொண்டு வருகிறதாய்ப் போன தம்பி சகாதேவனை இன்னங்காணோம். நீ போய் அவனை அழைத்துக்கொண்டு சலமுங் கொண்டு வா! போ தம்பி.

Tarumar to Nakulan

Dear brother **Nakulā**!
Cakātēvan, who went to bring water has not yet come back.
Please go, find him and come back with water.

94. நகுலன் சொல் – திபதை

அண்ணாவே சொல்லக் கேளும் [1]ஆயாசந் தீர தோயம்
நண்ணாகக் கொண்டு வரேன் நாடியே கான மெங்கும்

விண்ணாரு மலையின் பாங்கர் மேவியே சுனைகள் தேடி

வண்ணமா வருகு வேனே மாத்திரை யளவிற் றானே.

அண்ணாவே! நான் சொல்லுகிறேன் கேளுங்கள். தங்களின் கடுமையான மனச்சோர்வு நீங்கக் கானகத்திலே வானுயர்ந்து நிற்கின்ற மலையின் பக்கம் சென்று எங்கேயாகிலும் தேடிக்கண்டு பிடித்து கணப்பொழுதில் நீர் கொண்டு வருகிறேன்.

ஆயாசம் – களைப்பு, சோர்வு. **தோயம்** – நீர். **விண்** – ஆகாயம். **பாங்கர்** – பக்கம். **மாத்திரை** – சொடிப்பொழுது.

வசனம்

கேளும் அண்ணாவே! தங்கள் ஆயாசந் தீரும்படி ஒரு கணத்திற் சலங்கொண்டு வருகிறேன் அண்ணாவே.

க.சொ : 1. ஆயாசன்தீற.

Nakulan to Tarumar

Dear Brother!
Be assured I'll go to the high mountainous jungle,
find water and get you some in no time.
Don't be worried.

95. நகுலன் சொல் – தரு

தண்ணீர் கொண்டு நானும் சதிருடன் வருகிறேன் – அண்ணாவே
சாருமடவி யெங்கும் நீரும் காணேனே அரி – நாரணனே

அண்ணாவுந் தாகத்தால் புண்ணாக் கினைவாரே – நாரணனே
அலைந்தெங்குந் தேடியுந் சலந்தன்னைக் காணோமே – நாரணனே

மலையிலுங் கானக மார்க்கமுங் காணேனே – நாரணனே
மற்றவிட மெல்லாஞ் சுற்றியுங் காணேனே – நாரணனே

நலிவாய் நாவுலர்ந்து மெலிவாரே என்னண்ணன் – நாரணனே
நளின மாதைத் திருஒளிநன் மார்பிலணிந்த – நாரணனே

நாடித் திசைளங்குத் தேடியுங் காணேனே – நாரணனே
வாடி யென்னாவும் வரண்டிட லாகுதே – நாரணனே

கடிகொள் கானத்திலோர் மடுவையுங் காணேனே – நாரணனே
படியிக் கணந்தேடி பார்த்தளிப்ப தன்றோ – நாரணனே

ஆதிமத்தி யானந்தர கிதமாய் நின்றொளிர் – நாரணனே

சோதிமயா னந்த ரூப தயாநிதே – நாரணனே.

பெருமையுடன் நான் தண்ணீர் கொண்டு வருகிறேன் அண்ணாவே. அழகான கானகத்தில் எங்கும் தண்ணீரைப் பார்க்கவில்லை. திருமாலாகிய நாரணனே தாகத்தால் அண்ணாரும் ரணமாகி வருந்துவாரே. எல்லாவிடத்தும் தேடி அலைந்தும் நீரைக் காணவில்லையே! இவ்வழியில் மலையிலும் காட்டிலும் எங்கும் நீர் காணவில்லை; மற்ற இடங்களெல்லாம் சுற்றித்திரிந்தும் காணவில்லை; என் அண்ணவாகிய தருமர் நா உலர்ந்து துன்பப்படுவாரே அழகுமிக்க இலக்குமியின் திரு ஒளியை மார்பினில் கொண்ட திருமாலே! எல்லாத் திசையிலும் நாடித் தேடியும் காணவில்லையே. என் நாவும் வரண்டு சோர்ந்து மிக வெப்பமாகுதே இக்கண நேரத்தில் இவ்வனத்திலே ஒரு பள்ளத்தையும் காணவில்லையே! இப்பூமியில் எப்படி நீர்த்துளி தேடிப்பார்த்துக் கொடுப்பேன். இன்ப வடிவாகிய நாரணனே, சோதி மயமான ஆனந்த வடிவமே தயாநிதியே!

சதிர் – அழகு, பொறுமை. **சாரும்** – அடர்ந்த, **அளைதல்** – வருந்துதல். **நலிவு** – அழிவு. **நளினம்** – அழகு. **கடிகொள்** – மணம் மிகுந்த. **மடுவு** – பள்ளம். **படி** – பூமி. **கணம்** – நீர்த்துளி. **ஆதிமத்தியானந்தரகிதம்** – அடிமுதல் முடிவரை இன்பவடிவமாய் உள்ளவன்.

Nakulan̲ - *Taru*

It should add to my sense of pride to get you some water.
But then, I haven't been able to find
in this exquisite jungle, any water at all.
O my Lord **Nārāyaṇā**!
My brother has been wilting without water here,
and I am not able to find water anywhere
here in this torrid terrain of hilly jungle.
O my Lord **Nārāyaṇā**!
Brother finds the agony of his parched tongue an unbearable one.
O my Lord! The bearer of the radiant glory,
O my Lord **Nārāyaṇā**!
Lakṣmi in your chest!
In past, in no part, in no direction there is water to be found.
O my Lord **Nārāyaṇā**!
My tongue too has dried up.
Not a little pit I am able to find in this place.
Oh, where could I find some water?
O Lord **Nārāyaṇā**! God of Absolute Bliss!
The light of life and joy! The compassionate one!

96. நகுலன் – திபதை

புனலதை நாடிப் பாண்டு புத்திரனாம் நகுல ராசன்
மனநிலை கலங்கித் தன்னா வரண்டிட வரைகள் காணப்
புனமெங்குஞ் சலத்தைக் காணாப் புலம்பியே வருகும் போது
பனிமலர் நச்சுப் பொய்கைப் பாத்த்ததி னருகில் வந்தான்.

மன்னன் பாண்டுவின் மைந்தனாகிய நகுலராசன் நீரைத் தேடிச் சென்றதால் மனம் வருந்தி, சோர்ந்து அவன் நாவும் வரண்டு, அந்த மலையையும் மலையைச் சார்ந்து காணப்படுகின்ற காடுகளெங்குந் தேடியும் நீர் காணப்படாததால் புலம்பி அழுதுகொண்டு வருகும் போது குளிர்ச்சியான மலர் நிறைந்த நச்சுக் குளத்தைப் பார்த்து மிக்க மகிழ்ச்சியோடு அதன் அருகில் வந்தான்.

புனல் – நீர். **பாண்டு புத்திரன்** – பாண்டு மகாராசனின் மைந்தன். **புலம்பல்** – அழுகை. **வரை**–மலை. **புனம்** – மலைச்சார்பான கொல்லை. **பனிமலர்** – குளிர்ச்சி பொருந்திய மலர்.

வசனம்

இப்படியாகக் கானகமெங்குந் தேடியும் சலம் அகப்படாமல் வருகும்போது நச்சுப்பொய்கையைக் கண்டு அதனருகில் வந்தானையா!

Nakulan̲ - *Tipatai*

So has **Nakulan̲**, the son of **Pāṇṭu**,
having run here and there
through the jungle in search of water,
now terribly tired,
his long tongue having dried up,
bemoaning his fruitless effort, has at last arrived
at the cool lily pool of poisoned water.

97. நகுலன் – திபதை

வந்தனன் தம்பி மாய்ந்த வண்ணமுங் கண்ணாற் கண்டேன்
அந்தோயி தார்செய் தீங்கோ வறிகிலே னாதி தேவா
[1]சிந்தைநொந் தயர்ந்தென் னாவி தியங்குதென் றமைய னாரும்
இந்தச் செய்தியை யறிந்தால் எவ்வகை யாகு மோதான்.

குளத்தைப் பார்த்து அருகில் வந்த நகுலராசன் தன் தம்பி சகாதேவன் இறந்து கிடந்ததைக் கண்ணால் கண்டான். கண்டவுடன் 'அய்யோ' என்று அலறி இது யார் செய்த தீமையோ நான் அறியவில்லையே. முழுமுதற் கடவுளாகிய நாராயணனே. மனம் நொந்து துன்பப்பட்டு என் உள்ளம் நோகுதே! என் அண்ணாருக்கு இந்தச் செய்தி தெரிந்தால் என்ன ஆகுமோ? என்ன செய்வாரோ?

மாய்ந்த – இறந்த. **தீங்கு** – துன்பம். **ஆதிதேவன்** – நாராயணமூர்த்தி. **அயர்ந்து** – சோர்ந்து. **தமையன்** – அண்ணன். **தியங்குதல்** – சோர்தல்.

க.சொ : 1. சிந்தநந்தயர்ந்தெ.

Nakulan̲ - *Tipatai*

on sighting the pool, neared it,
and as he neared he found **Cakātēvan̲** lying there dead.
He cried aloud: Oh, how come this happened to my dear brother,
and who is the wicked one who has done this to him?
O Lord **Nārāyaṇā**! The One and the whole! How grieved I am?
How would my elder brother take it when he comes to know!

98. நகுலன் சொல் – தரு

அய்யோ சகாதேவா உந்தனிட
ஆருயிர் விட்டனையோ
நையுதே யென்னெஞ்சம் உன்னைவிட்டு
நான்பிரிந் துய்வேனோ

தண்ணீர் கொண்டு வாவென்று தம்பிநம
தண்ணா அனுப்பி னாரே – இந்த
வண்ண மெவர் செய்ததோ தம்பியிவ
ரெண்ணந் தனைச்[1]சொல் வாயே

வீரமெங்கே [2]விட்டாயோ உந்தன்கையில்
வில்லெங்கே விட்டாயோ – இந்தப்
பாரில் கிடக்குமனை அய்யோ பாவி
பார்க்கவும் வந்தேனேயென்

நெஞ்சம் வரளுதையோ தண்ணீரென்று
நினைவு முண்டாகு தையோ இந்த
நஞ்சித நீரையுண்டு சகாதேவ
என்றா கந்தீர் வேனையோ.

அய்யோ! சகாதேவா உன்னுடைய அருமை உயிரை இழந்தாயோ, என் நெஞ்சம் வருந்துதே! உன்னை இன்றி நான் பிரிந்து பிழைப்பேனோ? "நீ போய்த் தண்ணீர் கொண்டு வா தம்பி" என்று அண்ணார் நம்மை அனுப்பினாரே இந்த வகையை யார் செய்தாரோ தம்பி அவர் யார் என்று சொல்லுவாயோ? உன்னுடைய வீரத்தையும் கைவில்லையும் எங்கே விட்டாயோ !

அய்யோ! இப்பூமியில் கிடக்கின்ற உன்னைப் பாவியாகிய நான் பார்க்க வந்தேனே! என் தொண்டை காய்ந்து தண்ணீர் என்ற நினைவும் உண்டாகுதே! நானும் இந்த நீரை உண்டு சகாதேவா! என் தாகத்தை தீர்த்துக்கொள்வேனையா!

நையுதல் – துன்பப்படுதல். பார் – உலகம். அரளுதல் – அஞ்சுதல்.

சு.சொ : 1. சொல்வையே 2. விட்டையோ.

Laments of Nakulan̲ - *Taru*

Alas! My dear **Cakātēvā**!
How did you come to lose your dear life!
How saddened I am?
Will I survive your end!
After all our elder brother sent us to get some water.
Could you tell me who has done this to you?
How is it you could not put to use
your warrior's skill and bow and arrows?
Dammed I am to have come to see you dead.
My parched throat needs a little water.
I too should consume this poisoned water
and quench my thirst.

99. நகுலன் – கவி

தம்பியி றிறத்தல் னோக்கி தளர்ந்துகோ வென்ற [1]ரற்றி
வெம்பிடுந் தாகந் தன்னால் விலக்குதற் கரிய தாகி
இம்பரி நச்சுப் பொய்கை யினிலகு மதிநீர் தன்னை
அம்புயக் கரத்தி னள்ள வாகாய வாணி சொல்வாள்.

வசனம்

இப்படியாக நகுலராசன் இந்த நச்சுப் பொய்கையினருகில் சீவித்திருக்கிற தம்பி சகாதேவனைக் கண்டு மிகவுங் கிலேசத்தை அடைந்து நச்சுப்பொய்கை யிலிறங்கி அந்த நீரை யள்ளினான்; அப்போது அசரீரி சொல்லுகின்ற விதமெப்படி யென்றால்,

கோவென்றரற்றி – வாய்திறந்து அழுது. **விலக்குதற்கு** – தவிப்பதற்கு. **இம்பர்** – இவ்வுலகத்தில். **மதிநீர்** – குளிர்ந்தநீர். **அம்புயம்** – தாமரை. **ஆகாயவாணி** – அசரீரி வார்த்தை.

சு.சொ : 1. றரத்தி.

Nakulan̲ is taking the water

So much aggrieved by the death of his brother, **Cakātēvā**, **Nakulan̲** too got into the pool and collected some water to drink but heard a voice from the heaven above at the same time.

100. அசரீரி சொல் – திபதை

மதிகுல நகுல ராசே மலரல்லிக் குவளை யோடு
விதிதரு மிந்த நச்சு மாப்புன லுண்டுன் றம்பி
கதியிலா திறந்தா னந்த காளைக்கு முரைத்தே னப்பா
விதிதனக் கீடா யுண்ண மேவின யுனக்குஞ் சொன்னேன்.

அசரீரி வசனம்

ஆகோ கேளும் சந்திரவம்சத் திலகனான நகுலராசனே! இந்த நச்சுப் பொய்கையின் நீரை முன்னம் உன் தம்பி சகாதேவமூர்த்தி சாப்பிட ஆரம்பிக்கும் போதுஞ் சொன்னேன். அதை மறுத்துண்டதினால் இறந்து போய் விட்டான். இப்போது விதியினால் இந்நீரைச் சாப்பிடப்போகிற உனக்குஞ் சொன்னேனப்பா நகுலராசனே.

மலரல்லி – அல்லிமலர். **கதியிலா** – ஆதரவு இல்லாத. **காளை** – ஆண் மகன். **மேவின** – நடந்தன.

Voice

Lo! Listen. O **Nakulā**, the gem of Chandra line!
I timely warned your brother
as he was about to drink the water form this pool,
but he did not heed.
Drinking the water he died.
Now I warn you the same way against consuming this water.
Please take the warning.

101. நகுலன் – கவி

அந்தசொற் கேட்டுந் தாக மடக்கவோர் வகையி லாதான்
விந்தைசேர் நச்சு நீரை விருப்பமாய்ப் பருகும் போது
சிந்தையு மயங்கித் தன்பாற் றேகமு மறியா னாகி
அந்தோ[1]யென் னண்ணா வேயென் றழுதவ னேது சொல்வான்.

பொது வசனம்

இப்படியாக நகுலராசன் ஆகாயவாணி சொல்லியும் கேளாமல் தன் தாகம் தனக்குச் சகிக்கக் கூடாதவனாய் அந்நீரைப் பொசித்தான். அப்போது அண்ணாவை நினைத்துத் தேக மறந்து புலம்புகிற விதம் எப்படி என்றால்,

அடக்க – தணிக்க. **விந்தை** – ஆச்சரியம். **சிந்தை** – மனம். **ஆவி** – உயிர்.

ச. சொ : 1. யென்னணாவே.

Nakulan drinks the water

Not paying heed to the warning from above,
Nakulan, not being able to bear the agony of thirst
took some water from the pool,
And as he was losing his consciousness lamented thus:

102. நகுலன் சொல் – தரு

மயக்க மாகுதே – உயிர் மாய்ந்து போகுதே
மயக்கமாகி வருகு தென்னுடல்
தியக்கமாகித் தேங்கிச் சோருதே (மயக்க)

சோர்ந்து போகுதே கால்கண் சொருகிப் போகுதே
[1]நேர்ந்த நஞ்சு நீரையுண்டிட
தேர்ந்த ஆவியுஞ் சோர்ந் தொடுங்குதே (மயக்க)

தாகத்தி னலிவாரே என் ணண்ணா தளர்ந்து மெலிவாரே
வாகை யோடி யாங்கள் வருவோ மிப்போதென்
றேக மாகவே முற்றிடு வாரையோ (மயக்க)

இந்த விதிக் காளா நானிருந்தேன் வெகுநாளா
இந்த தூல [2]சூக்கும மிரண்டு [3]மொடுங்கி
அந்த சுமுத்தி யிலடைந்துதே அரி (மயக்க)

மயக்கம் வருகிறது. என் உயிர் அழிகிறது. என் உடல் கலக்கமடைந்து சோர்ந்து இருகாலும் கண்ணும் அயர்ந்து சொருகிப் போகிறது. இங்கு இருந்த நஞ்சு கலந்த நீரை உண்டதால் உயிரும் சோர்ந்து ஒடுங்குகிறது. தாகத்தால் என்னண்ணார் துன்பப்பட்டு மெலிந்திருப்பார். நாங்கள் வெற்றியோடு சலம்கொண்டு இப்பொழுதே வருவோமென்று நினைத்துக் கொண்டிருப்பார். நீண்ட நாளாக இந்த விதிக்கு ஆளாக நான் இருந்தேன். மேலும் எனது உள்ளுடல், வெளியுடல் இரண்டும் ஒடுங்கி முக்தியடைந்தது போலுள்ளது திருமாலே!

தியக்கம் – கலக்கம், சஞ்சலம். **வாகை** – வெற்றி. **தூலசூக்குமம்** – பருவுடல், நுண்ணுடல். **சுமுத்தி** – சமாதிநிலை.

பொது வசனம்

இப்படியாக நகுலராசனும் அந்த நச்சுப்பொய்கை நீரையுண்டு இறந்தான். இப்பால் தருமராசன் அர்ச்சுனனைப் பார்த்துச் சொல்லுகிற விதமெப்படி யென்றால்,

சு.சொ : 1. னேர்ந்த 2. சூக்மமிரண்டு 3. மொடிங்கி

Nakulan - *Taru*

Oh, I am fainting; my life is ebbing out;
Body getting benumbed and my eyes are sinking.
This has resulted from my drinking of the water from the pool.
My elder brother would have by this time grown weaker
and leaner further for want of water.
He must be waiting for our return with water.
Perhaps I had awaited this misfortune all along.
My form, both the concrete and subtle have been reduced
to a state of redemption, O Lord **Nārāyaṇā**!.

Prose : Then **Nakulan** too had died having drunk the water from the pool of poison and **Tarumar** does speak so to **Arccunan**.

103. தருமராசன் – சொல் – திபதை

பிரியமான தம்பி மாரும் பெருகிய புனல்கொண் டிங்கே
வருகவுங் காணோ மென்னா வரண்டெனை வருத்து தையோ
வரைபுயத் தர்ச்சு னாநீ வனத்திற்சென் றருநீர் கொண்டு
விரைவினில் வந்தாற் றாக விடாயது தீர்வே னப்பா.

எனது பிரியமான தம்பிமார்கள் இருவரும் இன்னும் தண்ணீர் கொண்டு வரக்காணேன். எனது நா உலர்ந்து என்னைத் துன்புறுத்துகிறது. வலிமையான மலையையொத்த தோளையுடைய அர்ச்சுனனே, நீ விரைந்து வந்து நீர் கொடுத்தால் எனது நீர் வேட்கையைத் தீர்த்துக் கொள்வேன்.

வரைபுயத்தான் – வலிமையான மலையையொத்த தோளையுடைய அர்ச்சுனன். **அர்ச்சுனன்** – தருமராசனின் இரண்டாம் தம்பி. **பெருகிய** – மிகுந்த.

வசனம்

அகோ கேளுந் தம்பி அர்ச்சுனா! எனது பிரியமாகிய தம்பிமார் இரண்டு பேர் போயும் இன்னஞ் சலம் வரயில்லை. நீயாகிலும் போய்த் தண்ணீருங்கொண்டு தம்பிமாரையும் அழைத்து வாருமப்பா.

வசனம்

அப்படியே அழைத்து வருகிறேன் அண்ணா.

Tarumar - *Tipatai*

Neither of my beloved brothers has returned with water.
My thirst continues to torment me.

O **Arccuṉā** with rock-like strong shoulders,
Go and get me some water to quench my thirst.

Prose:

Tarumar : Arccuṉā! I tell you. Neither of the brothers has brought some water. You can do it. Go get me some water and come back with your brothers.

104. அர்ச்சுனன் சொல் – கவி

அறமுரு வண்ணா புறமதி லேகி
[1]மறை யிலா நீர்கொண் டிறைநொடி வருவேன்

புறம் – வெளியே. **முறையிலா** – குற்றமில்லாத. **இறைநொடி** – சிறுநொடி.

வசனம்

கேளுந் தரும சொருபியாகிய அண்ணாவே இதோ – புறம்பிற் சென்று – குற்றமற்ற சலங்கொண்டு கண்ணொடிப் போதில் வருகிறேன் அண்ணாவே.

சு.சொ : 1. மரைமிலா.

Arccuṉaṉ - *Kavi*

O my beloved brother, **Tarumā**!
Paragon of **Tarmā** !
I shall bring you water in no time.

105. அர்ச்சுனன் – தரு

என்தம்பி மாரை யெங்கே நான் தேடுவேன் அச்சுதனே
[1]இளையவரை எந்த இடத்தினிற் காணுவேன் அச்சுதனே
முந்தி நீர்கொண்டு முடிகினென் றேகின அச்சுதனே – அந்த
முனையுடு வீரர் னினமெங்கே யலைவாரோ அச்சுதனே

காடுமலையிலோ கானாறு தேடியோ அச்சுதனே
காளைகளெங்கே கலங்கி [2]வாறாரோ அச்சுதனே
வாடிபல காதம் தேடியும் நீர்காணேன் அச்சுதனே
மன்னரென் னண்ணாவும் வாடிக் களைப்பாரே அச்சுதனே.

என் தம்பியரை எங்கே கண்டு தேடுவேன் கண்ணா! எந்த இடத்தினில் காணுவேன், முன்னே நீர் கொண்டு வெகு விரைவில் வருகிறேன் என்று சொன்ன துணிவுடைய வீரர்கள் எங்கே அலைகின்றாரோ? காட்டிலும், மலையிலும் காட்டாறு தேடி இளையோர்கள் கலங்கி வருந்துகிறார்களோ? பலகாத தூரம் தேடியும் நீரைக்காணேனே, . கண்ணா! மன்னராகிய என் அண்ணார் சோர்ந்து கலங்கி யிருப்பாரே.

அச்சுதன் – விஷ்ணு, கண்ணன். **இளையவர்** – இளைய சகோதரர். **முடுகி** – விரைந்து. **முனையுடு** – போர்க்களத்தில் வீரத்தோடு போர்செய்யும். **இனம்** – இன்னும். **கானாறு** – காட்டாறு. **காளைகள்** – இளையோர், இளையதம்பிகள். **காதம்** – நாலு கூப்பிடு கொண்ட தூரம்.

க.சொ : 1. இலையவரே 2. வாடுராறோ.

Arccu<u>n</u>a<u>n</u> - *Taru*

Where could I find my brothers? O Lord **Accutā!**
Where are they now? O **Accutā!**
They went in search of water O **Accutā!**
And have since been lost. O **Accutā!**.
Having strayed into the deep forest O **Accutā!**
Perhaps they are still rambling through the hill-locks
looking for a water place O **Accutā!**.
I have come a long way, O **Accutā!**
and yet haven't been able to find a little water. O **Accutā**!
My kingly brother **Tarumar** might feel
so terribly tired and listless! O **Accutā**!
Where could I find my brothers O **Accutā**!

106. அர்ச்சுனன் சொல் – விருத்தம்

இத்தனை தூரம் வந்தும் இளையவ ரிருவர் தம்மை
இத்திசை தன்னிற் காணேன் [1]யினியநற் புனலுங் காணேன்
அத்தனே ஆதிமூல வனந்தசோ தியனே யுன்றன்
சித்தமிவ்வா றன்றி [2]யானுந் தெளிந்தினி யறிகி லேனே.

இளையரிவர் – இளையதம்பியாகிய நகுலன், சகாதேவன். **அத்தன்** – தலைவன், இறைவன். **ஆதிமூலர்** – முழுமுதற்கடவுளாகிய விஷ்ணு. **சித்தம்** – மனக்கருத்து.

க.சொ : 1. யினியனற் 2. யானின்.

Arccu<u>n</u>a<u>n</u> - *Viruttam*

Having come deep into the jungle so great a distance,
I have not found my younger brothers.
Nor have I been able to locate a good water source.
O my Lord, the First and the Absolute!
Is this your will? I know not your mind at all.

107. அர்ச்சுனன் சொல் – தரு

எங்கே கண்டு தேடுவேனையோ – புனலை நானும்
எங்கே கண்டு தேடுவேனையோ
எங்கே கண்டு தேடுவேன் – யிந்தக்காடு செடிதனில்
அங்கம் வெய்யிலில் வெம்பி ஆவிமிகச் சோருதே (எங்கே)

தாகத்தால் வாடுவாரே – அண்ணாவு மெதிர் தான் பார்த்துத் தேடுவாரே
சோகத்தி னாலேவெகு துன்பப் படுவாரே
வேகமாய்ச் செல்லா விட்டால் மெலிந்துயிர் விடுவாரே (எங்கே)

அடுக்க லடவி யெங்குமே தேடியும் புனல் [1]அருந்தவுங் காணும் காணுமே
இடுக்கணுற் றண்ணாவும் யிளைத்துடல் [2]நைவாரே
மடுக்களில் நீர்கொண்டீந்தால் மன்னுயி ருய்வாரே (எங்கே)

தம்பிமார்களைக் காணேனே – இந்த வெய்யலில்
தயங்கினான் வாட லானேனே
வெம்பிய கானலில் விடாய்மிகப் பட்டீரோ
அம்புவி மன்னனண்ணா அழைக்கிறார் வாரீரோ (எங்கே)

எங்கே கண்டு தேடுவேன் நீரை நானும் எங்கே கண்டு தேடுவேன். இந்தக் காடுகளிலும், செடிகளிலும் எனது உடல் சூரிய வெப்பத்தால் வாடி உயிர் சோர்கிறது. அண்ணாவும் நீரை எதிர்பார்த்து என்னைத் தேடுவாரே! நீர் வேட்கையால் வாடுவாரே! மிகுந்த சோகத்தினால் துன்பப்படுவாரே! விரைவினில் போகாவிட்டால் உடல் மெலிந்து உயிர் விடுவாரே! மலை காடுகள் எங்கும் தேடியும் எங்கேயும் நீர் இல்லையே. அண்ணாவும் உடல் களைத்துத் துன்புறுவார். நீர்நிலைகளில் இருக்கும் நீரைக்கொண்டு கொடுத்தால் உயிர் பிழைப்பார். தம்பிமார்களைக் காணாமல் இந்தச் சூரியனின் வெப்பத்தால் தயங்கி வாடலானேன். வாடிய வெப்பத்தில் மிகுந்த நீர் வேட்கைப்பட்டீரோ! இப்பூமியை ஆளுகின்ற மன்னன் அண்ணன் அழைக்கிறார் வாரீர்.

அங்கம் – உடல். **வெய்யில்** – சூரிய ஒளி. **வெம்பி** – வாடி. **ஆவி** – உயிர். **அடுக்கல்** – மலை. **அடவி** – காடு. **இடுக்கண்** – துன்பம். **மடுக்கள்** – நீர்நிலைகள். **கானல்** – வெப்பம். **அம்புவி** – அழகிய பூமி.

சு.சொ : 1. யுருந்தவங் 2. னைவாரே.

Arccunan̲ - *Taru*

Where, where to find some water?
This is a jungle of thick bushes and trees,
and under a scorching sun I feel almost run-down. (Where)

Brother is waiting there for my return with water.
Thirsty, he must be in great pain. (Where)
Unless I return quickest, he is bound to breathe his last.
There's no water anywhere here.
If water could be found he would survive, Hot Sun!. (Where)
Untraceable brothers!
O my beloved brothers! (Where)
This hot sun must have added to your agony.
Our brother, the ruler of the earth, is calling out.
Come along please.

108. அர்ச்சுனன் சொல் – கவி

என்னிட தம்பி மாரை எங்கேநான் காண்பே னென்று
தன்னிட மனமு நொந்து தவித்துமே தேடும் போது
முன்னமே நச்சுப் பொய்கை முன்னிருப் பதையுங் கண்டு
மன்னியே தம்பி மாரை வாடியே விசையன் கண்டான்.

என்னுடைய தம்பிமாரை நான் எங்கே பார்ப்பேன், என்று தன்னுடைய உள்ளம் வருந்தித் தவித்துத் தேடும் போது முன்னால் இருக்கும் நச்சுக் குளத்தையும் வாடிக்கிடக்கின்ற தம்பிமார்களையும் அர்ச்சுனன் கண்டான்.

மன்னிய – நிலைபெற்ற. **விசையன்** – அர்ச்சனன்.

Arccu<u>n</u>a<u>n</u> – *Kavi*

Where could I find my brothers?
So bemoaning his helplessness, **Arccu<u>n</u>a<u>n</u>** walked
on further and stumbled upon the pool of poison
and also his brothers lying on the ground unconscious.

109. அர்ச்சுனன் சொல் – தரு

அய்யய்யோ தம்பிமாரே அடவியி லிறந்தீர்களோ
பொய்கை சலத்தையுண்டு பிரிந்தீரோ வுயிர்தன்னை

மானைத்தேடி வந்ததம்பி மாண்டவிதஞ் சொல்லாமலே
தானு மடியவெண்ணிச் சலத்தையுண் டிறந்திட்டாயோ

வருவீர்கள் மானைக்கொண்டு வழிபார்த்தார் தர்மரண்ணா
[1]தருநிறை நச்சுப்பொய்கையின் [2]தண்கரையி லிறந்தீர்களோ

அண்ணாவுக் கென்னசொல்வேன் அருமையென் தம்பிமாரே
நண்ணுமிந்தப் பொய்கைநீரை நானுமுண் டிறந்துபோறேன்
கண்ணனே கரியவண்ணா கர்த்தாவுன் செயலிதுவோ
அண்ணாவே வைகுந்தவாசா அடியேனைக் காருமையா!

தம்பிமார்களே! கானகத்திலிறந்தீர்களோ? குளத்துநீரை உண்டு இறந்தீர்களோ? மானைத் தேடிவந்த தம்பி சகாதேவன் மாண்டவிதம் சொல்லாமல் நீயும் இறக்க நினைத்து நீரைப் புசித்து இறந்திட்டாயோ! நகுலா? நீங்கள் மானைக் கொண்டு வருவீர்கள் என்று வழிபார்த்திருந்தார் தருமரண்ணா. மரங்கள் நிறைந்த விஷக்குளத்தின் கரையில் இறந்தீர்களோ. நம் அண்ணாவுக்கு என்ன கூறுவேன்? இறந்துபோகிறேன். கண்ணனே கரிய நிறத்தையுடைய திருமாலே, படைப்பு முதலிய தொழில் புரியும் கர்த்தாவாகிய விஷ்ணுவே இது உன் செயலோ அண்ணாவே வைகுந்தத்தை இருப்பிடமாகக் கொண்ட திருமாலே! அடியேன் எனைக் காத்தருளுமைய்யா!

அடவி - காடு. **கரியவண்ணா** - கரிய நிறமுடைய திருமாலே. **கர்த்தா** - **கர்த்தன்** - செய்வோன். படைப்பு முதலிய தொழில் புரியும் விஷ்ணு. **வைகுந்த வாசன்** -வைகுந்தத்தை இருப்பிடமாகக் கொண்ட திருமால்.

க. சொ : தருநிரை 2. தன்கறை.

Arccun̲an̲ - *Taru*

Brothers! Are your dead?
Has it been caused by the water from the pool?
Cakātēvan̲ came into the jungle chasing the deer.
Perhaps you did not want to have to speak of his end,
And so you too drank the water from the pool and died.
Tarumar waited for you to come back with the deer.
Have you lost your life on the bank of the pool of poison?
What could I tell our elder brother?
My dear brothers!
I too could like to drink from this pool and die.
O **Krisṇa**! The dark-complexioned Lord **Visṇu,**
the all-performing Lord! Did you do this?
O Lord, the dweller of **Vaikuntā**!
May you protect me!

110. அர்ச்சுனன் சொல் - விருத்தம்

அரற்றின னர்ச்சு னன்றன் அரிய தாகத்தா லோடி
[1]உருத்தெரி நச்சுப் பொய்கை யுண்புன லதனைச் செங்கேழ்

கரத்தினா லள்ளி யுண்ணும் காலையி லறத்தி னோங்கும்

வரத்தினா காய வாணி [2]மறுத்தவ னுக்குச் சொல்வாள்.

வசனம்

இப்படியாக அர்ச்சுன மகாராசன் தம்பிமார் இறந்திருப்பதைக் கண்டு கோவென்றழுது தனக்கு நேர்ந்த கொடிய தாகத்தைச் சகிக்கக் கூடாதவனாய் அந்த நச்சுப் பொய்கையிற் போய் அந்நீரை அள்ளிச் சாப்பிட ஆரம்பிக்கும் போது ஆகாயவாணி மறுத்துச் சொல்லுகிறவிதம் எப்படி என்றால்.

அரற்றி – அழுது புலம்பி. **அரிய** – அருமையான. **உருத்தெரி** – தோன்றிய. **செங்கேழ்கரம்** – செந்நிறமான கை. **காலை** – சமயம். **அறத்தில் ஓங்கும்** – தருமத்தில் ஓங்கும். **ஆகாசவாணி** – அசரீரி.

ச.சொ : 1. உறுத்தெரி 2. மருத்து.

Arccuna̲n̲ – *Viruttam*

The sight of his dead brothers made **Arccuna̲n̲** weep a lot of tears
and made his thirst most unbearable.
So he reached the pool
and as he got ready to drink some water,
he heard the voice from above restraining him.

111. ஆகாசவாணி சொல் – திபதை

சொன்னெறி வழாத தூய சுகுணபற் குணனே கேளாய்

நன்னெறி யிலாத நச்சு நாரமீ தாக மப்பா

மன்னெறி யொழுகு தம்பி மாரு[1]மின்னீரை யுண்டு

துன்னெறி யாவி நீங்கித் துஞ்சின ரறிந்தி டாயே.

நெறிதவறாத நல்வழிச் சொல்லையுடைய நல்ல குணத்தையுடைய களங்கமில்லா அர்ச்சுன மகாராசனே கேட்பாயாக! நல்வழி அல்லாத இந்த நீர் நஞ்சு நிறைந்ததப்பா, தருமர் சொற்படி நடக்கும் உன் தம்பிமார்கள் இந்த நீரை யுண்டதனால் உயிர் பிரிந்து செத்தனர் என்பதை அறிவாயாக.

சொன்னெறி – சொல்நெறி – நெறிதவறாத நல்வழிச்சொல். **சகுணம்** – நற்குணம். **பற்குணன்** – அர்ச்சுனன். **பால்குண மாதம்** – பங்குனி மாதம் (பங்குனி உத்திரத்திலே பிறந்தமையின் அவன் இப்பெயர் பெற்றான்). **நன்னெறி** – நல்வழி. **நாரம்** – நீர். **மன்னெறி** – மன்னனுடைய நெறி. **துன்னெறி** – தீயவழியில். **துஞ்சினர்** – இறந்தார்.

ஆகாசவாணி – வசனம்

கேளுந்தம்பி அர்ச்சுனா! இதோ இந்த நீரானது நஞ்சுடையதாகும். நீ இந்தச் சலத்தைச் சாப்பிட வேண்டாம். அதோ உன் தம்பிமார் இருவருக்குஞ் சொன்னேன். அதைத் தடுத்து இந்த நீரை யுண்டிறந்தார்கள். அதையாகிலும் அறிந்துபார் அர்ச்சுனா.

ச.சொ : 1.மென்னீரை.

Voice

O Arccuna the faithful and obedient!
This water is poison, without hearing my words
your brothers have died of the poison water in the pool.

112. அர்ச்சுனன் – வெண்பா

கொடியதான தாகக் கொடுமையினால் அர்ச்சுனனும்
படிமேவு [1]மந்நீர் பருகினான் – உடல்சோர்ந்து
வாயுளறக் கண்சொருக வாடிதரு மன்றனையே
நேயத் தழுதா நினைந்து.

வசனம்

இப்படியாக அர்ச்சுனனும் தன் தாகக் கொடுமையினால் ஆகாயவாணி சொன்னதை மறுத்து அந்நீரைப் பொசித்தான். அப்போது மயக்கமாகி மெய்சோர்ந்து அண்ணாவை நினைத்துப் புலம்புகிறானையா!

படி – பூமி. மேவு – பொருந்திய, நேயம் – அன்பு.

க.சொ : 1. மன்னீர்.

Arccunan drank the water

But then even **Arccunan** not paying any heed to the advice
drank the water from the pool, he fainted
and thinking of **Tarumar** he lamented.

113. அர்ச்சுனன் – தரு

அய்யோ என்னாவி சோருதே – ஓ அண்ணாவே
அய்யோ என்னாவி சோருதே
அய்யோ என்னாவி சோர்ந்து
அலையு தேமனங் குலையுதே அரி (ஐயோ)

இந்தநஞ்சா லுயிர் துஞ்ச லாகுதே ஓ அண்ணாவே
தஞ்ச மென்றெனை அஞ்சரிப் பாரிலை
சதியோ கதியோ விதியோ [1]அறியேன் (ஐயோ)

தண்ணீர் கொண்டு [2]வாரேனென்றேனே ஓ அண்ணாவே
தண்ணீர் கொண்டு [3]நண்ணினே னிலை
சற்பனையோ அரி கற்பனையோ யிது (ஐயோ)

ஆவிதளர் நாடி மீறுதே ஒ – அண்ணாவே
பாவிக்கொரு ஆவியாகிய பரனே மலர்க்கரனே அரி (ஐயோ)

ஐயோ என் உயர் சோருதே! அண்ணாவே, என் உயர் சோருதே என் உயிர் சோர்ந்து அலையுதே! உள்ளம் குலையுதே! திருமாலே! இந்த விஷத்தால் உயிர் தளர்ந்து போகிறதே! அண்ணாவே என்னை அடைக்கலம் தந்து ஆதரிப்பாரில்லை. சதியோ? கதியோ? இல்லை விதியோ? அடியேன் தண்ணீர் கொண்டு வருகிறேன் என்றேனே! அண்ணாவே! தண்ணீர் கொண்டு வந்து உன்னை அடையவில்லை. சதியோ? இது விதியோ? உயிரும் தளர்ந்து நாடித்துடிப்பு மாறுகிறதே அண்ணாவே! இந்தப் பாவியாகிய எனக்கு உயிரும், உடலுமாகிய விஷ்ணுவே! மலர்போன்ற கையையுடைய திருமாலே! ஐயோ என் உயிர் சோருதே.

துஞ்சல் – துஞ்சுதல் – வாடுதல். **அஞ்சரித்தல்** – ஆதரித்தல். **நண்ணினேன்** – அடைந்தேன். **அரி** – திருமால். **சற்பனை** – விதி. **கற்பனை** – பாவனை. **பரன்** – விஷ்ணு.

பொதுவசனம்

அகோதெப்படி யென்றால் அர்ச்சுன மகாராசன் அந்த நச்சு நீரைப் புசித்து மரணமடைந்தான். இப்பால் தருமராசன் வீமனைப் பார்த்து ஏதென்று சொல்லுகிறார்.

சு.சொ : 1.அரியேன் 2. வாரெநென்றேன் 3.நன்னிலை.

The lamentation of Arccu<u>n</u>a<u>n</u>

Alas! I am dying my dear brother.
My breath is adrift.
My senses are being lost.
O Lord **Viṣṇu**! This poison is dampening my spirit.
O my brother! There is no one who could rescue me!
Is it a design on me? Is it my fate?
I said I would bring you some water.
But I could not. Life seems to be ebbing out.
My pulse is failing.
O Lord **Viṣṇu**! You are both my body and spirit!
O Lord, the lotus-palmed one! I am wilting.

114. தருமர் – விருத்தம்

திண்டிறல் வீம ராசே சென்றதோர் தம்பி மாரும்
தெண்டிரை புனல்கொண் டிங்கே சேரவுங் காணே [1]னின்னம்
வண்டின நறுந்தே னுண்டு வாருதி போலொ லிக்கும்
மண்டிய வனத்தி லென்ன வகையொன்று மறியே னையோ.

அதிக வலிமையும், வீரமும் உடைய வீமராசனே! தெளிந்த அலையுடைய நீரைக்கொண்டு வருகிறேன் என்று சொல்லிச்சென்ற உன் தம்பிமார்கள் இன்னமும் வந்து

சேரவில்லை. வண்டுகளின் கூட்டங்கள் சுவைமிக்க தேனை உண்டு கடல்போல் ஒலிக்கும் அந்த அடர்ந்த கானகத்தில் என்ன நடந்ததோ ஒன்றும் தெரியவில்லை.

திண்டிறல் – வல்லபம், அதிவீரம். **தெண்டிரை** – தெளிந்த அலை. **வாருதி** – கடல். **மண்டி** – அடர்ந்த.

சு.சொ : 1. நின்னம்.

Tarumar - *Viruttam*

O strong and brave **Vīmā**!
Your brothers who went in search of good water have not returned.
There is no knowing of what happened to them in the jungle
where the honey-sucking swarms of bees hum
around like the waves of a sea.

115. தருமராசன் சொல் – தரு

என்ன விதிவசமோ தம்பிமாருக் கெவரால் கெடு மோசமோ
மன்னா சலங்கொண்டு வருகிறோ மிதோவென்று
சொன்ன தம்பியரென்று இன்னங் காணேனே – பண்டு (என்ன)

ஆசைக் குரியவரே தம்பிமாரே [1]அறிவிற் பெரியவரே
நேச மாகச்சலம் தேடியங் கலைவீரோ
வாசமிவ் விடமென்று வகைதா னுரையீரோ (என்ன)

துரியன் வஞ்சனை செய்தானோ யின்னமோர் சூரன்
தோற்றி யுங்களை வதைத்தானே
திரமொன்றுந் தெரியமால் சிந்தை கலங்குகிறேன்
வரும்வழி எதிர்பார்த்து வாடிக் கலங்குகிறேன் (என்ன)

தம்பி மூவரை விட்டுநான் வீமசேனா தவித்திருப்பது ஞாயமோ
வெம்புதென் மனமுமே வேகமாய் ஓடிநீ
தம்பிமாரையுஞ் சலந்தனையுந் தேடிக் கொண்டுவா (என்ன)

என்ன விதிவசமோ? தம்பியர்களுக்கு எவரால் கேடு நேர்ந்ததோ? இதோ நீர் கொண்டு வருகிறோமென்று சொல்லிச் சென்ற தம்பியரை இன்னமும் காணேன். ஆசைக்குரியவர்களே! தம்பியர்களே! அறிவிற் பெரியவர்களே! பாசமாக நீரைத் தேடி எங்கே அலைகிறீர்களோ? நீங்கள் இருக்கும் இடம் எது என்பதைக் கூறுவீர்களோ? துரியோதனன் வஞ்சனையேதும் செய்தானோ? இல்லை அசுரன் தோன்றி உங்களை வதைத்தானோ? ஒன்றும் தெரியாமல் புத்தி கலங்குகிறேன். நீங்கள் வரும் வழியை எதிர்பார்த்து வாடிக் கலங்குகிறேன். தம்பியர் மூன்று பேரையும் பிரிந்து நான் தனிமையில் தவித்து இருப்பது ஞாயமோ, வீமசேனா!

என் மனம் மிக சோர்ந்து வாடுகிறது. விரைவினில் நீ சென்று தம்பியரையும் நீரையும் தேடிக்கொண்டுவா!

பண்டு – முன்பு. **வாசம்** – இருப்பிடம். **சூரன்** – ஓர் அசுரன். **திறம்** – வகை.

ச.சொ : 1. அறிவிற் பெரியவர்.

Tarumar - *Taru*

What misfortune awaited there in the jungle my brothers.
Who did what harm to them who went in search of water
I do not know. O my beloved brother!
Greater is your understanding.
You have strayed into the jungle in search of water.
Is there a way of knowing your whereabouts?
Is it an act of that schemy **Turiyōta<u>n</u>a<u>n</u>**
or is it a demon who has caused you some terrible distress?
I feel perturbed, waiting for your return.
O **Vīmā**! Is it right on my part to be separated
from three of my dear brothers?
It pains me much.
Please go out rescue them
And return soon with some water also.

116. தருமர் சொல் – கட்டளைக் கலித்துறை

என்னா வரண்டிரு காதையு மூடு திருளுதுகண்
முன்னூழ் வினைப்பய னோவறி யேன்புனல் முன்னிச்சென்று
[1]கண்ணொடிப் போதிற் சலமு மிளையாரைக் கண்டழைத்தெள்
முன்னாக வாருங் கதாயுத னேசொலு முற்றியனே.

வசனம்

கேளும் தம்பி வீமசேனா! என்னா வரளுகிறது. என் இருகாதையும் மூடுகிறது, கண்களும் இருளுகின்றது. ஆனாலிது ஊழ்வினையோ? நீயாகிலுஞ் சலத்தை நாடிப்போய் ஒரு கைநொடிப்பொழுதில் சலமுங் கொண்டு தம்பிமாரையும் அழைத்துக் கொண்டு வாருந் தம்பி.

வீமசேனன் வசனம்

அப்படியே தம்பிமார்களையும் அழைத்துக்கொண்டு சலமுங் கொண்டு வருகிறேன் அண்ணாவே.

ஊழ் – விதி. பழவினை. **கண்ணொடி** – கண்ணிமைக்கும் நேரம். **போதிற்** – பொழுதில். **கதாயுதன்** – கதையை ஆயுதமாக உடைய வீமன். **முன்னி** – தேடி, முயன்று.

ச.சொ : 1.கண்ணாடி.

Tarumar to Vīman

Let me tell you **Vīman** !
My tongue is fast drying up
I am turning deaf in both the ears.
and blind in my eyes.
So am I ill-fated I think.
Make haste my brother;
Return quick with some water
and our brothers.

Vīman Dialogue : Yes, my brother, I will go and return quickly, with somewater and our brothers.

117. வீமசேனன் – விருத்தம்

நல்லதென் னண்ணா ரென்று நடந்தனன் வீம சேனன்
யெல்லையி லெங்குங் காணோ மென்றுளம் வாடி னொந்து
அல்லல்க ளனேகம் பட்டு அயர்ந்தட விகள்க டந்து
நல்லெழிற் தம்பி மாரை நாடியே தேடு வானே.

'நல்லது என் அண்ணாவே!' என்று வீமசேனன் நடந்து, சென்று எங்கும் தேடியும் காணாமல் உள்ளம் நொந்து வாடி, அதிகத் துன்பமடைந்து, சோர்ந்து காடுகளைக் கடந்து சென்று, நல்ல அழகுடைய தம்பியரைத் தேடுகிறான்.

உளம் – உள்ளம். அல்லல் – துன்பம். அயந்து – அயர்ந்து – சோர்ந்து. அடவி – காடு.

Vīman in searching for his brothers

Thus **Vīman** kept wandering through the forest
in search of water and his brothers, but in vain.

118. வீமசேனன் சொல் – தரு

என்தம்பி மார்களை யெங்கோநான் காணுவேன் – மாயவனே
எந்த வனத்திலோ யெந்த மலையிலோ – மாயவனே
துன்னியே தேடித் தொடர்ந்தெங்கே காணுவேன் – மாயவனே
சோர்ந்தண்ணா வாடவும் நானிங்கே தேடவும் – மாயவனே
நண்ணுஞ் செயலிதோ அண்ணாவுக் கென்சொல்வேன் – மாயவனே
நாடி வனமெங்குந் தேடியுங் காணேனே – மாயவனே

வண்ண வனந்தனி லெண்ணா தெல்லா மெண்ணித் தேடினான்
வாய்த்த நச்சுப் பொய்கை [1]மருங்கெய்தி நீருண்ண நாடினான்.

"என் தம்பிமார்களை நான் எங்கே காணுவேன் திருமாலே! எந்த வனத்தில் எந்த மலையில் தேடித் தொடர்ந்து சென்று எங்கே காணுவேன் ? அண்ணா சோர்ந்து வாடவும் நான் இங்கே தேடவும் விதியோ? அண்ணாவுக்கு நான் என்ன சொல்வேன் கானகமெங்குஞ் சென்று தேடியும் காணவில்லையே என்று வருந்திய பீமன் பல வண்ண மலர்களும் செடிகளும் நிறைந்த காட்டில் நினைக்காதது எல்லாம் நினைத்துத் தேடிப் பின்பு நஞ்சுக் குளத்தருகின் சென்று நீரை உண்ண விரும்பினான்.

துன்னி – நெருங்கி. **நண்ணும்** – கிட்டும். **மருங்கு** – பக்கம்.

சு.சொ : 1.மறுங்கெயிதி.

Vīman - *Taru*

"O my Lord **Viṣṇu**!
Where could I find my brothers?
Which jungle, which hills hide them, then?
What a misfortune is this?
My elder bother is there waiting in agony.
I am lost here running hither and thither
through this densely grown trees and bushes,
haunted by unseemly thoughts".
So brooding a tired **Vīman**
at last reaches the pool of poison.

119. வீமன் –திபதை

கண்டனன் பொய்கை தன்னை [1]கடுகியே வாடி மூவர்
விண்டுயி ரின்றி மாய்ந்த வித்தையுங் கண்ணாற் கண்டான்
தண்டினை யெறிந்தா னந்த தம்பிமார் மேல்வி ழுந்தான்
அண்டரு மேங்க வாய்விட் [2]டரற்றினான் யுரைத்தி னானே.

விரைந்து சென்ற பீமன் நீர் நிறைந்துள்ள குளத்தைக் கண்டான். அங்கு தம்பியர் மூவரும் மிகுதியாக வாடி வாய்பிளந்து உயிர் இல்லாமல் வீழ்ந்து கிடந்த ஆச்சரியத்தைக் கண்ணால் கண்டான். தன்கையிலிருந்த கதையைத் கீழேபோட்டுத் தம்பிமார்கள் மேல் விழுந்து வானோரும் ஏங்குமாறு பேரொலி எழுப்பி வாய்விட்டு அழுதான்.

கடுகி – விரைந்து. **விண்டு** – வாய் பிளந்து. **தண்டு** – கதாயுதம். **அண்டர்** – வானோர். **அரற்றினான்** – அழுதான். **உரைத்தினான்** – கூறத்தொடங்கினான்.

சு.சொ : 1.கடிகி 3. டரத்தி.

Vīma<u>n</u> - *Tipatai*

Then at the side of the pool,
Vīma<u>n</u>'s saw all the three brothers of his,
lying dead with their mouths wide open in exhaustion.
The Gata, the weapon, in his hand dropped down,
and he fell upon the bodies of his brothers
and his loud-throated cries of sorrow were heard
even by the heavenly beings.

120. வீமன் சொல் – தரு

எப்படி அண்ணாவை விட்டுயிர் மாண்டீர்கள் தம்பிமாரே
என்ன கபடமோ யொன்று மறியேனே தம்பிமாரே
செப்பிடு மண்ணாவுக் கெப்படியிதைச் சொல்வேன் தம்பிமாரே
தீரமெங்கே சுத்த வீரமெங்கே விட்டீர் தம்பிமாரே

ஆரிந்த வஞ்சனை [1]யஞ்சாமற் செய்தவர் தம்பிமாரே
அவரை எமனுல காக்கிப்பின் நான்மாய்வேன் தம்பிமாரே
பாரிலிது செய்த பார்த்திபரைச் சொல்லுந் தம்பிமாரே
பற்றிய டித்திதோ வெற்றிசெய்து வாரேன் தம்பிமாரே.

அண்ணாவை விட்டு எப்படி உயிர் மாண்டீர்கள் தம்பிமாரே, என்ன வஞ்சனையோ ஒன்றுமறியேன். உங்களை அழைத்துவரச் சொன்ன அண்ணாவுக்கு எப்படி இதைச் சொல்லுவேன்? வீரத்தையும் தீரத்தையும் எங்கே விட்டீர்கள்? இந்த வஞ்சனையை அஞ்சாமல் செய்தவர் யாராக இருந்தாலும் அவரை எமனுலகம் அனுப்பிப் பிறகு நான் இறப்பேன். இவ்வுலகில் இதைச் செய்த அரசனைச் சொல்லுங்கள். அவரைப் பிடித்து இதோ அடித்து வெற்றி பெற்று வருகிறேன் தம்பிமாரே.

பார் – உலகம். பார்த்திபர் – அரசர். கபடம் – வஞ்சனை.

ச.சொ : 1. யஞ்சாமர்.

Vīma<u>n</u> - *Taru*

How was it possible for you to breathe your last leaving
behind your elder brother anguished?
Oh! my younger brothers,
I know not whose evil design is this.
What could I tell this to our brother
who sent me here to bring you back?
Oh! my younger brothers,

Where was gone your bravery?
Whoever has been behind this treachery.
Oh! my younger brothers,
I should finish him before I die.
Tell me who it was,
I will beat him to death and return triumphant.
Oh! my younger brothers,

121. வீமன் சொல் - திபதை

விதியோ துரியன் விளைத்த கொடிய வஞ்சச்
சதியோ பிரம னுங்கள் தலையில் விதித்த திதுவோ
மதியிழந்து மெய்சோர்ந்து மன்னு முயிரிழந்து
பதியிழந்து காட்சி முன்னோன் [1]பார்த்தால் துணிவாரோ.

வீமன் - வசனம்

அப்பா தம்பிமார்களே! இது ஊழ்வினைப் பயனோ? துரியோதனன் செய்த வஞ்சனையாகிய சதியோ? பிர்மா உங்கள் தலையிலெழுதிய திதுவோ! ஐயோ! உங்கள் அறிவிழந்து, மெய் சோர்ந்து, நிலைபெற்ற உயிரிழந்த இக்காட்சியை நமது அண்ணார் பார்ப்பாராயின் மனந்துணிவாரோ தம்பிமார்களே.

மதி - அறிவு. மெய் - உடல். மன்னு - நிலைபெறுதல். பதி - பூமி.

சு.சொ : 1. பாற்றாற்றுணிவாரோ.

Vīmaṉ - *Tipatai*

My dear brothers! Is it destiny?
Or is it **Turiyōtaṉā**'s design?
Or is it **Brammā**, the creator did
this misfortune has befallen you?
Could our elder brother muster enough courage
to see you here in this lifeless state?

122. வீமன் - கவி

இத்தகை யரற்று மிகவே றூழ்வலி வீம சேனன்
மெத்தவுந் தழலாற் றாக மேலிட நஞ்சு நீரை
[1]நத்தியே பருக வோடி நளினசெங் கரத்திற் கொள்ள
[2]நித்தியா காயவாணி நெறிதர வுரைப்ப தானாள்.

இப்படிப் புலம்பிய வீமசேனன் ஊழ்வலியால் மிகுந்த வெப்பம் மேலிடுவதால் தாகம் அதிகமாகி நச்சு நீரை விரும்பிப் புசிக்க ஒடித் தாமரை யொத்த கைகளால் அள்ள நிர்மலமாகிய ஆகாயவாணி முறைபடக் கூறலானாள்.

அரற்று – புலம்பல். **ஊழ்வலி** – விதிவலிமை. **மெத்த** – மிகுந்த. **தழல்** – வெப்பம். **நத்தி** – விரும்பி. **நளினம்** – தாமரை.

வசனம்

இப்படியாக அந்த வீமசேனன் தம்பிமாரைப் பார்த்தழுது கொண்டிருக்கும்போது தனக்கு தாக வுபத்திரம் அதிகப்பட சரேரண்டோடி அந்த நீரை அள்ளினான். அப்போது ஆகாயவாணி சொல்லுகிற விதம் என்னபடி என்றால்.

சு.சொ : 1.நற்றியே 2. நிற்றிய.

Vīman takes the water

A weeping **Vīman**, unable to suppress his thirst for water,
ill-fated, rushed to the pool of poison,
and as he bent forward to collect
some water in his lotus-like palm,
the Goddess of Sky spoke to him thus.

123. ஆகாயவாணி சொல் – கவி

மைந்தனே வீம சேனா வகுத்துனா னுரைக்கக் கேளாய்
தந்தமக் கிந்நீ ருண்மை சாற்றினே னதைம றுத்து
உந்துமிப் புனலுண் டின்னோர் உயிர்விட்டா ராத லாலே
இந்தநீ ரதனை நீயு மினியுண்ணா தகலு வாயே!

வசனம்

கேளும் வீமசேனா! உன் தம்பிமாருக்குத் தனித்தனியே இந்நீரினுண்மையைச் சொல்லியுங் கேளாமல் இந்நீரை உண்டு இறந்தார்கள். ஆகையால் நீயும் இந்தச் சலத்தைப் பொசிக்க வேண்டாம். அப்பால் வாரும் தம்பி வீமசேனா.

மைந்தன் – மகன். **வகுத்து** – வகைப்படுத்தி. **சாற்றினேன்** – சொன்னேன்.

Voice

Listen O **Vīmā**! Not caring to take my advice,
your younger brothers consumed the water from this pool and died.
So don't drink the water. Keep off.

124. வீமன் – திபதை

கொடியதாகத் தாலவ் வீமன் கொண்ட டக்கா னாகி
கடிகியே புனலை யள்ளிக் கவினுற அருந்தும் போது

முடிகியே விடமெய் யெங்கும் மூடியே யாவிசோரும்

முடிவருங் காலை யண்ணார் பதநினைந் திதுசொல் வாரே.

வீமசேனன் கொடுமையான தாக மேலீட்டால் அடக்க முடியாதவனாகி விரைவாக நீரை அள்ளி அழகுற உண்ணும் பொழுது விடமானது உடல் முழுவதும் மூடி உயிர் சோரும்பொழுது தன் அண்ணாரின் பாதத்தை நினைத்துச் சொல்லத் தொடங்கினார்.

கடுகி, முடுகி – விரைந்து. **ஆவி** – உயிர். பதம் – பாதம்.

Vīma<u>n</u> drinks the water and began to faint

A victim of insatiable thirst for water.
Vīma<u>n</u> could not help drinking the water,
and poison started taking effect on him,
as a result of which his life started ebbing out.
With his mind on the feet of his brother he spoke:

125. வீமசேனன் சொல் – தரு

ஏதோ ஒரு மயக்க மாகுதே – என்னண்ணாவே
ஏதோ ஒரு மயக்க மாகுதே

என்னிரு விழிகளு மொருமிக்க வாடிய
குணமது யேதோ செணமது தன்னிலே (ஏதோ)

தீதோ வஞ்சன்செய் சூதோ – என்னண்ணாவே
தீதேறி வுயிர்ப்போதே மாயுதே
ஏதோ பொய்கையின் சூதோ அறிகிலேன் (ஏதோ)

நெஞ்சைக் கவ்வியோடி யடைக்குதே – என்னண்ணாவே
நெஞ்சோ வலையுது ஞ்சோர் வடையுது
நஞ்சோ வறிகிலேன் தஞ்சம் வேறிலை (ஏதோ)

கண்ணு மாசுண்டு சோருதே – என்னண்ணாவே
கண்ணு மிருளுது புண்ணாகு தென்னுடல்
அண்ணா மணிநிற வண்ணா என்செய்குவேன் (ஏதோ)

ஏதோ மயக்கம் வருகிறது என் அண்ணாவே. ஏதோ மயக்கம் வருகிறது! என் இரு விழிகளும் ஒரு கணத்தில் ஒருசேர வாடின. இது தீமையோ? கபடன் செய்த சூதோ? என் அண்ணாவே! விடம் ஏறி உயிர் பிரிகிறது. என்னவோ, குளத்தின் சூதோ? யான் அறியவில்லையே தொண்டையைக் கவ்வி அடைக்கிறது. அண்ணாவே! நெஞ்சமோ

துடிதுடிக்கிறது, சோர்வடைகிறது. இதை விஷமென்று அறிகிலேனே. துணையிருப்பார் ஒருவரும் இல்லையே. கண்களிரண்டும் இருண்டமேகமாய்ச் சோர்வடைகிறது. கண்ணும் இருளுது. என் உடல் புண்ணாகிறது அண்ணா! மணி போன்ற நிறமுடையவனே! நான் என்ன செய்வேன்?

கெஷணம் – செணம் – கணம். **தீதேற** – விஷம் ஏற. **கவ்வி** – கவர்ந்து. **தஞ்சம்** – துணை. **மாசுண்டு** – இருண்டு.

க.சொ : 1. அறிகிலேன்.

Vīman̲ - *Taru*

I am losing my senses. O my elder brother!
My eyes are losing their power to see.
Is it **Turiyōtan̲an̲'s** evil?
O my elder brother!
My life is departing. My breath is blocked.
Is it the pool's trick? My heart's beat is raising.
O my elder brother!
I didn't know it was poison.
I have no source of help here.
My sight is getting dull.
O my elder brother!
My body aches.
O my brother! The gem-hued one.
What could I do?

126. வீமன் – கவி

வெருவியே சோக மாகி மேவிநல் லாவி சோரும்
தருணமுன் னோர்க்கு நஞ்சின் தடத்தின்நுண் மையைத்தன் கையால்
தரைதனி [1]லெழுதி வைத்துத் தன்னுயிர் விட்டா னப்பால்
தருமனுந் தம்பி மாரைத் தானினைந் தேது சொல்வான்.

பொது வசனம்

இப்படியாக வீமசேனன் மரண வாதனைப்பட்டு உயிர் விடுஞ் சமயம் இந்த நஞ்சு நீரைப் புசித்து அண்ணாவும் இறந்து விடப் போறாரென்று தரையில் இது நச்சுப் பொய்கை என்று எழுதி விட்டுத் தனது ஆவியை விட்டான். தருமராசன் தம்பிமாரைக் காணாமல் ஏதென்று சொல்லுகிறார்.

வெருவி – அஞ்சி. **தருணம்** – சமயம், பொழுது. **தடம்** – குளம்.

க.சொ : 1. லெழிதி.

The death of Vīma<u>n</u>

As he was dying his painful death,
Vīma<u>n</u>, feeling that his elder brother
may also consume the water and die.
He wrote it down on the ground
that it was a pool of poison and died.
Now **Tarumar** having lost his brother thus spoke:

127. தருமர் – திபதை

ஐயனே மேக வண்ணா அன்பர்கள் [1]துதிக்கும் ஞான
துய்யனே யென்ன செய்வேன் [2]துணைவரை யின்னங் காணேன்
நையவே நீர்தான் கொண்டு நல்கிடா திருக்கு நேர்மை
மெய்யனே யறிகி லேனெவ் விதமிதோ சதியி தாமோ.

அய்யனே! மேக வண்ணனாகிய திருமாலே, அன்பர்கள் போற்றி வணங்கும் தூயவனே, என்ன செய்வேன் என் துணையாகிய தம்பியரைக் காணேன், தண்ணீர் கொண்டு வந்து கொடுக்காதிருக்கும் காரணம் நான் அறிய மாட்டேன். உண்மை உடையவனே! சதியாலோ ? எதனாலோ? இது.

மேகவண்ணன் – மேகம் போன்ற நிறமுடைய திருமால். **துய்யன்** – சுத்தமானவன். **நல்கிடாது** – கொடுக்காது. **மெய்யன்** – உண்மையுடையவன்.

சு.சொ' : 1.டுதிக்கும் 2. துணைவரே.

Tarumar - *Tipatai*

Tarumar : Lord! The sky-complexioned **Viṣṇu**!
You are purity absolute to your worshippers!
My brothers have been lost.
I don't know why they have not been able to get me water.
What has come to them?

128. தருமர் சொல் – தரு

சலங்கொண்டு வரப்போன தம்பிமார் களுமின்னஞ்
சதிருடன் வரக்காணேன் – சங்கரனே
நிலத்திலெந் தனைஇப்ப நிஷ்ட்டுரஞ் செய்துயெங்கே
நின்றிருக் கின்றாரோ – சங்கரனே

[1]அஞ்சு பேர்களென்று அவனியில் சொலவாழ்ந்தோம்
ஆதி நித்தியானந்த – சங்கரனே
வஞ்சமில்லாத தம்பிமார்கள் நாலு பேரும்
வனத்திலெங் கலைவதோ – சங்கரனே

செல்வத் துரைகளான துணைவரை யெங்கே நான்
தேடி என் சோபந்தீர்வேன் – சங்கரனே
கல்வியறி வின்மிக்க வல்லமை யுள்ளவீரர்
காளைகளை நான்காணேன் – சங்கரனே

கலைமானைத் தேடிவந்து கண்கலக்கப் படவுங்
கடவுளின் செயலிதோ – சங்கரனே
மலைநிகர் தோள்வீமா அர்ச்சுனா நகுலாயென்
மனதிற்கி சைந்ததம்பி வருவீரே

எங்கேநீ தேடுகிறீர் எங்கே களைத்து வீழ்ந்தீர்
யெந்தக் கானம் புகுந்தீர் தம்பியரே
அங்கமிகவும் வாடி யெங்குங் களைத்துத் தேடி
ஐயோ வலைகிறேனே தம்பியரே.

வெற்றியுடன் தண்ணீர் கொண்டுவரப் போன தம்பிமார்கள் இன்னும் வரக்காணேன் சங்கரனே, பூமியில் என்ன துன்பப்பட்டு இப்போது எங்கே நின்று இருக்கின்றாரோ? இப்பூமியில் ஐவர் என்று சொல்லும் அளவிற்கு வாழ்ந்தோம் • முழுமுதற் கடவுளாகிய சங்கரனே! கபடமில்லாத தம்பிமார்கள் நான்கு பேரும் கானகத்தில் எங்கு அலைகிறார்களோ? சங்கரனே! செல்வச் சீமான்களாகிய என் துணைவர்களை நான் எங்கே கண்டு தேடி என் ஆயாசம் தீருவேன். கல்வியறிவில் மிகுந்த வல்லமை உள்ள வீரராகிய இளையோர்களை நான் காணேன் சங்கரனே. கலைமானைத் தேடிவந்து கண்கலங்க வேண்டும் என்பது கடவுளின் செயலிதோ சங்கரனே! மலையை யொத்த தோள்களையுடைய வீமசேனா அர்ச்சுனா, நகுலா, என் மனத்திற்குகந்த தம்பியரே வாரீர்! இன்னும் எங்கே நீங்கள் தேடுகின்றீர்! எங்கே களைத்து வீழ்ந்தீர், எந்தக் கானகம் புகுந்து சென்றீர் தம்பியரே! என் உடல் மிகவும் வாடி நொந்து களைத்துத் தேடி அலைகிறேன் தம்பியரே.

சதிர் – திறமை. **நிஷ்ட்டூரம்**– கொடுமை, இடையூறு. **அவனி** – பூமி. **நித்தியானந்தன்** – எப்போதும் மகிழ்வுடன் இருப்பவன் கடவுள். **சோபம்** – ஆயாசம். **காளை** – இளையோன், ஆண்மகன்.

Tarumar – *Taru*

O Lord Saṅkarā!
Brothers went in search of some water for me.
What misfortune they have run into?

We five lived our life as one.
O Lord **Saṅkarā** God. Almighty!
What miserable circumstances
my harmless brothers are now in this jungle?
Where could I find my brave ones?
They are brothers of brilliant dispositions,
and where they have gone?
Is all this because of a deer?
We gave a chase which has caused us these tears?
Robust-shouldered **Vīmā**, **Arccunā**, **Nakulā** and **Cakātēvā**,
my beloved brothers, come back.
Where are you now, tired and helpless?
Which jungle you have strayed into?
I feel completely exhausted trudging here and there,
looking for you.

129. பொது – திபதை

வன்றிறல் தம்பி மாரை வழிகொடு தேடி வந்த
நன்றற முரவு நெஞ்சம் நாவுலந் துயிருஞ் சோர்ந்து
அன்றொரு விருட்சத் தின்கீழ் யவணிருந் திடவே தங்க
மன்றிய வறிவின் கல்வி மாமுனி செய்கை சொல்வாம்.

பொது – வசனம்

அகோ தெப்படி என்றால் இப்படியாக தர்மபுத்திர மகாராசன் தம்பிமாரைக் கொடியதாகிய மார்க்கங்கொண்டு தேடிவரும் போது மனமும் நாவும் உலர்ந்து உயிர் சோர்ந்து அப்போது அவ்விடத்தில் ஒரு விருட்சத்தின் மூர்ச்சையாகி விழுந்தார். இப்பால் நாலு வேதங்களாலும் அறிவின் மிகுந்த காளமாமுனிவரது செய்கையைச் சொல்லத் தொடங்கினோம்.

விருட்சம் – மரம். திரள் – கூட்டம்.

Poem of author

Thus having walked through the dangerous jungle path,
Tarumar his tongue parched,
gasping for breath, fell down under a tree.
Let us now see what **Kāḷamāmuni**,
well-read in the four *Vēdās*, is going to do.

130. காளமாமுனி சொல் – திபதை

மதிநிகர் வதனி திரிபுர தகனி மயிடசங் கரிசிவ கௌரி
கதிதரு புரணி நதியணி பரமன் கலந்திட மேவு குணாநீ
துதியிகும் யாமளா மகாதேவி தொடருமிம் [1]மகத்தினில் கொடிய
கதிதரு பூதம் விரவினி யுனைநான் வேண்டினேன் [2]ஈண்டுற வருளே.

சந்திரனை ஒத்தமுகமுடையவளே! திரிபுரத்தையும் எரித்தவளே! மயிடாசுரனை அழித்தவளே! சிவனையொரு பாகமாக யுடையவளே! மோட்சத்தைத் தருபவளே! கங்கை நதியைத் தலையில் அணிந்த சிவபெருமானுடன் கலந்த உமாதேவியே! போற்றுதலுக்குரிய யாமளாதேவியே! நான் செய்யும் யாகத்தினிற் கொடிய விதியைத் தருகின்ற பூதம் வருவதற்கு நான் உன்னுடைய நீண்ட அருளை வேண்டினேன் அருள்வாயாக!

மதிநிகர்வதனி – சந்திரனை ஒத்த முகமுடையவள். **திரிபுரதகனி** – முப்புரத்தையும் எரித்தவள். **துதி** – மோட்சம். **துதி** – போற்றுதல். **மகம்** – யாகம்.

வசனம்

இப்படியாகக் காளமாமுனிவர் யாமளா தேவியைத் தியானித்து நின்ற மாத்திரத்தில் அந்த யாகத்திலிருந்து திரிசூல பாணியாய்க் கருத்தமேனியுமாய்க் கோரதந்தங்களோடு ஒரு பூதம் எழுந்து வருகின்றதையா!

சு.சொ : 1.மகற்றினிற் 2.நீண்டு.

Kā!amāmuni - *Tipatai*

O Goddess! you have a face radiant like a moon-shine;
you are the One who burnt up **Tiripurā**!
You, the destroyer of **Mahisāṣurā**!
Your one half-being Lord **Civā,**
you are the giver of ***Mōkṣā!***
You are **Umā, Civā**'s mating Glory!
The worshipful **Syāma!ā**!
May your grace cause an unscrupulous
demon rise from this ***yakñā*** I am performing!

Dialogue of author : There appeared a dark-hued figure of a demon gorgeously-toothed and armed with a *Tirisūl*, in answer to **Kā!amāmuni**'s prayer.

131. பொது – கவி

சந்தன விருட்சத் தின்கீழ் தருமரு மூர்ச்சை யாகி
சிந்தையு மொடுங்கி யங்கே செத்ததோர் [2]பிணத்தோ டொத்தார்

அந்தமா முனிவன் செய்த யாகத்திற் பிறந்த பூதம்
குந்திதன் சுதரைத் தேடி கோரமாய் வருகு தன்றே.

சந்தன மரத்தின் கீழே தருமராசன் மூச்சு அடங்கி புத்தியும் ஒடுங்கிப் பிணம் போலானார். காளமாமுனி செய்த வேள்வியால் பிறந்த பூதம் குந்தியின் மைந்தர்களைத் தேடி அஞ்சத்தக்க உருவத்தோடு வருகின்றது.

சிந்தை – புத்தி. **யாகம்** – வேள்வி. **கோரம்** – கொடுமை, அஞ்சத்தக்க.

சு.சொ : 1. விருஷ்சம் 2. பிணத்தோடத்தார்.

Poem of author

There was lying under a sandalwood tree,
Tarumar, in a state of unconsciousness as if he were dead.
Having emerged out of **Kāḷamāmuṉi**'s sacrificial fire
the demon – a terror-striking figure was fast approaching
looking for **Pāṇṭavās**, **Kunti**'s sons.

132. பூதம் வருகிற தரு

பூதம் வருகுதே – யாக
பூதம் வருகுதே
காதகமாச் செய்யும் பாதக யாகத்தில்
நீதியறியாமல் தோதக மாகவே (பூதம்)

கையிற் சூலந் தாங்கியே – மேனி
கருப்புற் றோங்கியே
வையகத்தோர் கண்டுமெய் நடுங்கவே
வெய்யவனும் யாகம் செய்யும்அதில் கோர (பூதம்)

வக்கரப்பல்லா லிதழுதுக்கி மைப்போல்
வாய்த்த மீசைதனை முறுக்கி
உக்ரமொடு [1]காலாக்கினி போலவே
நிக்ரகஞ் செய்யவே தக்கணம் யாகத்தில் (பூதம்)

கண்களில் தீப்பொறி பறக்க
கோபக் கனறிரு புயம் [2]பெருக்க
வன்மை மிகுத்திந்த மைந்தரைக் கொல்லவே
தின்மை மிகுபல தீரம தாகவே (பூதம்)

பூதம் வருகின்றது. வேள்வியில் தோன்றிய பூதம் வருகின்றது. மற்றவரைத் துன்புறுத்தச் செய்யும் துரோக வேள்வியில், நீதி தெரியாமல் வஞ்சகமாகத் தோன்றிய பூதம் வருகிறது. கையிலே சூலமும் தாங்கி உடல் கருத்து ஓங்கி வையகத்திலுள்ளோர் கண்டு உடல் நடுங்க. கொடியவன் வேள்வி செய்ய, அதில் கொடுமையான கோரைப் பல்லால் உதட்டைக் கடித்து, கருப்புமைபோல் வாய்த்த மீசைதனை முறுக்கி, குரூரமான ஊழித்தீபோல வேள்வியில் தோன்றிய பூதமானது கண்களில் தீப்பொறி பறக்க, இரு தோள்களும் மிகுந்த சினத்துடன் புடைக்க, பாண்டவரைக் கொல்ல, மிகுந்த வலிமையுடன் தீரமாக வருகிறது.

காதகம் – பீடித்தல், கொலை. **பாதகம்** – துரோகம். **தோதகம்** – வஞ்சனை, வருத்தம். **வையகம்** – உலகம். **வெய்யவன்** – கொடியோன். **வக்கரப்பல்** – கோரைப்பல். **உக்கிரம்** – குரூரம். **காலாக்கினி** – ஊழித்தீ. **நிக்கிரகம்** – தண்டம், தண்டனை.

ச.சொ : 1. குலாக்கினி 2. பெறுக்க.

The arrival of demon

There comes the demon, which rose from the ***Yakñā*** fire
which was treacherously raised to inflict pain and suffering.
Hold a ***Tirisūl*** in its hand,
its dark huge anatomy dreaded by the entire earth,
the demon having arisen from the ***yakñā***
performed by the ruthless ***Riṣi***,
its black whiskers twisted,
its sharp teeth biting the lips,
as if ready to destroy the world instantly,
eyes firespitting, shoulders bulging in anger,
is fast approaching to finish the **Pāṇṭavās**.

133. பூதம் – விருத்தம்

வந்திடும் பூதங் காள மாமுனி யெதிரில் நின்று
எந்தனைப் படைத்த தேதுக் கீண்டுரை செய்வா யென்ன
மந்திர யாகந் தன்னில் வந்தபா ரிடமே கேளாய்
குந்திமைந் தர்கள் வனத்தில் குடிகொள்வ ரவரைக் கொல்வாய்.

யாகத்தில் எழுந்த பூதம் காளமாமுனி எதிரில் நின்று "என்னை இந்த யாகத்தில் தோற்றுவித்தது எதற்கு என்று கூறுவாய்" என்று கேட்க "மந்திர வேள்வியால் வந்த பூமியை இடமாகக் கொண்ட பூதமே குந்தி மைந்தர்கள் கானகத்திலே குடிக்கொண்டுள்ளனர்; அவர்களைக் கொல்வாயாக." என்றார் முனிவர்.

பாரிடம் – பூதம். **படைத்தல்** – தோற்றுவித்தல். **ஈண்டு** – இங்கு, இப்பொழுது.

வசனம்

கேளும் காளமாமுனியே என்னை இந்த யாகத்தில் உண்டு பண்ணின காரிய மெதுக்கோ? சொல்லுமையா காளமாமுனியே!

காளமாமுனி

கேளும் பூதமே! குந்தி சுதராகிய பாண்டவாளைக் கொல்லும் படியாக உண்டு பண்ணினோம். ஆனாலந்தப் பாண்டவாள் விண்டு சிந்து முனிவனத்தில் வாசஞ் செய்கிறார்கள். அவாளுயிரை உண்டு வாரும் பூதமே.

பூதம் : அப்படியே மகாபாக்கியமையா!.

Demon - *Viruttam*

The *yakñā* - produced demon stood before **Kāḷamāmuṉi**
and asked him why he had been created.
Kāḷamāmuṉi spoke to it:
'O the *yakñā*-born, earth-based demon,
the sons of **Kunti** are here in the jungle.
Go and kill them".

134. பூதம் – விருத்தம்

நாட்டமா யென்னை யிப்போ நற்பெலி கொள்ளு மென்ற
தேட்டமாய்ச் சொல்ல வந்தீர் திசையெல்லாந் தேடிப் பார்ப்பேன்
கூட்டமா யிருந்தா லாச்சு கூடற மடிந்தா ரானால்
ஓட்டமா யோடிவந்து உந்தனைப் பொலிகொள் வேனே.

நாட்டம் – அழகு. தேட்டம் – பேராவல். கூட்டம் – ஒன்றுசேர்ந்து.

வசனம்

கேளும் காளமாமுனியே! பாண்டவாளைப் பெலிகொண்டு வாருமென்றீர்! நான் போய்ப் பார்க்கிறேன் ஐந்து பேரும் உயிருடனே யிருந்தாலாச்சுது. இல்லாமல் இறந்து போனால் உந்தனைப் பெலி கொள்ளுவேன். அது சம்மதமோ சொல்லும் காளமாமுனியே?

Demon - *Viruttam*

"**Kāḷamāmuṉi**! Please know this.
I'll go and do what you ask me to do
if only the **Pāṇṭavās** are still alive.
If they are dead 'I'll come back and
I'll take your life. Do you agree?"

135. பூதம் - தரு

எங்கே ஓடுவேன் ஐவரை எங்கே தேடுவேன்
எங்கும் ஓடி நாடித் தேடி
யீரேழுலகு மலையுங் குகையும்
கங்கை நதியு முழுகித் தழுவி
கண்டு பெலிகள் கொண்டு முடிக்க (எங்கே)

நத்தி யெதிர்த்த அரிகரி புலி
நடுங்கியதுங்கி குலைத்திட
நாடித்திசை எங்கெங்கந் தேடித்தொகை மாறித்தொகை
கூடுற்றவரைக் கான மோடிக் கரவுற்றனரோ (எங்கே)

பருத்த விழியால் நெருப்புச் சிதறப்
பார்த்து பார்த்து மிகக்கொக் கரித்து
திருத்தமா யண்ட கோளமிட் டெழும்பி
திசாதிசை யெங்கும் விசையாய் நோக்கி
தேக்கிப் பஞ்சவ ராவியை போக்கிற்றிடு வேனென்றெதிர்
தாக்கி புராந்தகன் வந்தெதிர் காக்குற்றிடினும் வழிபடிவரை (எங்கே)

பதுங்கி மனமுங் கலங்கி பாண்டவர்
பயந்தங்கே யொளிந்திருப்பாரோ மெள்ள
ஒதுங்கிப் பயந்தஉயிர்தனை யிப்போ
உன்னா தினிவிடை யென்னா லானமட்டும்
உற்ற வகையினும் பற்றியே சுற்றிரு வுற்றிவன
மத்திறக் கண்டேத்தியே கொல்வ னென்றிதோ (எங்கே)

எங்கே ஓடுவேன்? ஐவரை எங்கே தேடுவேன்? எங்கும் ஓடி நாடித்தேடி, மேலுலகம் ஏழும் கீழுலகம் ஏழும் ஆகிய பதினான்கு உலகமும், மலையும், குகையும் கங்கை நதியும் முழுகிக் கண்டு பிடித்துக் கொல்வதற்கு எங்கே தேடுவேன் ? தத்திக் குதித்துத் தாவித் தாண்டி ஏழு உலகங்களும் நிலை கலங்கிடவும், எதிரே வரும் சிங்கம், யானை, புலி நடுங்கி ஒதுங்கி குலைந்திடவும் நாடித் திசையெங்குந் தேடினேன். கூட்டம் மாறி எண்ணிக்கை அதிகமாகி அவர்கள் கானகத்தில் ஓடி மறைந்து ஒளிந்தனரோ! "பருத்த விழியில் தீ எழப் பார்த்து மிகுந்து கடுமையாக கத்தி தீர்க்கமாக பூமி உருண்டையை விட்டு மேலே எழும்பி திசாதிசைகளெங்கும் விரைவாகப் பார்த்து பாண்டவர் உயிரைப் போக்கிடுவேன். மேலும் முப்புரத்தை எரித்த சிவன் எதிர்வந்து காப்பாற்றினாலும் வழிவிடமாட்டேன், பதுங்கி உள்ளம் கலங்கி பாண்டவர் பயந்து எங்கே மறைந்திருப்பாரோ ஒதுங்கி அஞ்சிய உயிர்தனை இப்போது

என்னாலான மாத்திரம் உற்ற வகையினும் பற்றி சுற்றி உதைத்துக் கொல்வேன் எங்கே கண்டு தேடுவேன்.

நத்தி – விரும்பி. **அரி** – சிங்கம். **கரி** – யானை. **தொகை** – கூட்டம். **கரவு** – மறைதல், ஒளிதல். **அண்டகோளம்** – பூமி உருண்டை. **புராந்தகன்** – புரத்தை எரித்த சிவன்.

சு.சொ : 1.மாரி 2. புராந்தகன்.

Demon - *Taru*

Whether I could run? Where can I find the brothers five?
How to traverse the world's seven above
And the seven worlds below
searching the caves, hills, dense forests
and diving deep into the Ganges
in order to find then, the **Pāṇṭavās**?
I have done that running, leaping, crossing hills and plains,
covering all the seven worlds striking terror
through all the directions.
Perhaps they have changed the place and people around,
taking shelter somewhere in the dense jungle!
Pop-eyed with fire-spitting anger and shouting to strike terror,
I'll rise above the earth searching through all directions,
locate the **Pāṇṭavās** and kill them.
Even if Lord **Civā**, the destroyer of **Tiripurā** came to their rescue,
I would not allow Him to save them.
Whatever their hide-out, to the extent possible for me
I would dodge, catch-hold and beat them to death.
Where could I find them?

136. பொது – கவி

எங்கேயுந் தேடிப் பார்க்க யியலுடன் காணாத தாலே
கங்கையும் நதியுந் தேடி [2]கடுகியே வருகும் போது
சந்தன மரத்தின் கீழே தருமபூ பதியைக் கண்டு
செந்தண லுதித்த பூதம் சீக்கிரமாய் வந்து தங்கே.

தீயில் தோன்றிய பூதமானது எல்லா இடங்களிலும் இசைந்து தேடிப் பார்த்தும் காணாததால் கங்கையையும், நதிகளையும் விரைந்து தேடி வரும்பொழுத சந்தன மரத்தின் கீழே தரும மகாராஜனைப் பார்த்து விரைந்து அங்கே வந்தது.

பொதுவசனம்

இந்தப் பிரகாரம் பூதமானது கானகமெங்குந் தேடி வரும் போது சந்தன மரத்தின்கீழ் மூர்ச்சையாய் இருக்கிற தரும பூபதியைக் கண்டு பூதம் துயரப்படுகின்றவிதம் எப்படி என்றால்.

சு.சொ : 1. எங்கை 2. கடிகி.

Poem of author

The fire-born demon, having searched through rivers,
hills and jungles and not having been able
to locate the **Pāṇṭavā** brothers.
At last stumbled upon a Sandal wood tree under
which it found **Tarumar** lying unconscious.

Prose: As it saw **Tarumar**, the paragon of all virtues, lying there unconscious, the demon feels deeply pained, and thus grieves over his condition:

137. பூதம் – தரு

மாண்டுபோ யிருந்தா னையோ வையமாளுந் தர்ம ராயன்
ஆண்டிருந்த பூமிவிட்டு அரசன் முன்னே நாடி ழுந்து
கானகத்தில் வந்திடத்தில் களைப்புற்று மாண்டா ரேதான்
ஒருவனைத் தனிக்க விட்டு ஒளிந்தாரே நாலு பேரும்
திருவுடைய தர்ம ராயன் சென்றிறந்து போனாரையோ!

ஐயோ! இவ்வுலகத்தை ஆளும் தர்ம மகாராசன் மாண்டு போய் விட்டானே. இவ்வரசன் நாடும் இழந்து அரசாண்ட பூமியையும் இழந்து கானகத்துக்கு வந்த இடத்தில் சோர்வடைந்து இங்கு இறந்து போனார். ஒருவனைத் தவிக்க விட்டு விட்டு தம்பிகள் நான்கு பேரும் எங்கே மறைந்தாரோ? அழகுடைய தர்மராசன் இறந்து போனாரே ஐயோ!

வையம் – உலகம். **ஒளித்தல்** – மறைதல். **திரு** – அழகு.

வசனம்

இந்தப் பிரகாரம் மூர்ச்சை யடைந்த தர்மராசனைப் பார்த்து பூதமானது துயரப்பட்டு இன்னம் நாலுபேரும் எங்கே ஒளிந்திருப்பாரோ வென்று தேடி வரும்போது கங்கை நதியில் மரணமடைந்திருக்கிற நாலு பேரையுங் கண்டு துயரப்படுகிற விதம் காண்க.

Demon - *Taru*

Alas! The ruler of the world is dead.
He had come to this forest having lost his kingdom
and now he has passed away here.
Where have gone his brothers,
leaving him behind alone?
Alas! **Tarumar** is dead.

Prose: Now let us see how the Demon, having seen **Tarumar** in a state of unconsciousness moved on further in the jungle in search of his brothers, and at last found them dead on the banks of the Ganges.The demon laments over their fate:

138. பூதம் – தரு

குன்றது போல்தான் மடிந்தான்
கோடையிடி தர்மராயன்
அன்று போர் செய்த விசையன்
அனைவரும் மடிந்தாரையோ
கொன்ற பிணத்தின் மீதில் கொடுமைக்கோ
எனைப்போ வென்றான்

என்னைத்தான் மோசஞ் செய்தான்
இனியிருக்கான் காளமுனி
பிணத்தின் மேலெனை யனுப்பப்
பிறப்பித் தானே பெட்டிமகன்
தன்னையே கொன்று யெந்தன்
தாகப்பசி தீரு வேனே.

கோடை இடியை யொத்த தருமராசன் மலைபோல்தான் மாண்டான். அன்று போர்க்களத்திலே போர் செய்த அர்ச்சுனனும், மற்றும் அனைவரும் இறந்தார்கள். கொன்று இறந்த பிணத்தின் கொடுமையைக் காண்பதற்கு என்னை போ என்றான். சாமாத்தியசாலியான, வஞ்சனாகிய காளமாமுனி இனிமேல் இருக்கமாட்டான். பிணத்தைக் கொல்ல எனை அனுப்பி வைத்தானே! அவனைக் கொன்று என்னுடைய பசியின் தாகத்தை தீர்த்துக் கொள்வேன்.

குன்று – மலை. **விசையன்** – அர்ச்சுனன். **பெட்டிமகன்** – சாமர்த்தியசாலி, திறமையர்னவன்.

பூதம் வசனம்

சரணஞ் சரணமையா காளமாமுனியே! அந்தப் பாண்டவாள் உயிறந்திருக்கின்றார்களே! அவாள் மீதிலேயோ என்னையனுப்பினாயென்று கையிலே யிரானின்ற சூலத்தைத் தூக்கிக் கொண்டு காளமாமுனி யெதிரில் கோபங்கொண்டு சொல்லுகிற விதம் எப்படி என்றால்.

Demon - *Taru*

So valiant a fighter like a summer thunder,
Tarumar lies here dead,
like a hill toppled.
Arccu<u>n</u>a<u>n</u> and the other brothers have died too.
Kāḷamāmu<u>n</u>i sent me here
to have a look at this horrible scene of corpses.
The cunning **Kāḷamāmu<u>n</u>i** might have

simply disappeared at this sight.
He had sent me to kill the dead.
I'll go back and eat him up.

Dialogue : O **Kāḷamāmuṉi**! You set me upon the **Pāṇṭavās**. They have already died. How dare you set me on the dead ones? So saying, the enraged demon came along armed with his ***Tirisūl*** and appeared before the **Kāḷamāmuṉi**.

139. பூதம் – தரு

சீறி யெழுந்து தாவிப் பாய்ந்தே காளமாமுனியைச்
சிறந்த சூலம் பூந்து பிடிங்கியே
பீறிக் குடலைப் பிடிங்கி யுதிரந்தான் குடித்து முடித்து
பிறந்த தீயினில் மறைந்து [1]போகுறேன்.

சீறியெழுந்து, தாவிப் பாய்ந்து, சிறப்பான சூலத்தால் காளமாமுனியின் வயிற்றைக் கிழித்துப் பிடுங்கி இரத்தத்தைக் குடித்து முடித்த பிறகு நான் பிறந்த தீயிலே விழுந்து மறைந்து போவேன்.

பீறி – கிழித்து. உதிரம் – இரத்தம்.

பொது வசனம்

இந்தப் பிரகாரம் பூதமானது காளமாமுனியைக் கொன்று போட்டு தான் உற்பத்தியான யாகத்தில் விழுந்து இறந்து போச்சுது. இப்பால் பன்னக சாலையிலிருக்கும் துரோபதையம்மாள் இன்னும் பாண்டவாள் வரவில்லை யென்று புலம்புகிற விதமெப்படி யென்றால்.

க.சொ : 1. போகுரேன்

Demon - *Taru*

I would pluck up my ***Tirisūl***,
raise and bounce upon the **Kāḷamāmuṉi**
and tore his belly and drink his blood
before I return and consign myself to the fire I came from.

Prose : Thus the demon killed **Kāḷamāmuṉi** and went back to the ***Yakñā*** fire and ended its life falling into it. On this side of the jungle at ***Mēru Āsram***, **Turōpatai**, having waited for long for the **Pāṇṭavās** thus starts whimpering.

140. துரோபதி – விருத்தம்

மானினைத் துரத்திக் கொண்டு மன்னவர் போனா ரின்னந்
தானினி வரவுங் காணேன் சதிகார துரிய னாலே
ஊனமு மென்ன மோதான் ஒன்டியா யெனைவிட் டிங்கே
போனவர் தம்மைக் காணேன் புயல்வண்ணா யென்ன செய்வேன்.

ஊனம் – கேடு. **ஒண்டி** – தனிமை. **புயல்வண்ணன்** – மேக நிறமுடைய கண்ணன்.

வசனம்

அரிகரி வைகுந்த வாசகா! அனாதரட்சகா! அகிலாண்டத்துக்கும் ஆதாரமாகிய [1]என்னையனே! இந்தக் கானகத்தில் பொன்மானைத் துரத்திக்கொண்டு போன எனது பிராணேசர் வரக்காணேன்; எங்களுக்குச் சத்திராதியாகிய துரியோதனன் இந்தக்காட்டிலே என்ன கொடுமைசெய்தானோ? எனக்கு ஒன்றுந் தெரியவில்லையே! நீலமேக சாமளம் போன்ற என்னையனே [2]நானென்ன செய்வேன்?

சு.சொ : 1. யென்னையனே 2. னுானென்ன.

Turōpati - *Viruttam*

My husbands who went out chasing the golden deer
have not yet returned.
To what cruelty our enemy **Turiyōta<u>n</u>a<u>n</u>** has subjected them to,
I have no means to know.
O Lord, the cloud-blue God, what can I do now?

141. துரோபதை – தரு

மானைத் [1]துரத்தியே மன்ன ரொருவர் போனார்
வரவின்னங் காணோமே தெய்வமே
மற்றொருவரும் பின்னால் வாரேனென்றே போன
மன்னரும் வரக்காணேன் தெய்வமே

கானத்தி லிருவரைக் கண்டு வாரேனென்று
காண்டீபர் போனார் காணேன் தெய்வமே
காண்டீபரை நாடிச் சென்ற பல
காளையும் வரக்காணேன் தெய்வமே

காளையைத் தேடி கடுகிவாரே னென்ற
கணவரும் வரக்காணேன் தெய்வமே
காசினியி லெங்கையோ காட்டிலே யெனைவிட்டு
கலங்க வைத்துப் போனாரே தெய்வமே

வேளை வென்ற திரிசூல பாணிய னேயென்
விதியை யாருடன் சொல்வேன் தெய்வமே
விரியுங் கடலுலகி லெனைப்போலும் பெண்பாவிகள்
எங்கை யுண்டை யையோ தெய்வமே.

மானினைத் துரத்திக் கொண்டு அரசராகிய சகாதேவன் போனார். இன்னும் வரக் காணேன் தெய்வமே! பின் தொடர்ந்து வாரேனென்று போன நகுலரும் வரவில்லை. தெய்வமே! வனத்துக்குச் சென்ற இருவரையும் பார்த்து வருகிறேன் என்று போன அர்ச்சுனரைக் காணவில்லை; அர்ச்சுனரை நாடிச் சென்ற பலசாலியான பீமரையும் வரக்காணேன். இளையோரைத் தேடிப்பார்த்து விரைவில் சென்று வருகிறேன் என்று சென்ற தலைவனும் வரக்காணேன் தெய்வமே! இப்பூமியில் எங்கேயோ கானகத்திலே என்னை விட்டு விட்டுக் கலங்க வைத்துப் போனார் தெய்வமே, மன்மதனை வென்றவனே! திரிசூலம் ஏந்திய கையை யுடையவனே! யாரிடம் சொல்வேன்? விரிந்து பரந்து இருக்கிற இந்த கடலுலகத்திலே என்னைப் போன்ற பெண் பாவிகள் எங்கே உண்டு தெய்வமே?

காண்டீபன் – அர்ச்சுனன். **காளை** – ஆண்மகன். **பலகாளை** – பீமன். **காசினி** – பூமி. **திரிசூலம்** – முத்தலையுடையவேல்.

ச.சொ : 1. திரத்தியே.

Turōpatai - *Taru*

Cakātēvan ran after the deer.
He has not returned yet. God!
Nakulan who followed him has not come back too.
Arccunan went in search of them,
and has not been back.
Then **Vīman**, the valiant brother,
went in search of all of them, is yet to return.
They have all gone, leaving me behind here in this jungle,
miserable and agonized.
O my Lord **Civā**, the destroyer of **Manmatan**- the cupid!
The bearer of the *Tirisūl*!
Who could I speak to of my condition?
Is there anywhere in the vast stretch of this earth,
any woman, so ill-fated as I am?

142. துரோபதை – விருத்தம்

என்னையுந் தனியே விட்டு யெழில்மானின் பின்றொ டர்ந்த
மன்னவ ரைவர் தானும் வரவின்னங் காணே னையோ
என்னகா ரணமோ மாய மென்னசெய் தானோ பாவி
மன்னிய துளப மாயா வந்தெனைக் காத்தருள் வாயே.

வசனம்

அரிகரி வைகுந்த வாசகா அனந்த சயனா இந்தக் கானகத்தில் என்னைத் தனியே விட்டு அழகு பொருந்திய மானைத் தொடர்ந்து போன எனது நாயகராகிய பாண்டவர் இன்னம்

வரக்காணேனே, ஆகிலும் அந்தக் [1]கௌரவராகிய துரியோதனாதிகள் என்ன மோசஞ் செய்தார்களோ? துளபமாலையணிந்த ஸ்ரீலோக [2]ரட்சகா என்னையனே.

எழில் – அழகு. **துளபமாயன்** – துளசிமாலையை அணிந்த திருமால்

சு.சொ : 1. கவுரவாள் 2.ரக்ஷகா.

Turōpatai - *Viruttam*

My **Pāṇṭava** husbands who went out into the jungle
to catch and bring the golden deer have not yet returned.
What harm those gowravas,
Turiyōtanā could have caused them, I know not.
O Lord the protector of the world, [1]*Tuḷaci*-adorned God?

1. *Tuḷaci* – The leaves of a sacred plant.

143. துரோபதை – தரு

ஐவரு மானையடந்து தொடர்ந்தாரே கோவிந்தனே
அடவி யிலெனை [1]ஒண்டியாக விட்டுப் போனாரே கோவிந்தனே
வையகம் சூதினால் வாங்கிய பாதகன் கோவிந்தனே
வஞ்சமென் செய்தானோ நெஞ்சங் கலங்குதே கோவிந்தனே

காடோ செடியோ [2]கனவரை சென்றாரே கோவிந்தனே
காரண மொன்றுந் தெரிகிவேனே அரி கோவிந்தனே
பாடோ படவும் பெண்பாவி நான்பிறந்தேன் கோவிந்தனே
பஞ்சவரைக் காணா நெஞ்சம் கலங்குதே – கோவிந்தனே

ஐந்து பேரும் மானை நெருங்கிப் பின்தொடர்ந்து சென்றனரே, கோவிந்தா! இக்கானகத்தில் என்னைத் தனிமையில் விட்டுவிட்டுப் போனாரே! பூமியைச் சூதாலே வாங்கிய கொடியவன் துரியோதனன் என்ன சூழ்ச்சி செய்தானோ? என் உள்ளம் கலங்குகிறதே. காடுகளையும் அடர்ந்த செடிகளையும் பெருத்த மலைகளையும் கடந்து சென்றனரே, காரணம் ஒன்றும் அறியவில்லையே, பெண்பாவியாகிய நான் துன்பத்தை அனுபவிக்கப் பிறந்தேனோ? ஐவரைக் காணாமல் நெஞ்சம் கலங்கித் துடிக்கிறதே கோவிந்தனே.

அடர்ந்து – நெருங்கிப் பின்தொடர்ந்து. **அடவி** – காடு. **வையகம்** – உலகம். **பாதகன்** – துரோகி. **பஞ்சவர் ஐவர்** – பாண்டவர்.

சு.சொ : 1.யொண்டி 2. கனவறை.

Turōpatai - *Taru*

All the five went after the deer,
leaving me alone here. O **Kōvintā**!
What design it is on the part of **Turiyōtaṉaṉ**

who took over our Kingdom by means of a game of dice. O **Kōvintā**!
I am extremely troubled. O **Kōvintā**!
They have gone passing through the dense growth of jungle trees, bushes, past a stretch of hills. O **Kōvintā**!
Am I born a woman to be in such a distress! O **Kōvintā**!
Not been able to locate the **Pāṇṭavās** five. O **Kōvintā**!
I remain here suffering the agony. O **Kōvintā**!

144. துரோபதை – விருத்தம்

[1]திருமறு மார்பா தங்கை சிந்தைநைந் துருகி வாடி
பெருமைசேர் கணவ மாரைப் பிரிந்திந்த வனத்தில் யானும்
உருகியே மருண்டு யேங்கி [2]ஒப்புர வில்லை நீயே
வருகுவா யென்றன் துன்ப மாற்றுவாய் [3]காத்தாள் வாயே.

இலக்குமியையும் கவுத்துமணியையும் அணிந்த மார்பையுடைய கண்ணரே! உன் தங்கையாகிய யான் மனம் வருந்தி வாடி, பெருமை மிக்க கணவன் மாரைப் பிரிந்து அஞ்சி ஏங்கி நின்ற எனக்கு நீ உதவிக்கு வரவில்லை, வந்து என் துயர் நீக்கிக் காப்பாயாக.

திருமறுமார்பன் – இலக்குமியையும். கவுத்துவ மணியையும் உடைய மார்பை உடையவன். **மருண்டு** – அஞ்சி.

க.சொ : 1. திருமரு 2. ஒப்புற.

Turōpatai - *Viruttam*

O Lord **Krisṇa**! adorned with **Mahālakṣmi** and ***Koustupa***[1]
I am your sister, presently undergoing the pangs of separation
from my **Pāṇṭavā** husbands, lonely and frightened.
Why not you come to my help? Please come to my help.

1.***Koustupa*** – A holy bead adorned only by **Viṣṇu.**

145. துரோபதை – தரு

மானைத் துரத்தி வருவோமென் றேகினீர் – மன்னர்களே
மானுந் துரியன் செய்த வஞ்சகமோ யிது – மன்னர்களே
ஆனையடரு மடவியில் விட்டீரே – மன்னர்களே
ஆரெனக் காதரவாகு வாரிவ் வனத்தில் – மன்னர்களே
பகிரேனவே புலிபார்த்து மிரட்டுதே – மன்னர்களே – யிந்தப்
பாட்டுக்கோ திருவிளை யாட்டுக்கோ – பெண்ணானேன் – மன்னர்களே

கண்ணி லாதான் பெற்ற கபடன் றூரியனும் – மன்னர்களே
காட்டி லேதாகிலும் [1]தாழ்ச்சிகள் செய்தானோ – மன்னர்களே
மானெனவே வந்து தானவ னெங்களை – மன்னர்களே
வஞ்சகஞ் செய்தானோ நெஞ்சங் கலங்குதே மன்னர்களே
ஆதிமாதவா நீயகலப் போய் நின்றாயோ – கோவிந்தனே–யிந்த
ஐவரை யென் கண்ணிலெப்போ நீர் காட்டுவீர் – கோவிந்தனே
[2]பற்றித் துகிலுரிய வற்றாது துகிலளித்த – கோவிந்தனே
மைற்று னரைவரை குற்றம் வராமல்கார் – கோவிந்தனே.

மானினைத் துரத்தி வருவோ மென்று போனீர்கள் கணவன்மார்களே! இது துரியோதனன் செய்த வஞ்சகமான மானோ? யானைகள் நெருங்கித் தாக்கும் கானகத்தில் விட்டுவிட்டீரே, இவ்வனத்தில் யார் எனக்குத் துணையாக இருப்பார்? திடீரென அஞ்சத்தக்க வகையில் புலி பாய்ந்து மிரட்டுகிறதே! இந்த வேதனைக்கும், விளையாட்டுக்குமோ நான் பெண்ணாய்ப் பிறந்தேன். கண்ணில்லாதவனாகிய திருதராட்டிரன் பெற்ற நயவஞ்சகன் துரியன் கானகத்திலே ஏதேனும் சூது செய்தானோ? மானாக வந்துதான் அவன் உங்களைக் கபடஞ் செய்தானோ, என் உள்ளம் கலங்குகிறதே! முழுமுதற் கடவுளாகிய கிருஷ்ணனே! நீ தூரப்போய் நின்றாயோ ? என் பதியாகிய கணவன்மார்களை எப்பொழுது கண்ணில் காட்டுவீர்? என்னைப் பற்றித் துகிலுரிந்தபோது எனக்கு வற்றாது ஆடை கொடுத்த கோவிந்தனே! என் கணவர் ஐவருக்கும் யாதொரு குற்றமும் வாராமல் காப்பாயாக!

அடரும் – நெருங்கும், தாக்கும். பகீரென – அஞ்சும்படி. **சூழ்ச்சிகள்** – கேடு. **மாதவன்** – விஷ்ணு, கிருஷ்ணன். **மைத்துனர் மார்** – கொழுந்தன்.

ச.சொ : 1. தாழ்ச்சிகள். 2. பத்தி.

Turōpatai - *Taru*

You went giving a chase to that golden deer,
My beloved husbands!
Was the deer a trap set by that **Turiyōta<u>n</u>a<u>n</u>**?
This is a jungle full of terrible tuskers on this path,
and you have left me behind with no one to take care of me.
My beloved husbands!
I find the roaring panthers all over.
Am I born a woman, to be left an object of fun,
a miserable creature?
My beloved husbands!
It is so painful to think that son of blind **Tirutarāṭṭira<u>n</u>**,
schemy **Turiyōta<u>n</u>a<u>n</u>**, has been responsible for the predicament.
Or he himself came in the form of a deer to trap you all.

My beloved husbands!
I am troubled. O **Kovintā!**, the supreme One!
Why do you keep off? O **Kovintā!**
When are you going to restore my husbands to me? O **Kovintā!**
Remember you saved my honour coming
to my rescue when they tried to shame me, disrobing me? O **Kovintā!**
Please see that no harm comes to my husbands. O **Kovintā!**

146. துரோபதை – விருத்தம்

என்னுயிர் கணவ மாரே யிச்சையாய் மானைக் கண்டு
தன்னையே பிடித்துத் தாவென் [1]றறைந்தனன் யென்சொல் நம்பி
மன்னியே துரத்தி யோடி வனத்தினில் புகுந்த நீங்கள்
இன்னமும் வரக்கா ணேனே யென்செய்வேன் கணவ மாரே.

இச்சை – விருப்பம். **அறைதல்** – சொல்லுதல். **மன்னி** – நிலையாக.

வசனம்

என்னுயிர்க் குயிராகிய எனது கணவன்மாரே! எனது ஆசை என்னும் விருப்பத்தால் மாயமாய் வந்த பொன்மானைப் பிடித்துக் கொடுக்க வேணுமென்று சொன்ன என் வார்த்தையைக் கேட்டு நீங்களைந்து பேரும் அந்தமானைத் துரத்திக் கொண்டு போன நீங்கள் இன்னம் வரக் காணேனே கணவன்மாரே.

ச.சொ : 1. றரைந்த.

Turōpatai - *Viruttam*

My dear husbands!
The life of my life!
As I desired that mysterious deer,
all of you went out chasing the deer
in order to get me that
and you have not since returned.

147. துரோபதை – தரு

என்னநான் செய்வேனையோ யிந்த வனத்தில்
விட்டு யேகினார்க ளைவருமே – தெய்வமே
மன்னவ ரைவருமே கன்னியை மிருகம்வாழ்
வனத்தில் விட்டுப் போனாரே – தெய்வமே

வந்பொன் மான்மே லெந்தன் சிந்தை போந்து
அந்த மன்னரைப் பிரிந்தேனே – தெய்வமே
இந்த அடவிதனி லெங்கென்று தேடப்போறேன்
[1]இளையவ ரைவருமே – தெய்வமே

பொல்லா திரியன் செய்யு மல்ல லிவளாலென்று
பிரித்து விட்டுப் போனாரோ – தெய்வமே
நல்லவ ரைவருமே செல்லு மானைத் துரத்தி
நாவுலர்ந் தயர்ந்தாரோ – தெய்வமே

சிங்கமென் னெதிர்வந்து தின்பேனென் றதட்டுதே
திக்கொரு வரில்லையே – தெய்வமே
அங்கண்மா நிலத்தோர்கள் பெண்பாவி யிவளென்று
அறையவோ யான் பிறந்தேன் – தெய்வமே.

நான் என்ன செய்வேன்? இவ்வனத்தில் என்னைத் தனியே விட்டு ஐவருமே போனார்கள். தெய்வமே! மன்னவர்களாகிய எனது கணவன்மார்கள் கன்னியாகிய என்னை மிருகங்கள் அதிகம் வாழும் கானகத்தில் விட்டுவிட்டுப் போனார்கள். இங்கு வந்த பொன்மான்மேலே ஆசைகொண்டு எனது புத்தி மயங்கி அந்த மன்னரைவரையும் பிரிந்தேன். அரசர்களாகிய, ஐவரையும் இக்கானகத்தில் எங்கே கண்டு தேடப்போகிறேன். பொல்லாதவனாகிய துரியோதனன் செய்யும் துன்பம் இவளால்தான் என்று என்னைவிட்டுப் பிரிந்து போனார்களோ? தெய்வமே! நல்லகுணமுடையவர்களாகிய ஐவருமே செல்லுகின்ற மானைத் துரத்திச் சென்றதால் நாவுலர்ந்து, சோர்வடைந்தாரோ? சிங்கம் என் எதிரே வந்து உன்னைத் தின்பேன் என்று அதட்டுகிறதே, கதியில்லையே? இப்பூமியில் உள்ளவர்கள் பெண்பாவி இவளென்று சொல்லவா நான் பிறந்தேன் தெய்வமே.

இறையவன் – அரசன். **அல்லல்** – துன்பம். **அங்கண்** – அவ்விடம். **அறைதல்** – சொல்லுதல்.

ச.சொ : 1. யிரையவரை.

Turōpatai - *Taru*

What can I do?
All of them have gone away
leaving me alone here in the jungle,
trodden by wild beasts. O God!
Tempted by the attractive golden deer I asked for it,
and now I am separated from my beloved husbands. O God!
They are my kings, and where I am going
to locate them in this dense forest? O God!

The wicked **Turiyōtaṉā** has taken
advantage of this woman's desire! O God!
'So they might have thought and left me perhaps'.
All the five, the noble ones,
because of the hot chase they gave,
their tongues parched, have been too tired to tread further! O God!
Here I find a lion, threatening to eat me up. O God!
No help, alas! May be, I am a cursed woman!. O God!

148. துரோபதை – விருத்தம்

மாதவா முகுந்தா கிருஷ்ணா வைகுந்த வாசா மங்கை
நாதனே ஐவ ரெந்த நகரமோ வனமோ யொன்றுந்
தீதற வறியே னெஞ்சந் தேங்குதே யவரை யிப்போ
தாதற வாக வேதான் ஐவரைக் காட்டு வாயே.

வசனம்

ஆதிமாதவா! முகுந்தா! கிருஷ்ணா! எனது கணவன்மாராகிய ஐந்து பேரும் எந்த நகரம் போனார்களோ? எந்தக் கானகம் போனார்களோ? இந்தக் குற்றம் தெரியும்படியாக கிருபை செய்து ஐந்து பேரையும் என் கண்ணில் காட்ட வேணும் என்னையனே.

வனம் – கானகம். **தீது** – குற்றம். **தேங்குதல்** – அஞ்சுதல்.

Turōpatai - *Viruttam*

O Mātavā! Mukuntā! Krisṇā! Living in **Vaikuntam**
What time it was when my husbands left?
What kind of a jungle it is where they have been lost?
My lord! Bear with me,
and be merciful enough to bring them back,
granting me the boon of seeing them again in my life!

149. துரோபதை தரு

ஆதி நாராயண கேசவா
ஆயரடி தரும் வைகுந்த வாசா
சோதி பரானந்த தூயவா – எங்குந்
துலங்கும் பூரணா னந்த மாயவா
அன்று துகிலளித்த கோவிந்தா – யிப்போ
அடியே னைக்காத் தருளா னந்தா

பஞ்சவ ரெனைவிட்டு நாரணா – அவர்

பரிவாய் மான்பின் போனார் நாரணா

தஞ்சம் நீயெனக் கல்லாருமே – ஒரு

தஞ்ச மாவாரோ கண்ணாற் பாருமே

ஏங்கி மனமிக வாடுதே – ஐவர்

எங்கே போனார் என்று தேடுதே.

தீங்கிலா ஐவரைக் காணவே – அருள்

செய்து ஆளுவாய் அருள் பூணவே.

ஆதி முழுமுதற் கடவுளாக விளங்குகின்ற நாராயணனாகிய விஷ்ணுவே! கேசவனே! ஆயர் குலத்தவருக்கு அடியைத் தரும் வைகுந்தத்தை உலகமாக உடையவனே! சோதி வடிவான பரானந்த தூயவனே! எல்லா இடங்களிலும் சிறந்து விளங்கும் பூரணானந்த திருமாலே! அன்று எனக்குக் குறையாது துகிலளித்த கோவிந்தா! இப்போது உன் திருவடிகளை நிதம் வணங்கும் என்னைக் காத்தருள்வாய்! ஆனந்தா! பாண்டவர் ஐவரும் எனைவிட்டுப் பரிவாய் மான் பின்னே போனார்கள். நாரணா! உன்னைத் தவிர வேறு யாரும் எனக்கு அடைக்கலம் ஆவாரோ? கண்ணாற் பார்ப்பாய், ஏங்கிய என் மனம் வாடி ஐவரையும் தேடுகிறது. குற்றமற்ற ஐவரைப் பார்ப்பதற்கு அருள் செய்வாய்.

நாராயணன், கேசவன், வைகுந்தவாசன், பூரணானந்தன், கோவிந்தன் – விஷ்ணுவைக் குறிக்கும் பெயர்கள். பஞ்சவர் – பாண்டவராகிய ஐவர். தஞ்சம் – அடைக்கலம்.

வசனம்

"அரிகரி வைகுந்தவாசகா" வென்று துரோபதை துயரப்பட்டு அந்தக் கானகத்திலே இருக்கும் போது சந்தனமரத்தின் கீழே மூர்ச்சையாயிருந்த தர்ம புத்திர மகாராசன் மூர்ச்சை தெளிந்து எழுந்து தம்பிமார்களைத் தேடி வருகிற விதமெப்படி யென்றால்.

Turōpatai - *Taru*

O Lord **Nārāyaṇā**!
The First One-Absolute! **Viṣṇu**! **Kēsavā**!
The Lord of cowherds! Dweller of **Vaikuntā!**
Manifestation of divine light?
The omnipresent **Viṣṇu** the bliss-Absolute! **Kōvintā!**
There was a day when you defended
my honour ceaselessly robbing me!
A worshipper of your lotus feet, I entreat you.
The **Pāṇṭavās** five, have gone away in order
to catch hold of the deer.
You are my only refuge.
I long for the return of my husbands five.
May your grace save the faultless five!

150. தருமர்சொல் – கொச்சகம்

என்செய்வே [1]னென்றுணைவ [2]ரெவ்விடமோ யெவ்வனமோ
தன்செயலை யானறியேன் தவனத்தால் நாவுலர்ந்து
துன்பப் படவிதியோ தூயா வருணேயா
யின்பசுக மாயா யெங்கென் றறிவேனே.

என்ன செய்வேன்? என்துணைவர்கள் எந்த இடம் எந்த வனம் சென்றார்களோ? நான் அறியவில்லை. தாகத்தால் நாஉலர்ந்து துன்பப்படுவதற்கு விதியோ! சுத்தமான உள்ளம் கொண்டவனாகிய நேயனே! இன்ப சுகத்தையுடைய மாயவனே! நான் எங்கே என்று அறிவேன்?

தவனம் – தாகம். **நேயன்** – அன்புடையவன்.

சு.சொ : 1. நென்று 2. நெவ்விடம்.

Tarumar - *Koccakam*

What can I do?
Where could I find my husbands in the jungle?
Is it their fate to be so tongue-parched?
So pure-hearted source of help you are!
A source of divine bliss!
I know not where they are.
Help me, **Māyavā**![1]

1. **Māyavar** – One of the names of **Tirumāl**.

151. தருமர் – தரு

மெத்த தாகங் கொண்டு [1]களைக்குதே – ஓதம்பிமாரே
விட்டுப் பிரிய மனமு மலைக்குதே
சுத்தி யெங்கும் சலத்தைக் காணோமே – என்னுடன் பிறந்த
துணைவரே எந்த வனத்திற் சென்றீரோ

தம்பி வீமன் காலடியிதோ அர்ச்சுனனிரு
தாளடியிதோ காணு தின்னமே
அம்புவிபுகழ் நகுலன் காலடியிதோ சகாதேவன்
அடியும் படியிற் கண்ணிற் காணுதே

வாடி நாவுமுலர்ந் தலைந்துமே அந்த நச்சுப்
பொய்கையின் மருங்கில் நெருங்கிவந்து சேர்ந்துமே

கூடி நாலு தம்பி மார்களும் இறந்திருக்கிற

[2]கோலங் கண்டு குலைந்தழு வாரே.

"அதிக தாகம் கொண்டு உடல் களைக்கிறதே! தம்பிமாரை விட்டுப் பிரிய மனமும் மறுக்கிறதே! எங்கும் சுற்றித் திரிந்தும் நீரை யெங்கும் காணேனே! உடன் பிறந்த துணைவர்களே! எந்தக் கானகம் சென்றீர்களோ? தம்பி வீமன் காலடியும் அடியும் அர்ச்சுனன் காலடியும் இப்புவியோர் புகழும் நகுலன் காலடியும் சகாதேவன் காலடியும் இப்பூமியில் கண்ணில் காணுகிறதே" என்று கூறிய தருமர் எங்கும் சுற்றி அலைந்து நாவுலர்ந்து நச்சுப் பொய்கை பக்கம் நெருங்கி வந்து சேர்ந்தார். அங்கு தம்பிமார்கள் நாலு பேரும் இறந்திருக்கிற அந்தக் கோலத்தைக் கண்டு நிலைகுலைந்தார்.

மலைத்தல் – மறுத்தல். **தாள்** – அடி, **படி** – பூமி.

சு.சொ : 1. கனைக்குதே 2. கோளம்.

Tarumar - *Taru*

My burning thirst for water
and separation from my brothers
have made me physically helpless.
"Where have you gone my brothers?
Here I am able to see the imprint
on the ground of the feet of my **Vīmā**, **Arccuṉā**,
and that of the celebrated **Nakulā** and **Cakātēvā**.
So bemoaning **Tarumar**, his tongue parched,
arrived at the pool of poison
and on seeing the bodies of his brothers four
he found himself totally given over to despair.

152. தருமர் – திபதை

தருமரு நச்சுப் பொய்கை தன்னரு கினிலே வந்து
தருநிகர் தம்பி மார்கள் தானிறந் திருக்கக் கண்டு
தரணிமேல் வீழ்ந்தார் சோபம் தாபமே லிட்டு யிர்ப்பும்
பிரிவுற தர்மராயன் பிரேதமாய் விழுந்தா ரங்கே.

வசனம்

இந்தப் பிரகாரம் தர்மராயன் அந்த நச்சுப் பொய்கையினருகில் வந்து, கரையிலவ் தம்பிமார் நாலுபேரும் இறந்திருப்பதைக் கண்டு, பூமி மீது விழுந்து, தாபசோபம் மேலிட்டு, பிரேதம் போல இருந்த தம்பிமார்களைப் பார்த்து புலம்புகுறாரையா!

தரணி – பூமி. **சோபம்** – சோர்வு. **தாபம்** – தாகம். **பிரேதம்** – பிணம்.

Tarumar - *Tipatai*

Now Taruma, having found the brothers four
dead on the bank of the pool of poison,
fell down himself on the ground
and began weeping bitter tears over the misfortune.

153. தருமர் சொல் – தரு

என்னைவிட்டு உயிர் இறக்கத் தம்பிமாரே – உங்கட்
[1]கெழுதினானோ பிர்மதேவன் தம்பிமாரே
அன்னைகுந்தி தாய்வயிற்றில் தம்பிமாரே – நாமும்
ஐந்துபிள்ளை யாய்ப்பிறந்தோம் தம்பிமாரே.

பாலியத்தில் கல்விமுதல் தம்பிமாரே – நாம்
பிரிந்தொன்றா யிருந்துகற்றோம் தம்பிமாரே
பாலியத்தில் நம்மைக்கொல்ல தம்பிமாரே – சூது
[2]பண்ணினா னனேகந்துரியன் தம்பிமாரே – அந்த

சூதுக்கெல்லாம் தப்பிநாமும் தம்பிமாரே – நாம்
துணைவரா யிருந்துவாழ்ந்தோம் தம்பிமாரே
ஏதுகுறை யேதுசூது தம்பிமாரே – நீங்கள்
இன்றிறந்த ஞாயஞ்சொல்லுந் தம்பிமாரே

சோதிமாய நீதியிதோ தம்பிமாரே – மனஞ்
சோகமாய் வருகுதையா தம்பிமாரே
நீதித் துணைவரேயென் தம்பிமாரே – ஒரு
நிலையுந் தெரிகிலேனே தம்பிமாரே

தம்பிமார்களே! என்னைவிட்டு உயிர் பிரிய உங்களுக்குப் பிரமதேவன் எழுதினானோ? அன்னையாகிய குந்திதேவியின் வயிற்றில் நாம் ஐந்து பிள்ளையாய்ப் பிறந்தோமே, பாலியத்தில் நாம் ஒன்றாக இருந்து கல்வி கற்றோம். பாலியத்தில் நம்மைக் கொல்வதற்குப் பல சூது செய்தான் துரியோதனன் தம்பிமாரே! சூதுக்கெல்லாம் தப்பிப் பிழைத்து நாமும் ஒருவருக்கொருவர் துணையாய் இருந்து வாழ்ந்தோம். உங்களுக்கு இப்போது நிகழ்ந்தது என்ன குறையோ? இன்று இறந்த ஞாயத்தைச் சொல்லுங்கள் தம்பிமாரே! ஒளிவடிவான மாயனுடைய நீதி இதுவோ? எனக்குச் சோர்வாக வருகிறதே! நீதிநெறி தவறாத என் துணையாகிய தம்பிமார்களே! எனக்கு ஒரு நிலையும் தெரியவில்லையே தம்பிமாரே!

பாலியம் – ஏழு வயதுக்குட்பட்ட பருவம். **அநேகம்** – பல.

க.சொ : 1.கெழுதினானே 2. பண்ணினானே.

Tarumar - *Tipatai*

My dear bothers!
Is it **Brammā**'s decree that you have departed?
We five were mothered by **Kunti,**
we grew up together and were schooled together.
True, that **Turiyōtanan** had plotted
to do away with us as young boys .
United we stood and overcame all his designs.
Then what has happened to you now?
What led you to this end?
Tell me, my brothers.
Is this the justice meted out to me by our Lord, **Māyavā**?
I am extremely haggard.
My dear brothers, my just ones!
I have no means of finding out
your present circumstances.

154. தருமர் – திபதை

தெரிந்திலேன் தம்பி மார்கள் செற்றிடு வார்க ளென்று
பிரிந்தினி போகச் சொல்லேன் பின்றுடர்ந் தவர்க ளோடு
பிரிந்திடா துயிரி ழப்பே னென்றுயிர் பேதித் தங்கே
வருந்தியே பிரேதம் போல வளர்தருமர் மூர்ச்சை யானார்.

என் தம்பிமார்கள் இறந்து விடுவார்கள் என்று அறியவில்லையே! என்னைப் பிரிந்து இனிபோகச் சொல்லமாட்டேன். அவர்களோடு பின்தொடர்ந்து சென்று என் தம்பியருடன் பிரியாமல் இருந்து உயிரை இழப்பேன் என்று சொல்லி ஆவி வேறுபட்டு வருந்திப் பிரேதம் போல மூர்ச்சையானார் தருமர்.

செற்றிடு – செத்திடு – இறந்திடு. **பேதித்தல்** – வேறுபடுதல். **வளர்தல்** – உயர்தல்.

வசனம்

இப்படியாகத் தம்பிமார்கள் நாலுபேரும் இறந்துபோவார்களென்று தெரிந்தால் நான்போகச் சொல்லேனென்று தம்பிமார்கள் மேல் விழுந்து அழுது மூர்ச்சையாகிப் பின்பு மூர்ச்சை தெளிந்து எழுந்து சொல்லுகிற விதம் எப்படி யென்றால்.

Tarumar - *Tipatai*

I never thought that my brothers would end this way.
I would never again allow them to be separated from me.
I am going to follow them, join them,

be with them until I die.
So **Tarumar** bemoaned and collapsed.

Prose: I wish I had known that this would happened to my brothers. I would have never allowed them to leave me. So crying **Tarumar** fell down upon their bodies and, regaining his consciousness, thus spoke:

155. தருமர் – திபதை

சோகமுந் தீர்ந்தெ முந்தே சுகுணநற் தருமர் பின்னும்
வாகைசேர் தம்பி மார்கள் மடிந்ததால் மாய்வே னென்று
போகவே நச்சுப் பொய்கை புனலுண வேம ராசன்
மாகமே லிருந்தோர் ஞாயம் வகுத்துரைத் திதுசொல் லென்றான்.

சோகம் தீர்ந்து எழுந்த நற்குணமுடைய தருமராசா, வெற்றியைத் தேடித் தருகின்ற தம்பிமார்கள் இறந்ததால் தானும் மாய்வேனென்று போய் நச்சுப் பொய்கையின் அருகில் சென்று நீர் உண்ணும் சமயத்தில் ஆகாயத்திலிருக்கும் எமராசன் கேள்விகேட்டு விடைசொல்லென்றான்.

சுகுணம் – நற்குணம். **வாகை** – வெற்றி. **மாகம்** – ஆகாயம்.

வசனம்

இப்படியாக தர்மபுத்திர மகாராசன் மூர்ச்சை தெளிந்து அந்த நச்சுப் பொய்கையின் சலத்தைச் சாப்பிட்டு இறந்து போவோமென்று அதனருகில் வரும்போது எமன் அரூபியாய்ச் சொல்ல அதுகேட்டு சுற்றிப் பார்க்கும் போது ஒருவரும் இல்லாததினாலே [1]பின்னும் தம்பிமார்களைப் பார்த்து ஏதென்று புலம்புகிறார்.

சு.சொ : 1. பிண்ணும்.

Tarumar - *Tipatai*

Tarumar came back to his senses.
Having lost the brothers of great prowess,
he decides to follow them in death,
and hurries to the pool of poison.
As he is about to drink the water,
he hears the God of Death questioning him.

Prose : But not being able to see anybody around, he again turns to the dead brothers there and starts lamenting.

156. தருமர் சொல் – விருத்தம்

என்னுயிர்க் குயிர தான யென்தம்பி மாரே நீங்கள்
முன்னியே தாகந் தீர வருகிறோம் சலங்கொண் டென்று

சொன்னது நிற்க நீங்கள் சோகமா யுயிரி ழுந்த
தென்னமோரா வறியே னெஞ்சமேங்குதென் செய்வே னையோ.

என்னுடைய உயிருக்கும் உயிரான தம்பிமாரே! நீங்கள் முன்பே தங்கள் தாகம் தீர நீர்கொண்டு வருகிறோமென்று சொல்லியது இருக்க நீங்கள் சோகமாய் உயிரிழந்தது என்ன காரணமோ அறியேன். என் உள்ளம் ஏங்குகிறது; என் செய்வேன்!

முன்னி – முயன்று.

Tarumar - *Viruttam*

O my brothers! The soul of my soul!
You went over here to fetch water,
but then lost your dear life,
for what reason I know not.
I am miserable. What to do?.

157. தருமர் சொல் – தரு

என்ன விதிவசம் மன்னன் சுனைக்கரையில்
இறந்திருக்கக் கண்டேன் தம்பிமாரே
மன்னன் துரியனிப்போ தென்னவஞ்சஞ் செய்தானோ
வகையின்னதென் றறியேன் தம்பிமாரே

மாது துரோபதையை மாதவரிடம் விட்டு
மறையோர்க்காய் மான்பின் வந்தோம் தம்பியரே
ஏதோ மாயமாய் மானும் சூதாய் மறைந்துபோக
எனக்குத் தாகமே லாச்சு தம்பியரே

தாகந்தீர நீங்கள் வேகமாய்ச் சலங்கொண்டு
தயவாய் வாரோ மென்றீரே தம்பியரே
வாகையோ டிந்தநச்சு மாநதி சலமுண்டு
வல்லுயிர் மாண்டீர்களோ தம்பியரே

வீரமு மாண்மையும் தீரமுநீ யெங்கே
விட்டுயிர் மாண்டாயோ வீமசேனா
திரிலோகத் தாருமிக்க வெதிர்நிற்கக் கூடாத
தீராவுயிர் விட்டாயோ அர்ச்சுனனே.

கல்வியும் வில்வித்தையும் வல்லமையுள்ள சூரா
கலங்கிஉயிர் விட்டாயோ ஆநகுலா ஞான
செல்வ மிகுந்த அதிதீரா மவுதாரா
சென்றாயோ இவ்வனத்தில் சகாதேவா.

என்ன விதிவசமோ மன்னர்கள் நீர்நிலையின் கரைதனி லிறந்திருக்கக் கண்டேன் தம்பியரே! மன்னன் துரியோதனன் இப்போது என்ன வஞ்சனை செய்தானோ, இன்ன வகை என்று யான் அறியேன்; துரோபதையை முனிவரிடம் விட்டு விட்டு, பார்ப்பாருக்காக மான்பின் தொடர்ந்து வந்தோமே. மாயமாகிய மானும் ஏதோ சூதாய் மறைந்து போக பின் தொடர்ந்த எனக்குத் தாகம் மேலிட்டது. தம்பியரே! என் தாகத்தைத் தீர்ப்பதற்கு நீங்கள் விரைவில் நீர்கொண்டு வருகிறோமென்றீரே! தம்பியரே! வெற்றியோடிந்த நச்சு நீரை உண்டு நீங்கள் வலியவுயிரை இழந்தீர்களே! வீரத்தையும், ஆண்மையையும், தீரத்தையும், எங்கே விட்டு விட்டு இறந்தாயோ வீமசேனா! மூன்று உலகங்களில் உள்ளவர்களும் உன்னை எதிர்த்து நிற்க முடியாத தீரமுடைய அர்ச்சுனனே! எப்படி உயிர்விட்டாயோ? கல்வியிலும், வில்வித்தையிலும் வல்லமை உள்ள சூரனே! நகுலனே! கலங்கி உயிர் விட்டாயோ? ஞானச்செல்வம் மிகுந்த அதிக தீரமுடைய வீரனே சகாதேவா! இவ்வனத்தில் இறந்தாயோ?

வாகை – வெற்றி. **திரிலோகம்** – மூவுலகம். **உதாரன்** – உதவி செய்யும் குணமுடையோன்.

Tarumar - *Taru*

What ill-fated calamity is this?
You are princes born to rule, but here I find you dead.
What kind of an evil design is this on the part of **Turityōtan̲an̲**?
Leaving **Turōpati** in the care of the sage,
we came out running after the deer,
and the mysterious animal having disappeared,
I grew more and more thirsty.
You went out one after another in search of water for me,
but then consuming this poisonous water you have lost your life.
O **Vīmā**! How come that you had not proved your prowess
and manhood and your dauntless soldiering skill
and had chosen to die? O **Arccun̲ā**, the great hero,
unbeatable even by all those in all the three worlds,
how was it possible for your to give up and die?
O **Nakulā**, unexcelled in the heart of archery
and one of high intelligence, how could you yield and collapse?
O **Cakātēvā**, so wise and so courageous,
could you afford to die too?

158. தருமர் சொல் – திபதை

இங்குயா னுமைப்பி ரிந்தேன் யினிதரித் திருப்பே னாகில்
பொங்கியே துரிய னாதி புரவல ரமர்பு ரிந்து
தங்கியே வெற்றி கொள்வார் தானிந்த நச்சு நீரை
யிங்கித முடனே னானுண் டிட்சண மிறப்பேனப்பா.

புரவலன் – அரசன். **அமர்** – போர். **இங்கிதம்** – நாகரிகம். **இட்சணம்** – இக்கணம்.

தருமர் வசனம்

ஐயையோ தம்பிமார்களே! நீங்கள் இறந்து போயிருக்க நான் மாத்திரம் உயிர் வைத்திருப்பேனாகில் அந்தத் [1]துரியோதனாதிகள் அவா ளெண்ணப்படி யென்னோடமர் புரிந்து வெற்றிகொள்வார். ஆகையால் நானிந்த நஞ்சுண்டு உங்களோடு இறந்து போவேன் என்று அந்த நச்சுப் பொய்கை[2]யிலிறங்கி அந்தச் சலத்தை அள்ளிச் சாப்பிட ஆரம்பித்தார். அப்போது அசரீரி சொல்லுகிற விதமெப்படி யென்றால்.

சு.சொ : 1. திரியோ. 2. யிலிரங்கி.

Tarumar - *Tipatai*

Alas! Brothers! You are gone.
Left alone after your demise,
I should become an easy target for the **Kauvravās**.
It is only proper I must follow you
drinking the water from the pool of poison and die.
So saying **Tarumar** got ready to consume the water,
when he heard a voice from above.

159. தர்மராசனுக்கு ஆகாசவாணி சொல் – கலி

செந்திருவாழ் அஸ்த்தினா புரத்தில் செங்கோல்
செலுத்திய அரசர்தரு மன்மகனே கேளாய்
இந்த நச்சுநீரை யுண்டுன் னுடன்பிறந்த
யிளையவர்க [1]ளிறந்தார்க ளாதலாலே
உந்தனுக் கின்னீ ருண்மைவுரைத் தேனப்பா
[2]உறுதியென நம்பியுந்த நீருண் ணாமல்
வந்துந்த னகர்மேவி சுகித்து வாழ்வாய்
மன்னவர்கள் நிதம்பணியும் மலர்த்தா ளானே.

ஆகாசவாணி வசனம்

கேளும் தர்மபுத்திர மகாராசனே! இதோ இருக்கின்ற தடாகமோ நச்சுப்பொய்கை! அந்தநீரையுண்டுதான் உன் தம்பிமார்கள் இறந்து போனார்கள். ஆகையால் அதன் உண்மையை உனக்குச் சொன்னேன்; அந்தச் சலத்தைப் பொசியாமல் உன்னிடம் போய்ச் சுகித்து வாழ்ந்திரு. அரசர் பணியும் அழகிய பாதத்தையுடைய தர்மபுத்திர மகாராசனே.

செந்திரு – இலக்குமி. **செங்கோல்** – நல்லம். **சுகித்தல்** – இன்பம் அனுபவித்தல். செல்வங்களை அனுபவித்தல். **பொசியாமல்** – உண்ணாமல்.

பொது வசனம்

இந்தப் பிரகாரம் ஆகாசவாணி சொல்லியுங் கேளாமல் தர்மபுத்திர மகாராசன் இந்த நீரை அள்ளிச் சாப்பிட்டு இறந்து போவோமென்று நினைத்து சலத்தை அள்ளும்போது மராமரமாயிருந்த எமதர்மராசன் அரூபியாய் நாயம் கேழ்க்கிறாரையா!.

சு.சொ : 1. ஏிரந்தார் 2. வுருதியென.

The Voice

Please listen **Tarumā** the water in this pool is poison.

Drinking this water your brothers died.

That's why I warn you against drinking the same.

Avoid doing this and go away.

You will be happy.

Innumberable are your chieftains who are there ready to serve you.

Prose: Despite the warning from above, **Tarumar** decides to drink the water and die. As he collects a palmful of water, he hears **Yamā**, the God of Death, question him.

160. தருமருக்கும், ஏமதர்மருக்கும் வாக்கு வாதம்

சொல்லு நூலிற் பெரிய தேதுகாண் – ஓதர்மராசே
சொல்லி நதிக்கு ளேகு வாயடா
சொல்லு நூலில் பெரிது சுருதியே – ஓ அரூபவானே
சொல்லியது வுண்மை தானையா

இல்லறந் தனக்குரிய தேதுகாண் – ஓ தர்மராசே
யெனக்கு ரைத்துநீ யேகு வாயடா
இல்லறந் தனக்கரிய தில்லாள்காண் – ஓ அரூபவானே
யிசைத்த என்மொழி வசைதா [1]னில்லையையா

மணத்திற் பெரிது பூவது சொல்லாய் – ஓ தர்மராசே
மாசி லாவிசு வாச நேசனே
மணத்திற் பெரிது [2]சிறுசெண்பக மையா – ஓ அரூபவானே
மகிழ்ந்துநீர் கொள்ளும் அகமுவந் தையா

நல்ல மாதவ மேது சொல்லையா – ஓ தர்மராசே
நல்லற முருவாகி வந்தவா
நல்ல மாதவங் குலத்தில் நடக்கையே – ஓ அரூபவானே
நாடினானுரைத் தேனிதை யையா

முனிக்குலந் தொழுங் கடவுளாரையா – ஓ தர்மராசே
மொழியு மெனக்குப் பழுதிலா தையா
முனிக்குலந் தொழுங்கடவுள் முகுந்தனே – ஓ அரூபவானே
மொழிவதொன் றில்லை யறியுநீ தானே

நனைமலர்க் குழன் மாதர்க் கழகேது – ஓ தர்மராசே
நன்மையாகவே யுண்மை யுரையுமே
நனைமலர்க் குழன் மாதர்க் காதரம் – ஓ அரூபவானே
நாண மென்றினி பூணுவா யையா

தனமிகுத்தவர்க் காதார மேதையா – ஓ தர்மராசே
அதைப் புரிந்துநீ சாற்று வாயையா
தனமிகுத்தவர்க் காதாரம் தானம் – ஓ அரூபவானே
தன்மை யிதென் றுண்மை யுரையுமே

இனியதுலகி லேது சொல்லையா – ஓ தர்மராசே
யெங்குநிறைந்து தங்குமிகு துய்யா
யினிதுபாலர் மழலைச் சொல்லையா – ஓ அரூபவானே
யியம்பி னேனிதை நயந்து பாருமையா

நிற்பதுலகி லேது சொல்லையா – ஓ தர்மராசே
நீட்டிசை யெங்கும் நாட்டியே துய்யா
நிற்பதுலகில் கீர்த்தி யொன்றுமே – ஓ அரூபவானே
நிசமிது தான்வசை யில்லை யையா

கற்பதுலகி லேது சொல்லையா – ஓ தர்மராசே
[3]கரிய மாய னருள்பெறுந் துய்யா
கற்பதாவது சாவறக் கற்பதுதான் – ஓ அரூபவானே
கண்டத்தகங் கொண்டறி யையா

அற்பமாவ துலகிலேது அய்யா – ஓ தர்மராசே
அறிய வெனக்குரை செய்வாய் மெய்யா
அற்பமாவது பிறர்க்ககை யேற்பதே – ஓ அரூபவானே
அறிந்து ரைத்தேன் தெரிந்து கொள்ளையா

உரைத்த உண்மையால் மணங்களித்தே னையா – ஓ தர்மராசே
ஓங்கி நாளும் வாழ்கநீ தானே
பரவெளி யுருவாகி நின்றவா – ஓ அரூபவானே
பாத மன்றியெனக் காதர வாரையா.

எமதருமர் : தர்மராசனே, நூலில் பெரியது எது? சொல்லிவிட்டுப் பிறகு நதிக்குச் செல்வாய்.

தருமர் : உருவமில்லாதவனே! சொல்லும் நூலினுள் பெரியது வேதமே. இது உண்மைதான் ஐயா!

எமதருமர் : "இல்லறந் தனக்குரியது எது?" தர்மராசே! எனக்குக் கூறிவிட்டுச் செல்லுவாயடா.

தருமர் : இல்லறந் தனக்குரியவள் இல்லாள் என அறிவாய், நான் கூறிய சொல் தவறில்லை ஐயா.

எமதருமர் : குற்றமில்லாத விசுவாச நேசனாகிய தர்மராசனே! மணம் மிகுந்த பூ எது? சொல்லுவாய்.

தருமர் : மணம் மிகுந்த பூ சிறு செண்பகம் ஆகும். (என் விடையை) உள்ளம் உவந்து ஏற்பாய்.

எமதருமர் : நல்லற முருவாகி வந்தவனே! நல்ல மாதவம் எது சொல்லையா.

தருமர் : உருவற்றவனே! குலத்தில் ஒழுக்கமே நல்ல தவமாகும்.

எமதருமர் : முனிவர்குலம் வழிபடும் கடவுள் யார்? என்று எனக்குப் பழுதில்லாமல் சொல்லுவாய்.

தருமர் : முனிவர்குலம் வணங்கும் கடவுள் முகுந்தன். சொல்லுவதற்கு ஒன்று மில்லை. அறிவாய்.

எமதருமர் : தேன் நிறைந்த மலரணிந்த கூந்தலையுடைய பெண்களுக்கு எது அழகு? நன்மையாகவே உண்மையைக் கூறுவாய்.

தருமர் : தேன் நிறைந்த மலர்க்குழலையுடைய பெண்களுக்கு அழகு நாணமே என்று அறிவாய் ஐயா!

எமதருமர் : தனம் மிகுந்தவர்க்கு அழகு எது? புரிந்து சொல்.

தருமர் : தனம் மிகுந்தவர்க்கு அழகு தானம் என்பதே உண்மை.

எமதருமர் : உலகில் இனியது எது? எங்கும் நிறைந்து தங்கும் தூய்மையான தர்மராசனே சொல்லையா!

தருமர் : உலகில் இனியது பாலர் மழலைச் சொல். இதை அறிவாய்.

எமதருமர் : பூமி எங்கும் புகழை நாட்டிய தூய்மையான தருமராசனே! உலகில் நிலைத்து நிற்பது எது சொல்லையா.

தருமர் : *கீர்த்தி* ஒன்றுதான் உலகில் நிலைத்து நிற்பது. உண்மை யிதுதான். குற்றமில்லையைய்யா!

எமதருமர் : கரிய வண்ணத் திருமாலின் அருள்பெற்ற தூய்மையானவனே! கற்பது உலகில் எது சொல்லையா.

தருமர் : கற்பதாவது இறப்பில்லாமல் இருக்கக் கற்பதுதான். இது நான் கண்ட உண்மை. உள்ளம் கொண்டு அறிவாய்.

எமதருமர் : உலகில் அற்பமாவது எது அய்யா! அரிய உண்மையை எனக்குக் கூறவாய் ஓ தர்மராசனே.

தருமர் : அற்பமாவது அடுத்தவரிடம் கையேந்துவதுதான். நான் அறிந்து உரைத்தேன் இதைத் தெரிந்து கொள்ளையா.

எமதருமர் : உரைத்த உண்மையால் உள்ளம் மகிழ்ந்தேனைய்யா ஓ தர்மராசே. நீண்ட நாள் புகழுடன் வாழ்வாயாக.

தருமர் : வான்வெளியே உருவாகி நின்ற அருபவானே! தங்கள் அடியின்றி எனக்கு ஆதரவு யாரைய்யா! யாருமில்லை ஐயா!

சுருதி – வேதம். **நதி** – தீர்த்தம். **அருபவான்** – உருவமில்லாதவன். **நடக்கை** – ஒழுக்கம். **முகுந்தன்** – விஷ்ணு. **குழல்** – கூந்தல். **துய்யன்** – தூய்மையானவன். **நயந்து** – விரும்பி. **நிசம்** – உண்மை. **வசை** – குற்றம், இகழ்ச்சி. **பரவெளி** – வெட்டவெளி ஆகாயம்.

சு.சொ : 1. வசைத்தாறில்லையா 2. சிருசென்பகம் 3. கறிய.

The questions of Yaman and Answers of Tarumar

Yaman : **Tarumā** tell me what scripture is the greatest,
before you reach the water.

Tarumar: O you the formless!
Vēdas are the greatest scriptures truly.

Yaman : Who makes a home?

Tarumar : It is a woman virtuous that makes a home.

Yaman : **Tarumā**, a faultless genuine friend!
Tell me which is the most fragrant flower?

Tarumar : Please know *seṇpakā* flower is the most fragrant one.
You will agree with me.

Yaman : **Tarumā**, the follower of ***Tarmā***,
which is the highest kind of ***tapasyā***.

Tarumar : O the formless! Purity of character is the highest ***tapasyā***,

Yama<u>n</u> : Who is the god the sages worship?

Tarumar : Sages worship Lord **Mukuntā**.
Nothing more to say about this.

Yama<u>n</u> : What is the source of beauty of the woman who adorns her locks of hair with the honey-laden blossoms?

Tarumar : Modesty is the real virtue of such a woman.

Yama<u>n</u> : What does good to the rich.

Tarumar : Giving to others does good to the rich.

Yama<u>n</u> : What is the sweetest thing of this world?
You can tell me **Tarumā**, the virtuous one.

Tarumar : A child's prattling is the sweetest thing.

Yama<u>n</u> : **Tarumā**! The famed one among the rulers!
What is the ever-lasting thing?

Tarumar : Fame.

Yama<u>n</u> : **Tarumā**, you are the one who enjoys the grace
of dark-hued Lord **Viṣṇu**.
What should one learn?

Tarumar : It is the art of deathlessness.

Yama<u>n</u> : What is the meanest thing in the world?

Tarumar : It is standing before others, begging alms.

Yama<u>n</u> : **Tarumā**, you have spoken the truth. I am gratified.
May you live long.

Tarumar : You, the formless one above!
Your feet are my refuge. None else!

161. எமன் – திபதை

[1]பதறாதே தர்ம ராய பாருமுன் றந்தை எமன்நான்
சிதைவுறு துரிய னந்த தேசத்தில் முனியால் யாகம்
அதைப்புரிந் ததிலெ முந்த வயப்பூதத் தாலே யுங்கள்
ததைவுறு [2]முயிரைக் கொல்ல சதிசெய்தா னதன்பின் கேளாய்.

தர்மராசனே! நடுங்காமல் பார்ப்பாயாக! நான் உனது தந்தையாகிய எமராசன். கெடுதல் செய்கின்ற வஞ்சகனாகிய துரியோதனன் காளமாமுனியால் வேள்வி செய்து அவ்வேள்வியிலே எழுந்த பூதத்தாலே உங்களைக் கொல்லச் சதிசெய்தான். இன்னும் கேளாய்.

பதறுதல் – நடுங்கல், **சிதைவு** – குறைவு, கேடு, **ததைத்தல்** – நெருங்கல்.

க.சொ : 1.பதராதே 2. முயிறை.

Yama<u>n</u> - *Tipatai*

Tarumā! Look here. You will see me.
I am your father **Yamā**.
The treacherous **Turiyōta<u>n</u>a<u>n</u>** had **Kāḷamāmu<u>n</u>i** perform a ***yakñā***
to raise a demon by whom he planned to have you all killed.
There is more for you to know.

162. எமன் சொல் – திபதை

மாயவ னருளி னாலே மானென வுருவெ டுத்து
நேயமா மறையோன் பூணும் நெறிநூலைப் பறிக்கப் பின்வந்
தாயபின் நச்சுப் பொய்கை யாக்கிஉங் களைநான் காத்தேன்
தூயரே யிதுதான் சேதி துணைவரே எழுப்பித் தாரேன்.

திருமாலின் அருளினாலே மானாக உருவெடுத்து வந்து நேயமுடைய அந்தணன் பூண்டு இருந்த நெறிதவறாத பூணூலைப் பறித்துக் கொண்டு ஓட நீங்கள் பின்தொடர்ந்து வந்தீர். பிறகு நான் நச்சுப் பொய்கை உண்டு பண்ணி உங்களைக் காத்தேன்! தூய உள்ளம் உடையவரே. இது தான் செய்தி உன்துணைவரை எழுப்பித்தருகிறேன்.

மாயன் – திருமால். **நேயம்** – அன்பு. **மறையோன்** – அந்தணன்.

பொதுவசனம்

இந்தப் பிரகாரம் எமதர்மராசன் தன்னுடைய சுயரூபமாக யெழுந்தருளின போது மரணமடைந்த நாலு பேரும் நித்திரை செய்து தெளிந்து எழுந்தவர் போல் எழுந்திருந்து அஞ்சுபேர்களும் எமனைத் தோத்திரஞ் செய்கிற விதங்காண்க.

Yama<u>n</u> - *Tipatai*

By the grace of Lord **Viṣṇu**,
assuming the form of a deer
and snatching away a Brahmins scared thread,
I was on the run and you followed.
Then I created the pool of poison
and thus I protected you.
This is what happened, noble one.
I would now restore all your brothers to life.

Prose: And thus **Yama<u>n</u>** appeared before him in his actual form and immediately all the four **Pāṇṭavā** brothers rose as if they woke up from their sleep. All the five of them offered to **Yama<u>n</u>** their prayerful thanks.

163. பாண்டவாள் – திபதை

எந்தையே போற்றி போற்றி [1]யெமபுரத் தரசே போற்றி
தந்தையே கலைமா னாலே தலமெல்லாங் காட்டி நாங்கள்
சிந்தையு மிகவே னொந்து செத்தவ ரெழுந்த சேதி
யிந்ததோர் விபர மென்று எனக்கரு ளுரைசெய் வாயே.

பாண்டவாள் – வசனம்

கேளுமைய்யா சுவாமி! என் தந்தையே! நாங்கள் கானகத்திலே திரிந்து கலைமானால் எங்களுடைய உயிரிறந்து நாங்கள் எழுந்திருந்த விபரம் யின்னதென்று தெரியடச் சொல்லுமையா சுவாமி.

Pāṇṭavar - *Tipatai*

O revered father! Please narrate the story of
how we were lost into the jungle
and our collapse at the side of the pool of poison
and then our coming back to life.

164. ஏமன் தரு

வாருந் துரியன் செய்த துரோகமிப்போ துனக்கு
வகுத்து ரைக்கநீர் கேளுந் – தர்மராசே
பாருஞ் செல்வம் பிரித்து சாரும் வனத்திலாண்டு
பன்னிரெண் டாச்சு தென்றே – தர்மராசே

காளமாமுனி தன்னால் மாளவேயாக மொன்று
கருதி செய்திடச் சொன்னான் – தர்மராசே
வாளரி சிங்கம்போலே நீளயாகத்திற் பூதம்
வந்ததைக் கண்டு மாயன் – தர்மராசே

என்னை வரவழைத்துப் பொன்கலை மானாயெய்தி
யிருக்கும் பூசுரன் பூநூல் – தர்மராசே
தன்னை யறுத்துவந்தா லுன்னைத் துரத்திஜவர்
தனிநச்சுப் பொய்கை செய்து – தர்மராசே

உண்ணும்போ தைவர்உயிர் விண்ணி னடையும் பூதம்
ஓடிவந் துண்ணா தென்றார் – தர்மராசே
நண்ணும்பூதம் முனியையுண்டிடு மைவர் பின்னால்
நாடி யெழுப்பு மென்றார் – தர்மராசே

அந்த வண்ணமியற்றி உந்தம் உயிரகற்றி
யாத ரித்தே னப்பா – தர்மராசே
இந்த வனத்தைவிட்டு சிந்து முனிவனத்தி
லெய்திச் சுகித்தி ருங்கோள் – தர்மராசே.

துரியோதனன் செய்த வஞ்சகத்தை இப்பொழுது உமக்கு வகைப்படுத்திக் கூற நீர்கேளும் தர்மராசனே. இப்பூமியில் செல்வத்தை இழந்து, வனத்தில் வாழ்ந்த காலம் பனிரெண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. உங்களைக் கொல்லக் கருதிய துரியன் காளமாமுனியை வேள்வி செய்திடச் சொன்னான். சிங்கத்தைப் போல வேள்வியால் பூதம் வந்ததைக் கண்டு திருமால் என்னை வரவழைத்துப் பொன் கலைமானாகச் சென்று அங்கு இருக்கும் அந்தணன் பூநூலை அறுத்து வந்தால் உன்னைப் பாண்டவர் ஐவர் துரத்திப் பின் தொடர்ந்து வருவர். அப்பொழுது நச்சுப் பொய்கை உண்டு பண்ணுவாய். அவர்கள் தாக சோகமாகி நீரையுண்ணும்போது ஐவரின் உயிர் மேலுலகம் அடையும். ஓடி வந்து பார்த்து உண்ணாது சோர்ந்த பூதம் காளமாமுனியைக் கொன்று உண்டு விட்டு மறைந்து போகும். பிறகு ஐவரையும் எழுப்புமென்றார். அந்த வண்ணம் செய்து உங்கள் உயிரை அகற்றி ஆதரித்தேனப்பா தர்மராசனே. எனவே நீங்கள் இந்த வனத்தை விட்டுச் சிந்து முனிவனத்துக்கதுச் சென்று இன்பமாய் இருங்கள்.

பூசரன் – அந்தணன். **விண்** – மேலுலகம். **சுகித்தல்** – இன்பமாய் இருத்தல்.

சு.சொ : 1. தொறத்தி.

Yama<u>n</u> - *Taru*

Let me speak to you off **Turiyōta<u>n</u>a<u>n</u>**'s evil design.
It is now twelve years since you lost your kingdom
and lived your life in the forest.
Turiyōta<u>n</u>a<u>n</u> wanted to get rid of you all
and so he wanted **Kāḷamāmu<u>n</u>i** to perform a ***yakña***.
A lion-like demon emerged out of it.
Seeing that Lord **Viṣṇu**,
summoned me and commanded me
to assume the form of a golden deer
and snatch a Brahmin's sacred thread away.
He advised me to dig a pool of poison on your way,
so that as you came running after the deer,

tired and thirsty, you would consume the water
from the pool and fall dead.
The demon, finding the **Pāṇṭavās** dead,
would turn against **Kāḷamāmuṉi**
and kill him and eat him up.
Then I had the duty of reviving you, the brothers.
So I carried out the will of the Lord and saved you.
You may please now go to the ***Āsram*** of **Cintumuṉi** and stay there.

165. எமதர்மராசன் சொல் – விருத்தம்

தலம்புகழ் தரும ராசே தருமிந்த ஆயு தங்கள்
பலமிகு தனுசு மம்பும் பலபலா யுதங்கள் யீந்தேன்
நலமதாய்க் கொண்டு கொஞ்ச நாள்கழித் தேதி லாரை
வெலுமடல் பெறுவீர் பின்பு வெகுதிரு வோடும் வாழ்வீரே.

எமன் வசனம்

கேளும் பாண்டவர்களே இதோ நான் தருகின்ற ஆயுதம், தனுசு, பாணங்களைப் பெற்றுக் கொண்டு, மறுபடி தங்களது சத்திராதிகளை வென்று, அனேகம் செல்வத்தோடு, வாழ்வீர்கள். சுகமாய்ப் போய் வாருங்கள் பாண்டவர்களே.

தலம் – உலகம். **ஈந்தேன்** – கொடுத்தேன். **ஏதிலார்** – பகைவர். **தனுசு** – வில்.

பொது வசனம்

அகோ தெப்படி யென்றால் இந்தப் பிரகாரம் பாண்டவாளை எமதர்மராசன் காத்து ரஷித்து தன் இதாஸ்தானம் போயினார். பாண்டவர்கள் சிந்து முனிவனத்திற்கு வந்தார்கள். அப்பொழுது பன்னக சாலையிலிருக்கும் துரோபதை ஏதென்று சொல்லுகிறாளையா!.

Yamaṉ - *Viruttam*

O **Pāṇṭavās**, please take these bows
and arrows and with them fight your enemies
and win you victory.
Thus regain your kingdom
and all the wealth and live in peace thereafter.
Good bye **Pāṇṭavās**.

Prose : Thus protected and guided by **Yamaṉ** the **Pāṇṭavās** arrived at **Cintumāmuṉi**'s *Āsram*. Now speaks **Turōpatai** from her leaf-woven hut.

166. துரோபதை – திபதை

பாஞ்சால ராசன் பெற்ற பாஞ்சாலி யைவர் தம்மை
வாஞ்சையாய்த் தேடி யந்த வனத்தினி லிருக்க மாயன்
தேஞ்சாலி னருள் சுரந்து திருவருள் புரிந்தி ருக்க
பூஞ்சாலும் பதத்தளந்த பூவைமுன் வருகின் றாரே.

பாஞ்சால நாட்டு மன்னன் பெற்ற மாது பாஞ்சாலி ஆசையாய்ப் பாண்டவர் ஐவரைத் தேடி அந்த கானகத்திலேயிருக்க, திருமால், திருவருள் புரிந்திருக்க பூப்போன்ற பாதங்களையுடைய பாஞ்சாலிமுன் ஐவரும் வந்தனர்.

வாஞ்சை – ஆசை. பூவை – பெண்.

Turōpatai - *Tipatai*

Pāñcāli, the prized daughter of **Turupatan**, (**Pāñcāla Rācan**)
presently at her jungle hut has been eagerly awaiting
the return of the **Pāṇṭavās**.
By the grace of Lord **Viṣṇu**,
the **Pāṇṭavās** five appeared
before the flower-soft- footed **Pāñcāli**.

167. துரோபதை சொல்லுங் கவி

மானினைத் துரத்திக் கொண்டு வண்மையாக வேதான்
போனவ ரின்னே ரந்தான் பொறுத்ததே தெந்த னுக்கு
தானதை யுரைக்க வேண்டுஞ் சத்திய குருகு லத்து
கோனிறை [1]ஐவரே நன்றாய்க் [2]குறித்துரை செய்கு வீரே.

வசனம்

கேளும் மன்னவரே! மானைத் துரத்திக் கொண்டு போன நீங்கள் இதுவரை தாமதித்து என்ன செய்தீர்கள் ? எனக்குத் தெரியப்பட சொல்ல வேணுமைய்யா சுவாமி.

க. சொ : 1. அய்வர் 2. குரித்துறை.

Turōpatai - poem

O my beloved husbands!
You left chasing the golden deer for my sake
and have returned very belatedly.
Please tell me why the delay.

168. தருமராதிகள் - கவி

தேன்றுளி மொழியி னாளே தேவிதுரோ பதையே கேளாய்
மான்றனைத் துரத்தி யோட வாடியே தாகங் கொண்டு
ஆன்றயென் றம்பி மாரோ டருநஞ்சு நீரை யுண்டு
தோன்றுமா ருயிரெ ழுந்து தொல்லுயிர் போனாம் பெண்ணே.

வசனம்

கேளுந் துரோபதா! மானைத் துரத்திக் கொண்டு போன யிளைப்பினால் நச்சுப் பொய்கை நீரையுண்டிறந்து போனோம். பின்பு எமதர்மராசனுடைய அனுக்கிரகத்தினாலே உயிர்பெற்று வந்தோம் பெண்ணே.

Pāṇṭavās - Poem

Turōpatā dear! Listen to us giving a chase to the deer,
we became tired and our tongues parched drank the water
from the pool of poison and fell dead.
It was **Yaman**'s grace that restored us to life again,
And we have come back.

169. பாண்டவர் - விருத்தம்

வஞ்சனை துரியன் மாமன் வசனத்தைக் கேட்டு மிக்க
செஞ்சடை முனியால் வேள்வி செய்ததிற் பிறந்த பூதம்
மிஞ்சிவந் தெம்மைக் கொல்ல விடுத்தனன் விண்டு ணர்ந்து
அஞ்சன வெமனா லெங்க ளாவிதந் தாண்டார் மாதே.

வசனம்

கேளும் பெண்ணே துரோபதா! அந்தக் கபடவஞ்சகனாகிய துரியோதனன் அம்மான் சகுனி யுத்தியினால் காளமாமுனியைக் கொண்டு ஒரு யாகஞ் செய்து அந்த யாகத்தில் உற்பத்தியாகிற பூதத்தை விட்டுக் கொல்லும்படி யாக்கியாபித்தான். அந்தப் பூதம் வந்தால் எங்களைக் கொன்று விடுமென்று ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியானவர் என் தந்தையாகிய எமதர்மராசனை அழைத்து, நீ மானாகப் போய் இந்த வண்ணம் பாண்டவர்களை இழுத்துத் தாக சோகம் வரும்படி செய்வித்து, அவ்விடத்தில் நஞ்சுப் பொய்கை ஒன்று செய்து அந்நீரை உண்டு, இறக்கச் செய்து, அந்தப் பூதம் மடிந்த பின்பு எழுப்பிவிட்டு வாருமென்று அனுப்பினார். அந்தப்படியே எமதர்மராசன் இந்த வண்ணஞ் செய்து பாதுகாத்தார். இது தான் செய்தி பெண்ணே துரோபதா!

மாமன் - சகுனி. **விண்டு** - திருமால். **அஞ்சனம்** - கறுப்பு.

Pāṇṭavar - *Viruttam*:

As guided by the uncle **Cakuṉi**,
Turiyōtaṉaṉ had the red-haired **Kāḷamāmuṉi** perform a ***yakñā***
and the demon born of the ***yakñā*** fire was sent to kill us.
But **Yamaṉ** the god of Death,
came to our rescue and saved us all.

The End of Pool of Poison.

துணை நூல்கள்

சுவடி

நச்சுப்பொய்கை விலாசம், — ஆர். எண். 2798, அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை.

நூல்கள்

1. அரிச்சந்திர விலாசம், — கிருஷ்ணசாமி முதலியார் கே.ஏ., (பதி.), வித்வசிரோமணி விலாசம், சென்னை, 1914.
2. அரிச்சந்திர விலாசம், — கோவிந்தசாமிப் பிள்ளை டி.எஸ்.வி, மட்டுவார் குழலாம்பாள் அச்சகம், திருச்சி, 1914.
3. அரிச்சந்திர விலாசம், — ரத்னமுதலியார் & சன்ஸ், சென்னை, 1913.
4. ஆதாம் ஏவாள் விலாசம், — இராஜேந்திரம் பிள்ளை, மெர்குரி பிரஸ், சென்னை, 1910.
5. ஆபிரகாம் சாராள் விலாசம், — இராஜேந்திரம் பிள்ளை, மெர்குரி பிரஸ், சென்னை, 1918.
6. எனது நாடக வாழ்க்கை, — சண்முகம், டி.கே., வானதி பதிப்பகம், சென்னை, 1972.
7. ஏழுநகரத்தார்க்களித்த திருமுகவிலாசம், — ஆறுமுக சுவாமிகள், பரப்பிரம்ம முத்திராட்சர சாலை, திருவெண்காடு, 1882.
8. கலித்தொகை, — அனந்தராமையர், இ.வை. (பதி.), தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1984.
9. குறுந்தொகை, — சண்முகம்பிள்ளை, மு. (பதி.), தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1985.

10. சங்கர விலாசம், சிதம்பரநாத கவி, திருவேங்கடேசுவர கீழ்க்கலை ஆராய்ச்சிக் கழகம், திருப்பதி. ...

11. சந்திர விலாசம், பழனிச்சாமி ஆச்சாரி, விவேகபானு அச்சியந்திர சாலை, மதுரை, 1908.

12. சிலப்பதிகாரம் மூலமும் அரும்பதவுரையும், சாமிநாதையர், உ.வே. (பதி.), ஏழாம் பதிப்பு, கபீர் அச்சகம், சென்னை, 1960.

13. சீவக சிந்தாமணி, சாமிநாதையர், உ.வே. (பதி.), கபீர் அச்சகம், சென்னை, 1969.

14. தமிழ் இலக்கிய வரலாறு 12ஆம் நூற்றாண்டு பகுதி 2, காந்தி வித்யாலயம், திருச்சிற்றம்பலம், 1970.

15. தமிழ்நாடகம் தோற்றமும் வளர்ச்சியும், அரங்கசாமி, பழனி, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1989.

16. தமிழ் நாடக வரலாறு, சக்தி பெருமாள், வஞ்சிக்கோ பதிப்பகம், மதுரை, 1979.

17. தமிழ்ப்பேரகராதி தொகுதி VI. சென்னைப்பல்கலைக்கழகம், 1982.

18. தமிழ்மொழியகராதி, கதிரைவேற்பிள்ளை நா., ஏசியன் எஜுகேஷனல் சர்வீஸ், டெல்லி, 1981.

19. திருக்குறள், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, 1937.

20. திருநாவுக்கரச சுவாமிகள் தேவாரம் (தலமுறை), காசி மடம், திருப்பனந்தாள், 1995.

21. திருவாசகம், (எட்டாம் திருமுறை), சிதம்பர முதலியார், பி.நா. (பதி.), வித்யா ரத்னாகரம் பிரஸ், சென்னை, 1948.

22. தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், — சிவலிங்கனார், ஆ. (பதி.), உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1981.

23. நற்றிணை (மூலமும் உரையும்), — வேங்கடராமன், ஆர். (பதி.), உ.வே.சா. நூல்நிலையம், சென்னை, 1989.

24. நாடக இயல், — சூரியநாராயன சாஸ்திரியார், வி.கோ., சுவாமி நாதன், வி.சூ. (பிரசுரகர்த்தர்), மதுரை, 1965.

26. நாடகக் கலையின் வரலாறு, — சகஸ்ரநாமம், எஸ்.வி., மதுரைப் பல்கலைக் கழகம், மதுரை, 1975.

27. நாடகச் சிந்தனைகள், — பெருமாள் ஏ.என்., ஐந்திணைப் பதிப்பகம், சென்னை – 5, 1988.

28. பத்துப்பாட்டு, — சண்முகம் பிள்ளை,மு. (பதி.), முல்லை நிலையம், சென்னை, 1995.

29. பிரபந்தத் திரட்டு, — அன்னி தாமசு, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1983.

30. பிரபந்த மரபியல், — மு. அருணாசலம் (பதி.), தமிழ்நாடு அரசு வெளியீடு, சென்னை, 1976.

31. பூகோள விலாசம் — மருதூர் அபத்தாரனார், சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை.

32. பூதர விலாசம் — ஹரிசமய திவாகர முத்திய சாலை, மதுரை, 1933.

33. மகாபாரதம், நடராசன், அ.லெ., இரண்டாம் பதிப்பு, திருமகள் நிலையம், சென்னை, 1993.

34. மகாபாரத விலாசம், சிதம்பர முதலியார் பி.என்., வித்யாரத்னாகர பிரஸ், சென்னை, 1913.

35. மகாபாரத விலாசம் பஞ்சபாண்டவாள் வனவாசமென்று வழங்குகின்ற நச்சுப் பொய்கை, இராமச்சந்திர கவிராயர், கலைக்கியான முத்திராட்சர சாலை, சென்னை, 1879.

36. வில்லி பாரதம், மர்ரே & கம்பெனி, சென்னை, 1969.

37. ஸ்ரீ மகாபாரத நச்சுப்பொய்கை விலாசம், ஷடாவதானம் வைரக்கண் வேலாயுதம் புலவர், பாஸ்டன்பீஸ் அச்சகம், வேப்பேரி, சென்னை, 1850.

38. ஸ்ரீ மகாபாரம் ஆரண்ய பருவம் நச்சுப் பொய்கை, வேலூர் நாராயண சாமி பிள்ளை தொண்டை மண்டலம், அச்சியந்திர சாலை, சூளை, சென்னை. ...

கட்டுரைகள்

1. சோழர் காலத்து ஆடலும் பாடலும், சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழக ஆயிரத்தெட்டாவது வெளியீட்டு விழா மலர், சென்னை, 1961.

2. விலாச இலக்கியங்களின் நோக்கமும் பயனும், நாகராசன் கரு, கருத்தரங்கக் கட்டுரை, இலக்கியக் கொள்கை கருத்தரங்கு–89 உலகத்தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை, 25–2–1982.

3. Meenakshisundaram T.P. - 61st Birth day - Commemoration Volume - Collected papers 1961.

பாடல் முதற் குறிப்பு

(எண் : பாடல் எண்)

சொல்லடைவு

(எண் – பாடல் எண். வ – வசனம்)

பின்னிணைப்பு

பிற விலாச இலக்கியங்கள்

நூற்பெயர்	–	ஆசிரியர் பெயர்
1. அண்ட கோள விலாசம்	–	முத்து வேங்கட சுப்பையர்.
2. அப்பர் பர்மா யுத்த விலாசம்	–	ஜே. பிரான்சீஸ்.
3. அரிச்சந்திர விலாசம்	–	அரங்கப் பிள்ளை கவிராயர்.
4. அரிச்சந்திர விலாசம்	–	இரங்கப் பிள்ளை கவிராயர்.
5. அரிச்சந்திர விலாசம்	–	பரசுராம கவிராயர்.
6. அரிச்சந்திர விலாசம்	–	முத்து சாமிப் பிள்ளை.
7. அரிச்சந்திர விலாசம்	–	வேங்கடராம உபாத்தியாயர்.
8. அருணாசல மகத்துவம் என்னும் வல்லாள ராசன் விலாசம்	–	—
9. ஆதாம் ஏவாள் விலாசம்	–	—
10. ஆபிரகாம் சாராள் விலாசம்	–	—
11. ஆதாம் ஏவாளின் விலாசம் அல்லது பேரின்ப லீலா சிங்காரி	–	—
12. ஆறாதார விலாசம்	–	கன்னிப்புத்தூர் வேலாயுத முதலியார்.
13. ஆறு பாகங்கள் அடங்கிய அரிச்சந்திர விலாசம்	–	வி.ஏ. தியாகராச செட்டியார்.
14. இரணிய விலாசம்	–	இராமச்சந்திர கவிராயர்.
15. இரணிய விலாசம்	–	குமார சுவாமி உபாத்தியாயர்.
16. இரணியன் விலாசம் என்னும் பிரகலாத விலாசம்	–	அரங்கநாத கவிராயர்.
17. இரத்தினாகர விலாசம்	–	திருமலைவேற் பிள்ளை.
18. கிருஷ்ண விலாசம்	–	முனியன்.
19. கீசக விலாசம்	–	கண்ணய்ய நாயுடு.
20. குசேல விலாசம்	–	சேஷாத்திரி ஐயங்கார்.

21.	குன்றக்குடி முருகப் பெருமான் தம்மைப் பாடி வந்த புலவர்க்கிரங்கி ஏழு நகரத்தார்க்களித்த திருமுக விலாசம்	– பாடுவான் முத்தப்பச் செட்டியார்.
22.	கோபிகா விலாசம்	– —
23.	சகுந்தலை விலாசம்	– லட்சுமி அம்மாள்.
24.	சகுந்தலை விலாசம்	– இராமச்சந்திர கவிராயர்.
25.	சங்கர விலாசம்	– சிதம்பர நாத கவிராயர்.
26.	சத்திய பாஷா அரிச்சந்திர விலாசம்	– அப்பாவுப் பிள்ளை.
27.	சத்திய பாஷா அரிச்சந்திர விலாசம்	– முத்துசாமிப் பிள்ளை.
28.	சந்திர விலாசம்	– மாம்பழக் கவிச்சிங்க நாவலர்.
29.	சமுத்திர விலாசம்	– கடிகை முத்துப் புலவர்.
30.	சாத்விக பிரம்ம வித்யா விலாசம்	– —
31.	சாரங்கதார விலாசம்	– தருமலிங்க கவிராயர்.
32.	சித்ராங்கதை விலாசம்	– —
33.	சித்ராங்கி விலாசம்	– அப்பாவுப் பிள்ளை.
34.	சிவகங்கைத் திருமுக விலாசம்	– பரசுராம கவிராயர்.
35.	சிறுத்தொண்ட நாயனார் விலாசம்	– —
36.	சுகுண விலாசம்	– அப்பாவுப் பிள்ளை.
37.	சுந்தரர் விலாசம்	– —
38.	சுப்பராய விலாசம்	– —
39.	சுப்பிரமணிய விலாசம்	– —
40.	சுமதி விலாசம்	– ஆழ்வாரப்பப்பிள்ளை.
41.	சோலை விலாசம்	– காசி விசுவநாத முதலியார்.
42.	சோழ விலாசம்	– இராமச் சந்திர கவிராயர்.
43.	ஞான செளந்தரி விலாசம்	– —
44.	டம்பாச்சாரி விலாசம்	– —
45.	தாருகாவன விலாசம்	– வெங்கடாசலம் பிள்ளை.
46.	திருநீலகண்ட நாயனார் விலாசம்	– மதுரை முத்துக் கவிராயர்.
47.	தேசிங்கு ராஜன் விலாசம்	– —
48.	நளச் சக்ரவர்த்தி விலாசம்	– சரவண முத்துப் பிள்ளை.

49. நளவிலாசம்	–	தாமோதர முதலியார்.
50. நாலு மந்திரி விலாசம்	–	சபாபதி முதலியார்.
51. பஞ்சலட்சணத் திருமுக விலாசம்	–	நாராயண கவி.
52. பதிவிரதை விலாசம்	–	—
53. பவனி விலாசம்	–	வில்லியப்பப்பிள்ளை.
54. பாண்டிய கேளீ விலாசம்	–	—
55. பாவராக தாள சிங்காராதி அபிநய தர்ப்பண விலாசம்	–	—
56. பிரகலாத விலாசம்	–	அரங்கநாத கவிராயர்.
57. பிரதாப சந்திர விலாசம்	–	பி.வி. ராமசுவாமி ராசு.
58. பூகோள விலாசம்	–	மருதூர் அபத்தாரனார்.
59. பூதத்தம்பி விலாசம்	–	—
60. பூதர விலாசம்	–	பொன்னுங்கூடக் கவிராயர்.
61. பூம்பாவையார் விலாசம்	–	சீர்காழி வாணனார்.
62. மகாபாரத விலாசம் அருச்சுனன் தபசு	–	—
63. மகாபாரத விலாசம் சூதாடல் துகிலுரிதல்	–	இராமாநுஜ சுவாமிகள்.
64. மகாபாரத விலாசம் பஞ்ச பாண்டவர் வனவாசம் என்னும் நச்சுப் பொய்கை	–	இராய நல்லூர் இராமச்சந்திர கவிராயர்.
65. மகாபாரத விலாசம் வில்வளைத்து மாலையிடுதல்	–	இராமாநுஜ சுவாமிகள்.
66. மங்கள வல்லி விலாசம்	–	—
67. மங்களாம்பிகை திருவருள் விலாசம்	–	ஐ. சண்முகம் பிள்ளை.
68. மதனசுந்தர பிரசாதன சந்தான விலாசம்	–	நாராயண சுவாமி பிள்ளை.
69. மதன சுந்தரி விலாசம்	–	—
70. மன்மத விலாசம்	–	தாண்டவராய முதலியார்.
71. மாணிக்கவாசகர் விலாசம்	–	குப்புசாமிக் கிராமணி.
72. மார்க்கண்ட விலாசம்	–	வெங்கடராம உபாத்தியாயர்.
73. மார்க்கண்ட விலாசம்	–	சுப்புராம ஐயர்.

74. முத்துப் பாலாண்டித் தேவர் போரில் திருமுக விலாசம்	– —
75. முத்தையன் விலாசம்	– —
76. மோகனாங்கி விலாசம்	– சுப்பிரமணிய பண்டிதர்.
77. யயாதி விலாசம்	– ராமச்சந்திர கவிராயர்.
78. ருக்மாங்கத விலாசம்	– கதிர் வேல் கவிராயர்.
79. வல்லாள மகாராஜன் விலாசம்	– —
80. விவேக விர்த்தி விலாசம்	– பையனூர் வரதராச பிள்ளை.
81. வீர குமார விலாசம்	– —
82. வேணுவன லிங்க விலாசம்	– —
83. ஸ்ரீ மகாபாரத நச்சுப் பொய்கை விலாசம்	– வைரக்கண் வேலாயுதப் புலவர்.

Publications from Palm - Leaf Manuscripts

General Editors **Dr. Shu. Hikosaka, Dr. G. John Samuel**

No.	Title	Editors	Year	Price (Rs.)	Price (US $)
1.	The Wandering Voice (3 Ballads),	Dr. R. Nirmala Devi	1987	Rs.120.00	US $ 32
2.	The Art of Drumming - Mattaḷaviyal	Dr. V.P.K. Sundaram	1988	Rs. 90.00	US $ 20
3.	The Dateless Muse - Veṅkalarājaṉ Katai	Dr. R. Nirmala Devi	1988	Rs. 80.00	US $ 20
4.	The Unsung Melodies, Palavēcañ Cērvaikkāraṉ Katai,	Dr. V. Murugan	1989	Rs. 75.00	US $ 32
5.	The Divine Pilgrimage - Perumāl cāmi katai	M. Shanmukham Pillai	1992	Rs.200.00	US $ 40
6.	A Tale of Romance - Cakuntalai Nāṭakam	Dr. A. Thasarathan	1994	Rs.300.00	US $ 50
7.	Varma Cūtiram	Dr. P. Subramaniam	1994	Rs.400.00	US $ 50
8.	Peṇṇaraciyār Katai	Dr. K. Jayakumar, D. Boominaganathan	1995	Rs.100.00	US $ 20
9.	Nīli Yaṭcakāṉam	Dr. P. Subramaniam	1996	Rs.150.00	US $ 20
10.	A Tale of Nemesis - Nīli Yaṭcakāṉam	Dr. P. Subramaniam	1996	Rs.250.00	US $ 20
11.	The Valorous Virgins - Peṇṇaraciyār Katai	Dr. K. Jayakumar D. Boominaganathan	1996	Rs. 220.00	US $ 35
12.	A Tale of Betrayal - Cāraṅkataraṉ Yaṭcakāṉam	Dr. P. Subramaniam	1996	Rs. 400.00	US $ 65
13.	The Epic Eternal - Irāmar Katai, Part I & II	Dr. K. Jayakumar	1996	Rs. 900.00	US $130
14.	Destiny and Divinity - Vāraṅkaṉ Katai,	M. Parimanam	1996	Rs. 200.00	US $ 30
15.	The vows Fulfilled - Āmaiyar Ammāṉai,	M. Maruthamuthu	1996	Rs. 450.00	US $ 65
16.	Poetic Petals in the Interior Landscape -Uttaṇṭaṉ Kōvai	R. Jayalakshmi	1996	Rs. 400.00	US $ 50
17.	The Defender of the Faith - Marikarutammāḷ Ammāṉai	Dr. K. Jayakumar, R. Jayalakshmi	1996	Rs. 350.00	US $ 40
18.	Where Justice Chimes - Tērūrnta Cōḻaṉ Yaṭcakāṉam	Dr. P. Subramaniam	1997	Rs. 400.00	US $ 50

General Editor **Dr. G. John Samuel**

No.	Title	Editors	Year	Price (Rs.)	Price (US $)
19.	Tiṅkaḷūr Aruḷmalai Noṇṭi Nāṭakam	M. Maruthamuthu	1998	Rs. 350.00	US $ 30
20.	Tirukkalampakam	M. Parimanan, R. Jayalakshmi	1999	Rs.300.00	US $ 30
21.	Treatise on Mathematics - Kaṇita Nūl	Dr.P. Subramaniam, K. Sathya Bama	1999	Rs. 300.00	US $ 30
22.	The Scorching Guile - Tampimār Katai	A.K. Perumal, K. Jayakumar	1999	Rs.300.00	US $ 35
23.	The Beatitude Undefiled - Nīlacuvāmi Katai	G. Selvalakshmi	1999	Rs. 350.00	US $ 50
24.	The Measure of Eternity - Vaikuṇta Ammāṉai,	Dr. K. Jayakumar	1999	Rs.500.00	US $ 50
25.	Kaṇaṉ the Munificent - Kaṇaṉ Pōr	R. Jayalakshmi	1999	Rs. 500.00	US $ 50
26.	Kōlavarait Tuyilaraṅkaṉ Caritam	P. Subramaniam , K. Sathyabama	2000	Rs.600 .00	US $ 45
27.	The Story of Casting the Net	G. Selva lakshmi	2005	Rs. 215.00	US $ 20
28.	Treatise on Mathematics - Part - II	P. Subramaniam , K. Sathyabama	2005	Rs.210 .00	US $ 20
29.	The Misplaced Royal Romance	G. Uthiradam	2005	Rs.400 .00	US $ 40
30.	A Kuravañji of Riṣivintam	M. Maruthamuthu	2006	Rs.335.00	US $ 35
31.	Akatticar Kalampakam	R. Jayalakshmi	2006	Rs. 200.00	US $ 20
32.	The Story of Kusalavaṉ	G. Selva lakshmi, R. Jayalakshmi	2006	Rs.160.00	US $ 20